# "தமிழர் பண்பாட்டு மரபில் ஏறுதழுவுதல்"

## ERU THAZHUVUTHAL IN TAMIL CULTURAL TRADITION

முனைவர் (பிஎச்.டி) பட்டத்திற்காக
கள்ளிக்கோட்டைப் பல்கலைக்கழகத்திற்கு
அளிக்கப்பெறும் ஆய்வேடு


ஆய்வாளர்

**அ. தீபக்**

(Reg. No. CWEJ18119)

நெறியாளர்

**முனைவர் க. முத்துஇலக்குமி**

பேராசிரியர்

தமிழ்த்துறை & ஆய்வுமையம்

அரசுக்கல்லூரி, சித்தூர்

பாலக்காடு - 678104



ஜூலை 2023

# "தமிழர் பண்பாட்டு மரபில் ஏறுதழுவுதல்"

## ERU THAZHUVUTHAL IN TAMIL CULTURAL TRADITION

*Thesis submitted to the University of Calicut for the Award of*

***DOCTOR OF PHILOSOPHY DEGREE IN TAMIL***


By

**DEEPAK. A**

*(Reg. No. CWEJ18119)*

Guide

**Dr. G. MUTHULAKSHMI**

*Professor*

**DEPARTMENT OF TAMIL & RESEARCH CENTRE**

*GOVT. COLLEGE CHITTUR, PALAKKAD- 678104*


**JULY 2023**

**Dr. G. Muthulakshmi,**
Professor & Research Guide,
Department of Tamil & Research Centre
Government College, Chittur,
Palakkad, Kerala - 678104

## CERTIFICATION OF SUPERVISOR

**Date:**

This is to certify that all the corrections/suggestions from the. adjudicators have been incorporated in this thesis.

**Dr. G. Muthulakshmi,**
Professor & Research Guide,

Recommended

Principal

**முனைவர் க. முத்துஇலக்குமி,**

பேராசிரியர்,

தமிழ்த்துறை & ஆய்வு மையம்,

அரசுக்கல்லூரி, சித்தூர்

பாலக்காடு 678104

## நெறியாளர் சான்றிதழ்

"**தமிழர் பண்பாட்டு மரபில் ஏறுதழுவுதல்**" என்னும் தலைப்பிலான இவ்வாய்வேடு கள்ளிக்கோட்டைப் பல்கலைக்கழக முனைவர் பட்டப்பேற்றிற்காக ஆய்வாளர் அ. தீபக், **(Reg. No.CWEJ18119)** அவர்களால் எனது மேற்பார்வையின் கீழ் உருவாக்கப்பெற்றது என்றும் இவ்வாய்வேடு, இதற்குமுன் வேறு எந்தப் பட்டத்திற்கும் அளிக்கப்பெறவில்லை என்றும் சான்றளிக்கிறேன்.

**நெறியாளர் ஒப்பம்**

**(க. முத்துஇலக்குமி)**

**இடம்** : சித்தூர்

**நாள்**:

**அ. தீபக்,**
பதிவு எண் : CWEJ18119
தமிழ்த்துறை & ஆய்வு மையம்,
அரசுக்கல்லூரி, சித்தூர், பாலக்காடு - 678104

## ஆய்வாளர் உறுதிமொழி

**"தமிழர் பண்பாட்டு மரபில் ஏறுதழுவுதல்"** என்னும் தலைப்பில் அமைந்துள்ள இவ்வாய்வேடு **(2017 - 2023)** கால அளவில் கள்ளிக்கோட்டைப் பல்கலைக்கழகத்தில், முனைவர் பட்டத்திற்காக சித்தூர் அரசுக்கல்லூரி தமிழ்த்துறை & ஆய்வுமையத்தில் உருவாக்கக்கப்பட்டது. இவ் ஆய்வு எனது சொந்த முயற்சியில் உருவானது என்றும், இந்த ஆய்வேடு இதற்கு முன் வேறெந்த ஆய்வுப் பட்டத்திற்க்கும் அளிக்கப்பெறவில்லை என்றும் உறுதியளிக்கின்றேன்.

**இடம்** : சித்தூர்

**நாள்**:

**ஆய்வாளர் ஒப்பம்**

**(அ. தீபக்)**

**துறைத்தலைவர் ஒப்பம்**

**நெறியாளர் ஒப்பம்**

## நன்றியுரை

கள்ளிக்கோட்டை பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்ட ஆய்வு மேற்கொள்ள அனுமதி அளித்த தமிழ்த்துறை & ஆய்வுமையம் சித்தூர் அரசுக் கல்லூரிக்கு எனது நன்றியை உரிதாக்குகின்றேன். தமிழ் துறைத் தலைவரும் எனது நெறியாளருமான முனைவர் க. முத்துஇலக்குமி அவர்கள் எனது முனைவர் பட்ட ஆய்விற்கு அனுமதி அளித்ததோடு செறிவானதொரு தலைப்பினைத் தந்து, ஆய்வு குறித்து விவாதித்து பல்வேறு கருத்துகளை வழங்கி, ஆய்விற்குரிய நூல்களைக் கொடுத்து நெறிப்படுத்தியவர். களப்பணியில் மிக முக்கிய நுட்பங்களையும், தகவல் சேகரிப்பு முறையையும் கற்று தந்தவர். எனது ஆய்வுக்கு உறுதுணையாக நின்ற அம்மா அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

கோட்பாடுகள் சார்ந்த ஐயங்களையும், அவை தொடர்பான நூல்களையும் அறிமுகம் செய்து தந்த முனைவர். மனோகரன் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். உரிய நேரத்தில் சித்தூர் கல்லூரி தமிழ்த்துறை பற்றிய விவரங்களை எனக்கு தந்து வழிகாட்டிய முனைவர். சாந்தி அவர்களுக்கு எனது உள்ளம் நிறைந்த நன்றி. மேலும் ஆய்வு தொடர்பான பல்வேறு நூல்களைத் தந்துதவிய முனைவர். சிவமணி மற்றும் முனைவர். கதிரவன், திரு. சுஜாதா, முனைவர். ஃபாத்திமா அவர்களுக்கும், எனது நன்றிகள். மேலும் ஆய்வு தொடர்பான ஐயங்களை சரி செய்த முனைவர். முருகன், முனைவர். கவிதா அவர்களுக்கும், முனைவர். ரதி, முனைவர். தர்மராஜ் ஆகிய துறையாசிரியர்களுக்கும், இளங்கலை முதுகலை, முன் முனைவர் பட்ட

மாணவர்களுக்கும், ஆய்வாளர்களுக்கும் என் நன்றியை உரித்தாக்குகிறேன். மூணார் அரசுக் கல்லூரி, மற்றும் கேரளப் பல்கலைகழகம், காரிய வட்டம் தமிழ்த்துறை ஆசிரியர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

களஆய்வு செய்த காலங்களில் என்னோடு பயணித்து எனக்கு பேருதவியாக இருந்த எனது நண்பர்கள் மற்றும் முனைவர் பட்ட ஆய்வளர்களான திரு.ரமேஷ், திரு.நெல்சன், அவர்களுக்கும், ஏறுதழுவுதல் தொடர்பான சட்ட திருத்தங்கள் அவை சார்ந்த ஐயங்களை தீர்த்த நண்பர்களான வழக்கறிஞர் திரு. நல்லதம்பி மற்றும் சட்ட உதவியாளர் திரு. ரியாஸுதின் ஷாகுல் ஹமீது ஆகியோருக்கும், பேரா.மு. சிவசக்தி அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை உரித்தாக்குகின்றேன். எனது ஆய்வு சிறக்க துணைநின்ற சித்தூர் கல்லூரி, கேரளப் பல்கலைக்கழகம், மற்றும் பாரதியார் பல்கலைக்கழக நூலகத்தாருக்கும், அச்சு பணி செய்து தந்த கௌரி அவர்களுக்கும் எனது நன்றிகள்.

எனது கல்விக்கு என்றும் துணை நின்ற தாய் தந்தையான திரு. அந்தோணி ராஜ், திருமதி. செல்வி அவர்களுக்கும், எனது துணைவியாரான திருமதி. உமாமகேஷ்வரி மற்றும் நண்பர்களுக்கும் உள்ளம் நிறைந்த நன்றிகள்.

**தீபக். அ**

(ஆய்வாளர்)

## சுருக்கக் குறியீட்டு விளக்கம்

| | | |
|---|---|---|
| இறை . | – | இறையனாரகப்பொருள் |
| ஐங்குறு | – | ஐங்குறுநூறு |
| கலித் | – | கலித்தொகை |
| கி.பி | – | கிருஸ்துவுக்கு பின் |
| குறுந் | – | குறுந்தொகை |
| தண்டி | – | தண்டியலங்காரம் |
| தொல் | – | தொல்காப்பியம் |
| நற் | – | நற்றிணை |
| நூ | – | நூற்றாண்டு |
| பக் | – | பக்கம் |
| பதிற்றுப் | – | பதிற்றுப்பத்து |
| பிப் | – | பிப்ரவரி |
| பு. வெ | – | புறப்பொருள் வெண்பா மாலை |
| புறத் | – | புறத்திரட்டு |
| புறநா | – | புறநானூறு |
| மலைபடு | – | மலைபடுகடாம் |
| மனு | – | மனுதர்மம் |
| முல்லைப் | – | முல்லைப்பாட்டு |
| யாப். வி | – | யாப்பருங்கலம் விருத்தியுரை |
| ஜன | – | ஜனவரி |

# பொருளடக்கம்


| இயல் | தலைப்பு | ப.எண் |
|---|---|---|
| | முன்னுரை | 1 |
| இயல் ஒன்று | தமிழர் பண்பாட்டில் கால்நடை வழக்காறுகள்- பெரு மரபு | 11 |
| இயல் இரண்டு | தமிழர் பண்பாட்டில் கால்நடை வழக்காறுகள்-சிறு மரபு | 78 |
| இயல் மூன்று | தமிழர் பண்பாட்டில் ஏறுதழுவுதல் | 120 |
| இயல் நான்கு | கோட்பாட்டியல் நோக்கில் ஏறுதழுவுதல் | 178 |
| இயல் ஐந்து | ஏறுதழுவுதல் பண்பாட்டு மீட்டுருவாக்கம் | 198 |
| | முடிவுரை | 242 |
| | துணைநூற்பட்டியல் | 249 |
| | பின்னிணைப்பு | i |

# முன்னுரை

# முன்னுரை

நாடோடியாக அலைந்து திரிந்த மனிதன் ஓரிடத்தில் நிலையான வாழ்வை மேற்கொள்ள வேண்டுமென நினைத்தான். வேட்டையை மட்டுமே நம்பி இருந்த மனித இனம் மெல்ல, மெல்ல வேட்டை உனவை குறைத்துக் கொண்டு. விலங்குகளை தன்வயப்படுத்தி தன் கட்டுபாட்டில் கொண்டு வர அவற்றிக்கு இணையான வீரத்தோடு போராடி வெற்றியும் கண்டான். பராமரிப்பு மற்றும் பயன்பாடு எனும் அடிப்படைகளில் அவைகள் மனித சமூகத்தின் இன்றியமையாச் செல்வமாக அமைந்தன. இத்தகைய கால்நடை வளர்ப்பானது மலைசார்ந்த பகுதிகளை விடவும் காடு சார்ந்த பகுதிகளிலேயே அதிகமாக வளர்க்கப்பட்டதை தமிழ் மரபான முல்லைத்திணை முன் வைக்கிறது.

உலகில் தனித்து வாழ இயலாது இயற்கையோடு இயைந்து வாழ்ந்தால் மட்டுமே மனித குலமானது நீடித்து நிலை பெறும் என்பதைப் புரிந்து கொண்ட நம் முன்னோர், இயற்கையைச் சார்ந்தும் பிற உயிர்களோடு இணைந்தும் வாழ்ந்தனர். அவர்கள் மாடு, நாய் போன்ற விலங்குகளை தங்களின் குடும்ப உறுப்பினராகக் கொள்ளும் பண்புகளை உடையவர்களாகக் காணப்பட்டனர். அதிலும் மாடுகளின் மீது கொண்ட அன்பு அளப்பரியதாக வெளிப்படுகின்றது, மாடுகளை தமக்கு பயன்தரும் விலங்காக மட்டுமின்றி தம்மில் ஒருவராகவும், பண்பாட்டுக் குறியீடாகவும் கருதுகின்றனர். தமிழர், இன்றும் தமிழகத்தில் பல வீடுகளில் தங்களோடு மாட்டையும் குடும்ப நபர் போல புகைப்படங்கள் எடுத்து வைத்துள்ளதைக் காண முடிகின்றது, தமிழரின் ஐந்திணை வகைகளில் முல்லைத் திணை மேய்ச்சல் சமூகமாகவும், மருதத்திணை வேளாண் சமூகமாகவும் காணப்பட்டது. இவ்விரு திணைகளிலும் மாடுகள் மிக முக்கிய பங்கு பெற்றன.

உழவர்கள் வேளாண் குடிகளாகி, உழைப்புக் கருவியாக மாடுகள் மாறுகின்றன. வேளாண் உற்பத்தியின் அறுவடைத் திருவிழாவாகவும், அதைச் சார்ந்த பெருமையைப் பறைசாற்றும் விழாவாக பொங்கல் மாறுகிறது. பொங்கல் திருவிழாவின் போது நடைபெரும் ஏறுதழுவுதல் விளையாட்டு, மாடும் மனிதனும் இணக்கத்தோடும், பரிவோடும் புரிந்து செய்யப்படும் பாவனை விளையாட்டு ஆகும்.

சிந்து சமவெளி நாகரீகம் முதல், பண்பாட்டுத் தொன்மையும், இலக்கிய வளமையும் வாய்ந்த தமிழ் இலக்கியங்களிலும், நாட்டார் வழக்காறுகளிலும், ஏறுதழுவல் நிகழ்ந்ததற்கான சான்றுகள் வெகுவாக காணப்படுகின்றன. ஏறுதழுவுதலைக் குறிக்கும் மஞ்சுவிரட்டுதல் என்ற சொல் பழந்தமிழ் இலக்கியங்களில் காளையை அடக்கும் வீரவிளையாட்டின் பெயராகப் பயின்று வந்துள்ளது. புதுதில்லி தேசியக்கண்காட்சியகத்தில் பாதுகாக்கப்படுகின்ற சிந்துவெளி நாகரீகம் சார்ந்த முத்திரை ஒன்றில் ஒருகாளை உருவமும் அதை அடக்க முயலும் வீரரை அக்காளை தூக்கி எறிவதும் உயிரோட்டமான விதத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளது. எனவே கி.மு. 2000 ம் ஆண்டு அளவிலேயே ஏறுதழுவல் வழக்கத்தில் இருந்தது, என்று ஐராவதம் மகாதேவன் (சிந்துவெளி நாகரிகம் சார்ந்த முத்திரை) போன்ற தொல்லியல் அறிஞர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். சங்க காலத்தில் வீரத்தை வெளிப்படுத்தும் ஆண்மகனின் விளையாட்டாக விளங்கிய காளையை அடக்குதல் தொடர்ந்து வரும் காலங்களில் பல்வேறு பெயர்களை பெற்று வந்துள்ளது.

**ஆய்வு தலைப்பு**

*"தமிழர் பண்பாட்டு மரபில் ஏறுதழுவுதல் "*

**ஆய்வின் நோக்கம்**

தமிழர் பண்பாட்டு மரபில் ஏறுதழுவுதலில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைக் கண்டடைந்து அவற்றின் நோக்கத்தையும், அதன் பின்னணியையும் ஆராய்வது இவ்வாய்வின் நோக்கமாகும். மேலும் இவ்வாய்வு ஏறுதழுவுதலின் தேவை, தேவையின்மை குறித்த கருத்துமாற்ற நிலைப்பாடுகளின் பொருத்தப்பாட்டையும் ஆராய்கின்றது .

**கருதுகோள்**

ஏறுதழுவுதல் என்பது தமிழர் வாழ்வியல் மரபுகளில் தனித்துவம் நிறைந்த வீரவிளையாட்டாகவும், பண்பாட்டு அடையாளமாகவும் விளங்குகிறது.

**ஆய்வு முன்னோடிகள்**

- தமிழர் பண்பாட்டு மரபில் ஏறுதழுவுதல் எனும் இவ்வாய்வின் முன்னோடிகளாக கலித்தொகை காட்டும் ஏறுதழுவுதல் - முனைவர் இரா. முத்துப்பாண்டி கரந்தை கலைக் கல்லூரி தஞ்சாவூர்,- முல்லை நிலத்தில் வாழ்ந்த செல்வப் பெருங்குடி மக்கள் தங்கள் மந்தையில் காளைக் கன்று ஒன்றைத் தனிமைப்படுத்தி வளர்ப்பார்கள். இதற்குத் தனியாகப போர்ப் பயிற்சி கொடுத்து ஏறுதழுவலுக்குப் பயன்படுத்துவார்கள். தங்களின் வீட்டில் வளரும் மகளுக்கு பருவம் வந்தவுடன் காளையை அடக்கி வெல்லும் வீரனுக்கு மணம் முடித்து வைப்பார்கள் என விவரிக்கின்றது.

- பண்பாடு நோக்கில் ஏறுதழுவுதல்- மோகன் குமாரமங்கலம் ஆய்வாளர், தமிழ்த்துறை மதுரைக் கல்லூரி, மதுரை. மாடு அனைதல் என்பது வேட்டை சமூகம், வேளாண் சமூகமாக மாறும்போது ஆக்களின் தேவை பலியிடுதலுக்கு பதிலாக, வேளாண்மைக்கு பயன்படுத்துதல் என்ற நினைவு கூறும் சடங்கினை முன் வைக்கிறது.

- ஏறு தழுவுதல் வேளாண் உற்பத்தியின் நிகழ்த்துப் பண்பாடும் வரலாறும்- மகாராசன்- ஏறு தழுவுதல் எனும் நிகழ்த்து பண்பாடு உணவு உற்பத்தியோடு தொடர்புடையதாகவும், மரபு சார்ந்த உற்பத்திக்கு ஏறுதழுவுதல் அவசியம் எனவும் விளக்குகிறார்.

- ஏறு தழுவுதல் அன்றும், இன்றும் – ஆ.பிரபு உதவிப் பேராசிரியர் வளனார் தன்னாட்சி கல்லூரி திருச்சி, இன்றைய சூழலில் ஏறுதழுவுதல் நிகழ்வானது தன் அடையாளத்தினை இழக்கும் தருவாயில் உள்ளது. காரணம், அதனைச் செயல்படுத்தும் விதம். இந்நிகழ்வின் மைய நோக்கம் மறக்கப்பட்டு, இவ்வீர விளையாட்டு அழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது.

**ஆய்வு எல்லை**

தமிழர் பண்பாட்டு மரபில் ஏறுதழுவுதல் எனும் இவ்வாய்வின் எல்லையானது, சங்க காலம் முதல் தற்காலம் [2020] வரையிலான இலக்கியப் தரவுகளும், ஏறு தழுவல் நிகழ்விடங்களில் களப்பணி மூலம் பெறப்பட்ட இக்கால இனவரைவியல் பதிவுகளும் எல்லையாக வரையறை செய்யப்படுகின்றது.

**ஆய்வு அணுகுமுறை**

இவ்வாய்வில், விளக்கமுறை , வரலாற்று முறை, சமூகவியல் முறை, ஒப்பியல் முறை, போன்ற ஆய்வு முறைகளோடு, களஆய்வு முறையும் பின்பற்றப்பட்டுள்ளது.

**ஆய்வின் பயன்**

1. தமிழர் பண்பாட்டு மரபில் ஏறுதழுவுதல் மூலம் பண்பாட்டையும், பாரம்பரியத்தையும், மரபையும் இன்றைய தலைமுறையினர்க்கு எடுத்துரைப்பது.
2. ஏறுதழுவுதல் அது சார்ந்த சங்ககாலம் முதல் இன்று வரை அதன் பயணத்தையும், அது சார்ந்த பதிவுகள் பற்றியும் இவ்வாய்வின் மூலம் அறிந்து கொள்ள முடியும்.
3. தமிழர் பண்பாட்டு மரபில் ஏறுதழுவுதல் மூலம் காளையின் பயன், முக்கியத்துவத்தை சமூகத்திற்கு உணர்த்த முடியும்.
4. தமிழ் இனத்தின் அடையாளத்தையும், பெருமையையும் கோட்பாடுகளோடு இவ்வாய்வின் மூலம் பெற முடியும்.

**ஆய்வு மூலங்கள்**

ஆய்விற்குப் பயன்படுத்தப்பெற்ற ஆதாரங்கள் ஆய்வு மூலங்கள், முதன்மைச் சான்றுகள், துணைமைச் சான்றுகள் என இரு வகைப்படுகின்றன.

**முதன்மைச் சான்றுகள்**

''தமிழர் பண்பாட்டு மரபில் ஏறுதழுவுதல்'' எனும் இவ்வாய்வில் சங்க இலக்கியங்கள், தற்கால இலக்கியங்கள், ஏறுதழுவல் சார்ந்த அரசு ஆணைகள், கல்வெட்டுக்கள், செப்பேடுகள், சங்க இலக்கியமான கலித்தொகை, தற்கால இலக்கியங்களான கமலாம்பாள் சரித்திரம், வீரம்மாளின் காளை, வாடிவாசல், சித்திரப்பாவை, மஞ்சு விரட்டு மற்றும் நாவ்பகதூர் சிங்காரம், எருதுகட்டு, காவல் கோட்டம், மயிலைமாடு, வெள்ளைமாடு ஆகிய கதை இலக்கியங்களும். ஆகியவையும் களப்பணி மூலம் சேகரிக்கப்பட்ட தரவுகளும் முதன்மைச் சான்றுகளாக அமைகின்றன.

**துணைமைச் சான்றுகள்**

ஏறுதழுவல் சார்ந்த ஆய்வு நூல்கள், ஆய்வேடுகள், கட்டுரைகள், இதழ்கள், அகராதிகள், இணையதளச் செய்திகள் ஆகியவை துணைமைச் சான்றுகளாக அமைகின்றன.

**ஆய்வேட்டின் அமைப்பு**

“தமிழர் பண்பாட்டு மரபில் ஏறுதழுவுதல்”என்ற இவாய்வானது முன்னுரை முடிவுரை நீங்கலாக ஐந்து இயல்களைக் கொண்டதாக அமைகிறது.

**இயல் கட்டமைப்பு**

**முன்னுரை**

**இயல் ஒன்று -** தமிழர் பண்பாட்டில் கால்நடை வழக்காறுகள்- பெரு மரபு

**இயல் இரண்டு -** தமிழர் பண்பாட்டில் கால்நடை வழக்காறுகள்-சிறு மரபு

**இயல் மூன்று -** தமிழர் பண்பாட்டில் ஏறுதழுவுதல்

**இயல் நான்கு -** கோட்பாட்டியல் நோக்கில் ஏறுதழுவுதல்

**இயல் ஐந்து -** ஏறுதழுவுதல் பண்பாட்டு மீட்டுருவாக்கம்

**முடிவுரை**

**இயல் ஒன்று - தமிழர் பண்பாட்டில் கால்நடை வழக்காறுகள்- பெரு மரபு**

புறப்பொருள் வெண்பாமாலை மற்றும் புறத்திரட்டுப் பதிவுகள், நடுகல் வழக்கம், கலித்தொகை பாடல்கள் வாயிலாக முல்லை நிலத்தில் ஏறுதழுவல், ஆயமகளின் தந்தையர்கள் ஏறுவிடுதல், ஏறுகளின் உவமை, காளையர்கள் ஏறுதழுவல், காளையை வென்றவனுக்கு மகளை வழங்குதல், குரவை ஆடுதல், மாட்டின் கொம்பினை வழிபடல், ஏறுதழுவும் பொதுவர்களின் பொருளியல் பின்புலம், உள்ளப் புணர்ச்சி, ஏறுகளுக்குள்ளே பொருதுதல், ஏறுகளின் மீது கொண்ட அன்பால் ஏறுகளை அடக்குதல்,போன்ற செய்திகளோடு சிலப்பதிகாரம், மலைபடுகடாம், பள்ளு, கமலாம்பாள் சரித்திரம், சித்திரப்பாவை, காவல்கோட்டம், மஞ்சுவிரட்டு மற்றும் ராவ்பகதூர் சிங்காரம், எருதுகட்டு, வீரம்மாளின் காளை, வாடிவாசல், மயிலைமாடு, போன்ற இலக்கிய பதிவுகளில் ஏறுதழுவல் குறித்தும் ஆராயப்படுகின்றன.

**இயல் இரண்டு - தமிழர் பண்பாட்டில் கால்நடை வழக்காறுகள்- சிறு மரபு**

காளை வழிபாடு, மாடு தாண்டுதல், சடங்கு முறைகள், விழாக்கள், அழகாத்தேவனின் தொன்மக்கதை, கருப்பத்தேவன், மன்னன் சின்னாண்டி,

மாடுகளின் சுழி, பழமொழிகள், கால்நடைசார் சாதிப்பழமொழிகள், நம்பிக்கைகள் போன்றவைகள் சிறுமரபு ஆகியவற்றை இவ்வியல் விளக்குகின்றது.

**இயல் மூன்று - தமிழர் பண்பாட்டில் ஏறுதழுவுதல்**

ஏறுதழுவுதல் பெயர்க் காரணம், ஏறுதழுவலின் வகைகள், நாயக்கர் கால ஜமீன்தார் ஜல்லிக்கட்டு ஏறுதழுவும் முறைகள், ஏறுதழுவுதல் நிகழ்வில் ஏற்படும் காயங்களின் வகைகள், காங்கேயம் காளையின் தோற்றம், காளை இனங்களின் வரலாற்றுச் சான்றுகள், முதன்மை வாய்ந்த இனங்கள் ,மாடுகளின் கிளை இனங்கள், மாடுகளை தேர்ந்தெடுக்கும் முறை, இடம்பெயரும் காளைகள், மாட்டுச் சந்தை, மாடு பிடி வீரர்களுக்கு பயிற்சி, ஏறுதழுவும் முறை, காளைக்குப் பயிற்சி மற்றும் போட்டியில் பங்கேற்கும் முறை, ஏறுதழுவல் நிகழ்விடங்கள் , நிகழ்கால ஏறுதழுவல், விளையாட்டு நிபந்தனைகள், மரமடியும் ஏறுதழுவலும் ஒப்பீடு, உலகளாவிய காளை விளையாட்டு ஒப்பீடு ஆகியவற்றை இவ்வியல் ஆராய்கின்றது.

**இயல் நான்கு - கோட்பாடு நோக்கில் ஏறுதழுவுதல்**

குலக்குறி இன்னதென்பதையும், நம் முன்னோர் எவற்றையெல்லாம் குலக்குறி அடையாளங்களாகக் கொண்டிருந்தனர். என்பது பற்றியும், முத்தாலம்மன் காளையையும், அழகாத்தேவன் பற்றிய செய்திகளுடன் ஒப்பிட்டு குலக்குறி நோக்கில் ஏறுதழுவுதல் எனும் தலைப்பில் ஆராயப்பட்டுள்ளது. மனிதன் ஏன் விலங்குடன் மோதி தனது வீரத்தை நிரூபிக்க வேண்டும் என்பதையும், ஃப்ராய்டின் விலங்குணர்ச்சி, பண்பாட்டு உணர்ச்சி போன்றவை சி. சு.

செல்லப்பாவின் வாடி வாசலில் எவ்வாறு இடம்பெற்றுள்ளது என்பதையும் உளவியல் நோக்கில் ஏறுதழுவுதல் என்ற இவ்வியலில் ஆராயப்படுகின்றது.

**இயல் ஐந்து - ஏறுதழுவுதலில் பண்பாட்டு மீட்டுருவாக்கம்**

தொன்று தொட்டு நடைபெற்ற ஏறுதழுவல் விளையாட்டில் ஏற்படும் தடைகளும் - சட்டங்களும், அதன் வரலாறும் விளக்கப்படுகிறது. என். ஜி. ஒ. நிறுவனங்களின் அரசியலும் அதன் பின்னணி, பண்பாட்டைக் காக்க இளைஞர்கள் ஒன்றிணைந்து செயல்பட்ட மெரினா புரட்சி, ஏறுதழுவல் பண்பாட்டு பாரம்பரிய விளையாட்டில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், ஏறு தழுவுதல் நிகழ்வை எதிர்ப்போர், ஆதரிப்போரின் கருத்துக்கள், தமிழ் பண்பாட்டு மீட்டுருவாக்கம் ஆகியவற்றை இவ்வியல் ஆராய்கின்றது.

**முடிவுரை**

முடிவுரை என்னும் பகுதியில் 'தமிழர் பண்பாட்டு மரபில் ஏறுதழுவுதல்' என்னும் பொருண்மையில் ஆராய்ந்து கண்டறிந்த முடிவுகள் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன. முடிவுரையை அடுத்து துணை நூற்பட்டியலும், இடம் பெற்றுள்ளது.

**துணைநூற்பட்டியல்**

இப்பகுதியில் ஆய்விற்குப் பயன்பட்ட முதன்மை ஆதாரங்களும், துணைமை ஆதரங்களும் தரப்பட்டுள்ளது.

**பின்னிணைப்புக்கள்**

தகவலாளர் பட்டியல், நேர்காணல், கால்நடை பலமொழிகள், நாட்டு இன மாடுகளின் வகைகள், ஏறுதழுவுதல் நடைபெற்ற இடங்கள், தடையை நீக்க கோரிய போராட்ட முழக்கங்கள், ஏறுதழுவுதல் தொடர்பான கவிதைகள், புகைப்படங்கள் போன்றவைகள் பின்னிணைப்பில் இணைக்கப்பட்டுள்ளன.

,

# இயல் - ஒன்று

## தமிழர் பண்பாட்டில் கால்நடை வழக்காறுகள்

## இயல் - ஒன்று

# தமிழர் பண்பாட்டில் கால்நடை வழக்காறுகள்

மனிதகுலம் உள்பட எல்லா உயிரினங்களுக்கும் உடலியல் உணர்வாக அமைந்தது பசியாகும். ஒவ்வொரு உயிரினமும் தமது உடல் அமைப்பிற்குத் தகுந்தாற் போல உணவைத் தேடி கண்டறிந்து உண்டு தனது பசித் தேவையினை நிறைவு செய்கின்றன. எல்லா உயிரினங்களுக்கும் இப்பசியானது பொதுவானதே. ஒவ்வோர் உயிருக்கும் இத்தன்மை மாறுபடுகின்றது. உயிரியல் ஆய்வாளர்கள் நீர் உறிஞ்சிகள், பயிர் உண்ணிகள், ஊன் உண்ணிகள் எனக் குறிப்பிடுகின்றனர். இம்மூன்று வகைப்பட்ட உணவு முறைகளையும் ஒருசேர உட்கொள்ளும் இனம் மனித இனம் மட்டுமே. இதற்கு மிக முக்கிய காரணம் மனிதனின் பரிணாம வளர்ச்சி என்றே கூறலாம்.

பரிணாமமுற்ற மனித இனமானது காய், கனிகளையும், தானிய வகைகளையும், விலங்குகளையும் வேட்டையாடி தங்களின் உணவுத் தேவையை நிறைவு செய்தனர். அவ்வாறு வேட்டையாடி உணவைப் பெற்ற மனிதகுலத்திற்கு இயற்கையை எதிர்த்து போராடி உணவைப் பெறுவதில் இயல்பாகவே பல தடைகள் காணப்பட்டிருக்க வேண்டும். ஆகவே வேட்டையாடி நாடோடிகளாக அலைந்த காலகட்டத்தில் அவர்களுக்கு வலிமையாக அமைந்தது கற்களால் ஆன கருவிகளும், குழுகூட்டமைப்புகளுமே ஆகும். தனியாக வேட்டைக்குச் செல்வதைவிட பலர் கூட்டமாக இணைந்து செல்வதால் ஆபத்தும் குறைவு. விலங்குகளும் அதிகமாகக் கிடைக்கும். எனவேதான் அவர்கள் "குழுக்களை ஆற்றலின் வடிவமாகக் கண்டார்கள் என விவரிக்கிறார் நா. வானமாமலை".

(தமிழர் பண்பாடும் தத்துவமும் – 1973. பக்-74) உணவிற்காக வேட்டையாடும் சூழலே மனிதனை மந்தை நிலையிருந்து குழுநிலை வளர்ச்சிக்கு வழிவகுத்தது என்றே கூறலாம். தொடக்க காலத்தில் இயற்கையோடு உறவாடியும் போராடியும், இணைந்தும் பிணைந்தும் தமது உணவுத் தேவையை பூர்த்தி செய்தும் வாழ்ந்து வந்த மனித இனம் உணவு தேடுவதோடு நின்றுவிடாமல் உணவு உற்பத்தியிலும் ஈடுபட்டு வருகின்றனர். மனித வரலாற்றில் உணவு தேடலுக்கென மிக முக்கிய இடமுண்டு என்றே கூறலாம். மனிதப் பரிணாம வளர்ச்சியை எங்கெல்ஸ் குறிப்பிடுகையில் ''மனிதன் நடப்பதற்குப் பயன்பட்ட முன்னங்கால்களைக் கொண்டு கைகளாக மாற்றி உணவுத் தேடலுக்கான உழைப்பில் ஈடுபட்டதுதான் மனிதரின் பரிணாம வரலாற்றின் முதல் மலர்ச்சி என்கிறார். ''( மனிதக் குரங்கிலிருந்து மனிதனாக மாறிய இடைநிலைப் படியில் உழைப்பின் பாத்திரம் - எங்கெல்ஸ். 1876 பக்-3 )

நமது தமிழர் மரபை பிரதிபலிக்கும் குறிஞ்சித் திணையில் காண முடிகின்றது, அத்தகைய வாழ்வியலை இலக்கிய வடிவங்களால் நாம் அறிகிறோம். விலங்குகளைப் பழக்கப்படுத்தியும், பராமரித்தும், கால்நடை வளர்ப்புத் தொழிலாகவும் மாற்றினான். இவ்வாறு கால்நடைகளை வளர்க்கும் பொருட்டே அவைகள் தனி மனித சொத்தாக மாறலாயிற்று. நாளடைவில் குழுக்கள் பலவாக மாறிற்று. பொதுக்குழுவில் இருந்து கால்நடை வளர்ப்புச் சமூகமானது தனியாகப் பிரிந்து சென்றது. இதனை மனித இனத்தின் முதல் தொழில் பிரிவினையாகக் கொள்ளலாம்.

கால்நடை வளர்ப்புச் சமூகமானது அவற்றை பராமரித்து வளர்ப்பதில் வெற்றி தோல்வியை கொண்டிருக்க வேண்டும். யானைகள், மான்கள் போன்ற விலங்குகளை வளர்ப்பு விலங்காக மாற்றுவதற்காக முயற்சித்த செய்திகளை சங்க

இலக்கிய பதிவுகள் புலப்படுத்துகின்றன. ”வேங்கட நாட்டு இளைஞர்கள் ஆண் யானைக் கன்றுகளை மராமரத்தின் வெண்மை நிற நாரில் கட்டி இழுத்துக் கொண்டு வந்து வீட்டின் நிலைக்காலில் கட்டி வைத்து விளையாடும் செய்தியை அகநானூற்றில்” (அகநா. 83) காணலாம். ஆண் மானை பிடிக்க பெண்மானை பழக்கி வைத்திருந்ததை “பார்வை மடப்பிணை” என்று புறநானூறு (புறநா. 320) முன்வைக்கின்றது. இதன் மூலம் கால்நடை வளர்ப்பில் மாடுகளும் உட்படும், என்பதை நாம் உணரமுடிகிறது.

மாடுகள் ஊனும், பாலும் தந்ததோடு மட்டுமல்லாமல் வேளாண்மைக்கும் பெரிதும் உதவியது. குறிஞ்சி, மருதம், நெய்தல் ஆகிய மூன்று நிலங்களில் மட்டும்தான் வேளாண்மைக்கும், கால்நடை வளர்ப்பிற்கும் உகந்த சூழல் காணப்பட்டது. இந்நிலங்கள்தான் நல்ல வளத்தையும் நீர் நிலைகளையும் கொண்டு அமையப்பெற்றவை. குறிஞ்சியில் புனம் (தினைப் பயிர் விளையும் நிலம்) உழவிலும், முல்லையில் நடை பெற்ற புஞ்சை (புன்செய்) உழவிலும், மருதத்தில் நடை பெற்ற நஞ்சை (நன் செய்) உழவிலும் மாடுகளைப் பயன்படுத்தினர்.

மாட்டின் ஊனும் பாலும் மட்டுமல்ல, தோல், வால், உரசனை, மயிர், சாணம், முதலியவை பயன்பட்டன. சாணம் வீடு துப்புரவு செய்யவும், அடுப்பெரிக்கவும், பயிருக்கு உரமிடவும் உதவியது. பால், தயிர், மோர், வெண்ணை, நெய், போன்றவைகள் சிறந்த மருத்துவ குணம் கொண்ட உணவுகளாக இருப்பதைக் காணலாம், மேலும் “உணவுப் பொருளை விளைவிப்பதற்கும், தானே உணவாகியும், வேறு பல வகையில் உதவுவதுமாகிய

மாட்டினத்தை அன்றைய மக்கள் செல்வமாக முன்னைத் தமிழர் கருதினர்" என்கின்றார் பாவாணர். (பண்டைத் தமிழ் நாகரிகமும் பண்பாடும்-2017)

**மானுடப் பண்பாடு**

மனிதன் பேசும் மொழி, உணவு, உடை, செய்யும் தொழில், வாழ்க்கைமுறை, எண்ணங்கள் போன்றவை பண்பாட்டை வெளிபடுத்தும் காரணிகளாகும். ஒவ்வொரு சமூகத்திற்கும் ஒரு குறிப்பிட்ட பண்பாட்டுக் கூறுகள் காணப்படும், அந்த வகையில் தமிழர் பண்பாட்டில் விருந்தோம்பல், ஈகை, கொடை, வாழ்வியல் நெறி, உலக ஒருமைப்பாடு என பல கூறுகள் காணப்பட்டாலும், அதில் காதல், வீரம் போன்ற மிக முக்கியப் பண்பாட்டுக் கூறுகள், இலக்கியங்கள் முதல் திரைப்படங்கள் வரை மிகுதியாக பிரதிபலிப்பனவாகும். பண்பாடு என்பது மனிதனின் அகத்தோற்றப் பொலிவை உணர்த்துவதாகும், சில விழுமியங்களை அடிப்படையாகக் கொண்டு அது நகர்கின்றது.

பெருமை தரும் வழிகளில் யாதென அறிந்து அதன்வழி நடத்தலை கலித்தொகை ''பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்'' என்று குறிப்பிடுகிறது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், 1937 இல் Culture என்னும் சொல்லுக்கு இணையாகப் பண்பாடு என்னும் தமிழ்ச் சொல்லை டி. கே. சிதம்பரநாதனார் பயன்படுத்தியதாக பேராசிரியர் எஸ். வையாபுரிபிள்ளை குறிபிடுகிறார். (தமிழர் பண்பாடு பக்கம்-1) பண்பாடு பற்றி பல அறிஞர்கள் பல வரையரைகளை முன் வைத்தாலும் ''மக்கள் தலைமுறை, தலைமுறையாக குழுவாகச் சேர்ந்து கற்ற முறைகளையும், மரபுகளையும் சேர்ந்த தொகுதியே பண்பாடு என்கிறது' வாழ்வியற் களஞ்சியம் ( தொகுதி 12- பக்.16).

உலகில் ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு இனமும் பல்வேறு வகையான பாரம்பரிய பெருமைகளை கொண்டுள்ளன. இப்பாரம்பரிய பெருமைகள் அல்லது பழக்க வழக்கம், நமக்கு முன்னோர்களிடமிருந்து வழிவழியாகத் தொடரும் ஒன்று, எனவே வழக்காறு அல்லது மரபு பெருந்தொகையான மக்களால் செய்யப்படும் ஏதாவது ஒரு நடைமுறைச் செயல்பாடுகளைக் குறிப்பதாக அமைகின்றது. அந்த வகையில் கால்நடைகள் மனித வாழ்வியலோடும், மனித செயல்பாடுகளோடும் தொடர்புடையவை, தமிழர் பண்பாட்டுத் தொன்மை வழக்காறுகளில் கால்நடை வழக்காறுகள் மிகவும் இன்றயமையாதவையாகும்.

**மரபு**

*"எப்பொருள் எச்சொல்லின் எவ்வாறு உயர்ந்தோர் செப்பினர்*

*அப்படி செப்புதல் மரபே '' (தொல்.நூற்பா:338)*

என்கிறது நன்னூல். அறிவுடையோர் எந்த பொருளை எந்தச் சொல்லால் எந்த முறைபடி குறிப்பிட்டார்களோ! அதே முறைபடி வழங்குதல் மரபாகும், என்பதே இதன் பொருள். சொல்லையும், பொருளையும் மட்டுமல்லாமல் அவர்கள் மேற்கொண்ட செயல்களையும் அவ்வாறே பின்பற்றுவது மரபே எனலாம்.

"பண்பாட்டின் எல்லா அம்சங்களிலும் பல காலமாகப் பின்பற்றப்பட்டு வருவது அல்லது பலரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியதி மரபு என்கிறது" (கிரியா தமிழ் அகராதி பக்- 810) ஒரு குறிப்பிட்ட இனம் அல்லது குழுவானது அதன் பண்பாட்டின் எல்லா நிலைகளிலும் பல காலமாக பின்பற்றப்பட்டு வருவதையும், பலரால் ஏற்றுக் கொள்ளப்பட்டவற்றையும் மரபெனக் கொள்ளலாம். ஏறக்குறைய நாமும் சில மரபின் வழித்தடத்தில்தான் பயணப்பட்டுக் கொண்டிருக்கிறோம். பண்பாட்டு

அடையாளமான கால்நடை மரபு சார்ந்தவற்றை வழக்காறுகளின் அடிப்படையில் பெருமரபு, சிறுமரபு என இரு வகையாகக் காணலாம்.

**பெருமரபு, சிறுமரபு**

"1955 - ல் இந்திய மக்களிடையே இருவேறு வழிபாட்டு மரபுகள் காணப்பட்டதை மேனாட்டு மானிடவியலாளர் மிக்கின் மாரெட்டு **Great Tradition, Little Tradition** என விளக்கினார், இந்த ஆங்கில சொல்லாட்சிக்கு இணையாக 1984 ல் பெருமரபு, சிறுமரபு என க.த.திருநாவுக்கரசு குறிப்பிட்டார். அதன் பின் பெ. சுப்பிரமணியன் 2000 ம் ஆண்டில் சிறு (நெறி) மரபு,பெரு (நெறி) மரபு எனக்குறிப்பிட்டார்." (கீற்று இணையதளம் - இயல் மரபும், அயல் மரபும்)

**மாரெட்டின் கூற்றுப்படி**

- எழுத்து வடிவில் நடத்தை விதிகளை பின்பற்றப்படுவது பெருமரபு என்றும்,
- எவ்வித எழுத்து வடிவிலான நடத்தை விதிகளும் பின்பற்றப்படாமல் மரபுசார்ந்த, எழுதப்படாத நடத்தை விதிகளைப் பின்பற்றுவது சிறுமரபு என பகுத்துக் காண்பித்தார்.

**பெருமரபு**

பெருமரபில் காளை மற்றும் பசுவின் பதிவுகளை ஒப்பிடும்போது பசுவைப் புனிதமாகப் பார்க்கும் முறை இந்துக்களிடம் இன்று வரை இருந்து வருகின்றது. காளை மற்றும் பசு தெய்வ வழிபாடுகளிலும், சடங்கு முறைகளிலும் முக்கிய இடம் பெறுகின்றது, வேத காலகட்ட நூல்களான ''ரிக் வேதம், யஜுர் வேதம், மஹாபாரதம், கருட புராணம், காமிகாகமம், பெரிய புராணம் விஷ்ணு புராணம்,

நாலாயிரம் திவ்யபிரபந்தம்'' போன்ற நூல்கள் வாயிலாக கோமாதாவை வணங்கும் முறையும். நேர்த்திக் கடன் தீர்க்கும் முறையில் பலி கொடுப்பதற்காக பயன்படுதியதையும் அறியமுடிகின்றது.

நமது தமிழ்ச் சமூகமானது தொன்மையான பண்பாட்டுக் கூறுகளை தன்னகத்தே கொண்டுள்ளது என்பதை உலக சமூகத்தின் முன் நிறுவும் சான்றுகளில் மிக முக்கியமானது ஏறுதழுவுதல் என்பதே!. பெருமரபில் காளை பற்றிய பதிவுகள் தமிழ்ச் சமூக மக்களின் வீரத்தை பிரதிபலிப்பனவாக உள்ளது. மனித சமூகம் வேட்டைச் சமூகமாக இருந்த காலத்திலேயே காட்டு விலங்கை அடக்கி வீட்டு விலங்காக மாற்றும் முயற்சியும். பகைவரது நாட்டின் ஆநிரை கவர்தல் மீட்டல் போன்றவற்றிலும் ஏறுதழுவலின் சாரம் அடங்கியுள்ளது.

தமிழின் தொன்மையையும் இலக்கிய வளத்தையும் எடுத்துக்காட்டும் ஆவணமாக விளங்கும் தொல்காப்பியமும் புறப்பொருள் வெண்பா மாலையும் புறப்பொருளுக்கு இலக்கணம் கூறுமிடத்து வெட்சி, கரந்தை ஆகிய துறைகளாக ஆநிரை கவர்தல், மீட்டலைப் பதிவு செய்யப்படுகின்றன.

**புறப்பொருள் வெண்பாமாலை மற்றும் புறத்திரட்டு**

பண்டையத் தமிழர் செல்வமாக விளங்கிய ஆநிரைகளைத் தனது பகை நாட்டினரிடம் கவரும் களவு முயற்சியே! பிற்கால பெரும் போர்களுக்கு தொடக்கச் செயலாக அமைந்தது என்றே கூறலாம். இந்நிகழ்வு பற்றிய செய்திகள் ஆநிரை கவர்தல், மீட்டல் என்பதை. வெட்சி, கரந்தை எனும் துறைகள் வாயிலாக அறியலாம். ஒரு நாட்டின் ஆநிரைகளைக் கவர்தல் அந்நாட்டில் பொருளாதாரத்தை வீழ்த்தும் முயற்சியே ஆகும். இச்செயலானது மன்னனின் விருப்பத்தில் அமைந்து

போர்ச்செயலாக இருந்த பொழுது அதற்கு ‘மன்னுறு தொழில்’ என்று பெயர். அதாவது வெட்சிப் பூவைச் சூடிச் சென்று எதிர் நாட்டின் ஆநிரைகளை (மாட்டு மந்தை) கவர்ந்து வருதலை விவரிப்பது வெட்சித் திணை எனவும் அவ்வாறு பகைவர் கவர்ந்து சென்ற ஆநிரைகளை மீட்பது கரந்தை என்றும் விளக்குகின்றது. வெட்சி வீரார்கள் வெட்சிப்பூவையும் ஆநிரை மீட்கும் கரந்தை வீரர்கள் காந்தள் பூவையும் சூடுவர் என்றும் புறப்பொருள் வெண்பாமாலை முன்வைக்கிறது. தன்னுறு தொழிலாகக் குறிஞ்சி, முல்லை, மருதம் போன்ற நிலங்கள் சார்ந்த பகைக் குழுக்கள் மாறி மாறி ஆநிரைகளைக் கவர்ந்து கொள்ளும் பதிவுகள் உள்ளன இதனை.

*அறாஅ நிலைச் சாடி ஆடுறு தேறல் மறாஅன் மழைத் தடங் கண்ணி*
*பொறாஅன் கடுங்கண் மறவன் கழல் புனைந்தான் காலை*
*நெடுங்கடைய நேரார் நிரை ( பு. வெ. மூலமும் உரையும் 2009- பக்.2)*

என வரும் எடுத்துக்காட்டு பாடல் பாலை நிலக் கள்வர்களின் தன்னுறு தொழிலான ஆநிரை கவர்தலை விவரிக்கின்றது. புறப்பொருள் வெண்பாமாலை. முல்லையும், குறிஞ்சியும் முறைமையில் திரிந்து பாலைத் திணை தோன்றியதாக தமிழ் மரபானது சுட்டிச் செல்வது நாம் அறிந்த ஒன்றே. உணவுப் பொருட்களை விளைவிக்க முடியாத வறண்ட நிலமாக பாலை நிலம் இருந்ததால், அந்நிலத்து மக்கள் தங்களது உணவுத் தேவையை நிறைவு செய்து கொள்ள வழிப்பறி, கொள்ளை போன்ற களவுத் தொழிலை மேற்கொண்டுள்ளனர். குறிப்பாக, குறிஞ்சியிலும், முல்லையிலும், மருதத்திலும், செல்வமாகவும் உற்பத்திக் கருவியாகவும் உணவு தரும் விலங்காகவும் திகழ்ந்த ஆடுகளையும், மாடுகளையும்

களவாடிச் சென்றும் பண்டமாற்றுப் பொருட்களாக்கியும் தம் உணவுத் தேவையை நிறைவு செய்துள்ளனர்.

அந்நிலத்து மக்கள் தன்னுறு வேட்கையால் ஆநிரைகளைக் கவர்ந்து செல்வர் என புறத்திணைகளுள் ஒன்றான வெட்சிப்போர் கூறுகிறது. தொடக்கத்தில் இச்செயல் போர்ச் செயலாக இருந்து பின்னர் குறிப்பிட்ட குழுவினரின் விருப்பச் செயலாக, தொழில் முறையாக மாறிப் போனது. இதன் பக்க விளைவாகத் தான் கவர்தல் எனும் செயல் மாறியபோது 'தன்னுறு தொழில்' என்று ஆனது.

வெட்சி, கரந்தை துறைகள் போர்முறை நடவடிக்கை என்பதிலிருந்து முற்றிலும் மாறி, குறிப்பிட்ட குழுக்களின் தொழிலாகப் பரிணாமம் அடைந்தது. இதன் வெளிப்பாடே பாலை நிலத்துக் கள்வர்களின் ஆநிரை கவர்தல் எனும் தொழில் முறை களவுத் தொழிலாக மாறியது என்பது குறிப்பிடதக்கது. இதன் வாயிலாக குறிஞ்சி, முல்லை, மருதம் போலவே பாலைத்திணையிலும் ஆநிரை இடம் பெற்றிருந்தது என்பதை அறிகிறோம் . அதே வேளையில் குறிஞ்சி, முல்லை, மருத நிலப்பகுதிகள் மட்டுமே வேளாண்மை தொழிலால் உணவு உற்பத்தி செய்திருக்கக் கூடும், அந்நிலங்களே உணவு உற்பத்தி நடைபெற்ற நிலப் பகுதிகளாக அமைந்திருந்தன. அத்தகைய வேளாண்மையிலும் உணவு உற்பத்தியிலும் ஆநிரைகள் பங்கேற்றிருப்பதை வரலாறு புலப்படுத்துகின்றது. ஆநிரை கவர்தலை எதிர்த்து, பாலைத் திணை தவிர்த்து பிற திணை மக்கள் குழுவினர் தங்களின் நிகரற்ற செல்வமான ஆநிரைகளை மீட்கும் முயற்சியில் இறங்கியதாக கரந்தைத் திணை முன் வைக்கிறது.

*கரந்தியல் காட்டுத் தீயப்போலப் பெரிதும் பரந்து செல் மள்ளர்*

*பதிந்தார் – அராந்தை விரிந்தவியும் மாறுபோல் விண்தோயத்*

*தோன்றி எரிந்து அவியும் போலும் இவ்வூர்* *(புறத், 1460, முதல் பதிப்பு 1953)*

என்று விரைந்து பரவி வளைத்துக் கொண்டு மூண்டெரியும் காட்டுத்தீ போல பசுக் கூட்டத்தை மீட்கும் பொருட்டுப் பகைவர் ஊருக்குள் மள்ளர்கள் சென்றனர், அதனால் இந்த ஊர் துன்பம் பெருகி அழிவது போல் எரிந்து அழியும் என்கிறது இச்செய்தி. அதாவது, ஆநிரைகளை கவர்ந்து சென்ற பாலை நிலத்தவரின் ஊர் சென்று ஆநிரைகளை மீட்க முற்பட்ட மருத நிலத்து மள்ளர்கள் பற்றிய குறிப்பு இஃது. பாலை நிலத்தவர் நேரடியாக உணவு உற்பத்தியில் ஈடுபடவில்லை என்பதை இக்குறிப்புகளின் வழி உணர்ந்து கொள்ள முடியும்.

மேற்குறிப்பிட்ட அரசியல் மற்றும் சமூகத் தொடர் செயல்பாட்டில் ஆக்களைக் கவர்தல் என்பது பசுக்கள் மற்றும் காளைகள்அடங்கிய நிரையைக் கவர்தல் என்பதாகத்தான் கொள்ள வேண்டும். மந்தையில் ஆக்களோடு காளைகளும் இருந்திருக்கக் கூடும், காளைகளே பெரும்பாலும், உழுதலிலும் இடப்பெயர்ச்சிக்கும் உணவு உற்பத்தியிலும் மிக முக்கிய பங்கு வகிக்கின்றன. முன்பின் பழக்கமில்லாத அறிமுகமற்ற, மாடுகளைக் கையாளுதல் என்பது மிகக் கடினமான ஒன்றாகும். எனவே களவு செய்பவர்களுக்கு மாடுகள் பற்றிய நுட்பங்கள் மற்றும் அவற்றை அடக்கும் முறைகளும் அறிந்தால் மட்டுமே இச்செயலை செய்திருக்க முடியும். புதிதாகக் கவர்ந்த மாடுகளை அடக்கி கையாளத் தெரிந்தவனே மக்களுள் சிறப்புடையவனாக கருதப்பட்டிருப்பான். பின்னாளில் இவை திருமணம் மற்றும் வீரவிளையாட்டாக உருமாறி பண்பாட்டுத் தடமாகப் பதிந்து விட்டது என்றே எண்ணலாம்.

வெட்சிப் போருக்கு செல்லும் முன்பும், ஏறுதழுவுதலுக்கு முன்பும் தெய்வ வழிபாடும் நிமித்தம் கேட்கும் வழக்கமும் முல்லை நிலத்து மக்களுக்கு இருந்ததை சங்க இலக்கியத்தில் முல்லைப் பாடலாக, இடம் பெற்றுள்ள குறிப்புக்களாலும் அறிய முடிகிறது.

மாடும், மனிதரும் இரு வேறு உயிர்ப்பான உறவுகள். மாடுகளைக் குறித்து மனிதரும், மனிதரைக் குறித்து மாடுகளும் இணக்கத்தோடும், பரிவோடும் இருப்பதை உணரலாம். அதனால்தான் இரு தரப்பும் தம் வீரத்தை விளையாட்டாகக் காட்டிக் கொள்கின்றனர். ஏறுதழுவல் என்பது இன்னொரு வகையில் ஒரு பாவனை விளையாட்டுத்தான். வெல்வதும் தோற்பதுமான பாவனைகள் தழுவல்களோடு முடிந்து போகின்றன. அதைத்தான் ஏறுதழுவல் நிகழ்வுகள் போலச் செய்து காட்டுகின்றன. இதனை 'ஏறுகொள் வென்றி' எனச் சுட்டுகின்றது புறப்பொருள் வெண்பாமாலை. இதுபோன்று விலங்குகளோடு தொடர்புடைய விளையாட்டுகளையும் அந்நூல் தெரிவிக்கின்றது.

வீரன் ஒருவன் பகை நாட்டிடமிருந்து கவர்ந்து வந்த ஆநிரை அனைத்தையும் கள் விற்றவனிடம் கொடுத்து கள் அருந்திவிடுகிறான். அவன் மீண்டும் கள் அருந்த பகை நிலம் நோக்கிச் சென்றான் என்பதையும் புற இலக்கியம் (புறநா;258) முன்வைக்கிறது. அதே போல் புற நானூற்றுப் (புறநா:260) பாடலானது ஆநிரையை பகை நாட்டவர் கவர்ந்து சென்ற போது தனி ஒருவனாக மீட்டுவந்த வீரனையும் குறிப்பிடுகிறது. வெட்சிப் போரில் பலரும் ஈடுபட்டிருந்தாலும் கூட தனி வீரன் புகழப்பட்டான் இந்நிலை ஏறுதழுவலிலும் காணமுடிகிறது. ஏறுதழுவல் நிகழ்வில் பல வீரர்கள் பங்கெடுத்தாலும்

காளையைத் தழுவிய வீரன் மட்டுமே புகழப்படுகின்றான், தலைவிக்கு ஏற்ற தலைவன் என்று சிறப்பிக்கப்படுகிறான்.

**நடுகல் வழக்கம்**

பண்டையத் தமிழர் வழிப்பாட்டு மரபில் நடுகல் வழிபாடும் ஒன்று. பகைவர்களுடன் போராடி நாட்டுக்காக உயிர் தந்த வீரர்களுக்கு நடு கல் வைத்து வழிபட்டனர். இன்றும் பல கிராமங்களைக் காக்கும் காவல் தெய்வங்களாக நடுகற்கள் உள்ளன. சங்கச் செய்யுள்களில் காணப்படும் நடுகல் பற்றிய குறிப்புகள் பல வெட்சித் திணையுடன் தொடர்புடையதாக உள்ளன. ஆநிரைகளை மீட்கும் முயற்சியில் உயிர் துறந்த வீரர்கள் பாரட்டப்பட்டுள்ளனர்.

*பரலுடை மருங்கிற் பதுக்கை சேர்த்தி மரல் வகுந்து கொடுத்த*
*செம்பூங் கண்ணியொடு அணிமயிர் பீலி சூட்டிப்பெயர் பொறித்து*
*இனி நட்டினரே கல்லும்ஃகன்றொடு கறவை தந்து பகைவர் ஓட்டிய*
*நெடுந்தகை கழிந்தமை அறியாது இன்றும் வருங்கொல், பாணரது*
*கடும்பே? (புறநா.264)*

என்ற பாடலில் கற்களுள்ள மேட்டுப்பக்கத்தின் அருகில், மரத்திலிருந்து பிரித்து எடுத்த நாரால் தொடுத்த சிவந்த பூக்களுடன் கூடிய மாலையையும், மயில் தோகையையும் சூட்டிப் பெயரும் பொறித்து, அவனுக்காக கல்லையும் நட்டுவிட்டனரே! கன்றுடனே கரவையையும் மீட்டுத்தந்தவன், பகைவரை ஓட ஓட விரட்டியவன் அவன் போரில் இறந்துபட்டான் அதனை அறிந்து பாணரது கூட்டம் இன்றும் அவனைக் காண வருமோ என ஆநிரை மீட்கும் போரில் பங்கெடுத்து இறந்துபோன வீரனைப் பற்றி உறையூர் இளம்பொன் வணிகனார் பாடுகிறார். இதே போன்று வேறு சில புறநானூற்றுப் பாடல்களிலும் ஒரு சில

அகநானூற்றுப் பாடல்களிலும் ஆநிரைகளை மீட்டு இறந்துபட்ட வீரர்களுக்கு நடுகல் எடுக்கப்பட்ட செய்தி பதிவு செய்யப்பட்டுள்ளது.

நடுகல் தெய்வமாக வணங்கப்பட்டதற்குப் புலவர் மாங்குடிக் கிழார் பாடல் சான்றாக அமைகின்றது. 'கல்லே பரவினல்லது நெல்லுகுத்தப் பரவும் கடவுளும் இலவே'என்பது அவரது கூற்று. நடுகற்களுக்கு நாள்தோறும் தீபதூபம் காட்டிப் பூசைசெய்யும் வழக்கமும் இருந்தது,

*'இல்லடுகள்ளின் சில்குடிச் சீறூர்ப்*

*புடைநடு கல்லின் நாட்பலியூட்டி*

*நன்னீராட்டி நெய்நறை கொளீஇய*

*மங்குல் மாப்புகை மறுகுடன் கமழும்' (புறநா:306).*

என வரும் பாடலடிகள் இல்லங்களில் காய்ச்சப்படும் கள்ளையுடைய சிலவாகிய குடிகள் வாழும் சிற்றூரின் பக்கத்தே நடப்பட்ட நடுகல்லுக்கு விடியற்காலையில் நன்னீராட்டி நெய்விளக்கேற்றிப் படையலைப் படைத்தனர் என்பதையும் . நெய் விளக்கு ஏற்றியதால் உண்டான புகை மேகம் போல் எழுந்து தெருவில் மணக்கும் என்றும், நடுகல் வணங்கப்பட்ட செய்தியைப் புறநானூறு கூறுகிறது. வெட்சி, கரந்தைப் போர்களில் வீரமரணம் அடைந்த வீரர்களின் நினைவாக நடப்பட்ட நடுகற்களை தெய்வமாகக் கருதி வணங்கி வழிபட்ட நிலை தமிழகத்தில் பரவலாக் காணப்பட்டது.

சங்க காலத்தில் ஆநிரை மீட்கும் போரில் கலந்து கொண்டு இறந்து போனவர்களுக்கு நடுகல் எடுப்பது வழக்கமான மரபு. தொல்காப்பியர் ஆநிரைகளை கவர்தலையும் மீட்டலையும் ஒன்றாகவே கருதுகிறார் எனவே

தொல்காப்பியர் வெட்சிப் போரில் இறந்தவர்களுக்கு நடுகல் வழக்கம் இருந்துள்ளதையே உணர்த்துகிறார்,

ஏறுதழுவல் பற்றிய குறிப்புகள் காணப்படும் முல்லைக்கலிப் பாடலில் காளைகளால் கொலையுண்ட வீரர்களைப் பற்றி செய்திகள் காணப்படுகின்றன. ஆனால் அவர்களுக்கு நடுகல் எடுக்கப்பட்ட செய்திகள் இடம்பெறவில்லை. “செங்கம், தருமபுரி எனும் பகுதிகளில் நடப்பட்டுள்ள நடுகற்களில் பெரும்பாலும் தொறுப்பூசல் என்றழைக்கப்படும் மாடுபிடி சண்டையில் மாண்டவர்களின் நடுகற்கள் காணப்படுகிறது. மேலும் தமிழ்நாடு மட்டுமின்றி ஆந்திரா, கர்நாடகா போன்ற மாநிலங்களிலும் இது போன்ற நடுகற்கள் காணப்படுகின்றன”(செங்கம் நடுகற்கள் 1971 பக்- 57,70)

தமிழகத்தில் பலபகுதிகளில் கிடைக்கப்பெற்ற கல்வெட்டுகளிலும் ஆநிரைக்கவரும் போர் பற்றிய குறிப்புகள் இடம்பெற்றுள்ளதை துரைபட்டாபிராமன் மிக விரிவாக தனது நூலில் (1990) குறிப்பிட்டுள்ளார். இதன் மூலம் வெட்சிப்போர் மற்றும் மாடுபிடி சண்டையில் பங்கெடுத்த வீரர்களுக்கு நடுகல் எடுக்கப்பட்டுள்ளது என்பதனை இது போன்ற சான்றுகள் முதன்மைப்படுத்துகின்றன.

முல்லைப்பாடல்களைப் பாடிய மேலை நாட்டவருள் தியாக்கிரட்டசு, ஸ்பென்சர், வெர்ஜில், போப் ஆகியோர் தொன்மைச் சிறப்புடையவர்களாவர். தியாக்கிரட்டசின் கிரேக்க முல்லைப் பாடல்களிலும் வெர்ஜிலின் இலத்தீன் முல்லைப்பாடல்களிலும் புல்வெளிகள், ஆநிரைகள், செடிகொடி, மரங்கள், அருவிகள், கைக்கிளையாகிய ஒருதலைக்காமம் முதலியவை பாடுபொருளாக அமைந்துள்ளன. ஸ்பென்சரின் (The Shepherds Calender) தி ஷெப்பர்ட்ஸ் காலண்டர்

(1579) பாடலும், போப்பின்பாடல்களும் -Pastoral of Pope) – குறிப்பிடத்தக்கவை. முல்லை நிலத்தினைப் பாடும் மரபு பழங்காலந் தொட்டே பல்வேறு நாடுகளில் இருந்துவந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (Literary Theory and Criticism ஆங்கில வலைத்தளம்)

''ஏறுதழுவலைப்பாடும் முல்லைக் கலிப்பாடல்கள் போன்று கிரேக்க நாட்டில் நடைபெற்ற வீரவிளையாட்டுகளில் ஒன்றான பொன்நீர்நாய்ப் போட்டியைப் பற்றிய பாடல்கள் ஏறுதழுவுதல் போட்டியை நினைவு படுத்தும் விதமாக அமைந்துள்ளது. இந்திய இலக்கியத்துள் கண்ணன் மரபு இருப்பினும் முல்லை இலக்கியமென்று கூறும் வகையில் எதுவும் வடமொழியில் இல்லை. வடமொழியில் காளிதாசரின் மேகதூதம், ருதுசம்காரம் என்பவற்றிலும், ஆந்திர மன்னன் ஆலன் (கி.பி.2ம்.நூ) என்பவன் தொகுத்த பிராகிருதக் கவிதைத் தொகுதியான 'கதாசப்தசதி 'என்னும் காதற் கவிதைகளிலும் ,கார்கால வருணனை, ஆற்றியிருக்கும் தலைவியின் நிலை ஆகியவை நன்கு சித்திரிக்கப்படுவதைக் காண்கிறோம். பிண்டார் என்பவர் கி.பி. 6 ஆம் நூற்றாண்டில் ஒலிம்பிக், பித்தியன் போன்ற ஊர்களில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்றவர்களை வாழ்த்திப் பாடும் போது, வீரர்களின் குலச்சிறப்பும் முன்னோர்களின் பெருமையும் நகரின் சிறப்பும் கூறப்பட்டுள்ளன''( கிரேக்க ஒலிம்பிக் பந்தயம் 1983 பக்கம்-6)

உலக இலக்கிய வரலாற்றை நோக்கும்போது போட்டியும் போட்டியில் வெற்றி பெற்றவர்களை வாழ்த்துவதுமாகிய முல்லை மரபு இங்கே காணப்படுவதாகக் கருதலாம். ஆனால் ஐரோப்பிய மரபிலும், வடமொழி மரபிலும் முல்லை இலக்கியவகையில் ஏறுதழுவுதல் ஒரு கூறாக குறிக்கப்படவில்லை.

**கலித்தொகை**

சங்க இலக்கியத்தில் ஏறுதழுவல் பற்றிய பதிவுகள் மிகுதியாக கலித்தொகையில் தான் காணப்படுகிறது. சங்க இலக்கியங்களில் பெரும்பாலும் திருமண வாழ்க்கை முறையானது களவும், கற்பும் என இரண்டு வகையாக சிறப்பிக்கப்படுகின்றது. முல்லை நிலத்தில்தான், களவு வாழ்வை விட வீரத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. கலித்தொகையில் முல்லைக்கலி வீரத்தின் விளை நிலம் என்றே கூறலாம். ஆயர் குலத்தினரின் வாழ்வையும் பழக்க வழக்கங்களையும் விவரிக்கிறது இக்கலித்தொகை. வீரத்தைச் சார்ந்தே அவர்களின் திருமணம் நடைபெற்றது. ஆயர் இனத்தவர் பின் வரும் மூன்று வகையினராகக் குறிப்பிடுகின்றனர், எருமைகளை வளர்ப்பவர் - கோட்டினத்து ஆயர்; ஆடுகளை வளர்ப்பவர்கள் புல்லினத்து ஆயர்; பசுக்களையும், காளைகளையும் வளர்ப்பவர் கோவினத்து ஆயர். இதில் கோவினத்து ஆயர் இன பெண்டிர்கள், ஏறுதழுவி வென்றவனை மணம் முடிக்கும் குலவழக்கம் கொண்டவர்கள் எனவே ஏறுதழுவும் நிகழ்ச்சி மிகுதியாக கூறப்படுகிறது.

**முல்லை நிலத்தில் ஏறுதழுவல்**

ஆயர்கள் தாங்கள் வளர்க்கும் ஆடு மற்றும் மாட்டு இனங்களை கொடிய விலங்குகளிடமிருந்து காக்க வேண்டிய நிலை காணப்பட்டது. மேலும் நாட்டின் எல்லைப் பகுதி வனம் என்பதாலும் அவர்கள் நாட்டையும் காக்கும் வீரம் தேவைப்பட்டது எனவே ஆயர்கள் ஆற்றல் மிக்கவர்களாகக் காணப்பட்டனர். ஆயற்குலப் பெண்களின் தந்தைகள் தம் மகளை மணக்க வரும் ஆடவர் வீரம் மிக்கவர்களாக அமைய வேண்டும் என எண்ணினர். பெண்களும் வீரம்

மிக்கவரையே மணம் முடிக்க விரும்பினர். இதன் காரணமாக ஏறுதழுவல் நிகழ்வை ஏற்படுத்தினர். ஏறுதழுவுதல் நிகழ்வில் ஆயர்கள் காளையின் கொம்புகளைக் கூர்மையாக்கி பரந்த வெளிகளில் திறந்து விடுவர். இளைஞர்கள் போட்டி போட்டு ஏறினைத் தழுவ முயல்வர். ஏறினைத் தழுவிய ஆயனுக்கு தம் பெண்ணை மணம் முடித்து கொடுப்பர். மணம் செய்ய முன் வரும் ஆயக்குலப் பெண்டிர்களும் தாங்கள் வளர்க்கும் காளைகளை தழுவும் வீரர் மீதே ஆர்வம் உடையவர்களாகக் காணப்பட்டனர். ஏறுதழுவல் காட்சிச் சித்திரத்தை முல்லைக்கலி பின்வருமாறு பதிவு செய்கின்றது.

> *" ஒ,ஓ! பொருபுகல் நல் ஏறு கொள்பவர் அல்லாய் திருமாமெய் தீண்டலர் (கலித்-102; 10) "*

என்றுபோர் செய்யும் விருப்பம் உடைய நல்ல காளையை அடக்குபவரே அல்லாமல் வேறு யாரும் இவளது மெய் தீண்டத்தக்கவர் அல்லர், என்று ஆயர் குலப் பெண் ஏறுதழுவும் ஆடவனையே விரும்பி மணப்பாள் என்பதை இது உணர்த்துகின்றது. மேலும்

> *விலை வேண்டார் எம்மினத்து ஆயர் மகளிர் கொலை ஏற்றுக்*
> *கோட்டிடைத் தாம்வீழ்வார் மார்பின் முலையிடைப் போலப் புகின்*
>
> *(கலித்-102 )*

எனும் பாடல் அடிகள் வாயிலாக தலைவன் தலைவி மீது உள்ள காதலை அவளிடம் கூறுகையில், தலைவி ஆயகுலப் பெண்கள் வீரம் தவிர வேறு விரும்பாள், கொலை செய்யும் ஆற்றலை உடைய ஏற்றின் இரு கொம்புகளுக்கு இடையில், தான் விரும்பும் பெண்ணின் முலைகளுக்கு இடையில் ஆசையோடு

வீழ்வது போல் வீழ்ந்து தழுவி ஏற்றை அடக்குகின்றவனுக்கே பெண் கொடுப்பார்கள் என்றாள். ஏறுகளின் கூர்மையான கொம்புகளை கண்டு அஞ்சி ஓடும் வீரமில்லா இளைஞனை ஆய மகளிர் இப்பிறவியிலும், மறுபிறவியிலும் கூட தன் கணவனாக அடைய விரும்ப மாட்டார்கள். ஏனென்றால் வீரம் ஒன்றே ஆணின் அழகு என ஆயக்குலப் பெண்டீர் வீரத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தனர் என்பதை

*“கொல்லேற்றுக் கோடுஅஞ்சுவனை மறுமையும் புல்லாளே*

*ஆயமகள்” (கலித்-103)*

-என்று விளக்குகின்றது கலித்தொகை.

**ஏறுதழுவுதலில் பறை**

ஏறுதழுவுதல் விழா நடைபெறும் இடத்தின் பெயர் தொழூஉ (தொழுவம்). என்பதாகும் இந்த விழா நடக்கப்போவதை முதல் நாளே அறிவிப்பர். இந்த அறிவிப்பின் போது பறை எனும் இசைக் கருவி ஒலிக்க செய்தியை அறிவிப்பதை மிக முக்கியமான வழக்கமாகக் கொண்டிருந்தனர், பறை’ எனும் இசைக் கருவி தகவல்களை மக்களுக்கு அறிவிக்கும் ஓர் கருவியாக பழங்காலத்தில் பயன்படுத்தப்பட்டது. பல்வேறு விழாக்களின் போதும், போர் நிகழ்வுகளின் போதும், அவசர நிலைகளின் போதும் பறையறிவிப்பது வழக்கமாகும். பறை அறிவிக்கும் பழக்கம் சங்ககாலத்தில் வழக்கில் இருந்ததை

“ நிறையழி கொல்யானை நீர்க்கு விட்டாங்கு

பறையறைந் தல்லது செல்லற்க ”(கலித்-56 )

எனவரும், கலித்தொகை அடிகளால் மதம் கொண்ட யானையை நீராட்டுவதற்கு வெளியே கொணரும்போது அதனை மக்களுக்கு உணர்த்தும் பொருட்டு

மாடுகளின் தோலினால் ஆன பறையில் ஒலி எழுப்பி மக்களை 'வெளியே வராதீர்கள்' எனச் சொல்லும் பழக்கத்தை அறிந்து கொள்ள முடிகிறது.

ஆவின்தோல் ஈனாத நாகான இள வயதிலே சூடுபடாத செத்த பசுவின் தோல் சீவியேறிடுவது இத்தகைய தோல்வன்மை முழவுக்குக் கொள்ளப்பட்ட செய்தியை (மலைபடுகடாம். 321) சங்கப் பாடலடிகளால் அறிய முடிகின்றது.

புலியோடு போரிட்டுப் புறங்கொடாது வென்ற அழகிய காளையினது தோலானது பறை எனும் இசைக் கருவிக்கு போர்த்தப்பட்டது. (அகநானூற்று -334)

**ஆயமகளின் தந்தையர்கள் ஏறுவிடுதல்**;

பிடவம், கோடல், காயா, வெட்சி, தளவம், குல்லை, குருந்து, முதலான மலர்க்கண்ணி சூடிக்கொண்டு ஏறுகோள் முரண்தலையில் ஈடுபடுவர். காளைகளுக்கு உரிய மகளிர் காளைகளோடு அணிவகுத்து நிற்பர் இந்தக் காளையை அடக்குபவனுக்கு இவள் உரியள் என்பர்.

ஆயர்கள் மகட்கொடைக்கான ஏறுதழுவலில் ஏற்றினங்களையும் அவற்றை அணைபவர் பெறுதற்குரிய மகளிர்களையும் பெறுவர். ஊரார்க்கு அறிவிக்கும் போது பின்வருமாறு அறிவிப்பர் ஒப்பில்லாத காளையின் கழுத்திலே கிடந்து அடக்குபவன் ஈடு இணை இல்லா அழகியான இவளைப் பெறுவான். கூரிய கொம்புகளை உடைய காளையின் சினத்தை அஞ்சாது தழுவி அடக்குபவன் ஒளி மிக்க அணிகலன்களை உடைய நீண்ட கூந்தலிலே துயிலுதலைப் பெறுவான், சினம் மிகுந்த கண்களைக் கொண்ட கொலைத் தொழில் மிக்க ஏற்றை அடக்குபவன் பிணை மானின் பார்வை போன்ற வரி படர்ந்த கண்களை உடைய இந்த நல்லாளைப் பெறுவான்.

மிக்க வலிமையுடைய சிவந்த எருதின் சினத்தை அஞ்சாமல் அடக்கி ஆள்பவன் வரி பொருந்திய குழயினையும் மூங்கில் போன்ற தோள்களையும் உடைய இவளுடன் துயில் பெறுவான். என ஆயர் முறைபடி அறிவித்து விண்மீன் சூழ்ந்த பான்மதி போலப் பெண்கள் சூழ்ந்திருக்கத் தம் மகளிரைப் பரணிடத்தே அழகுற நிறுத்தி வைப்பர். இச் செய்திகளை

*"அவ்வழி முள்எயிற்று ஏஎர் இவளைப் பெரும் இதோர் வெள்ளேற்று*
*எருத்து அடங்குவான் ஒள்ளிழை, வார் உறு கூந்தல் துயில் பெறும்,*
*வைமருப்பின் காரி கதன் அஞ்சான் கொள்பவன் ஈரரி வெரூ உப்*
*பிணை மான் நோக்கின் நல்லாள் பெறாஉம் இக்*
*குரு உக்கண் கொலையேறு கொள்பவன் , வரிக்குழை வேய் உறழ்*
*மெந்தோள் துயில்பெறும், வெந்துப்பின் சே எய் சினன் அஞ்சான்*
*சார்பவன், என்றாங்கு அறைவனர், நல்லாரை ஆயர் முறையினால்*
*நாள்மீன் வாய் சூழ்ந்த மதிபோல் மிடை மிசை பேணி நிறுத்தார்*
*அணி அல்வழிப் பறைஎழுந்து இசைப்பப் பல்லவர் ஆர்ப்பக் குறையா*
*மைந்தர் கோள் எதிர் எடுத்த நறைவலம் செய்விடா இறுந்தன ஏறு."*

*(கலித்-104)*

என எடுத்துரைக்கின்றது கலித்தொகை.

**ஏறுகளின் உவமை**

12 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டதாகக் கருதப்படும் தண்டியலங்காரம் உவமையை விளக்குமிடத்து

*"பண்பும் தொழிலும் பயனும் என்றிவற்றின். ஒன்றும் பலவும்*

*பொருளொடு பொருள் புணர்த்து. ஒப்புமை தோன்றச் செப்புவது*

*உவமை".* (தண்டி 1967.பக்.14)

என்கின்றது. கூறக் கருதிய பொருளை நன்கு தெரிந்த ஒன்றைக் காட்டி விளக்குவது. ஒரு பொருளை இன்னொரு பொருளுடன் ஒப்பிட்டு அழகு படுத்திக் கூறுவது. தெரியாத பொருளைக் காட்ட தெரிந்த பொருளைச் சொல்லி விளக்குவது. என்று விளக்கிச் சொல்கின்றது.

*வானுற ஓங்கிய வயங்கு ஒளிர் பனைக்கொடிப் பால்நிற*
*வண்ணன்போல் பழிதீர்ந்த வெள்ளையும் பொருமுரண் மேம்பட்ட*
*பொலம்புனை புகழ்நேமித் திருமறு மார்பன்போல் திறல்சான்ற*
*காரியும் மிக்கு ஒளிர் தாழ்சடை மேவரும் பிறைநுதல் முக்கண்ணான்*
*உருவேபோல் முரண்மிகு குராலும் மாகடல் கலக்குகிற மாகொன்ற*
*மடங்காப்போர் வேல்வல்லான் நிறனேபோல் (கலித்.104)*

என்று காளைகளின் நிறங்கள் தெய்வங்களோடு ஒப்பிட்டு விளக்கப்படுவதைக் காண்கிறோம். உயர்ந்த நிலையில் பலராமனின் வெள்ளை நிறக்காளையையும், திருமாலுக்கும் கரிய நிறக்காளையையும், சிவனுக்கு சிவந்தக் காளையினையும், மற்றும் முருகனின் நிறம் சிவப்பு, இளஞ்சிவப்புக் காளைகளுக்கு உரியதாக சிறப்பிக்கப்படுகிறது.

**காளையர்கள் ஏறுதழுவல்**

ஏறுதழுவலில் கலந்து கொள்ளும் முல்லை நில இளைஞர்கள் ஏறுதழுவுதல் நடைபெறும் ஊரில் உள்ள தெய்வங்களை வணங்கிய பின் நிகழ்வில் கலந்து கொள்கின்றனர். நீர்த்துறையிலும் ஆலமரத்தின் கீழும் பழைய வலியினையுடை

மாமரத்தின் கீழும் உள்ள தெய்வங்களாகிய இந்திரன், சிவன், முருகன் ஆகிய தெய்வங்களைத் தொழுதபின் தொழுவுக்குச் சென்று ஏறுதழுவிய குறிப்பினை கலித்தொகை

*''துரையு மாலமுந் தொல்வலி மரா அமும் முறையுளி பராஅய்ப்*

*பாய்ந்தனர் தொழூஉ' (கலி 101,13,14)*

என்று பதிவு செய்கின்றது.

தற்காலத்தில் ஏறுதழுவுதல் எந்த தெய்வத்திற்காக நடத்தப்படுகிறதோ அத்தெய்வத்தையோ, அல்லது ஏறுதழுவல் நடைபெறும் ஊரில் உள்ள தெய்வத்தையோ வணங்கிய பின்னர் அக்கோவிலின் பூசாரியிடம் திருநீறு பெற்றுக் கொண்டே ஏறுதழுவலில் வீரர்கள் கலந்து கொள்வார்கள் , அக்கோவிலில் வளர்க்கப்படும் கோவில் காளையை ஏறுதழுவலின் போது முதலில் திறந்து விடுவது வழக்கம். அவ்வாறு முதலில் வரும் சாமி காளையை மாடுபிடி வீரர்கள் பிடிக்க மாட்டார்கள். சாமிக் காளையைப் பிடித்தால் அத்தெய்வத்தையே பிடித்ததற்கு சமம் என நம்புகின்றனர்.

தோழி தன் தலைவியை அழைத்து வந்து ஏறுதழுவும் நிகழ்வைக் காட்டுகிறாள். அப்போது தோழி தலைவியிடம் நல்ல சகுனம் வாய்த்துள்ளது. ஆயக்குல இளைஞர்களும் ஏறுதழுவத் தயாராக இருக்கின்றனர். காளைகளும் கொம்பு சீவப்பட்டு போரிட ஆயத்தமாக உள்ளன. உன் காதலன் ஏறுதழுவி வெற்றிபெற்று உன்னை மணப்பான், இதனை

*அணி கொள மலைந்த கண்ணியர், தொகுப்பு உடன் மாறெதிர்*

*கொண்டதம் மைத்துடன் நிறுமார் சீறரும் முன்பினோன்*

*கணிச்சிபோல் கோடுசீஇ ஏறு தொழூஉப் புகுந்தனர்,இயைபுடன்*

*ஒருங்கு (கலித்,முல்.பா. எண் 6,9 )*

என வரும் பாடலடிகள் உணர்த்துகின்றன.

மேலும் இந்நிகழ்வினை பின்வருமாறு சித்தரிக்கிறது கலித்தொகை (106) பறை ஓசையானது மிகுந்த ஒலியுடன் முழங்குகையில் ஆற்றல் மிக்க பொதுவர்கள் ஏறுதழுவ எதிராக காத்திருப்பர், புகை வலம்வர விடப்பட்டு நின்ற காளைகள் ஆரவாரத்தினால் சினம் கொண்டு அப்பொதுவர்களின் மேலே பாயும், அவ்வாறு பாய்ந்து வருகின்ற காளைகளின் கொம்பினை பிடித்து மார்பிலே பொருந்தும்படி தழுவுவர். சிலர் கழுத்திலே அடங்கிக் கிடந்து குட்டேறு முறைப்படி தழுவினர். சிலர் தோள்களுக்கு நடுவே கழுத்தை புகவிட்டு இறுகப் பற்றிக் கிடந்தனர். சிலர் கொம்புகள் தம் மீது படுவதை அஞ்சாமல் ஏற்றுக்கொண்டனர்.

வரிசையாக வந்த பொதுவரை நீண்ட மருப்பினால் குத்தும் காளைகள் சாடி அணைவதற்கு இடம் கொடுக்காமல் அவர்களை நீக்கி நிறுத்தின.ஓடாமல் எதிரே நின்றவர்களை தனது சுடர்னுனி போன்ற கொம்பினால் குத்திச்சாடி உழலை மரத்தைப்போல் அவர்களின் உடலைத் துளைத்தன அக்காளைகள்.

பொதுவர்கள் துளைபட்ட புண்களில் இருந்து வடியும் இரத்தம் பட்டு கைவழுக்கியதால் மணலை அள்ளி கைபிசைந்து உடம்பை திமிர்த்து காலம் தாழ்த்தாமல் பரதவர் சிறு தெப்பம் ஏறுவதுபோல் காளையின் மேல் பாய்ந்தடக்கினர். அக்காளையின் அழகிய மருப்பினால் குத்திச் சரிந்த குடர்களைப்

பருந்து பற்றிக் கொண்டு மேலே சென்றன. தவறி விழுந்த குடர்கள் ஆலமரத்தின் மீதும் கடம்ப மரத்தின் மீதும் விழுந்தன.

**காளையை வென்ற வீரனுக்கு மகளை வழங்குதல்**

ஏறுதழுவல் நிகழ்வின்போது அஞ்சாமல் காளையை அடக்கிய பொதுவனுக்கு மகளைக் கொடையாக வழங்கினர் ஆயர். இதனால் ஊர்மக்களிடையே பரவி இருந்த அலரானது மறைந்தது என்றும் அலர் தூற்றியோரின் வாய் அடைந்து போனது என்றும் தலைவி கூறுவது போல் அமைத்துள்ளது பின் வரும் பாடல்

*"நேரிழாய்! கோள் அரிதாக நிறுத்த கொலையேற்றுக் காரிகதன்*

*அஞ்சான் பாய்ந்த பொதுவற்கே ஆவுற்று எமர்,கொடை*

*நேர்ந்தார்,அலர் எடுத்த ஊராரை உச்சி மிதித்து."* (கலித்.104- 75)

மேலும் மகட் கொடை வழங்கும் வேளையில் தலைவி தோழியிடம் அன்று ஒருநாள் இவ் ஆயர் மகன் மிக்க கோபம் கொண்ட சிவந்த காளையை தழுவினானோ அன்றே என் நெஞ்சமானது அவனிடம் சென்று விட்டது. இன்று எதற்காக மகட்கொடை கொடுப்பதாக நம் உறவினர்கள் உறுதி கொடுக்க வேண்டும் என்று தனது காதலனே தமக்குரிய காளையைத் தழுவி தன் பெற்றோர் மணம் முடித்து வைக்கும்படி அமைந்துவிட்டதையும், தம் காதலனின் வீரத்தையும் கூறி மகிழ்கிறாள். இதனை

*"ஒன்றிப் புகரினத்து ஆயமகற்கு,ஒள்ளியாய் இன்று எவன், என்னை*

*எமர் கொடுப்பது,அன்று அவன் மிக்குத்தன் மேற்சென்ற செங்காரிக்*

*கோட்டிடைப் புக்கக்கால் புக்கது என் நெஞ்சு."* (கலித்- 105 -65)

எனவரும் பாடலடிகளால் அறியலாம்.

**குரவைக்கூத்து**

ஏறுதழுவும் நிகழ்ச்சிக்கு முந்தைய நாள் மாலையிலோ, பிந்தைய நாள் மாலையிலோ குரவைக் கூத்து நடபெறும். இக்கூத்தில் ஆயர் குல ஆண்களும், பெண்களும் இணைந்து ஆடுவர். ஆயர் கன்னியர் பாடும் பாடல் ஏறு தழுவப்போகும் தன் காதலனின் வீரத்தைத் தூண்டுவது போலவோ, ஏறுதழுவி வென்றவனை புகழ்வது போலவோ அமைந்திருக்கும்.

கொலை செய்யும் தன்மை கொண்ட காளைகளின் மூலம் ஏற்பட்ட புண்களை தன் முலையின் மென்மையாலே அப்புண்கள் ஆறும்படி தழுவிக் கொள்வேன். என்கின்றாள் மேலும் தயிரினைக் கடையும்போது என் தோளின் மீது பாய்ந்த புள்ளிகளின் மீது சினம் கொண்ட காளையினைத் தழுவிய ஆயமகனின் உடம்பிலிருந்து வழிகின்ற குருதி கலந்துவிடுமாறு தழுவுவது நம்முடைய தோள்களுக்கு அழகு மட்டுமா அதைவிடச் சிறந்தது வேறொன்றும் அல்ல என தலைவி குரவையாடி மகிழ்வதை

*“மயங்கிப் பொதுவேம்; முயங்கிப் பொதிவேம் முலைவெதின் ஒற்றி*

*முயங்கிப் பொதிவேம்” ..( கலித் .106 -35)*

எனும் பாடலடிகள் உணர்த்துகின்றன. குரவையிட்டு கூத்தாடுகையில் மிடுக்குடனும், வீரத்துடனும் போருக்குச் செல்லும் வீரர்களின் மகிழ்வுக்கு ஒத்ததாக இருக்கின்றது.

*நீறு எடுப்பவை நிலம் சாடுபவை மாறேற்றுச் சிலைப்பவை ,*

*மண்டிப் பாய்பவையாய்த்... (கலித்.106)* என வரும்

பாடலடிகளில் காளைகள் சென்றபோது, காலால் புழுதியைக் கிளப்பின. கொம்பால் மண்ணைக் குத்தின. கத்தி எதிரொலி எழுப்பின. ஒன்றோடொன்று முட்டிப் பாய்ந்து கொண்டன. போர்க்களத்தில் வீரர்கள் ஒருவரை ஒருவர் தாக்கிக்கொள்வது போலத் தாக்கிக்கொண்டன என்று இக்காளை இனங்களின் செய்திகளை அறிய முடிகின்றது.

**மாட்டின் கொம்பினை வழிபடல்**

திருமணம் போன்ற நிகழ்வுகளில் ஆயர் தம் வீடுகளில் செம்மண் பூசி, இளமணலை வீட்டின் முன்பக்கம் பரப்பி. பெண் எருமை மாட்டின் கொம்பை வீட்டில் வைத்து அதை தெய்வமாக வணங்குவர். இத்தகைய வழிபாட்டை,

*“தருமணல் தாழப்பெய்து இல்பூவல் ஊட்டி, எருமைப் பெடையோடு எமர்*

*ஈங்கு அயரும் பெருமணல் எல்லாம் தனித்தே ஒழிய”.* *(கலித். 114- 11,15)*

என்று விவரிக்கின்றன.

ஏறுதழுவிய வீரர்களும், பெண்களும், ஆயர்குல தந்தையர்களும் ,எண்ணற்ற பசு, மற்றும் காளை இனங்களை வளர்த்ததை அறிய முடிகிறது. இவர்களின் மிக முக்கிய பொருளியல் பின்புலமாக காளை மற்றும் பசு இனங்கள் அமைந்துள்ளது.

**ஏறுதழுவும் பொதுவர்களின் பொருளியல் பின்புலம்**

முல்லை நில மக்களின் தொழில் கால்நடை வளர்ப்பதாகும். அதன் மூலம் பெறும் பொருளால் தம் வாழ்வை நடத்துபவர்கள் எனவே ஆநிரைகளை மையமிட்டதாக அவர்தம் பொருளியல் பின்புலம் அமைகின்றது. இதனை முல்லைக்கலி பின் வருமாறு பதிவு செய்கின்றது.

- ஏறு உடை நல்லார் - காளைக் கூட்டங்களை உடைமையாகப் பெற்றோர் (கலித்-102) மகட்கொடையின் பொருட்டு ஏறுதழுவ காளைக் கூட்டத்தை தமது சொத்துக்களாக வளர்த்தனர்.
- பல் ஆண் பொதுவர் -பலவகை ஆநிரைகளை உடைய பொதுவர் (கலித்,103-5)
- கோட்டினத்து ஆயர் மகன் – எருமைத் திரளுடைய ஆயர் மகன் ( கலி 103,33,)
- கோவினத்து ஆயர் மகன் – பசுக்கூட்டங்களை மிகப் பெற்ற ஆய மகன் (கலித்-103,35)
- புகர் இனத்து ஆயமகன் – கபில நிறத்துப் புள்ளிகள் கொண்ட பசுத்திரளைக் கொண்ட ஆயமகன் (கலித்- 105,66)
- முல்லை நிலப் பெண்களை பெற்றத்தார் பசுத்திரள் உடைய ஆய்ச்சியர்.(கலித்- 104)
- கோவினத்தார்- பசுவினங்களை உடைய சுற்றத்தார்(கலித்-107)
- குடம் சுட்டவர் – குடப்பால் சுரக்கும் கோவினத்தை உடைய சுற்றத்தார். (கலித் -107,2)

போன்ற செய்திகள் உணர்த்துகின்றன.

**உள்ளப் புணர்ச்சி**

ஆயமகன் ஆயமகளை திருமணம் செய்ய வேண்டுமெனில் அவளுடைய பெற்றோர் போற்றிவளர்த்த கடுமையான சினம் கொண்ட கொல்லேற்றினைச் சாடிப்பிடித்துத் தழுவி அடக்குதல் வேண்டும்.

*கோளாளர் என்னொப்பார் இல்லெனநம்மானுள் தாளாண்மை*

*கூறும்பொதுவன்நமக்கொருநாள் கேளாளன்ஆகாமைஇல்லை*

*அவற்கண்டு வேளாண்மை செய்தனகண்*

*இன்றெவன்என்னைஎமர்கொடுப்பதுஅன்றவன்*

*மிக்குத்தன்மேற்சென்றசெங்காரிக்கோட்டிடைப்*

*புக்கக்கால்புக்கதென்நெஞ்சு (கலித்.101)*

என்னும் பாடல் அடிகள் முன்வைக்கின்றன. ஆயமகன் தலைவியின் ஏற்றை தழுவி அடக்குவதற்கு முன்னமே, ஆயமகளின் நெஞ்சம் அவனைப் பற்றுக் கோடாகக் கொண்டு காதல் கொண்டது என்பதையும் இப்பதிவு தெளிவுபடுத்துகிறது, ஆகவே ஆயமகளின் உள்ளமும் ஏறுதழுவுவோனை விரும்பியது என்னும் உள்ளப்புணர்ச்சியின் அடிப்படையில் எழுந்த ஏறுதழுவுதலை இங்கு காண முடிகின்றது.

**ஏறுகளுக்குள்ளே பொருதுதல்**

தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்ளும் பல வகையான காளைகள் போர்க்கள வீரர்களை ஒத்து காணப்படுகின்றன. அவைகள் கூர்மையான கொம்புகளால் தாங்களே ஒன்றோடு ஒன்று குத்தி குருதி வடிகின்றதே தவிர மனிதர்களிடத்து பொருதுதலில் அல்ல என்பதை பின்வரும் பாடலடிகளால் அறியலாம்.

*துளங்கு இமில் நல் ஏற்றினம் பல களம்புகும் மல்லர் ஒத்தன. தாக்குபு*

*தம்முள் பெயத்து ஒற்றி எவ் வாயும் வைவாய் மரபினான்*

*மாறாதுன்குத்தலின் மெய்வார் குருதிய ஏற்றெல்லாம் பெய்காலை*

*நிரை ஒத்தன (கலித். 106)*

என காளையின் போர்க்குணம் விவரிக்கிறது.

**ஏறுகளின் மீது கொண்ட அன்பு**

போர்க்குணம் கொண்டு தத்தமக்குள் பொருத முற்படு காளைகளை அன்பால் அடக்கி பிரித்து விடுவர் பொதுவர்.

> *பிரிவு கொண்டு இடைப் போக்கி, இனத்தோடு புனத்து ஏற்றி இரு*
>
> *திறனா நீக்கும் பொதுவர், உரு கெழு மா நிலம் இயற்றுவான், விரி*
>
> *திரை நீக்குவான் வியன் குறிப்பு ஒத்தனர். (கலி-106.15)*

என்று விளக்குகின்றது.

தாக்கிக் கொள்ளும் செயல்கள் பேசப்படுகின்றது, தம்மைப் பிரிக்க முயலும் பொதுவரை அவை குத்தும் எனினும். அவ் ஏறுகளை தழுவி அடக்குவர் பொதுவர். சில ஏறுகள் காலாலே வெட்டி நீற்றை எழுப்பும், சில கோட்டு மண்கொள்ளும், வேறு சில ஒன்றோடொன்று மாறுபட்டு முழங்கும் மற்றும் சில மிக்குப்பாயும், இவ்வாறு ஒன்றையொன்று கொம்பினால் குத்தித்தாக்கிக் கொள்ளும் ஏறுகளை இரண்டு கூறாக நீங்கும்படி நடுவே சில ஏறுகளைச் செலுத்திப் பசுத்திரளோடு புனத்தேற்றித்தத்தம் இனங்களைப்பிரிப்பர் இடையர். அவ்ஏறுகள் அவ்விடையரை ஓடும்படி மிதிக்கும். நின்றவரைக் குத்தித் துளைக்கும். ஆய்ச்சியர் மேயும் புலத்திலே ஏறுகளைப் பிரித்துச் செலுத்தின தம்முடைய காதலருடைய கையைக் கோத்து இன்ப முற்றுக் குரவையாடுவர், இவ்வாறு வியன் புலத்தில் (அகன்ற நிலப்பரப்பில்) நடைபெறும் ஏறுதழுவுதலில் தொழுவமும் இல்லை, பரணும் இல்லை. ஆகவே மகட்கொடை நேரும் ஆயர் பரண் மீது நிறுத்திவைத்த காதல் மகளிரும் ஏறுதழுவுதலுக்குக் காரணமாவதில்லை. மேய்ச்சல் நிலத்தில் திரிந்து தாக்கும் ஏறுகளின் மீது இடையர் கொண்ட அன்பே காரணமாகின்றது.

கலித்தொகையில் குறிப்பிடப்படும் முதல் ஐந்து பாடல்களில் ஏறுதழுவல் நிகழ்வானது பரந்த வெளியான தொழுவத்தில் நடைபெறுவது. ஆறாவது பாடலில் கூறப்படும் ஏறுதழுவல் தொழுவில்லாமல் அகன்ற நிலப்பரப்பில் நடப்பது, இதன் வாயிலாக தான் விரும்பிய பெண்ணை திருமணம் செய்து கொள்ளும் நோக்கம் மட்டுமின்றி ஏறுகளின் மீது கொண்ட அன்பால் ஏறுகளை அடக்குதல், என்ற இரண்டு வகைகளில் ஏறுதழுவுதலை உணர்ந்தறிய முடிகிறது. வீரத்தின் அடையாளமாக போற்றப்படும் ஏறுதழுவல் பற்றிய மிக இன்றியமையாத சான்றுகள் சற்றுவிரிவாக இத்தொகை நூல் வாயிலாக அறிய முடிகின்றது.

இளைஞர்கள் தம் காதல் கொள்ளும் மங்கையை மணக்கும் வாய்ப்பாக ஏறுதழுவல் நடைபெறுகின்றது. ஆயர் தந்தையர்கள் ஏறுவிடுதல், குரவை ஆடுதல், ஏற்றின் வகை, ஏறுதழுவும் பொதுவர்களின் பொருளியல் பின்புலம், ஏறுதழுவிய பொதுவர்களின் பின்னணி, காளை இனங்களின் பெயர்கள் போன்றவை இப்பகுதியில் விளக்கப்பட்டுள்ளன.

மக்கள் வாழ்வியலையும், வழக்காறுகளையும் பதிவு செய்யும் இலக்கியங்கள் மட்டுமின்றி பல இலக்கண நூல்களிலும் ஏறுதழுவுதல் பற்றிய குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. தொல்காப்பியம், இறையனார் களவியல் உரை, நம்பியகப்பொருள், யாப்பருங்கலவிருத்தி ஆகியவற்றில் இக்குறிப்புகளை காணமுடிகின்றது.

*'வில்லான் விறலடி மேலன பொற்கழல் வெண்முத்தன்ன. பல்லாள்*

*இணையடி மேலன பாடகம் பஞ்சவற்கு. நெல்லார் கழனி*

*நெடுங்களத் தன்று நிகர்மலைந்த. புல்லா தவரென யார்கொல்*

*அருஞ்சுரம் போந்தவரே.' ( நூற்பா-131)*

என்னும் நூற்பாவிற்கு உரை கூறும் இளம்பூரணர் ''வில்லேற்றினானாதல், திரிபன்றியெய்தானாதல், கோடற்குரியனெனக் கூறியவழி அது செய்தார்க்குக் கொடுத்தல்' என்பார்.

அசுரம் எனும் மண முறைக்கு (தொல்.பொ. களவியல் நூற்:1) விளக்கம் எழுதும் வெள்ளைவாரணர், "கொல்லும் இயல்புடைய எருதினை அடக்கியவன்" என்று குறிப்பிடுவது காளையை அடக்கி பெண்ணை திருமணம் முடிக்கும் வழக்கத்தினையாகும். இது ஏறுதழுவுதலின் தொன்மை வடிவமாக இருந்திருக்கலாம்.

**சிலப்பதிகாரத்தில் ஏறுதழுவல்**

இவ்வேறு கொண்டானுக்கு இன்னாள் உரியள் என்று தொழுவிடத்துண்டாகிய ஏழுவகை ஏற்றைக்குறித்து வளர்த்தார், கோதையையுடைய ஏழுகன்னியர்' என்னும் குறிப்புச் சிலப்பதிகாரம் மதுரைக் காண்டத்தில் வருகின்றது.

*இறையனார்அகப்பொருளுரை: "அசுரம்என்பது–கொல்லேறுகொண்டு*

*டான் இவளையெய்தும், வில்லேற்றினான் இவளையெய்தும்,*

*திரிபன்றிஎய்தான் இவளையெய்தும், மாலைசூட்டப்பட்டான்*

*இவளையெய்தும்என இவ்வாறு சொல்லிக் கொடுப்பது,*

*இஃதுஅரும்பொருள் வினைநிலைஎன்பது*

*( இறை. அகப். 31-1953 )*

**நம்பிஅகப்பொருள்விளக்கம்**

*மடலேநுதலொடுவிடைதழால்என்றா*

*குற்றிசைதன்னொடுகுறுங்கலியென்றா*

*சுரநடைதன்னொடுமுதுபாலையென்றா*

*தாபதநிலையொடுதபுதாரநிலையெனப்*

*புகன்றவைஇயற்பெயர்பொருந்தாவாயின்*

*அகன்றவகப்புறப்பெருந்திணைக்காகும் (நூற்பா-244)*

என்று அகப்புறப் பெருந்திணைக்குரிய துறைகளைக் குறிப்பிடும் போது‘விடை–தழால்’என்று ஏறுதழுவுதல் குறிக்கப்படுகின்றது; ஏறுதழுவுதலின் விளக்கம் தரப்படவில்லை. ஆனால் இந்த நூற்பாவுக்குக் குறிப்புரை எழுதிய கா, ர, கோவிந்தராசமுதலியார் “விடைதழாலாவது வெல்லுந் திறலுடையனாகிய தலைமகன் தான் விழைந்த தலைமகளை மணத்தற் பொருட்டுக்கொல்லுந் திறலமைந்த ஓர் எருத்தினைப் பிடித்துத் தழுவி அடக்குதல்”

வெல்லும் திறம் படைத்த தலைவன் தான் விரும்பிய தலைவியை மணம் செய்து கொள்ள வேண்டித் தலைவி தமர் குறிப்பிட்டுச் சொல்லும் திறமுடைய ஓர் எருதினைப் பிடித்து தழுவி அடக்குதல் என விளக்குகின்றார்.

**யாப்பருங்கலவிருத்தி**

யாப்பருங்கலவிருத்தி ஆசிரியர், இன்னது செய்தார்க்கு இவள் உரியள் என்றவிடத்து, அன்னது செய்து எய்துவது. அவை வில்லேற்றுதல், திரிபன்றி எய்தல், கொல்லேறு கோடல் முதலியன என்கிறார்

*வில்லேற்றல்வேள்வியைக்காத்தல்மிகுவலிக்*

*கொல்லேற்றியல்குழையைக்கோடலென்றெல்லாம்*

*அரியனசெய்தெய்தினான்ஆயின்அசுரம்*

*அரியவாம்அந்தமணம் என்பர்.!! ( யாப். வி பக்: 106-1916)*

இறையனார் அகப்பொருளுரையாசிரியரும் இளம்பூரணரும், க.வெள்ளைவாரணனும் ஏற்றினை அடக்கியவனுக்குப் பெண்ணைக் கொடுப்பது’என்ற கருத்தை முன்வைக்கின்றனர். நச்சினார்க்கினியரும் யாப்பருங்கலவிருத்தியாசிரியரும்

பெண்ணை எய்துவது' என்கின்றனர். ஏறுதழுவுகின்றவனைப் பெண் விரும்புகின்றாளா என்பதற்குச் சிலப்பதிகாரத்தில் விளக்கமில்லை. நம்பி அகப்பொருள் விளக்கத்திலோ இத்துறை அகப்புற பெருந்திணையில் சேர்க்கப் பெற்றுள்ளது. கா.ர. கோவிந்தராசு முதலியார் 'தான் விழைந்த மகளை மணத்தற் பொருட்டு ஏற்றினை அடக்குதல்' என்கின்றார். மேற்கூறிய விளக்கங்களிலிருந்து ஏறுதழுவுதலைப் பற்றி அறிந்து கொள்ளும் செய்திகளில் மிக இன்றியமையாதது ஏறுதழுவுகின்ற ஆண்மகன், தான் விரும்பிய பெண்ணைத் திருமணத்தில் பெறுவது.

சங்க இலக்கியங்களில் பெரும்பாலும் திருமண வாழ்க்கை முறையானது களவும், கற்பும் என இரண்டினை குறிப்பிட்டாலும் முல்லை நிலத்தில் தான் களவு வாழ்வை விட வீரத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. வீரத்தைச் சார்ந்தே அவர்களின் திருமணம் நடைபெற்றது, அத்தகைய வீரமானது காதலுக்கு ஒப்பானது என தம் பாடல் வரிகளால் சிலப்பதிகாரத்தில் ஆய்ச்சியர் குரவையில் இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார்.

*''தொழுவிடை ஏறு குறித்து வளர்த்தார்*

*எழுவர் இளங்கோதையார்''* (*ஆய்ச்சியர் குறவை-13 பக்;116-1997*)

என ஆயர் குலத்தைச் சார்ந்த கன்னியரான இளங்கோதையர் ஏழு பேர் தங்களை திருமணம் செய்து கொள்ளும் காளையர் ஏறுதழுவலுக்காக தனித்தனி எருதுகளை வளர்த்த செய்தி

*காரி கதன் அஞ்சான் பாய்ந்தானைக் காமுறும், அவ்வேரி மலர்க்*

*கோதையாள்; நெற்றிச் செகிலை அடர்த்தாற்கு உரிய,இப்*

*பொற்றொடி மாதராள் தோள்; மல்லல் மழவிடை ஊர்ந்தாற்*

*உரியள்,இம் முல்லையம் பூங்குழல்-தான்; நுண்பொறி வெள்ளை*

*அடர்த்தாற்கே ஆகும்,இப் பெண்கொடி மாதர்-தன் தோள்;*

*பொற்பொறி வெள்ளை அடர்த்தார்க்கே ஆகும்,இந் நற்கொடி*

*மென்முலை தான்; வென்றி மழவிடை ஊர்ந்தாற் உரியள்,இக்*

*கொன்றையம் பூங்குழ லாள்; தூநிற வெள்ளை அடர்த்தாற்கு*

*உரியள்,இப் பூவைப் புதுமல ராள்; ( ஆய்சியர் குரவை.6 -12 பக்:116-1997 )*

எனும் பாடலடிகள் எடுத்துரைக்கின்றது. கருப்பு நிறமுடைய காளையின் சீற்றத்தைக் கண்டு அஞ்சாமல், அதன் மீது பாய்ந்து, அதை அடக்கியவனையே தேன் நிறைந்த மலர் மாலையை அணிந்தவள் விரும்புவாள்! நெற்றியில் சிவந்த சுட்டியினையுடைய ஏற்றினை அடக்கியவனுக்கே, பொன் வளையல்களை அணிந்த இந்தப் பெண்ணின் தோள்களைத் தழுவும் உரிமை உண்டு. வலிமைமிக்க இளைய ஏற்றினை அடக்கி. அதன் முதுகின்மேல் ஏறி அதனைச் செலுத்தியவனுக்கே. இந்த முல்லைப்பூக்கள் சூடிய கூந்தலை உடையவள் உரியவளாவாள் என்று எடுத்துரைக்கின்றது.

நுண்ணிய புள்ளிகளை உடைய வெள்ளை எருதினை கொடி போன்ற நான்காவது பெண் வளர்த்து வருகிறாள். இவளது தோள்கள் இக்காளையினை அடக்குபவர்களுக்கே உரியன. அழகிய ஏற்றினை அடக்கியவனே. இந்த அழகிய கொடி போன்ற பெண்ணின் மென்மை பொருந்திய மார்புகளைத் தழுவ முடியும். வெற்றி பெறும் திறமையுடைய அழகிய ஏற்றினை அடக்கி நின்றவனுக்கே.

இந்தக் கொன்றைப்பழம் போல மின்னும் கூந்தலையுடைய இவள் உரியவள். தூய வெள்ளை நிறமுடைய ஏற்றின் சீற்றத்தை வென்றவனுக்கே. இந்தப் புதிதாகப் பூத்த மலர் போன்ற பெண் உரியவள் என்று எடுத்துரைக்கின்றது.

எந்த காளையை அடக்கியவனுக்கு எந்த கன்னி என அறிவிப்பு செய்துவிட்டு போட்டியை நடத்தும் வழக்கம் இருந்தமை இதனால் புலனாகிறது. தந்தை தமது மகளிரின் திருமண வாழ்விற்கு உகந்த, தம் குலத்தைச் சார்ந்த மணமகன்களை தேர்வு செய்யும் ஏற்பாடாகவும் இவ் ஏறுதழுவல் அமைகின்றது. கலித்தொகையை விட சிலப்பதிகாரத்தில் ஏறுதழுவல் சிறிய அறிமுகமாக காணப்பட்டாலும் முறையான விளையாட்டாக உருமாற்றம் அடைந்ததும் நிலைபெற்ற தன்மையும் இங்கு உணரமுடிகின்றது.

**மலைபடுகடாம்**

மலைபடுகடாம் ஏறுதழுவலை நேரடியாகக் கூறவில்லை மாறாக ஏறுகளுக்கு இடையேயான பொருதல்களை முன் வைக்கின்றது. தம் கூட்டத்திலிருந்து பிரிந்து வந்த நன்கு அசையக் கூடிய காளையும், காட்டுப் பசுவின் விரைவும், காற்றினை ஒத்த போர்த் தொழில் பயின்ற ஏறும் தங்களுக்குள் பொருந்திய பின் பெற்ற வெற்றியை தம் வெற்றியாக குறவரும் கோவலரும் ஒருசேர கொண்டாடி மகிழ்ந்ததாகக் கூறுகிறது இந்நூல், இதனை

*இனத்தின் தீர்த்த துளங்கு இமில் நல் ஏறு மலைத் தலை வந்த மரையான்*
*கதழ் விடை மாறா மைந்தின் ஊறுபடத் தாக்கி கோவார் குறவரோடு*
*ஒருங்கு இயைந்து ஆர்ப்ப வள இதழ்க் குழவியும் குறிஞ்சியும் குழைய நல*
*ஏறு பொரூஉம் கல்லென் கம்பலை* (மலைபடு 330-35)

எனும் பாடலடிகள் எடுத்துரைக்கின்றன.

**பள்ளு**

உழவர்களின் வாழ்வியல் குறித்த இலக்கியமாகிய பள்ளு இலக்கியம் காளைகளின் வகைகள் குறித்து பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்நூல் உழவுத் தொழிலின் மேன்மையைக் கூறுவதோடு, அக்கால வித்து - வகை, மாடு - வகை, ஏர் - வகை முதலானவற்றை விளக்குகிறது.

> *....பூட்டும் பொழுதில் ஒரு புல்லைக் காளை மோட்டு வரால் குதிக்க, முகத்தை மாறி, ....முடுக்கி மறிக்கும், ஆளை முட்டி ஓட, 'மாட்டுக் குறும்பு அடங்க மறிப்பன்' என்றே ....வடிவு அழகக் குடும்பன் வந்து மறித்தான், கோட்டு முனையால் அது குத்தும் அளவில் ....குடும்பன் சற்றே மயக்கம் கொண்டு விழுந்தான்* (முக்கூடற் பள்ளு. 1894 பக்-127)

என்று அடங்க மறுக்கும் காளையை அடக்கும் உழவனாக வடிவழகக் குடும்பன் வெளிப்படுகின்றான். காளை அடக்குதல் என்பது விளையாட்டாக மட்டுமின்றி வயல்வெளி பகுதியிலும் தேவைப்படும் சூழலை உணர்த்துவதாக இப்பகுதி அமைந்துள்ளது, தொடர்ந்து ஏறு பூட்டி உழுத காளைகளை விவசாயிகள் அவிழ்த்து மேயவிட்டார்கள். பின்னர் பூட்டப்படாத வேறு காளைகளை அழைத்து வந்து அவ்ஏறில் பூட்டினார்கள். அப்போது வயல்வெளியில் ஒரு வரால் மீன் துள்ளிக் குதித்தது. அதைப் பார்த்த ஒரு மஞ்சள் நிறக் காளை மாடானது மிரண்டுவிட்டதோடு கோபத்துடன் அங்கும் இங்கும் ஓடியது. எதிரில் வருபவர்களையெல்லாம் முட்டித் தள்ளியது. அங்குள்ளவர்களுக்கு என்ன செய்வது என்று புரியாமல் பதறும்போது, பள்ளு இலக்கியத்தின் நாயகன் பள்ளன் தைரியமாக முன்னே வந்தான்,

'கவலைப்படாதீர்கள், இந்த காளையை அடக்குவதற்கு நான் இருக்கிறேன்' என்றான். மறுவிநாடி, அவன் தைரியமாக மாட்டின் முன்னே பாய்ந்தான், அதைத் தடுத்து நின்றான். கோபம் கொண்ட காளையானது அவனைக் கொம்பின் நுனியால் குத்தித் தள்ளியது. பள்ளனும் மயங்கி விழுந்தான்.

மாட்டினால் முட்டப்பட்ட அந்தப் பள்ளனுக்கு என்னவாயிற்று என்று இரண்டு மனைவிகள் கவலை கொண்டு இருப்பினும் அவர்கள் இருவரும் பள்ளனுக்கு ஆறுதல் சொல்ல அவனோ மனைவியரின் முகம் பார்த்து சிரித்து பழய வேகத்துடன் அக்காளையை தன்வசப்படுத்தி ஏர்பூட்டி வயலினை உழுதான். என்று தம் மனைவியர் முன்பு காளையை அடக்கிய வீரனாக பள்ளன் வெளிப்படுகிறான் என்பதை

*பள்ளன் எழுந்து நிலை தரித்தான் – நின்ற பள்ளியர் முகம் பார்த்துச்*

*சிரித்தான். மெள்ளப் புருவம் கோட்டி நெரித்தான் மாட்டை மீளவும்*

*பூட்டி உழத் தரித்தான்* *(முக்கூடற் பள்ளு. 1894 பக்-129)*

எனும் பாடலடிகளில் உணரலாம், இச்செய்தி வாயிலாக நன்கு பராமரிக்கப்பட்டு வளர்க்கப்பட்ட காளைகளை உழவுத் தொழிலில் பயன்படுத்தினாலும் அச்சமூக மக்கள் அவற்றைத் தொடர்ந்து வயல் வெளிகளில் அதிகம் சிரமப்படுத்தாமல், தொழிற்சாலைகளில் மனிதர்களின் வேலை நேரம் ஓய்வு நேரம் என்பது போல அவற்றிற்கு அவ்வப்போது ஓய்வு கொடுக்கப்பட்டு மாற்றுக் காளைகளை வயலில் இறக்குகின்றனர். இதனால் காளைகளுக்கும் வேலை தொய்வு தோன்றுவதில்லை, என்பதை உணரலாம். இங்கு காளைகள் மனிதர்களின் உழைப்புக்கு ஈடு கொடுத்து உற்ற தோழனாக விளங்குகின்றன.

தமிழ் இலக்கியங்ககளில் பசு மாடுகள் குறித்தும், எருதுகள் குறித்தும், அவை சார்ந்த வாழ்க்கை குறித்தும். பல பதிவுகள் காணப்பட்டாலும் சங்க கால முல்லைக்கலிப் பாடலில் சுரி நெற்றிக் காரி, வெண் காற் காரி, திறன் சான்ற காரி, நுண் பொரி வெள்ளை, புள்ளி வெள்ளை, பழி தீர்த்த வெள்ளை, செம்மறு வெள்ளை,கோடு அணிசேய், வெருவந்த சேய், வெண் காற்சேய், முரண் மிகு குரல், ஏந்து இமில் குரால், புண் குரூக்கண், பல் பொறி கடுஞ்சினத்துப் புகர் போன்ற காளை வகைகளைப் பற்றி விரிவாகப் பதிவு செய்ததைப்போல, உழவுக்குடிகளைக் குறித்து மிகுதியான எண்ணிக்கையில் தோன்றிய பள்ளு இலக்கியங்ககளிலும் காளை மாடுகளின் வகைகளைக் குறித்த பதிவுகள் காணப்படுகின்றன.

> *விரி மருப்புக் கரும் போரான் வெள்ளை மயிலை வெண்டலையன் கட்டுக் கொம்பன் சுட்டிச் செம்போறான் எரிக்கழுத்தன் செம்மறையன் குத்துக் குளம்பன் எண்ணெய்ச்சி வலைகமலப் புல்லை மால் காளை வரி முருக்கும் கருங்கண்ணன் தளுவணை மோளை மட்டைக் கொம்பன் ஏறுவாலன் கட்டை வால்க் கூளை சரி பிடிப்புக்கோர் ஆயிரம் ஒன்றைப் பார்க்கொன்று தண்டாத மாடு அனேகம் உண்டு (வேளாண் உற்பத்தியும் நிகழ்த்து பண்பாடும்-2017)*

என, மாடுகளின் பல வகைகளின் பதிவுகளை திருவேட்டை அய்யனார் பள்ளு முன்வைக்கிறது.

நிலவகை, நெல் வகை, ஏர்க்கால் வகை போன்றவற்றோடு மாடுகளின் வகைகளையும் உழவுக் குடிகள் அறிந்து வைத்துள்ளனர். அந்தவகையில், குடைக் கொம்பன், செம்மறையன், குத்துக் குளம்பன், மேழை, குடைச் செவியன்,

குற்றாலன், கூடுகொம்பன், மடப்புல்லை, கரும் போரான், மயிலை, கழற்சிக் கண்ணன், மட்டைக் கொம்பன், கருப்பன், மஞ்சள் வாலன், படைப்புப் புடுங்கி, கொட்டைப் பாக்கன், கருமறையன், பசுக் காத்தான், அணிற் காலன், படலைக் கொம்பன், விடத்தலைப் பூ நிறத்தான், வெள்ளைக்காளை எனப் பல வகை மாடுகளைப் பற்றிய பதிவை முக்கூடற் பள்ளு எடுத்துரைக்கின்றது. இதேபோல,

*நாச்சங்காளை வடம் வெட்டிக் கன பாய்ச்சல் காட்டும்*
*பரையெல்லாம் சிம்பும் எருது வடம் தொட்டு இழுத்துக் கொம்பு*
*பிடித்து விளையாடி என்றும், எருது கட்டினர் குடும்பரே*

*(வேளாண் உற்பத்தியும் நிகழ்த்து பண்பாடும் 2017 )*

என்றும் கண்ணுடையம்மாள் பள்ளு விவரிக்கிறது.

இப்பள்ளு இலக்கியத்தில் காணப்படும் யாவும் உழவுக்குப் பயன்படுகிற மாடுகள், உழவைத் தவிர பிற தொழில்களுக்கும் பயன்பாடுகளுக்கும் பயன்படுத்தப்படுகின்ற மாடுகள் குறித்த குறிப்புகள், மாடுகள் சார்ந்த மக்களின் வழக்காறுகளில் மிகுதியாகவே காணப்படுகின்றன .

ஏறுதழுவல்போல, எருதுக்கட்டு எனும் மாடு தழுவல் நிகழ்வைக் கண்ணுடையம்மன் பள்ளு பதிவு செய்கின்றது. குதிரை வென்றி,கோழி வென்றி, தகர் (கிடாய்) வென்றி , யானை வென்றி, கிளி வென்றி,சிவல்(கவுதாரி) வென்றி, எனப் பல வகை வென்றிகள் குறித்த விரிவான குறிப்புகள் அந்நூலில் காணப்படுகின்றன. இவை அனைத்தும் விலங்குகளை விலங்குகளோடுப் பொருதச்செய்யும் விளையாட்டுக்கள். ஆனால், விலங்கோடு மனிதர் தழுவும் விளையாட்டு ஏறுதழுவல் மட்டுமே என்பதை இதன் மூலம் உறுதிப்படுத்தலாம்,

**ஏறுதழுவுதல் சார்ந்த உவமைகள்**

- ஒரு காளை பொதுவனைக் கொம்பால் குத்தி உழலைமரம் போலச் சுழற்றியது.
- மறவன் போல ஒரு காளை கீழே விழுந்தவனை விட்டுச் சென்றது.
- ஏறுகோள் காட்சி ஒன்று நூற்றுவரை அடக்கிய களம் போல இருந்தது.
- கூந்தல்-குதிரையை அடக்கியவன் போல ஒருவன் காளையை அடக்கினான்.
- வெள்ளைக்காளையை அடக்குபவன் பாம்பு கௌவிய நிலாவை விடுவிக்கும் சிவன் போல் காணப்பட்டான்.
- அந்திக் கடவுள் எருமையை இடந்து கூளிப் பசியைத் தீர்ப்பவன் போல ஒரு காளை குத்தியது.
- போரில் காயம் பட்டு வீழ்ந்தவனைப் போரிடுவதற்கு 'ஒவ்வான்' என விட்டுச் செல்லும் பாஞ்சாலியின் கூந்தலைப் பற்றியவன் நெஞ்சைப் பிளப்பதுபோல் ஒரு காளை நெஞ்சில் குத்தித் தூக்கியது.
- இருளில் வந்து தந்தையைக் கொன்றவனைப் போல ஒரு காளை குத்தியது.
- சிவன் கணிச்சியில் தொங்கும் மாலை போல ஒரு காளை ஒருவன் குடலை மாட்டித் தூக்கியது.
- பட்டம் விடுபவன் நூலைச் சுற்றுவது போலக் குடல் சரிந்தவன் தன் குடலை வயிற்றுக்குள் சுருட்டிக்கொண்டான்.
- புலியும் களிறும் போரிடுவது போல் பொதுவர் காளையைத் தழுவினர்.

மனிதர்கள் இயல்பாகவே ஒன்றினை விளக்கவும், சிறப்பிக்கவும் உவமைகளைக் கையாளுகின்றனர், பிற அணிகளை விட உவமை மனித வாழ்வில் அதிகமாக இடம் பெறுகின்றது என்பதில் எள்ளளவும் ஐயமில்லை, ஏறுதழுவுதல் சார்ந்த உவமைகளில். காளையும், மனிதனும் ஏறுதழுவுதல் களத்தில் போராடுவதை உவமையாக சினம் கொண்ட புலியும், மதம் கொண்ட யானையும், மோதிக் கொள்வதாக இடம் பெற்றுள்ளன, காளையால் குத்துபட்ட வீரன் பட்டம் விடுபவன் நூலை சுற்றுவது போல தன் குடலை தானே சுற்றிக் கொண்டான் எனவும், ஏறுதழுவும் காட்சி ஒன்று நூறு நபர்களை அடக்கியது போன்றதாக இருந்ததை மேற்கண்ட உவமைகளால் அறிய முடிகின்றது.

**தொல்லியல் சான்றுகள்**

ஏறுதழுவுதல் மற்றும் ஏறு தொடர்புடைய தொல்லியல் சான்றுகள் பல கிடைத்துள்ளன. அவற்றில் பாறை ஓவியங்கள், சிந்து சமவெளி மாடு அணையும் கல் முத்திரை, நடுகற்கள், கோயில் சிற்பங்கள், நாணயங்கள் மற்றும் சுவரோவியங்கள் போன்றவை குறப்பிடத்தக்கன.

**சிந்து வெளி "காளை அணையும் கல் முத்திரை”**

சிந்து வெளியில் கிடைக்கப் பெற்ற காளையை அணையும் கல் முத்திரை சுமார் 4000 ஆண்டுகளுக்கு முற்பட்டது என தொல்லியல் ஆய்வுகள் கூறுகின்றன. திருவண்ணாமலை அடுத்த நல்லான்பிள்ளை பெற்றாள் கிராமத்தில் உள்ள சிங்கமலை அடிவாரத்தில் 4 ஆயிரம் ஆண்டுகள் பழமையான கற்செதுக்கு உருவங்கள் கண்டெடுக்கப் பட்டுள்ளதாக திருவண்ணாமலை மாவட்ட வரலாற்று ஆய்வு நடுவம் தெரிவித்துள்ளது (மாலை மலர் 2012 டிசம்பர் 10) இது குறித்து நடுவத்தின்

வரலாற்று ஆய்வாளர்கள் பாரதிராஜா, சீனுவாசன், பால வெளி முருகன் ஆகியோர் கூறியிருப்பதாவது குகையின் மேற்கு நோக்கிய பாறையில் சுமார் 4 மீ., உயரமும், 7மீ., அகலத்திலும் கற்செதுக்கு உருவங்கள் காணப்படுகின்றன. குகையின் தரைப்பகுதியில் உள்ள இரு சிறிய பாறைகளை பயன்படுத்தி உயரமான இடங்களில் உருவங்களை செதுக்கி உள்ளனர். இங்கு காளை ஒன்று சினம் கொண்டு அடக்க வருபவர்களை தூக்கி வீசுவது போல உள்ளது. இம் முத்திரை குறித்து பல்வேறான கருத்துக்கள் உள்ளன. முதலாவதாக சிலர் மாட்டினை அடக்க வருகின்றனர் அவர்களை முட்டி காற்றில் பறக்க விடுகிறது. இரண்டாவது, காளையை அடக்க வரும் ஒருவரை மாடு முட்டி தூக்கி வீசுகிறது. அவன் வெவ்வேறு நிலையில் பறந்து பின் வீழ்கின்றான். இந் நிகழ்வு தொடர் காட்சி வடிவில் சித்தரிக்கப்பட்டுள்ளது. இதில் முதலாவது சொல்லப்படுவது ஏற்புடையதாக உள்ளது. ஏனெனில், இதில் ஐந்து நபர்கள் வெவ்வேறு நிலையில் பறந்தும், வீழ்ந்துமாய் காட்டப்பட்டுள்ளனர். இதில் இரண்டு பேர் மாட்டின் பின்னோக்கியும் மூன்று பேர் முன்னோக்கியும் விழுவது போல காட்டப்பட்டுள்ளது.

நாகரிகத்தின் சிறப்பாகச் சுட்டப்படும் சிந்து சமவெளியில் ஏறுதழுவல் போன்ற நிகழ்ச்சிகள் நிச்சயமாக நிகழ்ந்திருக்க வாய்ப்பு உள்ளது . அதற்கு ஆதாரமாய் 5000 ஆண்டுகளுக்கு முற்பட்ட அவர்களது முத்திரைகளில் மாடுகள் தொடர்பான பல காட்சிகள் எழுத்துக்களுடன் காட்டப்பட்டுள்ளன. இவ்வெழுத்துக்களை படிக்கும் தருணங்களில் சிந்து சமவெளியின் ஏறு தழுவுதல் விவரங்கள் வெளிப்படும். மேலும் சங்க கால இலக்கியங்கள் இந்நிகழ்வுகளை மிக

விரிவாகக் கூறுகின்றன. கலித்தொகை கூறும் ஏறுதழுவுதல் போன்று மாடம் அமைத்து ஆடும் அரங்க விளையாட்டு (Gallery sports) சிந்து வெளியில் நடைபெற்றிருக்க சாத்தியம் உள்ளது. என்பதை இந்த கல் முத்திரை உறுதிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

**ஏறுதழுவுதல் தொடர்புடைய பாறை ஓவியங்கள்**

தொல் பழங்காலத்தியத் தமிழ் மக்கள் ஓவியங்கள் மூலமாக தம்முடைய எண்ணங்களை மற்றவர்களுடன் பகிர்ந்துகொண்டதை தமிழகப் பாறை ஓவியங்கள் வழி அறிய முடிகிறது. இதைக்குறித்து விவரிக்கும் காந்திராஜன், தமிழகத்தில் காணப்படும் பாறை ஓவியங்களில் வரையப்பட்ட கருப்பொருள்கள் இந்தியாவில் பிற பகுதிகளில் காணப்படும் ஓவியங்கள் போல பல்வேறு காட்சிகளைப் பதிவு செய்துள்ளன. பெரும்பாலான ஓவியங்களில் விலங்குகளை வேட்டையாடுதல், மான்கள், மாடுகள், குதிரைகள், யானை, நாய், ஆடு, பன்றி, புலி, சிறுத்தை, நரி, கழுதை, பாம்பு, மீன், பறவைகள், சண்டைக்காட்சிகள், மரம், சடங்கு மற்றும் சமூக நிகழ்வுகள் அதிகம் காணப்படுகின்றன. அதுபோல கணிசமான அளவில் அடையாளங்களும் குறியீடுகளும் காணப்படுகின்றன. அதேபோல அடையாளம் கண்டுபிடிக்க முடியாத உருவங்களும் எண்ணற்ற அளவில் உள்ளன என்கிறார்.

தமிழகத்தில் கரிக்கையூர் (நீலகிரி) அணைப்பட்டி (மதுரை) தட்டகுழிக்காடு (திண்டுக்கல்) போன்ற இடங்களில் ஏறுதழுவுதல் தொடர்புடைய பாறை ஓவியங்கள் காணப்படுகின்றன, இவ் ஓவியங்கள் காளைகளோடு மனிதர்கள் எதிர்கொள்ளும் பல்வேறு நிகழ்வுகளை பதிவு செய்துள்ளன. அதுபோல

காளைகளின் உருவ ஓவியங்கள் தனியாக பரவலாக பல இடங்களிலும் காணப்படுகின்றன.

கரிக்கையூரில் காணப்படும் ஓவியங்களின் காலமும் கி.மு.2000 முதல் கி.மு. 1500 காலமாக உள்ளது. ஏறுதழுவுதல் என்பது 4000 வருடம் பழமையான தமிழர் நாகரீகத்துடன் இரண்டறக் கலந்த ஒரு பண்பாடு, கலாச்சாரம் ,வீர விளையாட்டு என்பது சரித்திர, சமூக, மனித இன இயல் ஆராய்ச்சி மூலமாக தெளிவாகிறது. இவை தென்னிந்தியாவின் மிகப் பழமையான பாறை ஓவியமாகும். சுமார் 500 ஓவியங்கள் ஒருங்கிணைந்த தொடர் ஓவியங்களாக உள்ளது. இவ்வோவியங்கள் 2004 ஆம் ஆண்டு தொல் ஓவிய ஆராய்ச்சியாளர் கே.டி.காந்திரஜன், மதுரை காமராஜர் பல்கலைக் கழகம், பேராசிரியர் ஜி. சந்திராசேகரன் முதல்வர் அரசு ஓவிய கல்லூரி சென்னை, குழுவினரால் கண்டெடுக்கப்பட்டது,

கரிக்கையூர் ஓவியங்களில் கூட்டமாக இருக்கும் காளைகளை இருவர் கையில் தடியுடன் ஓட்டிச்செல்வது போல காட்டப்பட்டிருக்கும். அதனருகே வேறு இடத்தில் இரண்டு கூட்டங்களைச் சேர்ந்தவர் சண்டை செய்வது போலவும் உள்ளது. இக்காட்சி 'ஆநிரை கவர்தல் மற்றும் மீட்டலை நினைவூட்டும் வண்ணம் அமைந்துள்ளது.

கரிக்கையூர் மற்றும் அருகவெளி போன்ற இடங்களில் மனிதர் கூட்டமாக மாடுகளை ஓட்டிச்செல்வது போல ஓவியம் காணப்படுகிறது. இது ஆநிரை கவர்ந்து செல்வதாகக் கூட இருக்கலாம். இவ்வோவியங்களுக்கு அருகே இரண்டு இனக்குழுக்கள் சண்டை போடுவது போன்ற காட்சியும் இடம் பெற்றுள்ளது. நேரடியாக ஆநிரை கவர்தல் என சொல்ல இயலாது. ஏறுதழுவுதல் எனப்படுவது

ஒருங்கிணைந்து நிகழ்த்தப்படும் விளையாட்டு. பாறை ஓவியங்களில் காணப்படும் காட்சிகள் மாடுகளோடு மனிதர்கள் நேரடியாக எதிர் கொள்ளும் நிகழ்வுகளின் பிரதிகளேயாகும்.

கரிக்கையூர் பாறை ஓவியங்கள் மஞ்சுவிரட்டை நினைவுபடுத்துவதைப் போல் தெரிகின்றன, மஞ்சு விரட்டு, ஏறு தழுவுதல், எருது கட்டு, வட மாடு விடுவது போன்ற வடிவங்கள் முல்லை நில மக்களின் காளைகளுடன் கூடிய வீர விளையாட்டினை வெளிப்படுத்தும் நிகழ்த்துக் கலை விளையாட்டு. முதன் முதலாக மாடுகள் பழக்கப்படுத்தப்பட்ட போது நடந்த நிகழ்வுகளை நினைவு கூறும் வகையில் தொன்மக் குறியீடாக இவ்விளையாட்டினைக் கருதலாம். தமிழகத்தில் பாறை ஓவியங்கள் வெகுவாக குறிஞ்சி மற்றும் முல்லைப் பகுதிகளில் மட்டுமே காணக்கிடைக்கின்றன. இங்கு காணப்படும் ஓவியங்களில் காளைகளை பழக்குவதற்காக அடக்க முயல்வது, மாடுகளை ஓட்டிச் செல்வது மேலும் மாடுகளின் எதார்த்த வாழ்க்கையான மேய்தல், கன்றுக்கு பால் கொடுத்தல், கூட்டமாக நகர்தல், சக காளைகளுடன் சண்டையிடுதல், மாடுகளுடன் நெருங்கிய தொடர்புடைய காட்சிகள் கரிக்கையூர் ஓவியத்தில் வெளிப்படுகின்றன. இவ்வோவியங்கள் மாடுகளை எதிர் கொண்டு நேரடியாக நடந்த போராட்ட நிகழ்வினை பதிவு செய்வதாகும். ஆனால் இன்றுள்ள வளர்ந்த வேளாண் சமூகத்தில் காளைகளோடு மனிதனுக்கு நேரடியான போராட்டம் இல்லை என்பதை உணர முடிகிறது.

ஏறுதழுவுதல் தொடர்புடைய பாறை ஓவியங்கள். மதுரை மேலூர் பகுதியில் கருங்காலகுடி, உசிலம்பட்டி அருகே சித்திரகல் பொடவு, கல்லூத்து அணைப்பட்டி, வருசநாட்டருகே அருகவெளியில் உள்ள சித்திரகல்பொடவு

(பாறை குகை) போன்ற இடங்களில் காணப்படுகின்றன. இவையாவும் புதிய கற்காலத்தின் இறுதிப் பகுதியிலும், பெருங்கற்காலத்திலும் வரையப்பட்டிருக்க வேண்டுமென கருதப்படுகின்றது. இதற்கு துணையாக அப்பகுதிகளில் கிடைக்கும் கற்கருவிகள் மற்றும் கருப்பு - சிவப்பு பானை ஓடுகள், தாழிப்பானைகள் பரவலாக காணக்கிடைக்கின்றன. இங்கு மாடுகள் மனிதர்களுடனும், தனியாகவும் வரையப்பட்டுள்ளன.

**கோவில் ஓவியங்கள், நடுகற்கள்;**

கோவில் ஓவியங்கள், நாணயங்களில் காணப்படும் ஏறுதழுவுதல் தொடர்பான செய்திகள் பரவலாக அறியாத செய்தியாக உள்ளது ! தமிழகத்தில் உள்ள கோவில் சிற்பங்கள் மற்றும் ஓவியங்களில் ஏறுதழுவுதல் போன்ற காட்சிகள் திருவண்ணாமலை, ஆழ்வார்திருநகரி, திருக்குரங்குடி இராமநாதபுரம் போன்ற இடங்களில் காட்டப்பட்டுள்ளன. பாகவத புராணத்தில் கிருஷ்ணன் நப்பின்னையின் ஏழு கொடிய காளைகளை அடக்கிப்பின் அவளை மணமுடித்தான் என்ற செய்தியுண்டு.

கோயில்களில் உள்ள ஏறுதழுவல் காட்சிகள் இச் சமயம் சார்ந்த காட்சியினையே பிரதிபலிக்கின்றன. இயல்பான ஏறுதழுவல் காட்சி கோயில்களில் இடம்பெறவில்லை. அதற்குமாறாக சில நடுகற்களில் இக்காட்சி செதுக்கப்பட்டுள்ளது. சேலம் மாவட்டம், சிவசங்கராபுரத்தில் உள்ள 13 ம் நூற்றாண்டு நடுகல்லில் முரட்டு காளையினை வீரர்கள் பிடித்துச் செல்லும் காட்சி செதுக்கப்பட்டுள்ளது. அதுபோல சேலம் பெத்தநாயக்கன் பாளைத்தில் 13 ம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டுடன் நடுகல்லில் மாட்டினை வீரன் அடக்குவது

போல காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இராமநாதபுரம் அரண்மனையில் உள்ள 18 ம் நூற்றாண்டு ஓவியத்தில் கிருஷ்ணன் மாட்டினை அடக்குவது போல காட்சி வரையப்பட்டுள்ளது.

**திமில் உள்ள காளை மற்றும் திமில் அற்ற காளை**

தேனி மாவட்டம் வருசநாடு "அருக வெளியில் "திமிலுடைய காளைகள் வரையப்பட்டுள்ளன. அதேபோல திமில் இல்லாத காளைகளும் பல இடங்களில் கிடைக்கின்றன. உலகெங்கும் 800 வகையான மாடுகள் இருந்தன. அவைகளில் பெரும்பான்மையானவை காடுகளை அழித்தல், புதிய வேளாண் கருவிகளின் வருகை, பருவ நிலைமாற்றங்கள் போன்ற காரணங்களால் பெரிதும் அழிந்துவிட்டன.

தொல்லியல் மற்றும் உயிரியல் ஆய்வாளர்கள் இரண்டு தனித்துவமான கால்நடைகளையும் அவை பழக்கப்படுத்தலையும் கூறுகின்றனர். அவை, திமில் அற்றவை, திமில் உள்ளவை. திமில் அற்றவை செழிப்பான பிறை (Fertile Crescent) என அழைக்கப்படும் தற்போதைய ஈராக், சிரியா, லெபனான், ஜோர்டான், இஸ்ரேல், பாலஸ்தினம், எகிப்து மற்றும் துருக்கி போன்ற பகுதிகளில் சுமார் 10,500 ஆண்டுகளுக்கு முன்னர் (முன் மட்பாண்ட புதிய கற்கால பண்பாடுகள்) பழக்கப் படுத்தப்பட்டன. இவ்வகையான காளைகள் உலகெங்கும் கொண்டு செல்லப்பட்டன. புதிய கற்கால ஐரோப்பாவில் கி.மு.6400 ஆண்டுகளுக்குப் பின்னர் சீனா, மங்கோலியா மற்றும் கொரியா ஆகியவற்றில் சுமார் 5000 ஆண்டுகளுக்கு முன்னர் பரவின.

திமிலுடன் கூடிய காளைகள் சுமார் 7000 ஆண்டுகளுக்கு முன்னர் சிந்து சமவெளிப் பகுதிகளில் பழக்கப்படுத்தி தென் கிழக்கு ஆசியா மற்றும் தெற்கு சீனா போன்ற பிற பகுதிகளுக்கு சென்றுள்ளன. ஆப்பிரிக்க பகுதிகளில் சுமார் 6500 ஆண்டுகளுக்கு முன்னர் கால்நடைகள் பழக்கப்படுத்தப்பட்டன.

தொல்லியல் ஆதாரங்களை ஆராய்ந்து நோக்குகையில் அவை ஏறுதழுவுதல் நிகழ்வு என்று அரிதியிட்டு சொல்ல முடியாது. மாடுகளை அடக்க முயலும் காட்சிகள் எனச் சொல்லலாம். வேட்டைச் சமூகமாக இருந்த மனித இனம் அடுத்த கட்ட வாழ்வை நோக்கி நகர்கிறது. பழைய கற்காலத்தில் இருந்து புதிய கற்காலம் உருவாகின்றது. புதிய சிந்தனையால் பன்னோக்கு பயன்பாட்டிற்காக ஆயுதங்கள் மேம்படுத்தப்படுகின்றன. புதிய வாழ்வுக்குள் அடிஎடுத்து வைக்கின்றான் மனிதன். வேட்டையோடு மட்டும் இல்லாமல் வனத்தில் உள்ள, மாடு, ஆடு, நாய் போன்றவற்றினைப் பழக்கப்படுத்தி வீட்டு விலங்காக மாற்றும் முயற்சியில் (domestication) இறங்குகிறான். மற்ற பிராணிகள் காளைகளை பழக்கப்படுத்துவது போன்று எளிதல்ல. மேலும் மாட்டின்பயன்பாடும் அதிகம். ஆகையால் ஆரம்ப காலகட்டங்களில் கடும் போராட்டங்களுக்கு மத்தியில்தான் வனத்தில் உள்ள மாடுகள் பழக்கப்படுத்தப்பட்டன. எனத் தொல்லியல் சான்றுகள் கொண்டு உணர முடியும்.

**புதினங்களில் ஏறு**

மிகத் தொன்மையான பண்பாடு, பாரம்பரியம் பழக்க வழக்கங்களைக் கொண்டது நமது தமிழ்ச் சமூகம் என்று சொன்னால் அஃது மிகை அன்று, மனிதன் எழுத்துக்களின் வரிவடிவம் பயன்படுத்தும் முன் தனக்கு தோன்றிய சிந்தனைகளை மற்றவரிடம் பகிர, பேச்சு மொழியைப் பயன்படுத்தி வந்தான்.

அவ்வாறான பேச்சு மொழியில் ஒரு செய்தியை அல்லது நடந்த நிகழ்வை கதையாகக் கூறும் வழக்கம் இருந்தது. பின்பு வளர்ச்சியால் மொழி வரிவடிவம் பெற்று காப்பியங்கள்,நாவல், சிறுகதை, போன்ற கதையாடல்கள். வரலாற்றில் இன்றியமையாத இடத்தைப் பெற்று திகழ்கின்றன.

தமிழர் பண்பாட்டுச் சிறப்புக் கூறுகளுள் ஒன்றான ஏறுதழுவலை மையமாகக் கொண்டு சில புனைகதையாளர்கள் தங்கள் கதையாடல்களில் ஏறுதழுவலை பற்றிக் கூறியுள்ளனர். சங்க இலக்கியத்தை அடுத்து ஏறுதழுவலின் கதையாடல்கள் தமிழ் புனைகதைகளில் தான் இடம்பெற்றுள்ளன. அவற்றுள் ராஜமய்யரின் கமலாம்பாள் சரித்திரம், கு.பா ராஜகோபாலனனின் வீரம்மாளின் காளை, சி.சு செல்லப்பாவின் வாடிவாசல் போன்ற கதையாடல்கள், ஏறுதழுவல் எனும் விளையாட்டைப் பிரதிபலிப்பவனவாக அமைந்துள்ளன.

**கமலாம்பாள் சரித்திரம்**

தொடக்ககால புதினங்களில் ஒன்றான ராஜமய்யரின் கமலாம்பாள் சரித்திரம் தமிழில் முதன் முதலாக தொடர்கதையாக வெளிவந்த புதினம் என்ற பெருமைக்குரியது. நீதிக்கதைகளும், புராணக்கதைகளும் செல்வாக்கு செலுத்திய காலகட்டத்தில் தன் வாழ்நாளில் கண்டுணர்ந்த மக்களின் வாழ்க்கையை நடப்பியல் பாணியில் எழுதிக்காட்டினார் ராஜமய்யர்

செல்வந்தரான சுப்பிரமணி ஐய்யர் ஜமீந்தாரின் காளையை விட தனது காளைகள் சிறந்தது என நிரூபிக்க முயன்று அதில் வெற்றியும் பெறுகிறார். சுப்பிரமணியின் ஆட்கள் ஜமீந்தாரின் காளையை அடக்கியதால் அவர் தனது தோற்றுப்போன காளையை தன் எதிரிலேயே உயிரோடு தோலுரிக்க உத்தரவிடுகிறார். இதனால் கோவமுற்ற ஜமீந்தார் சுப்பிரமணிய ஐய்யரின்

காளையை பேயாண்டி தேவன் மூலம் கடத்திச் செல்கிறார். இக்கதையின் திருப்பமாக ஏறுதழுவல் நிகழ்வு அமைகின்றது. ஏறுதழுவல் வீர விளையாட்டாக இல்லாமல் அதனுள் புகுத்துவிட்ட அதிகார அரசியல் தனக்கு ஏற்ப அவ்விளையாட்டை மாற்றி அமைத்துக் கொள்வதை நம்மால் உணர முடிகிறது. மிருகத்திற்கும், மனிதனுக்குமான போட்டியான ஏறுதழுவல். மனிதனுக்கும், மனிதனுக்குமான போட்டியாக பரிமாணம் அடைகின்றது. இவ்வாறாக ஏறுதழுவுதல் பற்றிய கதையாடல்கள் கமலாம்பாள் சரித்திரத்தில் மிகச் சுருக்கமாக சொல்லிச் செல்கிறார் ராஜமய்யர்.

**வீரம்மாளின் காளை**

கு.ப.ரா. அவர்கள் "பெண்ணுள்ளத்தின் உணர்வுகளையும், வேட்கைகளையும், கனவுகளையும், கற்பனைகளையும், இலட்சியங்களையும் நுணுக்கமாகச் சித்திரிப்பதில் கைதேர்ந்தவர். இவரின் இக்கூற்றை மெய்யாக்கும் விதத்தில், இவரின் 'வீரம்மாளின் காளை' எனும் கதைக்கான கரு அமைகிறது. ஒரு கிராமத்துப் பெண்ணின் கள்ளங்கபடமற்ற மன இயல்பினையும், துணிச்சலான போக்கினையும், எந்த உள் நோக்கமுமின்றி, புனைவுப் பிரதியாக, அதுவும் சங்கயிலக்கியச் சாயல் கொண்ட புனைவாக மாற்றித் தருவதென்பதே, கு.ப.ரா.வின் நோக்கமாக இருந்திருக்கிறது.

கள்ளர் சாதிப் பெண்ணாகிய வீரம்மாளின் தந்தை, பதினெட்டுப் பட்டிக்கும் அம்பலகாரரான பொங்குளியாண்டித் தேவன் ஆவார் , அவர் தன் மகள் வளர்த்த காளையை, யாரும் பிடிக்க முடியாது என வீரம் பேச, அவரின் சொந்த மருமகனாக ஆகப் போகிற காத்தான் அதனை சபதமாக ஏற்று, ஏறுதழுவுதல் போட்டியில்

காளையின் கழுத்தில் கட்டப்பட்ட துண்டினை எடுத்தும் விடுகிறான், காத்தனுக்கே வெற்றி என உறுதியாகிவிட்ட நிலையில் அக்காளையை அடக்கிப்பின் அக்காளையின் கொம்புகளில் சிக்கி உயிரை விடுகிறான் இந்த ஏறுதழுவுதல் நிகழ்வால் வீரம்மாள் மிகுந்த துயரத்தோடு அமர்ந்திருக்கிறாள், தன் காதலைக் கலைத்த காளையை, வீரம்மாள் விரக்தியில் கொல்வதாகக் கதை முடிகிறது. இதில் காளையின் கதை, கதைப் பனுவலின் கதை மட்டுமல்ல, ஒருவனுக்காக மட்டுமே தன் உடலும் உள்ளமும் என்று திட்டமாக இருந்த வீரம்மாளின் கதை என உணர்த்த முயன்றிருப்பார் ஆசிரியர்.ஆனால் தன் காளை பிடி காளையாகப் போனதே என்ற விரக்தியில் அவள் கொன்றிருக்கலாம் என்ற மற்றொரு முடிவும் இதில் இருப்பதை நம்மால் உணர முடியும்.

**வாடிவாசல்**

ராஜமய்யரின் கமலாம்பாள் சரித்திரத்தின் தாக்கத்தால் உருவானது இவ்வாடிவாசல் என்றே கூறலாம். சி.சு.செல்லப்பாவின் வாடிவாசல் மற்றும் கமலாம்பாள் சரித்திரம் எனும் இவ்விரண்டு புதினங்களில் வரும் சம்பவங்களுக்கு இடையே ஒற்றுமை உண்டு ஆனால் வாடிவாசல் எட்ட முயலும் தளங்கள் விரிவானவை,

எந்த விளையாட்டிலுமே சம்மந்தபட்ட இருவருக்கும் இது விளையாட்டுதான் என்று தெரிந்திருக்கும் ஆனால் இதில் அப்படியல்ல மனிதனுக்கு அவை விளையாட்டு ஆனால் மிருகத்திற்கு அது தெரியாது, விளையாட்டு என்று அறியாத மிருகத்தின் பின்னணியில் இருக்கும். மனிதன் இவற்றை பல விதங்களில் கையாள வாய்ப்பு உள்ளது, அதன் சாத்தியங்கள் சிலவற்றை இவ் வாடிவாசல் புதினத்தில் காணலாம்.

பிச்சி தன் தந்தையைக் கொன்ற ஜமீந்தாரின் காளையை அடக்கி தனது பழியை தீர்க்கும் நோக்கத்துடன் ஏறுதழுவல் நிகழ்வில் கலந்து கொள்கிறான், மனித சக்திக்கும், மிருக சக்திக்கும் இடையிலான போராட்டம் மனிதனுக்குள் இருக்கும் மிருக வெறியை வெளிப்படுத்தும் விளையாட்டாக இருக்கிறது, அந்நிகழ்வில் ஜமீந்தாரின் காளையை அடக்கி பிச்சி வெல்கிறான், தனது தந்தையை கொன்ற காளையை அடக்கி பழிவாங்குகிறான். ஏறுதழுவல் நிகழ்வில் தோற்றுப் போன தனது காரிக்காளையைத் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லும் ஜமீந்தாரின் செயல் தனக்குள் இருக்கும் மிருகவெறியைக் காட்டுகின்றது, காளை என்பது ஜமீந்தாருக்கு தன் அதிகாரத்தின் அடையாளமாக இருக்கிறது.

மனிதனின் ஏற்றத்தாழ்வுகள் பொதுத் தளங்களில் அரங்கேறுகையில் உண்டாகும் சாதகபாதகங்களை வாடிவாசல் எனும் புதினம் மிகவும் நுட்பமாக கொண்டிருக்கிறது. இப்புதினத்தின் தொடக்கம் முதல் இறுதிவரை ஏறுதழுவல் பற்றிய கதையாடல்களை முழுமையாகக் கொண்டுள்ளது,

**'சித்திரப் பாவை'**

'சித்திரப் பாவை' எனும் தொடர்கதைக்கு, அகிலன் இந்தியாவின் மிக உயரிய இலக்கிய விருதான 'ஞானபீடத்தை' பெற்றார். இவரின் நோக்கம், எதையும் கலையாகக் காணுவதென்பதே. இதனாலேயே, ஜடப் பொருட்களை ஓவியமாக வரைந்து வருகிற, கலைவெறி கொண்ட தம் நாயகன் 'அண்ணாமலையை' வம்படியாக, சென்னையிலிருந்து சிவகங்கை மாவட்டம் அரளிப்பாறைக்கு அழைத்து வந்து, "காரிக் காளையொன்றால் மல்லாக்கச்சாய்க்கப்படுகிறான்". அடுத்த இரண்டு வாரங்களுக்குள், அவ்

ஏறுதழுவுதல் நிகழ்வு உயிரோட்டமான ஓவியமாக்கப்பட்டு, அண்ணாமலைக்கு புகழ் தேடித் தருகிறது என்பதாக தன்பிரதியில், ஏறு தழுவுதலை இடம்பெறச் செய்கிறார்.

அகிலன் அவர்களின் முதன்மை நோக்கம், உயிர் விடும் விளையாட்டையும் கூட, கலையாக, புகழாக மாற்றுவது என்பது. "கடுமையான உழைப்பையே உயிர் மூச்சாகக் கொண்டு, தம் வாழ்வுக்கெனச்சில உயர்ந்த நெறிமுறைகளை வகுத்து, போராட்டமும், காதலும், கலையும், வாழ்வுமாக வாழ்ந்து வரும் ஓர் இனம், வளர்ந்து வரும் புது நாகரீகத்தால் அநாகரிகமாக ஆக்கப்படப் போகிறது" என்று அன்றே 'சித்திரப் பாவை' வழியாக முன்வைத்திருக்கிறார்.

**'மஞ்சிவிரட்டு மற்றும் 'ராவ்பகதூர் சிங்காரம்'.**

கொத்தமங்கலம் சுப்பு அவர்கள் 'மஞ்சிவிரட்டு' என்னும் தலைப்பில் சிறுகதையொன்று எழுதியிருக்கின்றார். 1927 ஆண்டுக் காலகட்டச் சூழலில், இந்திய தமிழக அளவில், பொங்கிப் பிரவகித்துப் பரவிப் படர்ந்த, தேச விடுதலை உணர்வை, இவ்வுணர்வுக்கு வழியேற்படுத்திய காந்தியை, காங்கிரஸை, அவர்களின் அருமை பெருமைகளை வியந்து பேசுவதன் நோக்கமே கொத்தமங்கலம் சுப்புவுக்கானது. மஞ்சு விரட்டில் மாடு அணையும் போது, அல்லது அந்நிகழ்வைப் பொறுப்பேற்று நடத்தும் போது ஏற்படும் மான, அவமானங்கள் அப்பொறுப்பேற்பவரையே சாரும். இதனைக் கண்ணுறும் சுப்பு, அவமானங்களுக்குப் பெரிதும் பயந்து அஞ்சுகிற, மானத்துக்காக உயிரையுங் கூட விட எத்தனிக்கின்ற மறவர்-கருப்பண்ணத் தேவன், அகமுடையார் - பொன்னுசாமி

என இரு வகை மாதிரிகளை மஞ்சுவிரட்டு மூலம் மோதவிட்டு, இரு இனத்தாரையும் ஒட்டுமொத்தமாக, காவல் நிலையம், நீதிமன்றம், கள்ளுக்கடை என அலையவிட்டு அழித்து, இறுதியில் காந்தியும் காங்கிரஸூம்தான் இவர்களைக் காப்பாற்றி, நல்வழிப்படுத்தினர் என்பது போன்று முடித்திருப்பார்,

அவரது புகழ்பெற்ற நாவல்களிலொன்று 'ராவ்பகதூர் சிங்காரம்'. விகடனில் கோபுலுவின் ஓவியங்களுடன் தொடராக வெளியாகிப் பெரும் ஆதரவினைப்பெற்ற தொடர்கதை அது. பின்னர் 'விளையாட்டுப் பிள்ளை' எனும் பெயரில் திரைப்படமாகவும், வெளிவந்தது.

'ராவ்பகதூர் சிங்காரம்'. எனும் புனைகதையில் நாயகனுக்கும் , காளைக்கும் இடையிலான மோதலொன்று வரும். காளையின் கொம்பில் விடத்தைத்தடவி நாயகனை கொல்ல எதிரிகள் முயற்சி செய்வார்கள். காளையை அடக்கி நாயகன் வென்று விடுவார். அதன் பிறகே காளையின் கொம்பில் விடம் தடவிய விடயத்தை ஓடிவந்து நாயகி கூறுவார். அச்சமயம் பார்த்து விழுந்திருந்த காளையும் மெல்ல எழும்பும். காளைக்கும் நாயகனுக்கும் இடையில் நடைபெற்ற சண்டையில் மனிதக் காளை வெற்றியடைந்தாலும், மிருகக்காளையும் இறந்து விடவில்லை. தப்பி விடுகின்றது.

**எருதுகட்டு**

வேல.இராமமூர்த்தியின்' எருதுகட்டு எனும் புனைகதையில் தலித் சமூகத்தைச் சேர்ந்த தங்கதுரை, பிடிபடாத காளை ஒன்றினை ,அடக்கிவிட, அக்காட்சியைக் கண்டு அப்பகுதியைச் சேர்ந்த மறவர் இன மக்கள் வருத்தம்

கொள்கின்றனர், அவற்றைப் பார்க்கும் 'வேயன்னா' எனும் மறவரினத் தலைவர், "அப்படிச் சொல்லக் கூடாதப்பா தங்க துரை நம்ம ஊரு மரியாதையைக் காப்பாத்தி இருக்கிறான்" என்று கூறி, ஆறுதல் படுத்துகின்ற காட்சியை இடம்பெறச் செய்திருக்கிறார் ஆசிரியர். மேலும், "அடேய் வையத்துரை! என் மக்களுக்கு நிழலா இருந்தியே! உன்னைச் சந்தேகப்பட்டதுக்கு கொடுத்த விலை தான்டா இத்தனை சாவும்! போதும்டா... ஐயா... போதும்! பொணம் விழுந்தது போதும்! நம்ம எக்காலத்தும் பிரியக்கூடாது. நமக்குள்ள பிளவே வரக்கூடாது". நம்ம, "ரெண்டு சாதிகளையும் மோதவிட நடக்குற சதிக்கு, யாரும் எப்போதும் பலியாகக் கூடாது" எனத் தம் மூதாய் கூழானிக்கிழவி மூலம் பேச விட்டு, சாதிய ஒத்திசைவை ஏற்படுத்த முனைகிறார். பள்ளம், மேடான, காய்ந்து, வறண்ட நிலத்தில் ஒன்றாக உழைக்கவும், உறையவும் விதிக்கப்பட்ட இரு இனக்குழுக்களுள், கருத்து முரண் காரணமாக, அவ்வப்பொழுது எழும் சச்சரவுகளுக்கான தீர்வை எருதுகட்டு எனும் படைப்பின் வழியாக வழி முன்வைப்பதே இப்படைப்பாளியின் நோக்கமாக அமைகிறது.

**காவல் கோட்டம்**

மதுரை எனும், விசித்திரம் பொங்கிப் பெருகும் பெரு நகரத்தின் அறுநூறு ஆண்டு கால வரலாற்றை, 'தாதனூர் என்னும் 'கள்ளர் இனத்தார்' வாழ்வதாகப் புனையப்பட்ட கிராமக் குலமரபுக் கதைகளின் துணைகொண்டு, எழுதியுள்ளார் சு.வெங்கடேசன். கொல்லவாருகளான நாயக்கர் இன மக்கள் மதுரை நகரை கைப்பற்றி, வெற்றிக் களிப்பில் கட்டி அரசாண்டதும், பிறமலைக் கள்ளர் எனும் மதுரையின் ஆதிகுடிகள், அதிகார வெறியால் வீழ்த்தப்பட்ட கண்ணீர்க் கதையும்

தான் கதைக்களம். மாடுகளை வணங்கி மேய்த்தோரும், மாடுஅணைந்தோரும் பண்பாட்டின் எதிரெதிர் முனையில் நின்று, ஒரே நிலத்தில் வாழவேண்டிய நிர்பந்தம் உருவானபோது, முதற் கூட்டத்தார் இரண்டாவது கூட்டத்தாரை இணக்கமாக்க, இசைவு பெறச் செய்யும் முகத்தானேதான் இங்கு 'ஏறு தழுவுதல்' நிகழ்வை காண முடிகின்றது.

"வெற்றி பெற்றவர்களிடம் வெற்றியின் ருசியைத் தவிர வேற ஒன்றும் மிஞ்சப்போவதில்லை. தோற்றவனிடம் சொல்லித் தீராத வலியும், வேதனையும் நிறைந்த கதைகளும் உரையாடல்களும் மிகுந்திருக்கும் என்பதைக் 'காவல் கோட்டம் புனைவின் வாயிலாக உணர முடிகிறது ".'

புனை கதைகளில், ஏறு தழுவுதலைச் சித்திரிக்க முயன்றுள்ள எழுத்தாளர்களின் படைப்புகளில் விதவிதமான, புனைவு நோக்கங்கள் அமையப் பெற்றுள்ளன. குறிப்பாக, பிராமண நிலவுடமைச் சமூகத்தின் சிதைவை ராஜம் ஐய்யரும், வர்க்க முரண்களை சி.சு. செல்லப்பாவும், காந்தியத்தின் பெருமையைக் கொத்தமங்கலம் சுப்புவும், கள்ளர் இனப் பெண்களின் வீராவேசத்தைக் கு.ப.ரா.வும், தேவரின மக்களிடையேயும் நிலவுகிற பொருளாதார ஏற்றத்தாழ்வையும், தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டை ஓவியக் கலையாக உருமாற்றித் தக்க வைத்திட அகிலனும், தாழ்த்தப்பட்ட மற்றும் தேவரின மக்களிடையே இன்றளவிலும் காணப்படுகின்ற முரண்களைக் களைய வேல.இராமமூர்த்தியும், ஒரே நிலத்தில் வாழ நேர்ந்த நாயக்கர், கள்ளர் இன மக்களிடையே பரஸ்பர ஒத்திசைவை ஏற்படுத்திட உதவிய ‘ஏறுதழுவுதல்' நிகழ்வை

சு.வெங்கடேசனும், தம் புனைகதைகளில் இடம்பெறச் செய்துள்ளனர். நோக்கங்கள் பலவாயினும் அதன் மைமாகக் கொண்டுள்ளது, தமிழர்களின் அடையாளமாக விளங்கும் ஏறுதழுவுதலைத்தான் என்பதை நம்மால் உணர முடிகிறது.

**மயிலை மாடு**

மயிலை மாடு எனும் கதையானது மந்திரிய அய்யனுக்கும் அவர் வளர்க்கும் பாசமிகு காளையான மயிலை காளைக்கும் உள்ள பேரன்பை முன் வைக்கிறது. தன்னிடம் இருக்கும் மாடுகளை அவரது மகனான மயில்சாமி காலப் போக்கில் ஒவ்வொன்றாய் விற்றுவிடுகிறார். எஞ்சியிருக்கும் காளையாக இம் மயிலை மட்டுமே காணப்படுகிறது, ஒருகட்டத்தில் அதையும் தந்தைக்கு தெரியாமல் விற்றுவிடவே தந்தை மிகுந்த வேதனையில் மனமுடைந்து ஒரு கட்டத்தில் இறக்கும் தருவாய்குச் செல்கிறார், மயிலைக் காளையானது பட்டி நோம்பு அன்று தனது புதிய எஜமானை விட்டு மந்திரி அய்யனைக் காண ஓட்டம் பிடிக்கவே அவற்றை பிடிக்க மூன்று நான்கு பேர் துறத்தவே காளையானது யாரிடமும் சிக்காமல் மந்திரி அய்யன் குடிசையின் முன் போய் நின்றது, ம்மா,..ம்மா.. என்று அடித் தொண்டையில் உயிரைக் கொடுத்து கத்தியதில் மந்திரி அய்யன் படுக்கையில் இருந்து எழுந்து கொண்டார் எனவும் அவ்வருடம் பட்டி நோம்பு மயிலைக்காளையுடன் நடைபெற்றதாக அக்கதை காளையின் அன்பை முன் வைக்கிறது,

இக்கதையில் காளைகளை மந்திரி அய்யன் பேணிப் பாதுகாத்து வளர்த்த விதம் குறிப்பிடப்பட்டுள்ளது, மாடுகள் பட்டி நோன்பு மிக முக்கிய பங்கு வகிக்கிறது, மாடுகளை குளிக்கச் செய்து அதன் கொம்புகளை சீவி சாயம் பூசுவது, திமிலுக்கு திருநீறு பூசுவது போன்ற செய்தி இடம் பெறுகின்றன, மேலும்

காளையின் திமிலில் காணப்படும் ராஜயோகச் சுழியையும் பதிவு செய்கின்றது. மந்திரி அய்யனுக்கு பின் மயில்சாமி மாடுகளை வளர்ப்பதில் உள்ள மிக முக்கிய சிக்கலையும் சூழலையும் எடுத்துக்காட்டுகிறது. ஊர் ஊராக அரசாங்கம் மின்சாரம் கொடுக்கவே பெருவாரியானோர் மோட்டார் வைத்துக் கொண்டதால் கவலை ஓட்டுகிறது நின்றுவிடுகிறது, வறட்சியால் கிணறு வற்றிப் போகவே நிலத்தடி நீரை உரிஞ்சும் அவசியம் ஏற்பட்டது, தொழிற்சாலை வரவால் வேலைக்கு ஆட்களும் கிடைப்பதில்லை. மயில்சாமியும் போக்கு வரத்துக்கு புல்லட் வாங்கியதால் காளை வண்டியின் அவசியம் அவனுக்கு இல்லாமல் போனது. உழவு வேலைக்கு இயந்திரக் கலப்பை வாங்கியதால் உழவுக்கும் காளை பயனற்று போனது. இவ்வாறு மாடுகள் கால மாற்றத்தால் புதிய கண்டுபிடிப்புகளால் தங்களின் வாழ்வை இழக்கும் சூழல் காணப்படுவதை இக்கதை உணர்த்தியதோடு தன்னை உயிர்பிக்கும் அளவுக்கு காளைக்கும் மனிதனுக்குமான மிக நெருக்கமான அன்பை உணர்த்திச் செல்கிறது.

**வெள்ளை மாடு**

தங்கர் பச்சனின் சிறுகதையான **வெள்ளை மாடு**, வீட்டில் ஆசை ஆசையாக வளர்த்த வெள்ளைக் காளையை வறுமை காரணமாக விற்க வேண்டி இருக்கிறது. பிறகு அந்த வெள்ளைக் காளையை தந்தையும், மகனும் வரும் வழியில் வைத்து ஒரு நாள் பார்த்து விடுகிறார்கள். ஒரு காளை முதன்முதலாக தங்கள் வீட்டின் ஓர் அங்கமாக மாற்றும் முற்சியில் ஈடுபடுவதும் அதன் பிரிவால் துயருறும் சூழலையும் இப்புனைவின் வாயிலாக குறிப்பிடுகிறார், விலைக்கு வாங்கிய நபர் அக்காளைக்கு கொடுக்கும் இன்னல்களையும் உணர்ச்சிப்பூர்வமாக முன்வைக்கிறார். நீண்ட காலம் கழித்து தனது காளையை சந்திக்கும் சூழலில்

மனிதனுக்கும் காளைக்குமான அன்பையும் இவ்வெள்ளை மாடு எனும் புனை கதை உணர்த்தும் வகையில் அமைந்துள்ளது.

மயிலை மாடு, வெள்ளைமாடு போன்ற புனை கதைகள் ஏறுதழுவுதலை மையமாகக்கொண்டு எழுதப்படவில்லை என்றாலும் மாடுகளை வளர்ப்பதில் உள்ள மிக முக்கிய சிக்கலையும் சூழலையும், நவீன மயமாக்கத்தால் காளைகளின் வாழ்வாதாரம் இழக்கப்படுவதையும், உழவுக்கு காளைகள் பயனற்றுப் போவதையும் முன் வைக்கிறது. மற்றும் காளைக்கும் மனிதனுக்கும் இடையிலான அன்பையும் புரிதலையும் உணர்த்தும் விதமாகவும் அமைந்துள்ளது.

மா.நடராசனின் மயிலைமாடு வேல ராம மூர்த்தியின் எருது கட்டு, அகிலனின் சித்திரப்பாவை சு.வெங்கடேசனின் காவல்கோட்டம், கொத்தமங்களம் சுப்பு எழுதிய மஞ்சு விரட்டு போன்ற இலக்கியங்கள் வாயிலாகவும், திறனாய்வு புத்தகங்களில் டி.என் ஜா எழுதிய பசுவின் புனிதம் போன்றவற்றில் காளை மற்றும் பசு சார்ந்த பதிவுகள் இடம்பெற்றுள்ளன.

**ஏறுதழுவுதல் தொடர்பு கவிதைகள்**

அனைத்து மொழிகளிலும் கவிதைதான் ஆதி இலக்கிய வடிவமாக உள்ளது. என்றால் அவை மிகையில்லை. கவிதைகள் பொதுவாக கலாச்சாரம் பண்பாடு பழக்கவழக்கம், மரபு என அனைத்து கூறுகளையும் உள்ளடக்கியதாக காணப்படுகிறது, அவை காட்சிகளையும், உணர்வுகளையும், அந்த அந்த காலகட்டத்தின் பிரதிபலிப்பாக அமைகிறது, அவ்வகையில் ஏறுதழுவுதல் சார்ந்த கவிதைகள் சிலவற்றை பின்வருமாறு காண்போம்.

**மஞ்சு விரட்டு**

*தின்றே கொழுத்த என்னைப் பார்த்து*

*"கிரிஸ்மஸ் வரை இதை கொல்லண்டா"*

*என மலயாளத்தில் கசாயி சொன்னான்*

*மற்ற காளையர்க்குச் சாவில் விடுதலை*

*எனக்கு மட்டும், ஆயுள் தண்டனை.*

(நடிகர் கமலஹாசன், 2005)

சிறந்த நடிகரும் எழுத்தாளரான திரு கமலஹாசன் 2005 ஆண்டே ஏறுதழுவுதலுக்கு ஆதரவு தரும் விதத்தில் மஞ்சு விரட்டு எனும் இக்கவிதையை எழுதியுள்ளார். இதில் மஞ்சு விரட்டு குற்றம் என்போர், கேரளாவிற்கு அடிமாடுகலாகவும், மாமிசமாகவும் கொண்டு செல்லும் மாடுகளைப் பற்றிய கவலை இல்லையா என்றும், கிரிஸ்மஸ் வரை கொல்லப்படாத மாடு ஒன்று தன் நிலை கூறுவது போல் காட்சியை தம் கவிதை வரிகளில் இடம் பெறச் செய்துள்ளார், இது மட்டுமின்றி விருமாண்டி எனும் திரைபடத்திலும் மாடுபிடி வீரராக நடித்து ஏறு தழுவுதல் எனும் பாரம்பரிய விளையாட்டை இடம் பெறச் செய்திருப்பார், மேலும் அத்திரைப் படத்தில் நாயகி காளையை பேணிப்பாதுகாத்து வளர்ப்பது போன்ற காட்சிகள் காளைகளுக்கும் பெண்களுக்குமான உறவை சங்க காலம் முதல் இன்று வரை பிரதிபலிப்பதாக அமைந்துள்ளன.

**அலங்கோலம்**

*மைதானம் முழுவதும் மனிதத்தலைகள்*

*மரத்தினிலைகளை மறைக்கும் மனிதக்கூட்டம்*

*மாடவிளக்குகளின் மங்காத ஒளிகளுக்கிடையே*

*அற்புதமொன்று நிகழுமோ*

*அனைவரும் எதிர்பார்த்தபடி நிற்க*

*திருமணமா?.. கோவிலா?...*

*திருவிழாவா?... தீமிதியா?...*

(பெருவை பார்த்தசாரதி (20- ஜன. -17,)

இக்கவிதையின் வாயிலாக நடைபெறுவது ஏறுதழுவுதலா? திருமணமா? கோவில் திருவிழாவா? வேண்டுதல் நிறைவேற தீ மிதிக்கும் நிகழ்வா? என அய்யம் விளைவிக்கும் வகையில் அலங்காநல்லூர் ஏறுதழுவுதல் அமைந்துள்ளதை முன்வைக்கிறது. மேலும் ஏறு தழுவுதல் நிகழ்வில் ஏற்பட்ட தடைக்கு பின் வெறுமை வாய்ந்த அலங்காநல்லூரை இக்கவிதை வரிகளில் கவிஞர் குறிப்பிடுகிறார்.

ஏறுதழுவுதல் தொடர்பான கவிதைககளில் தமிழர்களின் வீரம், காளையின் மீதுள்ள அன்பு, ஏறுதழுவுதலுக்கு ஏற்பட்ட தடை, மாணவர்களின் இன்றியமையா பங்கு, ஏறுதழுவுதல் வெற்றி, போன்ற கருத்துக்கள் கொண்ட கவிதைகளை பின் வருமாறு.

**சீறுங்கள் காளைகளே**

*யானை, குதிரை, கழுதை மேலில்லை அக்கறை,*

*என்னினத்திற்கு மட்டும் எதற்கிந்த பரிந்துரை?*

*என் குடும்பமிது, குத்தினாலும் கிழித்தாலும் காளையரை,*

*மறத்தமிழன் என்னை மனத்தால் ஆளும் வரை,*

*அவன் பணி செய்தே கிடப்பேன் என்னினம் வீழும் வரை,*

*என்று.. சீறுங்கள் காளைகளே!*

(இரஞ்சித் 15-ஜன.-17,)

சீறுங்கள் காளைகளே எனும் இக்கவிதையில் என்னை உணவுக்காகக் கொன்று உண்ணும் விலங்கு நல அமைப்புக்களே! என் மீது அக்கறை கொள்ளும் நீங்கள் ஏன் போட்டிகளிலும், விழாக்களிலும் பயன்படுத்தும் யானை குதிரை, கழுதை போன்ற விலங்குகள் மீது அக்கறை கொள்வதில்லை, மனத்தால் ஆளும் தமிழ் இன மக்களுக்காக எங்கள் இனம் அழியும் வரை அவர்களுக்கான பணிகளைச் செய்து வாழ்வோம் என காளை எடுத்துரைப்பது போன்ற கருத்துக்கள் இடம்பெற்றுள்ளது.

**ஜல்லிக்கட்டு - எம் களம்**

*கூட்டத்தின் கூச்சல்கள்*

*எமக்கு உற்சாகம்...*

*காளைக்கு மிரட்சி...*

*பற்கள் கடித்தலிலும் கொச்சயாய் ஏசுதலிலும்*

*வெளிப்படும் எம் வெற்றி...*

*பாவம் காளைகள்*

*மீசை முறுக்கலில் அதற்கு வெற்றியுமில்லை...*

*கொச்சை வார்த்தை ஏசலில் தோல்வியுமில்லை..*

(ஜெயசீலன் 11- ஜன.-16)

ஜல்லிக்கட்டு எம் களம் எனும் கவிதை ஏறுதழுவுதல் நிகழ்விடம் பற்றிய பதிவுகளை முன் வைக்கின்றன. ஏறு தழுவுதல் விளையாட்டுத் திடலில் காணிகளின் ஆரவாரம் மாடுபிடி வீரர்களுக்கு உற்சாகம் அடையச் செய்யும், களத்தில் திறம்பட விளையாட அவை துணை நிற்கும் ஆனால் காளைகளுக்கு அவ்வாறு இல்லை , காளைக்கு வெற்றித் தோல்வி என்ற எந்த வரைமுறைகளும் கிடையாது இவையனைத்தும் காளையின் உரிமையாளரை மட்டுமே சாரும் என்கிறது இக்கவிதை.

**மாண்புமிகு மாணவருக்கு**

*தன்மரபு காக்கும்பெருத் தகுதியானது*

*தனிமையில்லை எவருமென்ற தொகுதியானது*

*தரணியையே திரும்பவைக்கும் திறமையானது*

*தமிழரிடம் இருக்குதென்று உறுதியானது*

*(மீ.மணிகண்டன் : 28- ஜன.-17,)*

மாண்புமிகு மாணவன் எனும் இக்கவிதையில், பண்பாட்டு அடையாளமாக விளங்கும் ஏறுதழுவுதல் நிகழ்வை அதன் அழிவில் இருந்து மீட்டதில் மாணவர்களின் பங்கு என்பது மிகப் பெரியது, ஏறுதழுவுதல் தடைக்கு எதிராகப்

போராடி அதில் வெற்றி வாகை சூடிய மாணவர்களைப் போற்றும் வகையில் அமைந்துள்ளது இக்கவிதை.

**வீரம்**

*மரணத்தையும் எதிர்த்து*

*போராடும் துணிவு*

*கொண்ட*

*தமிழனின்*

*வீரத்தை வெளிக்கொணரும்*

*விந்தையே ...!*

*ஜல்லிக்கட்டு ..,*

(சு. முத்து ராஜ குமார் 17-பிப்.-17)

ஏறுதழுவுதல் தொடர்புடைய கவிதைகள் சங்க இக்கியங்களில் ஆங்காங்கே காணப்பட்டாலும், அவை ஏறுதழுவுதல் குறித்த செய்திகள் மட்டுமே! ஆனால் ஏறுதழுவுதல் எழுச்சி மிகு கவிதைகள் உருவாவதற்கு காரணமாக அமைந்தது ஏறுதழுவுதல் தடை செய்யப்பட்ட பிறகு தான். பண்பாட்டு நிகழ்வை தடை செய்ததை எதிர்த்தும், மாடுகளின் தேவை, வீரம், ஏறுதழுவும் களம், வேளாண்மையின் முக்கியத்துவம் குறித்து உணர்த்த முற்பட்டன. ஏறுதழுவுதல் எனும் பண்பாட்டில் புகும் அரசியல் போன்றவைகளையும், ஏறுதழுவுதல் தடை நீங்கியபின் அதன் வெற்றி பற்றியும், அதில் மாணவர்களின் இன்றியமையா பங்கு பற்றியும், சமகால ஏறுதழுவல் தொடர்புடைய கவிதைகளில் பெருவாரியாகக் காணமுடிகின்றது. மேலும் உணர்ச்சிபூர்வமான கவிதைகள் அவை தொடர்பான

பாடல்கள், ஏறுதழுவுதல் விளையாட்டுக் களங்களில் தவறாமல் இடம் பெற்றும் வருகின்றன. மேலும் இக்கவிதைகள் உடனுக்குடன் வெளியிடவும் அதன் பின்னூட்டம் பெறவும், விவாதிக்கவும் இணையத்தின் பங்கு மிக முக்கியமானது என்றே கூறலாம்.

## தொகுப்புரை

தமிழர் பண்பாட்டில் கால்நடை வழக்காறுகள்- பெரு மரபு எனும் இவ்வியல் மானிடவியல் அறிஞர் மிக்கன் மார்ட்டின் கூற்றுபடி எழுத்து வடிவிலான ஏறு தழுவுதல் சார்ந்த பண்பாட்டு பதிவுகள் தொகுக்கப்பட்டு. ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது.

புறப்பொருள் வெண்பாமாலை, புறத்திரட்டு, ஆகியவற்றில் ஆநிரை கவர்தல் மீட்டல் போன்ற பதிவுகளும், புறநானூற்று நடுகல் வழக்கம் போன்ற பதிவுகள் பற்றியும் விளக்கப்பட்டுள்ளது.

கலித்தொகை வாயிலாக முல்லை நிலத்தில் ஏறுதழுவல், ஆயமகளின் தந்தையர்கள் ஏறுவிடுதல், ஏறுகளின் உவமைகள், காளையர்கள் ஏறுதழுவல், காளையை வென்றவனுக்கு மகளை வழங்குதல், குரவை ஆடுதல், மாட்டின் கொம்பினை வழிபடல், ஏறுதழுவும் பொதுவர்களின் பொருளியல் பின்புலம், உள்ளப் புணர்ச்சி, ஏறுகளுக்குள்ளே பொருதுதல், ஏறுகளின் மீது கொண்ட அன்பால் ஏறுகளை அடக்குதல், போன்ற செய்திகள் தொகுக்கப்பட்டு ஆரயப்பட்டுள்ளன.

சிலப்பதிகாரத்தில், பெண்கள் திருமணத்திற்காக காளைகளை வளர்த்த செய்திகள் இடம் பெற்றுள்ளன. திருமண விழாவில் தந்தையர்கள் தம் மக்களுக்கு ஒத்த காளைகளை அறிமுகம் செய்யும் முறையை அறியமுடிகிறது.

மலைபடுகடாம், பள்ளு, இலக்கியங்களில் காளை மற்றும் ஏறுதழுவுதல் தொடர்பான செய்திகள், ஏறுதழுவுதல் நிகழ்விடங்களும், அவை நிகழும் சூழலையும் ஆய்வில் வெளிக்கொணரப்பட்டுள்ளது.

ஏறுதழுவுதல் தொடர்புடைய பதிவுகள் கமலாம்பாள் சரித்திரம், சித்திரப்பாவை, காவல்கோட்டம், மஞ்சிவிரட்டு மற்றும் ராவ்பகதூர் சிங்காரம், எருதுகட்டு, வீரம்மாளின் காளை, வாடிவாசல், மயிலை மாடு, போன்ற புதினங்களில் வீரம், துரோகம், சாதியம், முதலாளித்துவம் போன்றவைகள் விளக்கப்பட்டுள்ளன.

ஏறுதழுவுதல் மற்றும் காளை சார்ந்த புதுக்கவிதைகளை ஆய்வுக்கு உட்படுத்தி சமகால பிரச்சினைகள், விருப்பு, வெறுப்பு, தேவை போன்ற பதிவுகள் ஆய்வில் வெளிக் கொணரப்பட்டுள்ளது.

# இயல் - இரண்டு

## தமிழர் பண்பாட்டில்

## கால்நடை வழக்காறுகள்-சிறு மரபு

### *இயல் - இரண்டு*

## தமிழர் பண்பாட்டில் கால்நடை வழக்காறுகள்-சிறு மரபு

எவ்வித எழுத்து வடிவில் நடத்தை விதிகளையும் பின்பற்றப்படாமல் மரபுசார்ந்த எழுதப்படாத நடத்தை விதிகளை பின்பற்றுபவை சிறுமரபு. இதன் அடிப்படையில் மாட்டு இனங்களில் காளை தொடர்பான சடங்கு முறைகள், நம்பிக்கைகள், பழமொழிகள், மற்றும் ஏறுதழுவல் சார்ந்த செய்திகள் இவ்வியலில் விளக்கப்படுகிறது.

மாடுகள் மனித வாழ்வியலோடு உற்ற தோழனாக விளங்குகின்றன . கால்நடைகளில் காளை மற்றும் பசுக்கள் தவிர்க்க முடியாத விலங்குகளாக உள்ளன. கவிஞர் நா. முத்துக்குமாரின் பாடல் வரிகளில் ''ஆடு மாடு மேலே உள்ள பாசம் வீட்டு ரேஷன் கார்டில் (குடும்ப அட்டையில்) சேர்க்க தோனும்'' என்கிற அளவுக்கு நாட்டுப் புற மக்களின் வாழ்வானது கால்நடைகளை சார்ந்தே காணப்பட்டது. உணவு, உழவு, இடப்பெயர்ச்சி மற்றும் பல வழிகளில் மாடுகள் உதவியதோடு காளை பண்பாட்டு அடையாளமாகவும், விழாக்களாகவும், வாழ்வியல் சடங்கு முறைகளாகவும், குலக்குறி மரபுகளாகவும் விளங்குகின்றன.

**காளை வழிபாடு,**

அறிஞர் ஃப்ராய்டின் கூற்றுப்படி சடங்கு என்பது மனிதர்களின் மடைமாற்றத் தந்திரங்களுள் ஒன்றாகும். சடங்குகள் மாறாத் தன்மை கொண்டவை. அவை நிலையானவை ஆனால் நவீன சூழலுக்கு ஏற்றவாறு மாற்றம் பெற்றுள்ளன. இதற்கு மிக முக்கியக் காரணம் மனிதர்களின் புலப் பெயர்வே ஆகும்.

சடங்குகள் மனித வாழ்வின் ஒரு அங்கமாக மாறிய நிலையில். காளையை வணங்கும் முறையானது, மேற்கு ஆசியா வரை பரவிக் காணப்பட்டது. தங்கத்திலான காளையின் (சிலையை) யூதர்கள் வழிபட்ட செய்தி பைபிளில் குறிப்பிடப்பட்டுள்ளது. சீனாய் தீபகற்பத்தில் பெரிய அளவில் யூத மக்கள் தங்கத்திலான காளை உருவச் சிலையை வணங்கினர், இறைத்தூதரான மோசஸ் இச்செயலை மறுத்து அச்சிலையை உடைத்து போட்டது குறிப்பிடத்தக்கது.

இந்திய துணைக்கண்டத்தில், சிந்து சமவெளி நாகரீக மக்கள் காளையை வழிபாடு செய்த செய்தியானது அகழ்வாய்வின்போது அங்கு கிடைக்கப்பெற்ற காளை முத்திரைகளை வைத்து கண்டறிய முடிகின்றது. *(தமிழ் விக்கிபீடியா தகவல்)*

**மெசபடோமியா**

வளைந்த கொம்புகள் கொண்ட காளை இனங்களை பண்டைய சுமேரிய நகரத்து மக்கள் வழிபட்டு வந்துள்ளனர்.

**எகிப்து**

எகிப்து நாட்டின் தெய்வங்களான அப்பீஸ் தேவனுடனும், ஒசேரியஸ் தேவனுடனும் காளைகளை ஒப்பிட்டு வணங்கி வந்தனர்.

**பாரசீகம்**

தற்போது ஈரான் எனும் அழைக்கப்படும் நாட்டில் சமயமான சரஸ்துஸ்திர சாத்திரங்களில் பசு மற்றும் காளை வழிபாடுகளும் காணப்படுகிறது.

**கிழக்கு அனதோலியா**

மின்னோனியன் நாகரீக காலத்தில் கிரிட் தீவுகளில் காளைகள் மையப் பங்கு வகித்தன, காளைகளின் கொம்புகள் மற்றும் தலைகள் அரண்மனையின் முகப்புகளில் வெகுவாக காணப்பட்டன.

**சைப்பரஸ்**

சைப்பரஸ் தீவுகளில் புதிய கற்காலத்திய காளை கொம்புகளின் கற்சிற்பங்கள் கண்டெடுக்கப்பட்டன, அந்நாட்டின் சமய சடங்குகளின்போது சுடுமண்ணால் செய்யப்பட்ட காளையின் தலையை பூசாரிகள் முகமூடிகளாக அணிவது வழக்கம்.

**கிரேக்கம்**

மாக்ரோபோயஸ் எனும் தொல்லியல் ஆய்வு அறிஞர்களின் கூற்றுப்படி கிரேக்கம் உரேமப்பேரரசில் குடிமக்கள், பேரரசின் நன்மைக்காக புனித காளையினை வணங்கி வழிபட்டனர். இந்நிகழ்வானது கி,பி 2ம், 4ம் நூற்றாண்டுவரை இருந்து வந்ததாகவும், **தேந்தோ** என்னும் கடவுளுக்கு புனிதமாக இருந்தது என்றும், கடவுளை கவரும் வகையில் காளைகள் பலியிடப்பட்டது, (தமிழ் விக்கிபீடியா தகவல்)

இந்தியாவில் இந்து மதத்தில் காளையானது நந்தி தேவராக போற்றப்படுகின்றது, கைலைமலையின் காவல் தெய்வமாகவும், சிவபெருமானின் வாகனமாகவும் புராணங்களில் சித்தரிக்கப் படுகின்றது. சைவ சமயத்தில் சிவனின் வாகனமாக கருத்தப்படும் காளைக்கு நந்து என்றும் நந்தி என்றும் பெயர். நந்து என்பதன் பொருள் வளர்வது அல்லது தோன்றுவது எனப்படும். சிவன் மற்றும் நந்தியின் வழிபாட்டை சிந்து சமவெளி நாகரீக காலத்தில் கூட காணமுடிகிறது, இங்கு பசுபதி நாதார் அமைந்திருக்கும் உருவ முத்திரை உள்ளது. மொகஞ்சதாரோ மற்றும் ஹரப்பாவில் பல காளைகளின் முத்திரைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் நந்தி வழிபாடானது பல ஆயிரம் ஆண்டுகளாக காணப்படுவதை உணரலாம்.

தமிழகத்தில் சிவனின் ஆலையங்களில் நந்தி தெய்வமானது மிக முக்கிய இடத்தை வகிக்கிறது, இந்த நந்தி உருவமானது பெரும்பாலும் தரையில் படுத்திருப்பது போல் காட்சி தரும், சிவனுக்கு திங்கள் கிழமை உகந்த நாளாகும், அன்று சைவர்கள் காளைகளுக்கு ஓய்வு கொடுப்பார்கள் என்ற கருத்துக்கள் நிலவி வருகின்றது.

**மாடு தாண்டுதல்**

மாடுதாண்டுதல் எனும் நிகழ்வானது தமிழகத்தில் புரட்டாசி மாதம் சனிக்கிழமைகளில் நடைபெறுவது வழக்கம் அன்று திருமாலுக்காக விரதம் இருப்பதும் வழக்கம். இவ்வழக்கம் தமிழகத்தில் பரவலாக காணப்படுகின்றது. ராசிபுரம் பொன்வரதராஜா கோவிலில் புரட்டாசி மாதம் கடைசி சனிக்கிழமை காளை தாண்டும் நிகழ்ச்சி நடைபெற்று வருகின்றது, பக்தர்கள் தங்கள் வேண்டுதலை நிறைவேற்றிக்கொள்ள தரையில் படுத்திருப்பர் அப்போது அலங்கரிக்கப்பட்ட காளையானது அவர்களைத் தாண்டி செல்வதுண்டு அவ்வாறு மாடு அவர்களை தாண்டிச் சென்றால் தங்களது வேண்டுதல் நிறைவேறும் என்று நம்புகின்றனர்.

**சடங்கு முறைகள்**

மனித வாழ்வில் பிறப்பு முதல் இறப்பு வரை பல வகையான சடங்குகள் இடம் பெறுகின்றன. ஆசையாலும், அச்சத்தாலும் பழக்க வழக்கங்கள் நாளடைவில் மக்களின் வாழ்க்கை படிநிலைக்கு ஏற்ப சடங்குகளாக மாற்றம் பெற்றதோடு மட்டுமல்லாமல் அவைகள் பண்பாட்டின் எச்சங்களாக நிலைபெறுகின்றன.

**விழாக்கள்**

விழாக்கள் மக்களை மகிழ்விப்பதொடு ஒன்றிணைக்கவும் செய்யும் ஒரு நிகழ்வாகும்.

மடியா விழாவின் யாணர் நன்னாடு - புறநானூறு

(மடியா = நீங்காத) என்றால் ஆண்டுதோறும் என்று பொருள். ஆண்டு முழுவதும் விழா நீங்காத ஊர் என்று புறநானூறு குறிப்பிடுதலைக் காணலாம். வாழ்வின் இன்பத்தை வெளிப்படுத்தும் விதமாக விழாக்கள் பல கொண்டாடி மகிழ்ந்து வந்துள்ளனர் நம் முன்னோர். சோழர் காலத்தில் பொங்கல் பண்டிகைக்கு புதியீடு என்று பெயர் இருந்தது. அதாவது ஆண்டின் முதல் அதற்கு பொருள். தை மாதத்தின் முதல் நாளில் உழவர்கள் அந்த ஆண்டின் முதல் அறுவடையை மேற்கொள்வதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். மனித குலத்தின் பண்பாட்டையும், நாகரீகத்தையும் மரபையும் விளக்குவதில் திருவிழாக்களுக்கு முக்கிய பங்குண்டு. இவ்விழாக்கள் தொன்று தொட்டு கொண்டாடிய சான்றுகளை பல இலக்கியங்களில் நாம் காணமுடிகிறது. அவைகளில் இந்திர விழா, காமன் விழா, முருகன் விழா, முந்நீர் விழா, கார்த்திகை விழா, திருமண விழா, ஓண விழா, பூத்தொடை விழா, போன்ற பல விழாக்கள் தமிழர்களிடத்தே காணப்பட்டாலும் காளைகள் சார்ந்த விழாக்களை பின் வருமாறு காண்போம்.

**போகிப்பண்டிகை**

தமிழாண்டின் மார்கழி மாதம் கடைசி நாள் அன்று போகிப்பண்டிகை கொண்டாடப்படுகிறது. பழையன கழித்து, புதியன புகவிடும் எனும் சொல்லுக்கிணங்க அன்றய நாளில் பழயனவற்றையும், பயனற்றவற்றையும்

களையும் நாளாக கருதப்படுகிறது. துயரமான பழமையான நினைவுகளை அழித்துப் போக்கும் இப்பண்டிகை போக்கி எனப்பட்டது. நாளடைவில் போக்கி எனும் சொல் போகி என்றாயிற்று. அடுத்த நாள் வைகறையில் நிலைப்பொங்கல் நடைபெறும்.

**பொங்கல்**

பொங்கல் விழாவை வரவேற்கும் விதமாக வீடுகளில் வண்ணங்கள் பூசப்பட்டு வீட்டின் கூரையில் காப்புகட்டு செருகப்படும். சங்க காலத்தில் கொண்டாடப்பட்ட தை நீராடலே இன்று பொங்கல் என்றும், அந்த காலத்தில் தை நீராடலின்போது பாவை நோன்பாய் கடைபிடித்து வந்தனர். பொங்கல் பண்டிகை முற்காலங்களில் திறந்த வெளியில் பனை ஓலை அல்லது மூங்கில் தப்பைகளால் பட்டி ( தடுப்பு) அமைப்பர். அங்கு கற்களைக் கொண்டு அடுப்பை அமைப்பர். அதில் புதிய மண் பானையில் மஞ்சள் தடவி பொட்டிட்டு மங்களமாக்கப்படுகிறது. பின்னர் பால், பச்சரிசி இட்டு கழுகிய நீரைப் பானையில் வார்த்து பொங்கலிடுவர். பொங்குதல் என்பது பொங்கி நிற்றல் நிறைவு பெறுதல் என்பதன் மங்களக் குறியீடாகும்.

பொங்கல் பொங்கியதும் மணல் சாணம் கொண்டு பட்டியின் நடுவில் தெப்பக்குளம் அமைப்பர். தெப்பக்குளத்தில் நீரைத் தேக்கி அகில் பூ மற்றும் காசுகளைப் போடுவர். தெப்பக்குளத்தைச் சுற்றிலும் சிறிய அகல் விளக்கை ஏற்றுவர் மேலும் சதுர வடிவில் அமைந்திருக்கும். தெப்பக்குளத்தின் பின் பகுதியில் கரும்பு வாழை மரங்களை நட்டு பூமாலை தொங்க விட்டு அலங்காரம் செய்வர். சிறிய வெள்ளைரங்கற்களை கன்னிமார் சாமி மஞ்சள் குங்குமமிட்டு

நடுவர் மேலும் பட்டியா விடைத் தாய், தந்தைக்கு வேட்டி சேலை, காதோலை, கருகமணி, மஞ்சள் கொம்பு வைத்து, மாவிளக்கில் நெய் தீபமேற்றி பெண் குழந்தைகள் இருக்குமாயின் அவர்களது தலையில் சும்மாடு வைத்து மாவிளக்கை தெப்பக்குளம் சுற்ற விடுவர். தெப்பக்குளத்தை சுற்றி விடும்போது வெக்கோ விளக்கு, பட்டியா விடை விளக்கோ விளக்கு என்று பல முறை கூவுவர், ஒருவர் சொல்ல மற்றவர்கள் பின்பாட்டாகக் கூவுவர்.

ஆண்களின் வக்கிரத்தால் ஒடுக்குதலுக்குள்ளான பெண்கள்(தாய் தெய்வங்கள்). சடங்கு நிகழ்ச்சிகள் மூலமாகக் அதற்கு ஈடான ஒடுக்குதலை வெளிபடுத்தும் நிலையில் எழுந்ததே ஆண் குறியீடு கொண்ட உயிர்ப் பலிகள். பலியிடுதலுக்குப் பின் படையல் பொருட்களை ஆலயதின் முன் வைத்து தீபாராதனை செய்து வழிபாடு செய்வர். அவ்வாறான வழிபாடுகளின்போது அங்கப்பிரதட்சனை, மொட்டையடித்தல் போன்றவை செய்யப்படும். பத்தாம் நாள் படையல் வரை அம்மன் சாமி ஆடுகிறவர்களும், பூசாரிகளும் இருந்த உண்ணா நோம்பு முடிவுக்கு வரும். பொங்கல் வைக்கும் நாளன்று பொங்கலில் பொங்கிய பால் நீரை வீட்டுக் கூரையில் தெளிப்பர். திணை மாறி வந்த ஆந்தையை விரட்டும் விதமாக தொடக்க காலத்தில் செய்து வந்தனர்.

**தமிழர் திருநாள் (தைப்பொங்கல்)**

பொங்கலிடுதல் என்பது ஒரு மூலப்படிவ குறியீடாகும். (ஆர்க்கிடைபில் சிம்பல்) பொங்கல் திருவிழா என்பது அறுவடை நாள் சடங்குமுறை மட்டுமல்ல அறுவடை இல்லா காலங்களிலும் மழை வேண்டியும், நேர்த்திகடன் செய்யும் காலத்திலும் நோய் நொடிகள் மிகுந்த காலங்களில் அம்மனை வழிபடுதலிலும், அம்மனுக்கு செய்யும்

மூலப்படிவ குறியீடாகும் என்கிறார் பியார்தோ.(தமிழர் மானிடவியல் 2002- பக். 301) அவர் மண் பானை தாய் தெய்வம் எனவும் பொங்கும் பச்சரிசி என்பது ஆண் வக்கிரத்தைப் பொங்கிப் பொங்கி அழிப்பதாகும் என்கிறார்.

பியார்தோ குறிப்பிடும் இக்கூற்று தைப் பொங்களுக்கு மட்டுமே ஏற்புடையதாக அமையும், ஆனால் சமூகத்தின் உள் அமைப்பொழுக்கங்களின் உறவை துண்டித்து விட்டு ஒரு தளத்தில் நின்று பொருள் காண்பதாகும் என்கிறார் பக்தவச்சல பாரதி. மேலும் அவர் தமிழர் பண்பாட்டில் பொங்கலென்பது ஊரின் சமூக அமைப்பைப் பிரதிபலிப்பது போன்றது. சடங்குகளும் சமூகத்தின் உள்ளுறவுகளை கட்டுமானத்தை வெளிப்படுத்துவதாகவே அமைகின்றன எனக் குறிப்பிடுகிறார்.(தமிழர் மானிடவியல் 2002- பக் 302)

பக்தவச்சல பாரதியின் கூற்று ஏற்புடையதாக அமைகிறது. நவீன மயமாக்கப்பட்ட இன்றய காலகட்டதிலும் ஒட்டு மொத்த தமிழ் சமூகமும் பொங்கல் விழாவை ஜாதி, மதம வேறுபாடு இன்றி கொண்டாடுகிறது. இவ்விழாவானது தமிழ் சமூகத்தின் ஒருமைப்பாட்டை வெளிப்படுத்துகிறது.

தைப்பொங்கள் பற்றிய குறிப்புகள் சங்க காலம் முதலே இருந்து வந்தது குறிப்பிடதக்கத்து.

> தையில் நீராடி தவம் தலைபடுவாயோ- (கலித். 59.13) தைஇத் திங்கள் தண்கயம் படியும்- (நற்.80.7) தைஇத் திங்கள் தண்ணிய தரினும்- (குறுந்.196.4) தைஇத் திங்கள் தண்கயம் போல- (ஐங்குறு.84.4) தைஇத் திங்கள் தண்கயம் போல் -(புறநா. 70.6 )

என வரும் பாடலடிகளால் அறிய முடிகின்றது.

**மாட்டுப் பொங்கல்**

மாடுகளில் காளை இனங்கள் உழவுக்கு மிக முக்கிய பங்கு வகிக்கின்றன உழவிற்கு உறுதுணையாக நின்ற மாடுகளுக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்வே இம்மாட்டுப் பொங்கல் இதனைப் பட்டிப் பொங்கல் எனவும் அழைப்பர். பட்டி பெருக, பால்பானை பொங்க நோவும் பிணியும், தெருவோடு போக எனக்கூறி மாடுகள் பொங்கல் உண்ட எச்சில் நீரை தொழுவத்தில் தெளிப்பர். இம் மரபு பரவலாக மதுரை மாவட்டங்களில் காணப்படுகிறது.

மாட்டுப் பொங்கலன்று உழவர்கள் தங்களின் கால் நடைகளை குளிப்பாட்டுவர், அவற்றின் கொம்புகளுக்கு வண்ணங்கள் பூசி அலங்கரிப்பர், கொம்பின் நுனிப்பகுதியில் சிறு உலோகத்தால் ஆன தொப்பிகளை அணிந்திடுவர், அவைகளுக்கு மலர் மாலை அணிவிப்பர், அவற்றின் கழுத்திற்கு மணிகளைக் கட்டி விடுவர். குங்குமம், மஞ்சள் மற்றும் மாவிலை கலந்த தண்ணீரை அவற்றின் மீது தெளித்து விடுவர். கால்நடைகளின் முன்நெற்றி மற்றும் கால்களைத் தொட்டு கால்நடைகளை வழிபடுவர். அதற்கு ஆரத்தியும் எடுப்பர். சர்க்கரை பொங்கலை முதலில் கால்நடைக்கு ஊட்டி விடுவர். சில இடங்களில் இந்நாளில் தமிழர்களின் வீரவிளையாட்டான ஏறுதழுவல் நடைபெறும். இவை தற்போது மஞ்சுவிரட்டு அல்லது எருது விடும் விழாவாக நடைபெற்று வருகின்றது.

**காணும் பொங்கல்**

காணும் பொங்கலை கன்னிப் பொங்கல் என்றும் அழைப்பர். உழவர்கள் தங்களின் சுற்றத்தாருடனும், உற்றார் உறவினருடனும் கூடி குலாவியும்,

பேசிப்பழகி மகிழ்ச்சியாக இருக்கவும் , எதிர் காலங்களில் எதை நோக்கி செல்ல வேண்டும் என திட்டமிடலுக்காகவும், கொண்டாடப்படும் நிகழ்வு ஆகும். கன்னியர்கள் தங்களின் மனக்கிடங்கின் எண்ணங்களைக் கூறி பொங்கலிட்டு வணங்கும் நாளே இக்கன்னி பொங்கல், இதனைப் பூ பொங்கல் என்று குறிப்பிடுவர்.

**கோயில் காளை பூச்சிக்காளை**

காளைக் கன்றுகள் சிறியவையாக இருக்கும் போதே சிலவற்றை கோயிலுக்கு நேர்ந்து விடுவார்கள். கோயில் காளையை பூச்சிக்காளை என்றும் அழைப்பர். கோயிலில் உள்ளவர்கள் அதன் முதுகின்பின் பகுதியில் சிறியதாக ஒரு கீறு கீறிவிட்டு அதை கோயிலுக்கு நேர்த்தியாக ஏற்றுக்கொண்டு அதனை எந்தவித கட்டுப்பாடும் இன்றி அவிழ்த்து விடுவார்கள். அந்த கோயில் காளை எந்தவித கட்டுப்பாடும் இன்றி சுற்றித்திரியும், மக்கள் கோயில் காளையைக் கண்டால் வழிவிட்டு ஒதுங்கிச்செல்வது வழக்கம். அது அந்த ஊரில் உள்ள அனைத்து பசுமாடுகளும், கருவுற வைக்க போதுமானதாக இருக்கும். மாடுகள் கன்று போடுவதற்கு காரணமாக இருக்கும். கோயில் காளையை கண்டால் யாரும் விரட்டமாட்டார்கள். கோயில் காளைக்கு வழிவிட்டு அவர்கள் ஒதுங்கிச்செல்வர். அவற்றிற்கு தண்ணீர் வைப்பர், கழிநீர் கொடுப்பர். அவற்றை உட்கொண்டு அந்த காளையும் ஊரெங்கும் மகிழ்ச்சியாக வலம் வரும். இதுதான் கோயில் காளை/பூச்சிக்காளையின் சிறப்பு. ஏறுதழுவுதலின் போது ஒரு விதிமுறை உள்ளது. ஏறுதழுவுதல் நடத்தும் ஊரின் சாமி மாடுதான் முதலாவதாக வரும். அந்த மாட்டை

மாடுபிடிக்கும் வீரர்கள் யாரும் பிடிக்கக்கூடாது என்ற விதியை வைத்து பின்பற்றி வருகின்றனர்.

**பூசாரியாக இருத்தல்**

ஏறுதழுவுதல் என்னும் வீரவிளையாட்டானது ஊர்த்தெய்வங்களுக்காக ஊர் மக்களால் நடத்தப்பட்டு வருகின்றது. ஊர்த்தெய்வங்களுக்குக் கோயில் பூசாரியாக ஊரிலுள்ள ஒருசில இனமக்களே பணிசெய்து வருகின்றனர். அய்யனார் கோயிலுக்கு நடத்தப்படும் ஏறுதழுவுதல் விழாவில் வேளார் (குயவர்) என்ற சாதியினைச் சேர்ந்தவர் பூசாரியாக இருக்கின்றார். அய்யனார் சாமிக்குரிய குதிரையினைக் குயவர்கள் செய்வதனால் அய்யனார்சாமி குயவர்களுக்குக் கட்டுப்படும் என்று நாட்டுப்புறமக்கள் நம்புகின்றனர், இதனடிப்படையில் நாட்டுப்புறங்களிலுள்ள அய்யனார் கோயிலுக்குப் பூசாரியாகக் குயவர் இனத்தவர்களை ஊர் மக்கள் நியமித்திருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. இவர்களுக்கு ஊர்மக்கள் மானியமாக நிலம் வழங்கியுள்ளனர். ஓர் ஊரில் பெருமாள்சாமி ஊர்ப்பொதுத் தெய்வமாக இருந்தால் அவ்வூரில் பல இனங்கள் இருந்தாலும் பூசாரியாக நாயக்கர் இனத்தில் ஒருவரை ஊர் மக்கள் நியமித்துள்ளனர்.

முக்கம்பட்டியில் சிவனாயி அம்மன் கோயிலுக்குப் பறையர் இனத்தவரில் ஒருவரைப் பூசாரியாக ஊர் மக்கள் நியமித்துள்ளனர். இக்கோயிலுக்கு ஊர்ப்பொதுமக்கள் ஏறுதழுவுதல் விளையாட்டை நடத்துகின்றனர். மேலும் அச்சம்பட்டி என்னும் ஊரில் நொண்டிச்சாமிக்குப் பூசாரியாகப் பறையர் இனத்தவர்களில் ஒருவரே உள்ளார். இக்கோயிலிலும் ஏறுதழுவுதலை ஆண்டு தோறும் நடத்தி வருகின்றனர். இங்கு அப்பு கண்ணன் என்பவர் 2018 முதல்

பூசாரியாக உள்ளார். சிவனாயி அம்மன், மற்றும் நொண்டிச்சாமி ஆகிய கோயில்கள் பறையர்களின் குலதெய்வமாக இருந்திருக்கலாம் என்றும். பின்னர் இத்தெய்வத்தின் சீற்றத்தைப்போக்க அவ்வூர் மக்கள் ஏறுதழுவுதல் நடத்தி ஊர்ப்பொதுத் தெய்வமாக ஏற்றுக்கொண்டிருக்கலாம் என்றும் கருதப்படுகின்றது. இக்கோயில்களில் அருளாடியாகப் பறையர் இனத்தவர்களே உள்ளனர் என்றும் குறிப்பிடத்தக்கது.

**அழகாத்தேவனின் தொன்மக்கதை**

ஏறுதழுவுதல் விளையாட்டின்போது முதலாவதாக சாமிமாடு என்ற ஒன்றை அவிழ்த்துவிடுவது வழக்கம். குறிப்பாக மதுரை மாவட்டம் அலங்காநல்லூர், பாலமேடு, அவனியாபுரம் போன்ற பகுதிகளில் ஆண்டாண்டு கால மரபாகவும் இன்றளவிலும் நடைபெறுகிறது. அந்த மாடானது மாவீரன் அழகாத்தேவனின் நினைவாகவே அவிழ்த்துவிடப்படுகிறது, தற்போதய அலங்காநல்லூர் ஏறுதழுவுதல் போன்று 400 ஆண்டுகள் முன்பு மிகவும் புகழ்பெற்று விளங்கிய ஊர் விக்கிரமகுளம்தான்.

மதுரை மாவட்டத்தில் சொரிக்கம்பட்டியை சேர்ந்தவர் கருத்தமாயன் நிலப்புலன்களோடு வாழ்ந்த செல்வந்தன். அவரது கடைசி மகன் அழகாத்தேவன் ஆவார். அழகாத்தேவன் மிகவும் வீரமிக்க இளைஞனாகக் காணப்பட்டாலும் பொறுப்பில்லாமல் தனது நண்பன் தோட்டிமாயாண்டியோடு மாடுபிடித்தல் மற்றும் சேவல் சண்டையில் கலந்து கொள்வது என ஊர் சுற்றி வருகிறான், இதனால் அழகாத்தேவனுக்குத் திருமணம் செய்து வைத்தால் பொறுப்புடன் நடந்துகொள்வான் என எண்ணிய தந்தை மாயன் அழகாத்தேவனுக்கு பெண்பார்க்கத் தொடங்குகிறார், அப்போது நாக மலைக்கு அருகே உள்ள

கீழக்குடியில் வாழ்ந்துவரும் கருத்த மலையனின் மகளான ஒய்யாமாள் குறித்து அறிந்து தன் செல்வாக்குக்கு சமமாக இல்லையெனினும் கருத்த மலையன் வீட்டிற்கு பெண் பார்க்கச் செல்கிறார்.

ஒய்யம்மாளுக்கு அழகாத்தேவனை பிடித்து போனாலும் தான் வளர்த்து வரும் ஏழு காளைகளை அழகாத்தேவன் அடக்கினால் திருமணத்திற்கு ஒத்துக் கொள்வதாகவும் ஒருவேளை தோற்றால் தனது வீட்டில் பண்ணை அடிமையாக அழகாத்தேவன் வேலை பர்க்க வேண்டும். என்ற நிபந்தனை விதித்தனர். அழகாத்தேவனும் அந்த சவாலை ஏற்றுக்கொண்டான். காளையை அடக்குவதற்கான நாள் குறிக்கப்பட்டது. அழகாத்தேவனோ தன் நண்பன் தோட்டி மாயாண்டியோடு இணைந்து கடும் பயிற்சி மேற்கொள்கிறான். அந்த நாளும் வருகிறது, இரண்டு ஊர் பொதுமக்களும், பக்கத்து ஊர் பொதுமக்களும் கூடிநிற்க அழகாத்தேவன் வாடிவாசல் அருகே ஒய்யாம்மாள் வளர்த்த காளைகளை ஒவ்வொன்றாக எதிர்கொள்கிறான்.

அனைத்துக் காளைகளையும் மிகத்திறமையாக வீழ்த்திய அழகாத்தேவன் ஏழாவது காளையோடு மல்லுக்கட்டுகிறான். கடுமையான போராட்டத்திற்கு இடையில் அக்காளையானது அழகாத்தேவனின் வயிற்றை பதம்பார்த்தது, அழகாத்தேவனோ தனது குடற் சரிந்த நிலையிலும் போராடி அந்தக் காளையை அடக்கி விடுகிறான். உயிருக்கு ஆபத்தான நிலையில் அழகாத்தேவனை அழைத்துச் செல்கின்றனர், ஆனாலும் வாக்கு கொடுத்த காரணத்திற்காக கருத்த மலையன் பெண் கொடுக்க சம்மதம் தெரிவிக்கிறார்.

இருப்பினும் ஒய்யாம்மாளின் சகோதரர்கள் ஏறுதழுவுதலில் பெயர் பெற்ற தங்கள் காளைகளை அடக்கிவிட்டானே! என்ற பொறாமையின் உச்சத்தின்

விளைவாக, அழகாத்தேவனை கொல்ல சூழ்ச்சி செய்கின்றனர். அழகாத்தேவனுக்கு மருத்துவம் பார்த்த பெண்ணின் மூலம் அவனது உடம்பில் கொஞ்சம் கொஞ்சமாக விஷம் ஏற்றி கொலை செய்துவிடுகின்றனர்.

இச்செய்தி ஒய்யம்மாளுக்கு தெரிய வரும்போது மிகுந்த துயரத்தால் அழகாத்தேவனோடு உடன்கட்டை ஏறி தனது உயிரை மாய்த்துக்கொள்கிறாள். அழகாத்தேவனின் நினைவாக அவனது பரம்பரையில் வந்தோர் மதுரை மாவட்டம் செக்காணூரனிக்கு அருகில் உள்ள சொரிக்கம்பட்டியில் அழகாத்தேவனுக்கு கோவில்கட்டி வணங்கி வருகின்றனர்.

அக்கோயில் கருவறையில் காளையோடு அழகாத்தேவன் நிற்க அக்கோயிலின் வெளியே அமைக்கப்பட்ட நினைவு வளைவில் நண்பன் தோட்டிமாயாண்டிக்கும் சிலை எழுப்பியுள்ளனர். கீழக்குடியில் குடிகாரரிடம் சொரிக்கம்பட்டிக்காரர்கள் மண உறவோ கொடுக்கல், வாங்கலோ இப்போதும் வைத்துக் கொள்வதில்லை என்கின்றனர் . இம்மரபானது காலம் காலமாகத் தொடர்கிறது. இக்கதை நடந்ததற்கு தொல்லியல் சான்றுகள் இல்லை. இக்கதை போன்று அழகாத்தேவன் ஏழு காளைகளை அடக்கியது பற்றி இன்னும் சில கதைகளும் அவ்வூர் மக்களிடையே வழங்கப்பட்டு வருகின்றன. இத்தொன்மக்கதையை அப்பகுதி மக்கள் முழுமையாக நம்புகின்றனர். அழகாத்தேவனைக் கடவுளாகவும் அம்மக்களின் குலக்குறியாகவும் இன்றுவரை வழிபட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**கருப்பத்தேவன்**

கன்னிவாடி ஜமீந்தார் தான் வளர்த்த ஏழு காளையை அடக்கிய மாடுபிடி வீரனுக்கு தனது நாடு நகரத்தின் சரிபாதியை தந்து விடுகிறேன் என்ற அறிவிப்பு

விடுகிறார். அதைக் கேட்ட கருப்பத்தேவன் நாடு நகர்க்கு பதிலாக ஜமீந்தாரின் இளைய மனைவியைப் பரிசாக கேட்டான் அதற்கு ஜமீந்தாரும் ஒப்புக்கொண்டார், ஏறுதழுவும் நாளில் ஜமீந்தாரின் வீரமிகு காளையை கருப்பா தேவன் மிகுந்த காயம் பட்ட நிலையிலும் அடக்கி விடுகிறான். ஜமீந்தாரின் இளைய மனைவியை வீட்டுக்கு அழைத்துச் செல்கிறான். பின்னர் சிறிது காலத்திற்கு பின்னர் அவன் இறந்தும் விடுகிறான். அவனது சகோதர்கள் அவனுக்கு சிலையெடுத்து பொங்கலிட்டு அவனை வணங்கி வழிபட்டு வருகின்றனர்.

**மன்னன் சின்னாண்டி**

மன்னன் சின்னாண்டி முத்துமாயன் என்பவனால் கொலை செய்யப்படுகிறார், முத்துமாயன் என்பன் மன்னன் சின்னாண்டியின் மனைவி பிச்சையம்மாளின் சகோதரன் ஆவான். சின்னாண்டி இறப்பைக் கேட்ட அவரது மனைவியும் இறக்கிறாள். இவர்களுக்கு மூன்று பிள்ளைகள் அதில் மூத்தவள் கருத்தவர்ணம், அடுத்ததாக இரட்டையர்களாக சாத்திரவாளியும், படைக்கஞ்சாச் சின்னானும் காணப்பட்டனர். இதில் தன் தாய் தந்தையின் இறப்பிற்கு காரணமான தனது மாமனை தனது தம்பிகள் மூலம் பழிவாங்கத் துடிக்கிறாள் கருத்தவர்ணம். அவளது மாமன் மாயனோ படைக்கஞ்சாச் சின்னானிடம் தான் நடத்தும் ஏறுதழுவலில் வெற்றி பெறாவிட்டால் கருத்தவர்ணத்தை சிறைபிடிப்பதாகக் கூறி எச்சரித்தான். சாத்திரவாளியோ இப்போது தமக்கு நேரம் சரியில்லை எனவும் ஏறுதலுவலில் கலந்து கொண்டால் நமக்கு தீங்கு நேரிடும் எனவே இதில் கலந்து கொள்ள வேண்டாம் என்கிறான். ஆனால் படைக்கஞ்சாச் சின்னானோ அவ் ஏறுதழுவல் போட்டியில் கலந்து கொண்டு வெற்றி

பெற்றதோடு இறந்தும் விடுகிறான். பின்னர் சாத்திரவாளியே தனது மாமனைக் கொன்று பழியைத் தீர்க்கிறான்.

**நம்பிக்கைகள்**

நம்பிக்கைகள் மனித மனங்களில் வேரூன்றி காணப்படுகின்றன. இவை காரண காரியத்திற்கு இடம் கொடுக்காமல் தொன்று தொட்டே பின்பற்றப்பட்டு வருவதோடு, மரபின் முத்திரையாக ஒரு தலைமுறையினரிடம் இருந்து அடுத்த தலைமுறையினருக்கு வழங்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் ஏறுதழுவலில் மூங்கில் சார்ந்த சில நம்பிக்கைகள் நிலை பெற்றுள்ளன.

> *"மூங்கிலடி மூடதிலே முளைத்தெழுந்த தானுலிங்கம் யெங்க*
> *யெல்லாம் னாநலைந்தேன் யென்னுடைய பெருமானே ஆண்மதலை*
> *தாருமய்யா அச்சதரே பச்சமாலே"*

என்று 'வன்னியடி மறவன் கதை' என்னும் நாட்டுப்புற பாடல் தெய்வம் தோன்றிய சூழலை விளக்குகின்றது, இப்பாடலில் தெய்வங்கள் மூங்கில் தூரில் தோன்றுகின்றன. என்றும் திருமாலின் நிறம் பச்சை என்றும் குறிப்பிடப்படுகின்றது, நாட்டுப்புற மக்கள் தாங்கள் வழிபடும் ஊர் தெய்வங்களும் மூங்கில் தூரில் பிறந்தன எனவும் நம்பியிருக்கின்றனர், இவ் உண்மைக்காரணம் பின்னாளில் மறைக்கப்பட்டு பச்சை மூங்கில் தெய்வங்களுக்கு உகந்தது என ஏறுதழுவல் நடத்தப்படும் சில ஊர்களிலுள்ள மக்கள் சொல்லி வருகின்றனர்.

பச்சை மூங்கில் கம்புகளின் நுனிகள் ஒன்றோடு ஒன்று ஒட்டுவது ஏறுதழுவுதல் நடத்துவதற்கு ஊர்த்தெய்வம் ஊர்மக்களுக்கு உத்தரவு கொடுத்துள்ளது என அவ்வூர் மக்கள் நம்புகின்றனர். இந்நம்பிக்கை அவ்வூர்

மக்களின் மரபுவழிபட்ட நம்பிக்கையாகக் காணப்படுகின்றது. மேலும் காமாட்சியம்மன் பிறந்தது மூங்கில்காடு என்பதால் , ஊர் தெய்வ வழிபாட்டில் பச்சை மூங்கில் கம்புகளைத் தூக்கிக்கொண்டு செல்வது ஊர் தெய்வத்தை தூக்கிச்செல்வதற்குச் சமம் என விழாக் குழுவினரும் ஊர்மக்களும் நம்புகின்றனர். தமிழகத்தில் மதுரையில் விக்கிரமங்கலம், திருமங்கலத்தில் நடுவக்கோட்டை, உசிலம்பட்டியில் ஏழுமலையிலும் செக்கானூரணியில் கிழப்பட்டி போன்ற இடங்களில் பெருவாரியாக இப்பச்சை மூங்கில் நம்பிக்கை காணப்படுகிறது.

ஏறுதழுவுதல் விழாவில் மாடுபிடிவீரன் ஏறுதழுவும் காளையால் காயம்பட்டு இறந்து விடுவதற்கு அதிக வாய்ப்பிருக்கின்றது. இவ்வாறு மாடுபிடி வீரன் இறந்து கொண்டிருந்தால் படிப்படியாக மனித இனம் முழுவதும் அழிந்துவிடுமோ என்ற சிந்தனை நாட்டுப்புறமக்களுக்குத் தோன்றிய சமயத்தில் வெட்டவெட்டத் தளிர்க்கும் மூங்கிலைப் போன்று மனித இனமும் ஒருவன் மறைவிற்குப் பின் இன்னொருவன் தோன்றுவான் என்ற நம்பிக்கையில் நாட்டுப்புறமக்கள் பச்சை மூங்கிலை மங்கலப்பொருளாகக் கருதி ஏறுதழுவல் விழாவில் வளமை நோக்கில் பயன்படுத்துகின்றனர்.

போட்டியில் கலந்து கொள்ளும் வீரர்கள் முதலில் ஏறுதழுவல் நடைபெறும் ஊரிலுள்ள தெய்வங்களை வணங்கிவிட்ட பின்னரே ஏறுதழுவலில் கலந்து கொள்ளும் ஏறுகளை தழுவுகின்றனர். இம் மரபானது முல்லைக்கலியில் இடம்பெற்றுள்ள ஏறுதழுவலிலும் காணப்படுகின்றது..

மாடுபிடிவீரர்கள் ஏறுதழுவும் தெய்வத்தினை வணங்கியதோடு அத்தெய்வத்தின் பூசாரியிடம் திருநீறு வாங்கிப்பூசிக் கொள்கின்றனர். இதன் பின்னரே மாடுபிடிவீரர்கள் ஏறுதழுவும் போட்டிகளில் கலந்து கொள்ளும் காளைகளை தழுவும் மரபு தற்போதும் காணப்படுகின்றது. இவ்வாறு இறைவனை

வணங்கி ஏறுதழுவலில் ஏறுகளைத் தழுவினால் ஏறுகளால் தங்களுக்குக் தீங்கு நேராது என மாடுபிடி வீரர்கள் நம்புகின்றனர்.

ஏறுதழுவுதலானது எந்தத்தெய்வத்திற்காக நடைபெறுகின்றதோ அத்தெய்வத்தின் காளையாக வளர்க்கப்பட்ட ஏற்றினை ஏறுதழுவுதலின் போது முதல் காளையாக அவ்விழாக் குழுவினர் அவிழ்த்து விடுவது வழக்கம். அம்மாட்டினை சாமி மாடு அல்லது கோவில் மாடு என்பர். இவ்வேற்றினை மாடுபிடிவீரர்கள் தழுவமாட்டார்கள். ஏனெனில் தெய்வத்திற்காக வளர்க்கப்பட்ட ஏற்றை மாடுபிடிவீரன் அடக்கினால் அத்தெய்வத்தினையே அடக்கி கீழ்படுத்தி வெற்றி கொண்டதற்குச் சமம் என மாடுபிடி வீரர்கள் நம்புகின்றர்.

**பொதுமக்களின் நம்பிக்கைகள்**

ஊர் மக்கள் ஒன்று கூடி ஏறுதழுவல் திருவிழாவினை நடத்தினால் ஊரில் பஞ்சம், காலரா போன்ற தீயவை ஏற்படாது என்ற நம்பிக்கை பொதுமக்களிடம் பரவலாகக் காணப்படுகின்றது.

**முத்துக்குடை**

பல வண்ண பாசிகளினாலும், துணிகளாலும் அலங்காரம் செய்யப்பட்ட குடைகளை தெய்வதிற்கு காணிக்கை செலுத்தினால் தங்களுக்கு ஏற்பட்ட துன்பங்கள் தீரும் எனப் பொதுமக்கள் நம்புகின்றனர். ஏறுதழுவல் நடத்தப்படும் ஊர் தெய்வங்களுக்கு அவ்வூர் மக்கள் மற்றும் அவ்வூரைச்சுற்றியுள்ள மக்கள் ஏதாவது ஒரு வேண்டுதலின் பேரில் காணிக்கையாக்கி வழிபட்டு வருகின்றனர். கரடிக்கல், கீழப்பட்டி ஆகிய ஊர்களில் வசிக்கும் மக்களிடையே இன்றும் இம்முறை பின்பற்றப்பட்டு வருகிறது.

**கனி சூறையிடுதல்**

ஏறுதழுவல் விழா தொடங்கும் முன்னர் ஒரு சிலர் தங்களின் வேண்டுதலுக்காக வாழைப்பழத்தை மக்கள் நிறைந்த கூட்டத்திற்குள் எறிகின்றனர். இதனைக் ‘கனி சூறையிடுதல்’ என்று அழைக்கின்றனர். இவ்வாறு செய்யவில்லையெனில் தங்களின் வேண்டுதலை நிறைவேற்றிய தெய்வம் கோபமுற்று தங்களின் குடும்பத்தினருக்கு பலவித இன்னல்கள் உண்டாக்கும் என மக்கள் நம்புகின்றனர்.

**சேத்தாண்டி வேசம்**

சேத்தாண்டி வேசம் என்னும் நேர்த்திக்கடன் பெரும்பாலும் ‘மாரியம்மன்’ திருவிழாவிலேயே இடம் பெறுகின்றது. இடுப்பில் ஒரு துண்டை மட்டும் கட்டிக்கொண்டு சேற்று மண்ணை உடல் முழுவதும் பூசிக்கொண்டு இறைவனை வழிபடுவதை நாட்டுப்புற மக்கள் வழக்கமாகக் கொண்டுள்ளனர். இதனை சேத்தாண்டி வேசம் என்று அழைக்கப்படுகின்றனர். ‘கரடிக்கல்’ என்னும் ஊரில் பெருமாள்சாமிக்கு ஊர்மக்கள் ஏறு தழுவுதல் நடத்தும் நாளில் ஒருவர் ஏதாவது ஒரு வேண்டுதலின் பேரில் சேத்தாண்டி வேசம் போடப்பட்டு வழிபடுவதை பின்பற்றி வருகின்றனர்.

**குழந்தைப்பேறு**

ஊர்த்தெய்வத்திற்கு ஏறுதழுவும் விழா நடத்தினால் குழந்தைப்பேறு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் ஏறுதழுவலும் திருவிழா நடைபெற்றுள்ளது. ஊமச்சிகுளம்’ என்னும் ஊருக்கு அருகிலுள்ள சிச்சிலுப்பை’ என்னும் ஊரில் வசிக்கும் தவசி என்பவருக்குத் திருமணம் ஆகி பல ஆண்டுகள் கழிந்தும் குழந்தை பிறக்கவில்லை. தவசி என்பவர் குழந்தைப்பேறு வேண்டி தன்னுடைய ஊரிலுள்ள

முனியாண்டிசாமிக்கு ஆட்டுக்கடாய் வெட்டிப் பொங்கல் வைத்து வழிபாடு செய்துஏறுதழுவல் விழா எடுத்துள்ளார். 'தவசி' என்பவரின் வேண்டுதலின்படி அவர் மனைவி கருவுற்றாள். தன் மனைவியின் வயிற்றிலுள்ள கருவானது ஆண் குழந்தையாகப் பிறக்கவேண்டும் என வேண்டிக் கொண்டு தவசி என்பவர் முனியாண்டிசாமிக்கு மீண்டும் ஒரு முறை ஏறுதழுவல் நிகழ்வை நடத்தியுள்ளார். அவரின் வேண்டுதலின்படி அவர் மனைவிக்கு ஆண் குழந்தை பிறந்தது. முனியாண்டிசாமிக்கு ஏறுதழுவல் விழாவை நடத்தியதினால் தவசிக்கு ஆண் வாரிசு பிறந்தது என அவ்வூர் மக்களும் நம்புகின்றனர்.

**காளைகளுக்கு கோவில் அமைத்து வழிபடல்**

“சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரிக்கு அருகிலுள்ள முறையூரில் கருப்புச்சாமி கோயில் உள்ளது, அக்கோயிலுக்கு நேர்ந்துவிடப்பட்ட காளைக்கு சிலை எடுக்கப்பட்டுள்ளது. இக்காளையின் சிலையானது சிங்கம்புணரியிலிருந்து திருப்பத்தூர் செல்லும் சாலையிலுள்ள மு.கோவில்பட்டி என்னும் ஊரில் அமைந்துள்ளது. கருப்புச்சாமிக்காக நேர்ந்துவிடப்பட்ட காளை ஏறுதழுவலில் கலந்துகொண்டு மாடுபிடிவீரர்களைக் குத்தித்தள்ளி வெற்றிபெற்று வந்துள்ளது. இக்காளையானது தன் மரணம் வரை ஏறுதழுவலில் மாடுபிடி வீரர்களிடம் பிடிபடாமல் வெற்றி பெற்று இறந்ததனால் இதற்கு மு.கோவில்பட்டி ஊர் மக்கள் சிலை செய்து வைத்து வணங்கி வருகின்றனர்.

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் வட்டத்தில் ஆ.தெக்கூர் என்னும் ஊரில் பச்சை மூங்கிலுடைய அய்யனார் கோயில் உள்ளது. இவ்வூர் மக்கள் அக்கோயிலுக்கு காளை ஒன்றை நேர்ந்துவிட்டுள்ளனர். இக்காளை இவ்வூர்

மக்களால் ‘குடக்குத்திக்காளை’ என்று அழைக்கப்பட்டு வந்துள்ளது. அக்காளையானது ஏறுதழுவல் போட்டிகளில் மாடுபிடி வீரர்களால் பிடிபடாமல் பல வீரர்களை குத்தி அவர்களது குடலை வெளியேற்றுவதாக காணப்பட்டது. இச்செயலின் காரணமாகவே அக்காளை அவ்வாறு அழைக்கப்பட்டது. அக்குடக்குத்திக்காளை வயதாகி இறந்தவுடன் ஆ.தெக்கூர் மக்கள் அதற்கு கல்லில் சிலை செய்து அதனை வணங்கி வழிபட்டு வருகின்றனர்.

பச்சை மூங்கிலுடைய அய்யனார்க்கு குதிரையெடுப்புவிழா நடைபெறும் வேளைகளில் ஊர் மக்கள் குடக்குத்திக் காளைக்கு மாலை, மற்றும் துண்டுகளை , அணிவித்துச் சாம்பிராணி போட்டு வணங்குகின்றனர். குடக்குத்திக்காளையை வணங்கி வழிபடுவதினால் தங்களின் அல்லல்கள் நீங்கிவிடும் என ஆ.தெக்கூர் மக்கள் நம்புகின்றனர்.

காளைகளுக்குச் சிலை எடுத்து வணங்கி வழிபடுவதன் வாயிலாக அக்காளைகளுக்கு கிடைத்த வெற்றியினைப் போன்று தங்களின் செயல்களும் எண்ணங்களும் வெற்றிபெறும் என்று அவ்வூர் மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

இவ்வாறு ஏறுதழுவுதல் நிகழ்வில் சிறந்து விளங்கிய வீரர்களுக்கு சிலை எடுத்து வணங்குவது போன்று, சிறந்த காளைகளுக்கு சிலை எடுத்து வழிபடுவதும் தமிழகத்தில் பரவலாக காண்படுகின்றது.

**மாடுகளின் சுழி**

மாடுகள் சார்ந்த நம்பிகைகளில் மாடுகளின் சுழி மிக இன்றியமையாததாகக் கருதப்படுகிறது. மாடுகளின் சுழியால் மனிதர் நன்மை தீமை அடைவர் என்ற நம்பிக்கை பரவலாகக் காணப்படுகிறது. மாடுகளை புதிதாக வாங்குகையில் மாட்டின் சுழிபார்ப்பது மிகவும் முக்கியமான ஒன்றாகக் காணப்படுகிறது. இச்சுழிகளைப்பற்றி அறிவியல் ரீதியாக ஆய்வு செய்யப்படவில்லை என்றாலும். நம் முன்னோர்களின் நம்பிக்கையின் அடிப்படையில் இன்றுவரை பின்பற்றி வருகின்றனர். பிறப்பில் மாடுகளுக்கு சுழி குற்றமன்று ஆனால் நல்ல சுழியுடைய மாடுகளை கவனமாக வாங்குவது நன்று. மாடுகளுக்கென நன்மை பயக்கும் சுழி மற்றும் தீமை பயக்கும் சுழி என இரண்டுவிதமான சுழிகள் காணப்படுகின்றன. கள்ள மாடு சந்தையில் ஏறாது என்பது வழக்கம், ஆனால் சில மனிதர்கள் நினைத்தால் அதுவும் நடக்கும். தீமைச் சுழி கொண்ட மாட்டையும் சிலர் தீயினால் சுட்டு அச்சுழி தெரியாத வண்ணம் அவற்றை விற்றுவிடுவர் என்கிறார். திருப்பூர் மாவட்டம் காங்கேயம் வட்டம் முத்தூர் பகுதியைச் சேர்ந்த கார் வேந்தரிடம் கள ஆய்வில் பெறப்பட்ட 39 சுழிகளின் தகவல்கள் பின்வருமாறு.

**நன்மை பயக்கும் சுழிகள்**

மாடு சுழி சுத்தமானதா என பார்ப்பது வழக்கமான ஒன்றாகும். மாட்டின் சுழி மனிதனின் வாழ்வை மாற்றும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில்தான் இதனை பார்க்கின்றனர்.

**ஏறு நாக சுழி**

ஏறுநாகசுழி கொண்ட மாட்டினை வாங்குபவர்களுக்கு மங்கலம் உண்டாகும், இச்சுழி மிகவும் நல்லது. மாட்டினது வால்பக்கமாக முதுகு நோக்கி தொடர்ந்து செல்லும் சுழி ஏறு நாக சுழி என்று பெயர்.

**லட்சுமி சுழி**

லட்சுமி சுழியானது மாடுகளுக்கு இருப்பது அரிது. இந்த சுழி கொண்ட மாடுகளை வாங்குபவர்க்கு செல்வம் பெருகும் கழுத்தின் ஒரு பக்கத்தில் ஒருபக்கம் சற்று தள்ளி காணப்படும்.

**ஏறுபூரான் சுழி**

ஏறுபூரான் சுழி கொண்ட மாட்டினை வாங்குவதால் செல்வம் பெருகுவதோடு, எதிர்பாராத நன்மையும் உண்டாகும் என்று கூறுகின்றார், இச்சுழியானது மாடுகளுக்கு முதுகின் மையப்பகுதியில் பூரான் வடிவில் முடியில் பிளவுகள் காணப்படுவதோடு முன்பக்கமாக வந்து முடிந்தும் காட்சியளிக்கும் ,

**கோபுரச்சுழி**

கோபுரச்சுழியை பட்டிச் சுழி, ஏறுசுழி, இடப்பக்கச்சுழி என்றும் அழைப்பர். இச்சுழியுடைய மாட்டினை வாங்குபவர்களுக்கு மிகுந்த செல்வமும், ராசபோகமும் கிடைக்கும், காளையின் திமிலின் முன் புறமும், திமிலும், முதுகும் சேருமிடத்திலும், திமிலின் மேற்புறமாகவும் இச்சுழிகள் காணப்படும்.

**விபூதிச் சுழி**

விபூதிச் சுழியை இடுக்கண் சுழி என்றும் அழைப்பர். இச்சுழியானது மாட்டின் நெற்றியில் புருவத்திற்கு கீழ் இரு கண்களுக்கு நடுவில் காணப்படும். இம்மாட்டினை வாங்கிச் செல்பவர்க்கு நன்மைகள் பலவும் சுகமும் உண்டாகும், என்று நம்புகின்றார்.

**விரி சுழி**

விரி சுழியானது மாட்டின் முதுகுதண்டின் இடப்பக்கம் மட்டும் காணப்படும், இச்சுழி கொண்ட மாட்டினை வாங்குபவர்களுக்கு நன்மைகள் உண்டாகும்.

**கொம்புதானாச் சுழி**

கொம்புதானாச் சுழி கொண்ட மாட்டினை வாங்குவதால் மாடுகள் சுகமாக இருக்கும். அத்தோடு மாடுகளை நிறைய கொண்டு சேர்க்கும் என்கின்றனர். மாட்டின் கொம்பின் கீழ் காணப்படும் சுழியானதால் இச்சுழி இப்பெயர் பெற்றுள்ளது.

**இரட்டைக் கவர்ச் சுழி**

இரட்டைக்கவர் சுழி என்பது மாட்டினது முன்னங்கால்களின் இரு புறமும் இரண்டு பிளவுபோல் அமைந்திருக்கும் சுழியாகும். இச்சுழி கொண்ட மாட்டை வாங்குபவர்களுக்கு நன்மை உண்டாகும்.

**தாமணிச் சுழி**

மாட்டினைக் கட்டும் கயிற்றுக்கு தாமணி என்று பெயர், இவை மாட்டின் முன்னம் கால்களில் இருக்கலாம். மேலும் கழுத்துக்கு இடையிலும், அலை தாடையின் இரு பக்கங்களிலும் இருக்கலாம். மாட்டின் முதுகுத்தண்டில் நீளமாக

ஒரு கோடும். அக்கோட்டின் இரு பக்கங்களிலும் இரண்டு சுழிகள் காணப்படுமாயின் அவை தாமணிச் சுழி எனப்படும். இச்சுழியைக் கொண்ட மாடுகளை வாங்குபவர்க்கு ஏராளமான மாடுகளை வாங்கும் பாக்கியத்தைப் பெறுவர்.

**பால்மறைச்சுழி அல்லது தொழுமறைச்சுழி**

பால்மறைச் சுழியானது மாடுகளின் உடல் முழுவதும் பல இடங்களில் வட்ட வடிவிலாக பல காணப்படும். இதனால் பாதகமில்லை. என்று கூறுகிறார்.

**பாசாங்கச்சுழி**

மாட்டை வாங்குவோருக்கு நன்மை உண்டாக்கும் சுழி பாசாங்கச்சுழி ஆகும் இச்சுழியானது மாட்டின் கழுத்தின் ஒரு பக்கம் அல்லது இரண்டு பக்கம் காட்சியளிக்கும்.

**புதிச்சுழி**

புதிச்சுழியானது மாட்டின் நெற்றிப் பகுதியில் நாமம் போன்று பட்டையாக அமைந்திருக்கும். இச்சுழி கொண்ட மாட்டைக் கொண்டவர்க்கு விரைவில் திருமணம் உண்டாகும் என்று நம்புகின்றார்.

**பின்பட்டைச்சுழி**

பின்பட்டைச் இச்சுழி கொண்ட மாடு பார்ப்பதற்கு லட்சுமிகரமாக தோற்றமளிக்கும். இச்சுழியானது மாட்டின் முதுகுக்குப் பின்னே ஒரு பட்டைச் சுழியாக இருக்கும். இச்சுழி உடைய மாடானது பல நன்மைகள் தரும்.

**பிள்ளையார் சுழி**

பிள்ளையார்சுழியினை பட்டைச்சுழி, ராகச்சுழி என்றும் அழைப்பர், இச்சுழி கொண்டவர்க்கு நல்ல யோகம் உண்டாகும். இவை மாட்டின் திமில் முதல்

வால்வரை ஒரு கோடு காணப்படும். இதற்குப்பின் ஒரு சானுக்கு அப்பால் ஒரு சுழி கனத்து காணப்படும்.

**தாரைச்சுழி**

மூத்திர தாரைக்கு எதிராக அடிவயிற்றில் அமைந்து காணப்படும், சுழியாகும். இச்சுழி கொண்டவரின் குடும்பம் முன்னுக்கு வர வாய்ப்புள்ளது.

***தீமைச் சுழிகள்***

மாட்டு இனங்களில் சில மாடுகளில் தீமை தரும் சுழிகளும் காணப்படும், இச்சுழிகளைக் கொண்ட மாடுகள் மனிதர்களுக்கு கேடு விளைவிக்கும் என்ற நம்பிக்கை காணப்படுகிறது.

**கருநாகச்சுழி**

கருநாகச்சுழி கொண்ட மாட்டினை வாங்குவோர்க்கு கொடிய துன்பம் உண்டாகும். இவை மாட்டின் கழுத்தில் கட்டப்படும் கயிறைப் போன்று காணப்படும்.

**வால் முடங்கிச்சுழி**

வால் முடங்கிச்சுழி கொண்ட மாடு குடும்பத்தையே அழிக்கும். வாலின் உட்புறமாக காணப்படும் ஒற்றைச்சுழி வால் முடங்கிச் சுழி எனப்படும்.

**நாகப்படச்சுழி**

மாட்டின் துடைகளின் நாகபாம்பு படம் எடுத்தது போல் காணப்படும். இச்சுழி கொண்ட மாடுகள் துன்பத்தை தருபவையாகும். இவை இரண்டு வகைப்படும். இவை இரண்டு வகையாக காட்சியளிக்கும். இச்சுழி மேல்நோக்கி

காணப்பட்டால் முன் நாகச் சுழி எனவும். பின்னோக்கி இருந்தால் பின் நாகச் சுழி எனவும் அழைக்கப்படும்.

**இறங்கு நாகச்சுழி**

இறங்கு நாகச்சுழி கொண்ட மாட்டினை வாங்குவோர் தன் செல்வத்தை இழக்க நேரிடும். தன் குடி அழியும் மாட்டினது வாலின் மீது காணப்படும் சுழி கீழ்ப்புற தரையை நோக்கி காட்சி தரும்.

**இறங்கு பூரான் சுழி**

இறங்கு பூரான் சுழி கொண்ட மாட்டினை வாங்குபவன் தரித்திரன் ஆவான். இச்சுழி பூரான் போன்று காணப்படும். இச்சுழி மாட்டின் முதுகின் மத்திய பகுதியில் தொடங்கி வால் பகுதியில் முடிவடையும்.

**துடைப்பச்சுழி**

துடைப்பச்சுழி பெற்ற மாடு மிகவும் கொடியது, இவை வாங்குவோரின் குடும்பத்தை அடியோடு அழித்துவிடும், என்கிறார். மாட்டின் வால் துவங்கும் இடத்தின் உட்புறமாக இச்சுழி காணப்படும்.

**எச்சுப்புள்ளி**

மாட்டின் மலதுவாரத்திற்கும் வால் துவங்கும் இடத்திற்கும் இடையில் காணப்படும் வெள்ளைப்புள்ளி எச்சுப்புள்ளி எனப்படும். இச்சுழி கொண்ட மாட்டினால் வாங்குவோரின் குடி கெடும், பல நோய்களால் அல்லல் படுவர்.

**தட்டுச்சுழி**

மாட்டின் முதுகில் இடுப்பானது சேரும் இடத்தில் இச்சுழி காணப்படும். இச்சுழியுடைய மாட்டினை வாங்குவோரின் செல்வம் அழிந்து பணத்தட்டுப்பாடு உருவாகும்.

**புட்டாணிச்சுழி**

புட்டாணிச் சுழி அல்லது விறிகட்டுச் சுழி என்றும் இச்சுழி அழைக்கப்படும். இச்சுழியானது மாட்டின் இடுப்பிற்கும் வால் பகுதி துவங்கும் இடத்திற்கிடையில் இவை காணப்படும்.

**பெண்டிழந்தான் சுழி**

மாட்டின் மலதுவாரத்திற்கும். வாலின் பின் பக்கத்திற்கும் இடையே ஒன்று இரண்டு சுழிகள் காணப்படும் இச்சுழியைப் பெண்டிழந்தான் சுழி என்பர். இச்சுழியுடைய மாடானது வாங்குவோரின் மனைவியைக் கொல்லும்.

**பாடைச்சுழி**

பாடைச்சுழிமிகவும் கெட்டச் சுழி இதனை வாங்குவோர் இறக்க நேரிடும். இவை மாட்டின் முதுகுத்தண்டின் வலது புறமோ அல்லது வாலின் முன்புறம் அல்லது பின் புறம் காணப்படுவது பாடைச் சுழியாகும்.

**கணுக்கால் விலங்குச்சுழி**

மாட்டுக்கால்களின் கணுக்கால்களின் அடிப்பகுதியில் ஒரு சுழி காணப்படுவதை கணுக்கால் விலக்குச்சுழி என்பர் இம்மாட்டினை வாங்கி வளர்ப்போருக்கு பல ஆபத்து உருவாகும் வாய்ப்பு உள்ளது என்கிறார்.

**பாண்டவச்சுழி**

பாண்டவச்சுழிகொண்ட மாட்டினை வாங்குவோருக்கு தரித்திரம் பிடித்தவர்களாவார்கள். இச்சுழியானது மாட்டின் நெற்றிக்கு மேல் நான்கு சுழி காணப்படும். இவை நான்கு சுழிகளுக்கு மேலாக ஐந்தாக காட்சியளித்தால் அவை நன்மை உண்டாக்கும் என்று கருதப்படுகிறது.

**ஆள்பார்த்த பூரான்சுழி**

ஆள்பார்த்த பூரான்சுழி இதனை உழவனைப் பார்த்த பூரான்சுழி எனவும் அழைப்பர். இச்சுழியானது மாட்டின் முதுகுபட்டைச் சரிவில் இருந்து சரிந்து வால்புறத்தை நோக்கி நீண்டு இருக்கும். இச்சுழி மகாக்கொடியதாக எண்ணப்படுகிறது.

**பூவால்சுழி**

மாட்டின் உடல் முழுவதும் சுழியின்றி வாலின் நுனி ரோமங்கள் மாத்திரம் வெண்மையாக இருக்கும். இதனை வெடிவால் சுழி எனவும் அழைப்பர். இச்சுழிகொண்ட மாட்டினை உடையவர் தானம் தந்தவராயினும் தரித்திரம் உடையவராக மாறுவர்.

**இடிமேலிடிச்சுழி**

இடிமேலிடிச் சுழி மாட்டைக் கொண்டவர்க்கு பல தொல்லைகள் நிகழும். இச்சுழியானது மாட்டின் நெற்றியின் மேல் நோக்கி ஏற்றக்குறைவுடனோ அல்லது நெடுகாக ஒன்றுக்கொன்று எதிரிடையாகவோ தடித்தும் சுழித்தும் இருக்கும், சுழியாகும்.

**ஏறாச்சுழி**

மாட்டின் தாழ்வாய் தாடையின் அடிப்பாகத்தில் இச்சுழி காணப்படும். இச்சுழி கொண்ட மாட்டின் உரிமையாளர் நோயால் அல்லல்படுவார். என்று நம்பப்படுகிறது.

**தடிமறைச்சுழி;**

மாட்டின் தேகத்தின் மீது பல இடங்களில் தழும்புகள் இருக்கும். சுழிகளாகவும் இருக்கும் வேலை செய்தால் களைப்பில் படுத்துக்கொள்ளும். இச்சுழி கொண்ட மாடு ஆகாது.

**சுடுகாடு நக்கி**

மாட்டின் நிறத்திற்கு நேர்மாறான நிறத்தில் ஒரு புள்ளி மேல் உதட்டில் காணப்படும். இச்சுழி உடைய மாடு ஆகாது.

**கீழ் தட்டுச்சுழி**

மாட்டின் கீழ் உதட்டின் மேல் ஒரு சுழி இருக்கும். மாட்டின் முகமும் பாழ்பட்டிருக்கும் இதனால் கன்றுகாலிகள் விருத்தி ஆகாது என்பர்.

**முக்கண் சுழி**

மாட்டின் இரு விழிகளுக்கும் நடுவில் அடுப்பு போன்ற மூன்று சுழிகள் முக்கோண வடிவமாக ஒன்றுக்கொன்று எதிராகவோ மேலும் கீழுமாகவோ இருக்கும். இச்சுழி கொண்ட மாட்டை வைத்திருப்போரின் குடும்பம் சதாகாலமும் சஞ்சலத்தை ஏற்படுத்தும்.

**இரண்டு கெட்டான் சுழி**

நீர்ச் சுழி என்று பெயர் இச்சுழி கொண்ட மாட்டினை வாங்குவோரின் குடியானது நன்மைகளால் பெருகும். அல்லது நாசமனாலும் ஆகலாம். இச்சுழியினை நன்மை அல்லது தீமை பயக்கும் சுழி என்று கூறவியலாது. இச்சுழியானது காளை மாடுகளின் மூக்குதுவாரப் பகுதியில் காணப்படும்.

மாடுகள் ஆரோக்கியமானதாக காணப்பட்டாலும் அவைகளின் சுழி சுத்தமாக இருத்தல் அவசியம், அவ்வாறு இல்லையெனில் வாங்குபவரின் நிலை மாறும் என்று நம்பப்படுகிறது, மாட்டினை சுழி பார்த்து வாங்கும் பதிவுகள் பெருமாள் முருகனின் கூளமாதாரி எனும் புதினத்தில் இடம் பெற்றுள்ன. (கூளமாதாரி 2007 பக்-18)

**பழமொழிகள்**

ஒரு சமூகத்தின் வாழ்க்கை நெறி,பண்பாடு, நாகரீகம், பழக்க வழக்கம், நம்பிக்கை, சமுதாய சிக்கல், சிறப்பு, என பலவற்றையும் அறுதியிடும் கருவிகளுள் முன் நிற்பன பழமொழிகள். வாய்மொழி இலக்கியங்களுள் பழமொழியானது ஒன்றன் கருத்தை உணர்த்துதல், அறிவுறுத்துதல், சுருங்கக்கூறி விளங்க வைத்தல், எனும் பழமொழிகளின் அடிப்படைப் பண்புகள் பிறவற்றில் மேற்போக்காக அமைகின்றன. பலரின் அனுபவத்தால் பெற்ற உண்மை விளக்கங்களே பழமொழிகள்.

கால்நடை வழக்காறுகளில் மாடுகள் பற்றிய பழமொழிகள் இனம், மதம், பெண்ணடிமை போன்ற கருத்துக்கள் இடம்பெறுகின்றன அவை.

- ஆடுகிற மாட்டை ஆடிக் கறக்கனும், பாடுகிற மாட்டை பாடி கறக்கனும்.
- மாடு கெட்டால் தேடலாம்,மனிதர் கெட்டால் தேடலாமா.

- மாடு மயங்கி வானம் பார்த்தால் மழை பெய்யும்.
- மாடு மேய்க்காமற் கெட்டது, பயிர் பாக்காமல் கெட்டது.
- நல்ல மாட்டுக்கு ஒரு சூடு.
- அடியாத மாடு படியாது.
- மாடு கிழமானாலும் பாலின் ருசி போகுமா.
- மாடு தின்கிற மாலவாடு, ஆடு தின்கிறது அரிதா.
- மாட்டை புல் உள்ள தலத்திலும் மனிதனை சோறு உள்ள தலத்திலும் இருக்க ஒட்டாது.
- மாடு நினைத்த இடத்தில் தொழுவம் கட்டுவதா.
- மாடு மேய்க்கிற தம்பிக்கு மண்டலமிட்ட பெண்சாதி.
- மேய்க்கிற மாட்டின் கொம்பிலே புல்லை கட்ட வேணுமா.
- பாலைப் பார்த்து பசுவைக் கொள்ளு, தாயைப் பார்த்து பெண்ணைக் கொள்ளு.
- பசு உழுதாலும் பயிரைத் தின்ன வொட்டான். (சம்மதிக்க மாட்டான் என்பது பொருள் )
- பசுத்தோல் போர்த்திய புலி போல.
- பசு மாடு நொண்டியானால், பாலும் நொண்டியா.
- பசுவைக் கொன்று செறுப்பு தானம் செய்தது போல.
- பசுவுக்கு பிரசவ வேதனை, காளைக்கு காம வேதனை.

- பசு விழுந்தது புலிக்கு ஆதாயம்.

மாடு மறுத்தாலும் பால் கறக்கும்.

- இளிச்சவாயனைக் கண்டால் எருதும் மச்சான் முறைக் கொண்டாடும்.
- எருதுக்கு நோய் வந்தால் கொட்டகையை சுடுகிறதா.
- எருது ஏழையானால் (கூடாவிட்டால்) பசு பத்தினித்துவம் கொண்டாடும்.
- வாலில் கயிறைக் கட்டினால் காளை போன வழியே கயிறு போகும்.
- எருது கெட்டார்க்கும் எட்டே நடுகாய், இளம் பிள்ளைத்தாச்சிக்கு எட்டே கடுக்காய்.
- பசு மாடும் எருமை மாடும் ஒன்றாகுமா.
- பசு கருப்பென்று பாலும் கருப்பா.
- மாட்டை மேய்த்தானாம் கோலைப் போட்டானாம்.
- எருதின் நோய் காக்கை அறியுமா.
- எருதும் வண்டியும் ஒத்தால் மேடு பள்ளம் ஏது.
- எருமை மூத்திரம் ஏக்கியத்திற்கு ஆகுமா.
- எருமை மாட்டின் மேல் எத்தனை எத்தனை சூடு இருந்தாலும் தெரியாது, பசு மாட்டின் மேல் ஒரு சூடு இருந்தாலும் தெரியும்.
- எருமை மட்டின் மேல் மழை பெய்தது போல.
- எருவுக்கு போனவன் இளையாளைக் கை பிடித்தது போல.

- மாடுபிடி சண்டைக்கு வலிய வராதே.
- மாடு முக்கிவர வீடு நக்கி வரும்.
- மாட்டின் வாழ்க்கை மூட்டையிலே.
- மாட்டுக்கு பெயர் பெரிய கடா.

**கால்நடைசார் சாதிப் பழமொழிகள்**;

தமிழர்களிடையே காணும் குறிப்பிடத்தக்க பண்பாட்டுக் கூறுகளுள் சாதிப்பிரிவுகளும் ஒன்றாகும். முற்காலத்தில் தொழில் அடிப்படையில் அரசர், அந்தணர், வேளாளர், வணிகர் என்றிருந்த பிரிவுகள் பின்னாளில் சாதிகளாக உருவெடுத்து அவற்றுள் ஏற்றத்தாழ்வுகளையும் உருவாக்கியது. இதனால் அவர்களிடையே பகைமை உணர்வு வளரலாயிற்று, ஒரு சாதியினர் பிற சாதியினரைத் தாழ்வாகப் பேசி ஏளனம் செய்வதைப் பழமொழிகள் காட்டுகின்றன. அப்படிபட்ட சில கால்நடைசார் பழமொழிகள் பின்வருமாறு.

- மாடு தின்னிக்கு வாக்கு சுத்தம் உண்டா
- எருது கொழுத்தால் தொழுவத்தில் இராது. பறையன் கொழுத்தால் பாயில் இரான்.
- கெட்டுபோன பாப்பானுக்கு செத்த மாட்டை சீதனமா கொடுத்த மாதிரி.
- ஆட்டுக்கும், மாட்டுக்கும் ரெண்டு கொம்பு அய்யங்காருக்கு மூணு கொம்பு
- மாடு திருப்பினவன் அர்சதனன்.
- பசு சாதும் பார்ப்பன ஏழையும் நம்பப்படா.
- வைத்தால் பிள்ளையார் வழித்து எறிந்தால் சாணி.

மேற்குறிப்பிட்ட பழமொழிகளில் மாடுகளை வளர்ப்பவர்களும், மாட்டினது இறைச்சியை உண்பவர்களும் கீழ் சாதி இன மக்களாகவும், மாமிசம் உண்ணாதவர்கள் மேட்டுக்குடி மக்களாகவும் இருந்ததை இவ்வழக்காறுகள் மூலம் உணர முடிகிறது.

மனித இனம் தோன்றிய காலகட்டத்தில் வேட்டையாடி கிடைக்கப்பெற்ற உணவையே உண்டு வந்தனர். அப்போது மக்களிடையே சாதியோ சமயமோ இல்லை, பிற்காலத்தில் மாடு தின்பவன் கீழ் சாதியினர் எனக் கூறுவது முற்றிலும் தவறாகத் தோன்றுகிறது. இவை வெறும் புனைகதையே என மெய்பிக்க முந்தைய வரலாறைத்தான் அலசி ஆராய வேண்டியுள்ளது.

மேல் சாதி எனப்படும் பார்ப்பனர்கள் மாட்டை சமயம் சார்ந்த விடயமாக மாற்றிக்கொண்டனர். ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக இந்துத்துவவாதிகள் இந்திய சூழலில் பசுவை புனிதம் என வாதிட்டு வருகின்றனர். அரசியல் அரங்கிலும் இக்கருத்தை வலிந்து திணித்து வருகின்றனர். தங்கள் வேத காலத்து இந்தியர்கள் (ஆரிய பார்ப்பனர்கள்) பசுவின் இறைச்சியை உண்ணவில்லை என்றும் அவர்கள் கூறிவருகின்றனர். ஆனால் தொன்மைக் காலத்து இந்தியர்களின் உணவு முறையில் பசுவின் இறைச்சி தலையாய இடம் பெற்றிருந்தது. என்பதை இந்து மத நூல்களே எடுத்துரைக்கின்றன.

**ரிக் வேதம்**

வேத காலத்தில் பசு புனிதமாகவே கருதப்பட்டு வந்தது. பசுவின் இந்த புனிதத் தன்மை காரணமாகவே அதன் இறைச்சியை உண்ண வேண்டும் என்று வாஜசனேயி சம்கிதையில் வற்புறுத்தப்பட்டுள்ளது.

"அவர்கள் மொத்தம் பதினைந்து பசு மாடுகளையும், இருபது காளை மாடுகளையும் சமையல் செய்தார்கள். அக்னிக்காகக் குதிரைகளும், எருதுகளும், காளைகளும் கன்று ஈனா பசுக்களும் ஆட்டுக்கிடாய்களும் பலியிட்டனர்". மேலும் வாள் அல்லது கோடரியைக் கொண்டு பசுவை வெட்டிக் கொன்றதாக ரிக்வேதம் (மதவெறியும்மாட்டுக் *கறியும் 2019.* பக்-40*)* கூறுகிறது. இறந்தவர்களின் உடலை அடக்கம் செய்யும் வினை முறைகளைப் பற்றி ஆரியரின் தர்மசாத்திரம் பசுவின் இரைப்பை குடல் ஆகியவற்றை வெளியே எடுத்து இறந்து போனவர்களின் தலையையும் வாயையும் அவற்றைக் கொண்டு மூட வேண்டும். அப்போது பசுக்களிடமிருந்து தோன்றும் அக்னியிடமிருந்து உன்னை காக்கும் கவசமாக இது விளங்கட்டும் எனக் கூறுகிறது.

ஒருவன் இறந்துவிட்டால் அவரது உடல் புதைக்கப்படுவதற்கு முன்பு பசுவைப் போன்ற ஒரு விலங்கு கொல்லப்படுவதும் அதன் உறுப்புகளை இறந்தவரின் உறுப்பின் மீது வைக்கப்பட்டு படையல் செய்யப்படுவதும் இந்தோ-ஆரியர்களிடையே ஒரு பழக்கமாக இருந்து வந்தது. ( தி அண்ட்டச்சப்பில் தொகுதி 9 பக்: 114*)* மனுதருமம். தெய்வங்களுக்கோ, முன்னோர்களின் ஆவிகளுக்கோ படையலிட்டு வழிபாடு செய்யும்போது, விலங்கைத் தானே கொன்றோ மற்றவர்களிடமிருந்து பரிசாகப் பெற்றோ அந்த விலங்கின் இறைச்சியை உண்பது தவறில்லை (மனு; 5 வது அத்தியாயம் 32 வது சுலோகம்) என்கின்றது.

வேதத்தின் உண்மையான பொருளை அறிந்தவனாகிய இரு பிறப்பாளன் (பார்ப்பான்) இந்த நோக்கங்களுக்காக ஒரு விலங்கைக் கொன்றால் அவனும் அந்த விலங்கும் நற்கதி அடைவார்கள் (மனு; 5 வது அத்தியாயம் 42 வது சுலோகம்)

எனும் மனுதர்மம் இத்துடன் நிற்காமல் ஒருபடி மேலே சென்று புலால் உண்பதை கட்டாயப்படுத்துகிறது. ஒரு புனித சடங்கில் ஈடுபட்டிருப்பவன் அதாவது அதை முன் நின்று நடத்துபவன் அல்லது அந்த சடங்கில் விருந்து உண்பவன் இறைச்சி உண்பதை மறுத்தால் 21 பிறவிகளில் ஒரு விலங்காகவே அவன் இருந்து வருவான் என குறிப்பிடுகிறது.

**மஹாபாரதம்**

மஹாபாரதத்தில் வனப்பருவத்தில் வீட்டில் வளர்க்கப்பட்ட விலங்குகள் (பசுவைப் போன்று) வெட்டப்பட்டுச் சமையற் கூடங்களில் நிரப்பி வைக்கப்பட்டிருந்தன எனக் கூறப்படுகிறது. ரந்திதேவா என்னும் புகழ்பெற்ற அரசனுடைய சமையற் கூடத்தில் நாள்தோறும் இரண்டாயிரம் பசு மாடுகள் வெட்டப்பட்டன என்றும் பசு மாட்டிறைச்சியோடு தானிய உணவுப் பொருட்களையும் சேர்த்து பார்ப்பனர்களுக்கு அந்த அரசன் படைத்தான் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. “கர்மாவதி எனும் ஆறு (தற்போது சாம்பல் ஆறு என்று அழைக்கப்படுகிறது) வெட்டப்பட்ட பசு மாடுகளின் ரத்தத்திலிருந்து உற்பத்தியாகி ஓடியதாக கூறப்படுகிறது. (தி மித் ஆப் தி ஹோலி கௌ - பக்: 95 )

எள், அரிசி, பார்லி அவரை, நீர், கிழங்கு, கனிகள் மீன், மாட்டிறைச்சி, எலி, வெள்ளாடு, மான், எருமை, பசுவின் இறைச்சி, செம்மறியாடுகள் போன்றவை மூதாதையரின் நினைவாகப் படையலிட்டனர் என பீஷ்மர் கூறுகிறார். வேதச் சடங்குகளுக்காக பலியிடப்படும் விலங்குகளின் இறைச்சியை உடனடியாக உண்டுவிட வேண்டும் என்கிறார். (தி மித் ஆப் தி ஹோலி கௌ - பக்: 96 )

**இராமாயணம்**

காடுறை வாழ்க்கையைக் கோசலையிடம் தெரிவிப்பதற்காகச் செல்லும் இராமன் தான் 14 ஆண்டு காலத்திலும் புலால் உண்பதில்லை எனவும், தேன் கனிகள், கிழங்குகள் இவற்றை மட்டும் உண்டு வாழ்வேன் எனக் கூறுகிறான். ஆனால் இராமாயணத்தில் இராமனும் இலக்குவனும் விலங்குகளை வேட்டையாடி வேள்விக்காகவும், உணவுக்காகவும் பயன்படுத்தினார்கள் என்று பல இடங்களில் கூறப்படுகிறது.

கங்கையாற்றைக் கடக்கும்போது, கங்கையிடம் சீதை சொல்கிறாள் என் கணவரோடு பாதுகாப்பாக நல்லபடியாக நான் திரும்பி வந்துவிட்டால் இறைச்சி உணவோடு ஆயிரக்கணக்கான மதுக்கலயங்களை உனக்குப் படைக்கிறேன் என்று உறுதிமொழி கூறுகிறாள், மேலும் யமுனை ஆற்றைக் கடந்து செல்லும்போது சீதை அதனை வணங்கி என் கணவர் என் விருப்பங்களை நிறைவேற்றிவிட்டால் ஆயிரம் பசு மாடுகளையும், நூற்றுக்கணக்கான மதுக்கலயங்களையும் படையலிட்டு வழிபாடு நடத்துவேன் என்றும் வேண்டுகிறாள் (இராமாயணம் அயோத்தியா காண்டம், 54-ம் சருக்கம் பக்- 97, 98 ) விலங்குகளைக் கணக்கின்றிப் பலிகொடுத்த பின்பே தசரதனுக்கு இராமன் பிறந்ததாக இராமாயணம் கூறுகிறது.(இராமாயணம் பாலகாண்டம் 14 வது சர்க்கம் பக்- 147)

இவ்வாறு மேல்சாதியினர் எனப்படும் பார்ப்பனர் மாட்டினது இறைச்சியை உண்டு வந்தவர்கள் என்பது புலனாகிறது, ஏன் அவர்கள் திடீர் என்று பசுவை வணங்கத் தொடங்கினார்கள். என்ற புதிருக்கு விடை புத்த மதத்திற்கும், பார்ப்பனீயத்திற்கும் இடையே நடைபெற்ற போராட்டம்தான் காரணமாக அமைகிறது. புத்த மதத்தின் மீது தனது மேலாதிக்கத்தை நிலைநாட்டவே

பார்ப்பனியம் பசு வழிபாட்டை மேற்கொண்டது. புத்தரின் மறைவிற்குப் பின் அவரைப் பின்பற்றியவர்கள் அவருக்கு சிலை வைப்பதிலும், தூண்களை நிறுவுவதிலும் தீவிரமாக ஈடுபட்டனர்.

பார்ப்பனர்களும் அவர்களைப் பின்பற்றி பல கோவில்களைக் கட்டினர். அவற்றில் சிவன், விஷ்ணு,ராமன், கிருஷ்ணன், போன்றோரின் சிலைகளை வைத்தனர். புத்தரின் உருவ வழிபாட்டால் ஈர்க்கப்பட்ட பெருந்திரளான மக்களைத் தங்கள் பக்கம் இழுப்பதற்காகவே இவற்றையெல்லாம் பார்ப்பனர் செய்தனர். இதற்கு முன்னர் இடம்பெற்றிராத கோவில்களும்,சிலைகளும் இவ்வாறுதான் இந்து மதத்தில் நுழைந்திருக்கக்கூடும். வேள்விகளையும், விலங்குகளைப் பலியிடுவதிலும் குறிப்பாக பசு மாடுகளைப் பலியிடுதலைக் கொண்ட பார்ப்பனிய மதக் கோட்பாடுகளை பௌத்தர்கள் ஏற்க மறுத்தனர். பசுவதையைப் பௌத்தர்கள் கண்டித்தது மக்களைப் பெரிதும் கவர்ந்தது அதிலும் குறிப்பாக அவர்கள் வேளாண்குடி மக்களாக இருந்ததும் இதற்கு சிறப்பான காரணமாக அமைந்தது.

அக்காலத்தில் பார்ப்பனர் வீட்டிற்கு யாரேனும் விருந்தினர் வந்தால் பசுவைக் கொன்று அவர்களுக்கு விருந்து வைத்தனர் இதனால் பசுக்களைக் கொள்பவர்கள் பார்ப்பனர்கள் என்று மக்கள் பார்ப்பனரை வெறுத்து வந்தனர் இத்தகைய இக்கட்டான நிலையில் பௌத்தர்களுக்கு எதிராகத் தங்கள் நிலைமையை மேன்படுத்திக்கொள்ளப் பார்ப்பனர்களுக்கு வேறு வழி இல்லாமல் போகவே பசுவைக் கொள்வதை முற்றிலுமாக கைவிட்டனர்.

மாட்டிறைச்சி உண்பதை முற்றிலும் மத சார்பற்ற நிகழ்வாகக் கருதுவதற்கு பதிலாக அதனை மதத்தோடு பிணைத்துப் பசுவை ஒரு புனிதமான விலங்காகப் பார்ப்பனியம் மாற்றிவிட்டது. இவைதான் நமது சமூகத்தில் ஏற்றத்தாழ்வுக்கும்

தீண்டாமைக்கும் மிக முக்கிய காரணங்கள் ஆகின்றன. மாட்டு இறைச்சியை உண்பவர்கள் தீண்டத்தகாதவர்கள் என்ற பிம்பத்தை இதன் மூலம் உருவாக்கினர். இவை வழக்காறுகளிலும் கூட நாம் காண முடிந்தது.

- பசு சாதும் பார்ப்பன ஏழையும் நம்பப்படா.
- ஆட்டுக்கும், மாட்டுக்கும் இரண்டு கொம்பு அய்யங்காருக்கு மூணு கொம்பு

போன்ற வழக்காறுகளை மாட்டிறைச்சி உண்ணாத மேட்டுக்குடி மக்களுக்கு எதிர் விளைவாக தாழ்த்தப்பட்ட மக்களும் உருவாக்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. நமது சமூகத்தில் கால்நடை வழக்காறுகளில் ஒன்றான பழமொழிகள் இருப்பினும் அவற்றில் சில சமய அடையாளங்களும் மாட்டிறைச்சி உண்பதன் காரணமாக ஒரு சாரார் தீண்டத்தகாதவர்களாக மாற்றப்பட்டுள்ளதை நம்மால் உணர முடிகிறது. மாடு என்பது கால்நடை விலங்கு என்று கூறுவதை விட அதன் மீது நடத்தப்படும் அரசியல் இன்றுவரை தொடர்ந்துதான் வருகிறது, கால்நடையை மையமாகக் கொண்டுள்ள சாதிய அரசியலை மேலும் ஆய்வுக்கு உட்படுத்த வேண்டியுள்ளது.

கால்நடை வழக்காறுகள் நமது வரலாற்றுச் சூழலைப் பிரதிபலிப்பனவாக அமைந்துள்ளதை தரவுகளின் மூலம் அறிய முடிகிறது.மேட்டுக்குடியின மக்கள் சமய முறைமைகளும் சாதிய படிநிலைக்கு அழுத்தம் தருவதாகக் கருத இடமுண்டு. இதன் விளைவாக மாட்டிறைச்சி உண்ணுகிற தீண்டதத்காதவர்களாகக் கருதப்படும் மக்களிடத்தும் மேட்டுக்குடி இன மக்களுக்கு எதிரான கால்நடைவழக்காறுகள் தோன்றலாயிற்று.

சிறு மரபில் காளை சார்ந்த கதையாடல்கள், பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், வழிப்பாட்டு முறைகள், நிகழ்வு போன்றவை காணப்படு கின்றன,

மேலும் மாடுகள் சார்ந்த வழக்காறுகளில் சாதீயப் பழமொழிகளில் மாடு சார்ந்த பழமொழிகள் இடம்பெறுவதை நம்மால் உணர முடிகிறது. மேலும் அப்பழமொழியின் பின்புள்ள அரசியலையும் புராண இதிகாசங்கள் வாயிலாக அறிய முடிகின்றது.

## தொகுப்புரை

தமிழர் பண்பாட்டில் கால்நடை வழக்காறுகள்- சிறுமரபு எனும் இவ்வியலில் காளை வழிபாடு, காளை தொடர்புடைய விழாக்கள், விழாக்கள் சார்ந்த சடங்கு முறைகள் கோவில் காளை சார்ந்த செய்திகள் தொகுக்கப்பட்டு ஆராயப்பட்டுள்ளது.

ஏறுதழுவுதல் தொடர்புடைய நாட்டார் கதைகளான அழகாத்தேவனின் தொன்மக்கதை, கருப்பத்தேவன், மன்னன் சின்னாண்டி, போன்றவைகளை ஆராய்கையில், இவர்கள் கதை மாந்தர்களாக மட்டும் இல்லாமல் குலகுறி மரபுகளாக மாறப்பட்டது தெரியவருகின்றது.

ஏறுகளுக்கு கோவில் அமைத்து வழிபடல், சேத்தாண்டி வேசம், குழந்தைப்பேறு போன்ற தரவுகள் தொகுக்கப்பட்டு ஆராயப்பட்டுள்ளது.

மாடுகளின் சுழிகளும், சுழிகளின் அவற்றின் மீதுள்ள நாட்டார் வைக்கும் நம்பிக்கைகள் தொகுக்கப்பட்டுள்ளது, மேலும் கால்நடைசார் பழமொழிகள் தொகுக்கப்பட்டு அதில் சாதியப் பழமொழிகள் இனங்கணப்பட்டது, சாதியப் பழமொழிகள் உருவான சூழல், காரணம் போன்றவை தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

# இயல் - மூன்று

## தமிழர் பண்பாட்டில் ஏறுதழுவுதல்

*இயல் - மூன்று*

## தமிழர் பண்பாட்டில் ஏறுதழுவுதல்

பண்பாட்டு தொன்மையும், இலக்கிய வளமையும் நிறைந்ததே தமிழர் வரலாறு, தமிழ் இன மக்கள் இயற்கையைத் தொடர்ந்து பிற உயிரினங்களோடும் இணைந்து வாழ்ந்து வந்துள்ளனர். அந்த வகையில் அவர்கள் மாடுகளுடன் காட்டிய இணக்கம் மற்றும் அன்பு அளப்பரியது, அவற்றை மெய்பிக்கும் வகையில் சான்றுகள் இலக்கியங்களில் நிறைந்து காணப்படுகின்றன. அவற்றில் மிக முக்கியச் சான்றாக ஏறுதழுவுதல் நிகழ்வு காணப்படுகிறது, ஏறுதழுவுதல் தமிழர்களின் பண்பாட்டு அடையாளமாக தொன்று தொட்டே பின்பற்றப்பட்டு வருகின்றது.

### ஏறுதழுவுதல் பெயர் காரணம்

ஏறுதழுவுதல் நிகழ்விற்கான தொன்மைப் பதிவுகளாக பின்வருவனவற்றைச் சுட்டலாம்.

- தொல்காப்பிய பொருளாதிகாரம் 53 வது நூற்பாவிற்கு உரைதரும் இளம்பூரணர் ஏறுகோள் என்று ஏறுதழுவுதலைக் குறிப்பிடுகிறார்.
- ஏறுதழுவுதலைக் காளைகளின் பாய்ச்சல் என எடுத்துரைக்கிறது கலித்தொகை. கொல்லக்கூடிய காளையைத் தழுவிப் போரிட்டு அடக்குவதால் ‘கொல்லேறுதழுவுதல்’ என்றும் சிறப்பித்துக் கூறப்படுகின்றது.

- சிலப்பதிகாரமும், புறப்பொருள்வெண்பா மாலையும், ஏறுகோள் என்று பதிவு செய்கின்றன.
- எருது கட்டி என்னும் மாடுதழுவுதல் நிகழ்வை எடுத்துரைக்கிறது கண்ணுடையம்மன் பள்ளு.

ஏறுதழுவுதல், ஏறுகோடல், ஏறுகோள், கொல்லேறுதழுவுதல், மாடுபிடித்தல், எருது கட்டு, மஞ்சுவிரட்டு, பொல்லெருதுபிடித்தல், ஜல்லிக்கட்டு என்று தமிழகத்தின் பல பகுதிகளில் பலபெயர்களில் தமிழர்களின் வீரவிளையாட்டாம் ஏறுதழுவுதல் வழங்கப்படுகின்றது.

**ஏறுதழுவுதல்**

ஏறுதழுவல் மணவினைக்காக நடத்தப்படுவது இத்தன்மையை சிலப்பதிகாரம் மற்றும் கலித்தொகையிலும் விரிவாகக் காண்கிறோம், தம் மகளுக்கு ஒத்த காளையைத் தேர்வு செய்யும் நிகழ்வாக ஏறு தழுவுதல் பதிவு செய்யப்படுகின்றது. இந்நிகழ்வில் ஏறுதழுவலுக்காக ஆய மகள் வளர்க்கும் வலிமை மிக்க ஏற்றினை அடக்குவதே ஏறுதழுவல் எனும் விளையாட்டாகும். அவ்வாறு ஏற்றினை அடக்கும்போது அதனால் ஏற்படும் மிகுந்த இடர்களுக்கு அஞ்சாது அதன் மீது பாய்ந்தேறி அதனைத் தழுவி அடக்குவதினால் அவனது வீரம் புலப்படுகின்றது. ஏற்றினைத்தழுவி தன்வசப்படுத்தும் பொருட்டு ‘தழுவல்’ என்னும் சொல்லோடு சேர்த்து ஏறுதழுவல் ஆயிற்று மண வினைக்கு உகந்த மணமகனைத் தேர்வு செய்வதோடு , இந்நிகழ்வின் வயிலாக கால்நடை வளர்ப்புச் சமூகத்திற்கு பொலிகாளைகளைக் கண்டறியும் வாய்ப்பும் இதில் உள்ளது.

பிற்காலங்களில் முல்லை நிலத்தில் வாழ்ந்த ஆயர் இனமக்கள் காளையை அடக்குபவனை மணமகனாகத் தேர்வு செய்யும் முறையை கைவிட்டதற்கு

காளைகளால் வீரனுக்கு ஆபத்து நேர்வதோ அல்லது திருமணமான ஆண்கள், வேறு சமுகத்தை சேர்ந்தவர்களும் கலந்து கொள்ள முயற்சி செய்தல் போன்ற காரணங்களாகலாம்.

**கொல்லேறு தழுவுதல்**

மாடுகளில் ஆண்பால் எருது ஆகும், அதனை ஏறு என்றும் காளை என்றும் குறிப்பிடுவர். மிகுந்த வீரமுடைய ஏறுகள் கடும் புலியையும் எதிர் நின்று தாக்கும் தன்மையுடையதாகும். வலிமையான தன்கொம்புகளால் அதன் உடலைக்கீறிக் கொல்லும் தன்மை வாய்ந்த எருதுகளைக் “கொல்லேறு“ என்றும். வீறுடைய ஏறு என்றும் “மாக்காளை“ என்றும் கூறுவர். இத்தகு வலிமையான ஏற்றை தழுவி அடக்குதலை கொல்லேறு தழுவுதல் என்று அழைப்பர்.

**மஞ்சுவிரட்டு**

மஞ்சு விரட்டானது காட்டில் அலைந்து திரியும் காட்டு மாடுகளை பிடித்து வந்த தொல் பழங்கால நிகழ்வின் எச்சத்தை உணர்த்துவதாக அமைகின்றது, திறந்த வெளிகளில் ஏறுகளை அவிழ்த்துவிட்டு அவற்றை அணைவதே இவ்விளையாட்டு, இந்நிகழ்வில் காளையை கூட்டமாக விரட்டி பின் தொடர்ந்தும், அதன் முதுகின் பின்புறமாகவும் நின்று அவ்வேற்றின் கவனத்தை திசை திருப்பி ஏறானது கவனம் இழக்கும் தருவாயில் அவற்றை தம் பிடிக்குள் அடக்குவர்.

”மஞ்சு எனும் சொல்லுக்கு யானை என்ற பொருளும் உண்டு” முற்காலத்தில் யானையின் முதுகில் பெரும்பாலும் அரசர்கள் பயணம் செய்வது வழக்கம்

அவற்றை வீரமாகவும் கருதினர் நம் முன்னோர். எனவே அதற்கு ஈடான வீரம் நிறைந்த இவ் விளையாட்டையும் அப்பொருள் கொள்வதில் தவறில்லை.

**எருது கட்டு**

எருதுகட்டு அனுபவம் இல்லாத மாடுபிடி வீரர்களுக்கு பயிற்று திடலாகக் காணப்படுகிறது. இதில் காளையை அணைவதற்கு பதிலாக அதன் கழுத்தில் உள்ள வடத்தினை அவிழ்க்கும் முயற்சியும் ஒருவகை எருதுகட்டாக உள்ளது.

இவ்விளையாட்டில் காளையின் கழுத்தில் அதிக எடையுடைய வடம் கட்டி விடப்படும் அவ்வாறு வடத்தை கட்டுவதன் மூலம் காளை ஓடும் திறனும் அதன் ஆற்றலும் குறையும், அப்போது காளையை அணைவது எளிதாகின்றது.

தூத்துக்குடி மாவட்டம் பல்லாக்குளம் கிராமத்தில் உச்சிமாகாளியம்மன் திருவிழாவின் போது எருதுகட்டு நிகழ்வில் நீண்ட கயிற்றில் காளையை மாடுபிடிப்போர் அணைப்பர்.

நீலமேகம் சங்கையா கோவில் சிவகங்கை மாவட்டம் பொதும்புவில் காளையினை வடத்தால் கட்டிய பின்னர், மாடு பிடிப்போர் தனி ஆளாகச் சென்று காளையின் கழுத்தில் உள்ள வடத்தை அவிழ்த்து விடுவதே அவ்விடத்து எருதுகட்டு நிகழ்வாக நடைபெறுகிறது.

**ஜல்லிக்கட்டு பெயர்க்காரணம்**

ஜல்லிக்கட்டு என்ற பெயர் பிற்காலத்தில் உருவானதாகும். ஏறுதழுவல் நிகழ்வின் போது சல்லி என்பது காளையின் கழுத்தில் கட்டப்படுகின்ற வளையத்தை குறிக்கும். காளையின் கழுத்தில் புளியங்கம்பினால் வளையம்செய்து அணிவிக்கும் பழக்கம் காணப்பட்டது பழமையான சல்லிக்காசுகளை துணியில் வைத்து காளையின் கொம்புகளில் கட்டிவிடப்பட்டது, புழக்கத்தில் இருந்த அந்த

சல்லிக்காசனது காளையினை அணைந்திடும் மாடுபிடிவீரருக்கு சொந்தமாகும். இதனால் சல்லிகட்டு என்று அழைக்கப்பட்டப் பெயர் காலப்போக்கில் பேச்சுவழக்கில் ஜல்லிக்கட்டு என மாறியுள்ளது.

மற்றொரு பொருளாக சல்லம் என்றால் நார் என்று பொருள். கற்றாழையிலிருந்து எடுக்கப்படும் நாருக்குச் சல்லி நார் என்று பெயர். இந்த நாறுகளைக் கொண்டு மாடுகளுக்கான மூக்குக் கயிறு, பிடி கயிறு, தாம்புக்கயிறு, கழுத்துக்கயிறு என்று பல கயிறுகளை உற்பத்தி செய்து பயன்படுத்தி வருகின்றனர்.

மாட்டுப் பொங்கலன்று சல்லி நாரைக் கொண்டு ஒரு சன்னமான மணிக்கயிறு செய்து அதில் நாரை வரிசையாக தொங்கல் பின்னி காளையின் கழுத்தில் கட்டுவர். ஏறுதழுவல் அன்று காளையை தொழுவில் விடுவர். ஏறுதழுவும் வீரர்கள் காளையைத் தழுவி அதை அடக்கியதற்கு அடையாளமாக காளையின் கழுத்தில் கட்டியிருக்கும் சல்லித் தொங்கலை அவிழ்த்து விட வேண்டும். ஏறுதழுவும் விழாவில் இந்த சல்லி வெற்றியின் சின்னமாக விளங்குவதால் இதற்கு ஜல்லிகட்டு என்ற பெயர் வழங்கலாயிற்று என்கிறார் க.மு. முருகேசன்.

இதன் தொடர்ச்சியாக காளையின் கழுத்திலோ அல்லது நெற்றியிலோ வெள்ளிக் கொடி, பரிசாகக் கொடுக்கப்படும். இரு சக்கர வாகனங்களின் சாவியை கட்டி விடுவதையும் செய்து வந்துள்ளனர், நிகழ் காலங்களில் இது போன்ற சல்லியோ, பணமுடிப்போ, மணிக்கயிரோ காளையின் கொம்புகளிலோ அல்லது கழுத்திலோ கட்டிவிடப்படுவதில்லை. மாறாக ஏறுதழுவலில் வெற்றி பெறும் மாடுபிடி வீரர்களுக்கு பரிசுபொருட்களுடன் தங்கநாணயம் பரிசாகக்

கொடுக்கப்பட்டு வருகிறது. தற்காலத்தில் ஜல்லிக்கட்டு எனும் பெயரிலேயே பெருவாரியாககுறிப்பிடுகின்றனர்.

**ஏறுதழுவலின் வகைகள்**

தமிழரின் பாரம்பரிய அடையாளமாக விளங்கும் ஏறுதழுவல் விளையாட்டானது, தமிழகத்தின் பல இடங்களில் நடைபெறுகிறது. இவை தமிழரின் திருநாள் ஆன பொங்கல் பண்டிகையை ஒட்டி நடைபெறும். ஏறுதழுவல் எனும் இவ்விளையாட்டானது மூன்று வகைகளில் நடைபெறுகிறது.

**வேலி மஞ்சுவிரட்டு அல்லது வேலி ஜல்லிக்கட்டு**;

வேலி மஞ்சுவிரட்டு விளையாட்டானது மிக இயல்பானது இவ்விளையாட்டானது திறந்தவெளிகளில் காளைகளின் மூக்கணாங்கயிறை அவிழ்த்துவிடுவார்கள். அக்காளையானது எந்ததிசையை நோக்கி வேண்டுமானலும் ஓடும், வடிவாசலோ, தடுப்புகளோ, வழியோ கிடையாது. வெட்ட வெளியில் சுற்றும் மக்கள் சூழ காளையானது தனது விருப்பம்போலவே ஓடும் பெரும்பாலும் மக்கள் காணப்படுகின்ற திசையில் காளை ஓடுவதில்லை. சில காளைகள் மட்டுமே நின்று விளையாடும் யாரையும் நெருங்க விடாது. தன்னை சுற்றிச் சுற்றி வந்து தன்னை நெருங்குபவரை சினம் கொண்டு தாக்கும். இவ்வகையில் பங்குபெறும் காளைகள் இரண்டு மணி நேரமாவது நின்று விளையாடும் தன்மை கொண்டதாகும்.

காளையின் சினம் குறையும் வரையிலோ, காளை அடங்கி விடுவதாலோ இவ்விளையாட்டு ஐந்துநிமிடம் முதல் ஒருமணிநேரம் வரையில் நடைபெறும், இவ்வேலி ஜல்லிக்கட்டானது சிவகங்கை மற்றும் மதுரை, மானாமதுரை போன்ற இடங்களில் நடைபெறுகின்றது,

**வடம் மஞ்சு விரட்டு அல்லது வடம் ஜல்லிகட்டு**

ஏறுதழுவுதல் வடதமிழகத்தில் வடம் மஞ்சுவிரட்டு என்ற பெயரில் அறியப்படுகின்றது. வடம் ஜல்லிக்கட்டு விளையாட்டு மிகவும் ஆபத்தானதாகும். காரணம் இவ்வகை விளையாட்டில் காளைகளின் மூக்கணாங்கயிறு அவிழ்க்கப்பட்டு 20 அடி நீளக் கயிற்றால் காளையைக் கட்டி மறுமுனை கல்லால் கட்டி அக்கல்லை மண்ணில் புதைத்து விடுவர், அப்போது காளையைச் சுற்றி ஓர் உள் வட்டம் உருவாகும், அவ்வட்டத்தைச் சுற்றி எல்லைக்கோடாக வெளிவட்டம் காணப்படும். ஏழு பேர் முதல் ஒன்பது பேர் மட்டுமே அவ்விளையாட்டில் அனுமதிக்கப்படுவர். அக்குழுவானது 30 நிமிடங்களில் அவ்வட்டத்தினுள் காளையை அடக்குவதே வடம் ஜல்லிக்கட்டு. ஒவ்வொரு ஊரின் சூழலுக்கு ஏற்றவாறு வெவ்வேறு விதமாக இவ்விளையாட்டு நடத்தப்படுகிறது. காளையின் இரு புறங்களும் கயிறை இழுத்துப் பிடிக்க ஒரு சிலர் மட்டுமே காளையின் கொம்பில் கட்டபட்ட பரிசை எடுப்பர்.

மதுரை செக்கானூருக்கு அருகில் கொக்குளம் அய்யனார் கோவில் திருவிழாவில் நடைபெறும் வட மஞ்சு விரட்டில் வேறொரு முறை பின்பற்றப்பட்டு வருகின்றது. சிறுமலையிலிருந்து கொண்டு வரப்பட்ட காட்டுக் கொடிகளில் வைக்கோலைச் சுற்றி பிரியாக திரித்து வடம் தயாரித்து அதன் ஒரு முனை காளையின் கழுத்திலும் மறு முனை கோவில் தூணிலும் கட்டி வழிபாடு செய்த பின்பு தூணில் கட்டப்பட்ட முனையை அவிழ்த்துவிடப்படும் காளையை விரட்டிச் சென்று அதனை அணைவதாகும். வடம் ஜல்லிகட்டில் பார்வையாளருக்கும் அதில் விளையாடும் காளைக்கும் தடுப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கும். இதனால் யாருக்கும் எவ்வித பாதிப்பும் இருக்காது.

**வாடி மஞ்சு விரட்டு அல்லது வடிவாசல் ஜல்லிக்கட்டு**

தமிழகத்தின் பல இடங்களில் பெருவாரியாக நடைபெறுகின்றது, இவ்வகை ஜல்லிக்கட்டு மக்களிடையே நன்கு அறியப்பட்டதாகும் இவ்வகை விளையாட்டு தொலைக்காட்சிகளிலும் திரைப்படங்களிலும் வெகுவாக காண்பிக்கப்படுவதால். புகழ் பெற்ற ஒன்றாக உள்ளது வாடிவாசல் (நுழைவாயில்) வழியாக காளையை திறந்து விடுவர் அப்போது மூக்கணாங்கயிறுகள் அறுக்கப்படும். அப்போதுகாளைகள் தனது முழுபலத்துடனும் சீறிப்பாய்ந்து வெளி வரும். அவ்வாறு வரும் காளையின் திமிலைப்பிடித்து ஒருறிப்பிட்ட தூரம் வரை செல்லவேண்டும், அல்லது அக்காளை மூன்று முறை தன்னைத்தானே சுற்றும் வரை அதன் திமிலின் மீதுள்ள அவ்வீரரின் பிடிவிடமல் 20-30 வினாடிகள் இருந்தால் அவ்வீரர் வெற்றிப்பெற்றவராக கருதப்படுவார். காளையானது மாடுபிடிவீரர்களிடம் பிடிபடாமல் எல்லையை கடந்து சென்றால் காளை வெற்றி பெற்றதாகக் கொள்ளப்படும், இவ்வகை ஜல்லிகட்டில் குழுவாக மாடுபிடி வீரர்கள் காணப்பட்டாலும் ஒரு காளையின் திமிலை ஒருவரே தழுவ வேண்டும், ஒன்றிற்கு மேற்பட்டோர் அடக்க முற்பட்டால் காளை வெற்றி பெற்றதாக அறிவிக்கப்படும். இவ்வகை விளையாட்டு சேலம், தஞ்சாவூர், மதுரை, பாலமேடு, திண்டுக்கல், புதுக்கோட்டை, தேனி போன்ற மாவட்டங்களிலும் மெரீனா புரட்சிப் போராட்டதிற்குபின் தற்போது கோவை, திருப்பூர், ஈரோடு மாவட்டங்களிலும் நடைபெற்று வருகின்றது.

**நாயக்கர்கால ஜமீன்தார் ஜல்லிக்கட்டு**

பாரம்பரிய விளையாட்டு முறையானது பழந்தமிழகத்தில் ஏறுதழுவல் மற்றும் மஞ்சுவிரட்டு என்று பரவலாக அறியப்பட்டாலும், அவை ஜல்லிக்கட்டு என மாற்றம் அடைந்ததும் அறிமுகம் செய்ததும் நாயக்க மன்னர் கால கட்ட ஜமீந்தார்கள் தான். இந்த ஜல்லிகட்டிற்கும் பழந்தமிழ்விளையாட்டுக்கும் எந்ததொடர்பும் இல்லை என வரலாற்று அறிஞர் காந்திராஜனும், பேராசிரியர் சதிரசேகரனும், சான்றுகளுடன் குறிப்பிடுகின்றனர், மாட்டை அடக்கும் ஏறுதழுவுதல், மாட்டை விரட்டி ஓடும் மஞ்சுவிரட்டும் ஆகிய விளையாட்டுக்களுக்குத்தான் தொல்லியல்சான்றுகள் கிடைத்துள்ளன. சங்க இலக்கியங்களில் சல்லிகட்டு, ஜல்லிக்கட்டு எனும் வார்த்தைகள் எங்கும் குறிப்பிடப்படவில்லை என்பது அவர்களது வாதமாக இருக்கின்றது.

**வாடி கட்டுதல்**

'வாடி' என்பது ஏறுதழுவுதல் என்னும் விளையாட்டில் காளைகளை நிறுத்தி அறிவிப்புச் செய்துவிட்டு ஒவ்வொன்றாக அவிழ்த்துவிடும் இடமாகும். வாசலைத் தாண்டும் முன் காளைகளின் மூக்கணாங்கயிறு உள்ளிட்ட அனைத்துப் பிணைப்புகளையும் அவிழ்த்து விடுவர். மாடுபிடி வீரர்கள் வாடிவாசலைப் பார்த்தபடியே இருப்பர்.பிணைப்பு களில் இருந்து வெளிவரும் காளையின் வீரத்தை அடக்க வீரர்கள் முற்படுவர் இவ்வாறு பல ஊர்களில் வாடி நிரந்தரமாகக் கட்டப்பட்டிருக்கும் சில ஊர்களில் வாடி தற்காலிகமாகக் கட்டப்பட்டிருக்கும். நிரந்தமான வாடி, தற்காலிகமான வாடி என வாடி இரண்டு வகைப்படும்.

**நிரந்தமான வாடி**

வாடி ஊரின் பொதுவிடத்தில் அமைந்திருக்கும். வாடியின் சுவர்கள் செங்கல் அல்லது கல்லால் கட்டப்பட்டிருக்கும். ஒரு சில ஊர்களில் வாடியின் சுவர்கள் மண்ணால் எழுப்பப்பட்டிருக்கும். வாடிக்கு இரண்டு வாயில்கள் உள்ளன. பின் வாயிலின் வழியே காளையைக் காளையின் உரிமையாளர்கள் கொண்டுவந்து நிறுத்தி முன்வாயிலின் வழியாக வெளியேற்றுவார்கள்.

**தற்காலிகமான வாடி**

சில ஊர்களில் வாடிகட்டுவதற்குச் சுவர் எழுப்பப்படாமல் மரக்கட்டைகளை ஊன்றி அவற்றில் கம்பு அல்லது பலகைகளை ஆணியால் அரைந்து வைத்து வாடியாகப் பயன்படுத்துகின்றனர்.

**ஏறுதழுவும் முறைகள்**

நெருங்கி பிடித்தல், கழுத்தை பிடித்துக் கொண்டு ஏற்றின் முதுகில்தொங்குதல், கழுத்தை திருகுதல், தோளில் ஏறுதல். கொம்பை பிடித்து அழுத்துதல். இமில் எனும் கொட்டேறியைத் தழுவல் போன்றவைகள் பொதுவர்கள் பின் பற்றிய உத்திகளாகும். நிகழ்காலத்தில் காளையின் திமிலைத் தழுவுதலே பெருவாரியாகக் காணப்படுகிறது. வாலை பிடிப்பது தாழ்மையாகக் கருதப்படுகிறது. காளையின் கால்களை மாடுபிடி வீரரின் கால்களால் பின்னக்கூடாது. என்பன போன்றவை ஏறுதழுவும் முறைகள் காணப்படுகின்றன.

**சமகால ஏறுதழுவுதல் விதிமுறைகள்**

ஏறுதழுவுதலுக்கு என சில வரையறைகள் உண்டு. அதனை காளைகளுக்கு உரியவர்களும், காளைகளைப் பிடிக்க முன்வருவோர்களும் கடைபிடித்தாக வேண்டும் என்ற விதிமுறைகள் காணப்படுகின்றன.

**காளைகளுக்கான விதிமுறைகள்**

காளையின் வயது 3முதல் 4க்கு மேலான இருந்தால் மட்டுமே பங்கேற்க முடியும். ஏறுதழுவுதல் விளையாட்டில் கலந்து கொள்ளும் காளைகள் 4அடிக்கு மேல் உயரம் இருக்க வேண்டும் இல்லையெனில் காளை உள்ளே அனுமதிக்கப்படாது. காளைகளுக்கு அதாவது கொம்பு முனை அதிகமாக இருத்தல் கூடாது. முக்கியமான நாட்டு இனக் காளைகள் மட்டுமே அனுமதிக்கப்படும். (திமில்) உள்ள காளைகள் மட்டுமே அனுமதிக்கப்படும். காளை உடல்நலம் சரியாக உள்ளதா என்பதற்கான மருத்துவர் சான்று கட்டாயம் இருக்கவேண்டும். காளையின் அலங்கார பொருளாக காற்சலங்கை, மணி போன்ற வீரர்களை காயப்படுத்தும் எந்த உலோகப் பொருள்களும் காளைகளுக்கு அணிவித்து அவிழ்தல் கூடாது. காளையின் கால் குளம்புகளில் லாடம் அடிக்கப்பட்டிருந்தால் அனுமதிக்கப்படமாட்டாது. மாட்டிற்கு அனுமதி சீட்டு இருந்தால் மட்டுமே உள்ளே அனுமதிக்கப்படும். ஏறுதழுவுதலில் கலந்து கொள்ளும் காளைகள் இவ்விதிமுறைகளைப் பின்பற்றியே அனுமதிக்கப்படும் .

**மாடுபிடி வீரர்களுக்கான விதிமுறைகள்**

மாடுபிடி வீரர்கள் ஏறுதழுவுதல் விளையாட்டில் மது அருந்தியிருத்தல் கூடாது, சரியான சீருடை அணிந்திருக்கவேண்டும். காளையின் திமிலைத் தழுவி குறிப்பிட்ட எல்லை வரை சென்றாலோ, காளையைத் தழுவி மூன்று முறைக்கு மேல் சுத்தினாலோ வீரர்களுக்கு வெற்றி பரிசு வழங்கப்படும். என்ற நிலையில் மாடுபிடி வீரர்களுக்கும் விதிமுறைகள் உண்டு. இந்த விதிமுறைகளுக்கு கட்டுப்படாத வீரர்கள் உடனடியாக களத்தை விட்டு வெளியேற்றப்படுவர்,

ஒருகாளையை ஒருவர் மட்டுமே தழுவ வேண்டும். இருவர் சேர்ந்து தழுவுதல் கூடாது. போன்ற விதிமுறைகள் ஏறுதழுவும் வீரர்களுக்குப் பொருந்தும்.

மாடு பிடி வீரர் மற்றும் காளையின் பாதுகாப்பு கருதியும், ஏறுதழுவுதலுக்கு ஏற்பட்ட தடையின் காரணமாகவும் இது போன்ற விதிமுறைகளின்படி தமிழகத்தின் பல பகுதிகளில் ஏறுதழுவுதல் நிகழ்வுகள்நடைபெற்று வருகின்றன.

**மாடுபிடி வீரர்களுக்கான பயிற்சி**

எர்னெஸ்ட் ஹெமங்வேயின் நாவலில் – கதைகளில், மாட்டுச் சண்டை பற்றி நிறைய பதிவுகள் உள்ளன, அவை அவர்களின் பாரம்பரிய விளையாட்டின் தன்மையை முன் வைக்கிறது . மாட்டுச் சண்டை விளையாட்டில் அந்த நாவலாசிரியரே கலந்து கொண்டதாகவும் குறிப்பிடுகின்றார் . ஸ்பெயின் நாட்டு மேட்டடார் – டாரிடார் (Matador – Torydor) வீரர்கள், அந்த விளையாட்டில் பலகாலம் பயிற்சி பெறுகின்றனர். சண்டைமாடுகள் அதற்கென வளர்க்கப்படுவது போல், அந்த வீரர்களும் தயார்படுத்தப்படுகின்றனர். அவர்கள் காளைகள் பாய்ந்து வரும் திசையைக் கணக்கிட்டு எதிராகத் திரும்பி பலமுறை அதை களைப்படையச் செய்து வெற்றி பெறுவர். கூரிய கத்தியால் கடைசியில் சோர்ந்து போன, அந்த மாட்டைக் குத்தியும் கொல்வதுண்டு, அவ்வாறு மாடு கொல்லப்படுவது விளையாட்டில் அனுமதிக்கப்பட்ட விதிகளில் ஒன்று. மாடு வெற்றிப் பெற்றாலும், சில சமயங்களில் கொல்லப்படுவதுண்டாம். இறந்த மாட்டை, அந்த மைதானத்தைச் சுற்றி தூக்கிச் செல்வதும் உண்டு.

மாடுபிடி மதுரையைச் சேர்ந்த மாடுபிடி வீரர் மணி என்பவர் கூறுகையில், “எங்கெல்லாம் ஏறுதழுவுதல் போட்டி நடக்கிறதோ அங்கெல்லாம் பங்கேற்போம்”. ‘‘23-வது ஆண்டாக, அலங்காநல்லூர் ஏறு தழுவுதல் விளையாட்டில் பங்கேற்கிறேன். இதுவரை 200 க்கும் மேல் தங்கப் பதக்கம், 250 க்கும் மேல் வெள்ளிப்பதக்கம் பெற்றுள்ளேன். கார், பீரோ, புல்லட், ஆட்டுக்குட்டி என்று ஏராளமான பரிசுகளையும் வென்றுள்ளேன். பரிசுகளை வெல்வதை விட இந்தப் போட்டியில் பங்கேற்பதுதான் எங்களுக்கு கவுரவம். காளைகளுக்கும் எவ்வித காயமும் ஏற்படக்கூடாது என்பதில் மிக கவனமாக செயல்படுகிறோம். சிறப்பாக ஏறுதழுவுதல் போட்டி நடக்க வேண்டும் என்பதற்காக காப்பு கட்டுகிறோம். ஏறுதழுவுதல் நடைபெறுவதற்கு ஒரு வாரம் முன்பே கடுமையான விரதம் கடைபிடிக்கத் தொடங்கி மது, மாமிசம், புகைப்பிடித்தல் போன்ற பழக்கங்களை விட்டு விடுகிறோம் ஏறுதழுவுதலுக்கு செல்வதற்கு முன் தாய் தந்தையிடம் ஆசிர்வாதம் வாங்கி செல்வதையும் வழக்கமாக கொண்டுள்ளேன் . "வாடிவாசலில் நிற்கும் போது மன தைரியம், தன்னம்பிக்கை, பயமற்ற விடாமுயற்சி போன்ற பண்புகளை கொண்டு இருப்பது அவசியம். அப்பொழுதுதான் காளையினை எளிமையாக அடக்க முடியும். என்கின்றார்.

மாடுபிடி வீரர்களுக்கு ஏறு தழுவுதலில் காயங்கள் அதிகம் ஏற்படுவதோடு காயங்களைத்தான் பெருமைக்கான அளவீடாக வைத்துள்ளனர். எந்தளவிற்கு காயம் ஏற்படுகிறதோ அந்தளவிற்கு காளையை பிடிப்பதில் ஆர்வம் கூடிக்கொண்டே இருக்குமாம். வாடிவாசலின் இருபுறங்களிலும் இலட்சக்கணக்கான பார்வையாளர்கள் தரும் உற்சாகம் மிக முக்கிய காரணமாக அமைகிறது,

மாடுபிடிவீரர்கள் அல்லது மற்றொறு மாடு பிடி வீரரோ ஜல்லிகட்டு மாடோ கீழே விழுந்துவிட்டால் அதனைத் தூக்கிவிட்டு உதவுவர். அத்தகைய சிறந்த மனப்பான்மையையும் பண்பும் இங்குதான் காண முடியும். ஏறு தழுவுதலில் கலந்து கொள்ள பல பகுதிகளிலிருந்தும் மாடுபிடிவீரர்கள் வருகிறார்கள். சாதி மதப் பாகுபாடுயின்றி சகோதர உணர்வுடன் கலந்து கொண்டு வெற்றியையும், பரிசுகளையும் வாங்கிச் செல்லுகின்றனர். ஏறுதழுவுதல் நடைபெறும் இடத்திற்கு அருகிலேயே பொழுதும் முழு நேர முதலுதவி வாகனங்கள் மற்றும் மருத்துவ குழுவும் இருப்பர். பெரிய காயம் ஏற்பட்டால் முதலுதவி அளித்து மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்படுவார்கள். தற்காலத்தில் மாடுகளுக்கும், மாடுபிடி வீரர்களுக்கும் முறையான மருத்துவ பரிசோதனை செய்து தான் அனுமதிக்கப்படுகிறார்கள்.

எர்னெஸ்ட் ஹெமங்வேயின் நாவலில் மாடு சண்டை விளையாட்டில் காளைகள் வென்றாலும் வீரர்கள் வென்றாலும் காளை கொல்லப்படுவது உண்டு, சில சமயங்களில். இறந்த மாட்டை, அந்த மைதானத்தைச் சுற்றி தூக்கிச் செல்வது போன்ற வழக்கங்கள் நமது ஏறுதழுவுதல் எனும் பாரம்பரிய விளையாட்டில் இல்லை, ஏறுதழுவுதல் விளையாட்டில் காளைகளுக்கும் வீரர்களுக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்ப்படக்கூடாது என்பதில் மிக முக்கிய கவனம் கொண்டு செயல்படுவர்.

ஏறுதழுவுதல் விளையாட்டில் கலந்துக்கொள்ளும் மாடுகளுக்கு பயிற்சி வழங்குவது போல, மாடு பிடி வீரர்களும் பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். மாடுபிடி வீரர் கார்த்திக் கூறுகையில் “தினமும் வயலில் வாடிவாசல் அமைத்து அதில் காளைகளை அவிழ்த்துவிட்டு பிடிக்க பயிற்சி எடுத்து வருகிறோம். ஓட்டம்,

மூச்சு, நீச்சல், வேகமாக நடத்தல், கபடி விளையாட்டு போன்றவற்றோடு கண்களுக்கும் பயிற்சி எடுக்கிறோம்." என்றார் வீரர்கள் முக்கியமாக தென்னை மரம் ஏறும் பயிற்சியில் ஈடுபட்டால் கால் தசைகள், மூட்டுகள் இலகுவாகும். கைகள் சொரசொரப்பாகும் தன்மை பெறும். காளையின் கூர்மையான கொம்புகள், திமிலை இருக்கமாக பிடித்துக்கொள்ள இத்தன்மை உதவும். இவ்வாறு மாடு பிடி வீரர்கள் இடைவிடாது பயிற்சி மேற்கொண்டு ஏறுதழுவி வருகின்றனர்.

**காளைக்குப் பயிற்சி மற்றும் போட்டியில் பங்கேற்கும் முறை**

காளைகளை தினமும் காலை 5 முதல் 7 கிலோ மீட்டர் வரை நடைப்பயணமாகக் கொண்டு செல்ல வேண்டும், வாரத்திற்க்கு இரண்டு முறை நீச்சல் பயிற்சி கொடுக்க வேண்டும், காளைகளை மண்ணு குத்த விட வேண்டும். இந்த செயல்முறையால் காளை நன்றாக தெளிந்து விடும் குறிப்பாக காளை நீச்சல் போட்ட பிறகு இஞ்சிச்சாறுகொடுக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட உயரம் வரை குறுக்கு கட்டைகளை அமைத்துக் காளைகளைத் தாண்டவிட வேண்டும். பருத்தி விதை, சோளம், கேழ் வரகு, கொண்டை கடலை,கம்பு போன்றவை ஊர வைத்து அரைத்து நீரில் கலந்து காளைகளுக்கு கொடுக்கப்பட வேண்டும். மேலும் அடர் தீவனமாக சோளம், பசும்புல்,வைக்கோல் போன்றனவும் இக்காளைகளுக்கு உரிய அளவில் கொடுத்து வர இக்காளைகள் வலிமை பெறும். ஊட்டச் சத்து மிகுந்த உணவுகளுடன் தண்ணீர் கொடுக்கவேண்டும், காளையின் திமில் சரியா வண்ணமும் தண்ணீர் கொண்டு தட்டி தடவி கொடுக்க வேண்டும்.

மருத்துவரிடம் ஏறுதழுவுதலில் கலந்துகொள்வதற்கான தகுதிச் சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும். ஏறுதழுவுதல் நிகழ்வு நடைபெறும் இடத்திற்கு ஒரு நாள் முன்பாகவே இக்காளையை அழைத்துச் சென்று வரிசையாக காத்திருந்த பின்பு முறையாக பதிவு செய்யப்படும், அங்கும் இக்காளையை பரிசோதனைக்கு உட்படுத்திய பின்னரே அவற்றை வாடி வாசலுக்கு கொண்டு செல்வர். பரிசோதனையின் போது காளை முழு ஆரோக்கியத்துடன் இருக்கிறதா, இல்லையா எனவும், காளைக்கு மது போன்ற போதைப் பொருள் கொடுக்கப்பட்டுள்ளனவா எனவும் ஆய்வு செய்யப்படும். காளையின் கொம்புகள் மிகக்கூர்மையாக இருப்பின் அதனை மழுங்கச்செய்வர், வாடிவாசலில் காளையின் உரிமையாளர்கள் அதனை கொண்டு செல்வர். பின்னர் வாடிவாசலில் உள்ளவர்களிடம் இதன் மூக்கணாங்கயிறை கொடுத்துவிட்டு உரிமையாளர்கள் வெளியே சென்று காளையை ஆரவாரப் படுத்துவர், மூக்கணாங்கயிறினை அறுக்கப்பட்ட பிறகு காளை மாடுபிடி வீரர்களை நோக்கிச் சீறிப்பாயும்.

தொன்றுதொட்டே ஏறுதழுவுதல் களத்தில் காங்கேயம் காளைக்கு என்றும் சிறப்பிடம் உண்டு. காங்கேயன் காளையின் தோற்றமே மாடுபிடி வீரர்களிடம் பெரும் அச்சத்தை ஏற்படுத்தும், காங்கேயம் காளையை அடக்குபவர்க்கு கொடுக்கப்படும் பரிசுப் பொருளும் மதிப்பும் சற்று அதிகமானதே, இந்த ஏறுதழுவலில் காளை வெற்றிபெற்றது என்றால் அப்பரிசு பொருட்கள் காளையின் உரிமையாளர்கள் பெறுவார்கள், வாடி வாசலில் நின்னுகுத்தி காளைகளுக்கு என சிறப்பிடம் உண்டு. மாடுபிடி வீரர்களிடம் பிடிபடாமலும் ஆட்டகளத்தில் நின்று விளையாடும் காளைகளை போட்டியின் முடிவில் சிறந்த காளையாக தேர்ந்தெடுப்பர். இவ்வாறு காங்கேயம் காளைகள் ஏறுதழுவுதலில் தனக்கென தனி

முத்திரை பதித்தாலும் சிறு வயது முதல் இதனை பேணிப் பாதுகாத்து பயிற்சி அளிக்கும் சமயங்களில் இதற்கான செலவு மட்டுமே வருமானம் என்பதை எதிர்பார்க்க இயலாது இதுவும் இவ்வின மாடுகளின் அழிவுக்கு ஒரு காரணமாகவே கருதலாம்.

**ஏறுதழுவுதலில் வீரர்களுக்கு ஏற்படும் காயங்கள்**

ஏறுதழுவுதலில் கலந்துகொள்ளும் மாடுகள் வளர்ப்பவர்களால் மாடுபிடி வீரர்கள் மாட்டை தொடாத வண்ணம் உருமாற்றுவது வழக்கம். ஜூனியர் விகடன் 15,2006 அன்று வெளியான பேட்டி ஒன்றில் அய்யனார்குளம், போஸ் என்பவர் மாடுகள் வளர்க்கும் விதம் குறித்து கூறுகையில் கன்று பிறக்கும்போதே கூறு தெரிந்துவிடும், பெரும்பாலும் அவுங்கவங்க வளர்க்கிற மாடு ஈன்ற காளைகளைத்தான் ஜல்லிக்கட்டு காளையாக வளர்க்கணும் அப்போதுதான் நல்லா முட்டுற மாதிரி பழக்க முடியும். தெற்கத்தி காளையை விட செம்மண் பூமியான மதுரை மண்ணில் பிறந்த காளைதான் நல்லா பாயும் , காளை சின்ன வயசா இருக்கும்போதே முட்டுறதுக்கு பழக்கணும், சாக்குப் பையில வைக்கோலை திணுச்சு ஒரு நபர் போல பொம்மையை உண்டாக்கி அதுக்குமேல சிவப்பு சாயத்த ஊத்திவிட்டு காளையோட முன்னாடி வைத்தால், சீறிக்கிட்டு காளை முட்ட ஆரமிக்கும் என்று கூறினார்.

ஆனந்த விகடனில் 15,01,2006 அன்று ராஜேந்திரன் என்பவர் அளித்த பேட்டியில் ''உண்டு உறங்க இருந்தா மாடு சோம்பிப் போயிரும்னு இவுகளச் சும்மா இருக்க விடாம சீண்டிக்கிட்டே இருப்போம். பெரு வெட்டுப்பழங்கள மொதல்ல உருட்டிவிட்டு கொம்பால குறிவெச்சுக் குத்தப் பழக்குவோம்,

அப்புடியே சாத்துக்குடி கொய்யா, எழுமிச்சை, நெல்லின்னு கொம்புல குத்தி எடுக்குறவரை பழக்குவோம் என்றும்.

“நல்ல சாதிக் காளைய இப்பிடிப் பாய்ச்ச காட்டுற வேகம் கொறையாம வளக்குறது பெரிய வேலை, ஏதுனா ஒரு பசு மாட்ட பாத்துருச்சின்னா பின்னாடியே போய்ச் சாய ஆரமிச்சிரும். அப்புடி கூடிருச்சின்னா அம்புட்டுத்தான், வீரியம் கொறைஞ்சு போகும். அப்புறம் பாயுற வேகம் மட்டுப்பட்டு, மந்தையில கவனம் போயி, பால்மாடுக மேல நாட்டம் போயிரும். அதுனால கண்ணுல வெளைக்கெண்ணையைவுட்டு கண்காணிப்போம். எங்க ராமு எதோடவும் கூடல அந்த வேகமும், வெறியும்தான் ஏறுதழுவுதல் போட்டிகளில் சிறப்பாக விளையாட முடிந்தது.

இவ்வாறு பயிற்சி எடுக்கப்பட்ட காளைகள் களத்தில் மாடுபிடி வீரர்களுடன் இறக்கப்படும்போது காளைகளால் காயங்கள் ஏற்படுகிறது, சிலவேளைகளில் உயிருக்கும் ஆபத்தை விளைவிக்கிறது, காயங்களின் வகைகளும் அதன் பாதிப்புகளையும் கள ஆய்வில் அறிய நேர்ந்தது.

ஏறுதழுவுதல் விளையாட்டில் கலந்துகொள்ளும் மாடுபிடி வீரர்களின் உடலின் அனைத்துப் பகுதிகளிலும் காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது, நொடிப் பொழுதில் மரணங்கள் நேர வாய்ப்புள்ளது, முறையான பயற்சியும், கவனமும் தேவை, ஏறுதழுவுதலில் வீரர்களுக்கு ஏற்படும் காயங்களாக.

**தலை**

மாடுபிடிவீரர்கள் காளையைப் பிடிக்கும் முயற்சியில் கீழே விழுவதாலோ அல்லது காளையால் அவர்கள் தூக்கி எறியப்படுவதாலோ தலையில் பெரும்

காயம் ஏற்படுகிறது. முகத்தில் காளையின் கொம்புகளின் கூர்மையால் குத்துக் காயங்கள் உருவாகின்றன.

**கழுத்து**

காளையின் கொம்பு குத்துவதன் விளைவாக மூச்சுக் குழாயில் துளை ஏற்படுதல், காளை தூக்கி எறிவதாலும், தலைகீழாக விழுவதாலும் கழுத்தில் காயங்கள் உண்டாகின்றன.

**தண்டுவடம்**

கீழே விழுவதாலோ, காளையால் குத்தப்படுவதாலோ தண்டுவடம் சேதமடைதல், முதுகின் கீழ்ப்புறத்தசை இறுக்கமுறுதல் ஆகிய பாதிப்புகள் ஏற்படுகின்றது,

**நெஞ்சு**

நெஞ்சில் அடிபடுவதால் நுரையீரல் சேதமடைதல், விலாவெலும்புகள் முறிதல், நுரையீரல் திரைப்பகுதியில் இரத்தம் கட்டுதல்,போன்ற பாதிப்புகள் ஏற்படும்.

**அடிவயறு**

75 சதவீதம் காளை முட்டுவதால் மாடுபிடி வீரர்களுக்கு அடிவயிற்றில்தான் பலத்த காயம் ஏற்படுகிறது, குடல் துளைப்பட்டுச் சரிதல், கல்லீரல் மண்ணீரல், வயிற்றுப்பகுதி சேதமுறுதல். போன்ற துன்பத்தை அடைகின்றனர்.

**பிறப்புறுப்புப் பகுதி**

ஆண் பிறப்புப்புறுப் பகுதியில் மாடுபிடி வீரர்களுக்கு சேதம் ஏற்படுவது வழக்கமாக நிகழ்கிறது. இதனால் ஆண்மை இழப்பதும் உண்டு, மேலும் இடுப்பெழும்பு முறிவும் ஏற்படலாம்.

**ஏறுதழுவல் தொடர்பான நிகழ்த்துக் கலைகள்**

மதுரை மாவட்டத்தில் உள்ள நாட்டுப்புற கலைஞர்கள், மாடு போன்று முகமுடி அணிந்துகொண்டு ஆடுவது, திருவிழா மற்றும் பிற நிகழ்ச்சியில் பங்கேற்று ஏறுதழுவுதல் நிகழ்வினை நினைவுப் படுத்தும் விதமாக ஆடுவர்.

இராமநாதபுரம் பகுதிகளில் நிகழ்த்தப்படும் ஜிப்ளா மேளம் எனும் ஆட்டம் ஏறுதழுவதலை நினைவு கூறும் வகையில் அமைந்துள்ளது. 7 அல்லது 8 நடனக்கலைஞர்கள் பங்கேற்பர். ஏழுவரில் ஒருவர் தன்னை ஏறு போல உருவகப்படுத்திக் கொண்டு விளையாட்டு காட்டுவார். பிறர் அவரை அடக்குவது போல நடித்துக் கொண்டே ஆடுவர். பின்னர் மாடு பிடிப்பவர்கள் போல உள்ளவர்களில் ஒருவர் மாடாய் மாறி விளையாட்டு காட்டுவர், மாடாய் இருந்தவர் மாடு பிடிப்பவராக மாறுவார். இவ்வாறு ஒவ்வொறு கலைஞனும் ஏறாகவும், ஏறு பிடிப்பவராகவும் நடித்து ஆடுவர்.

ஒரு குன்றின் மீது பாறைகளில் மக்கள் அமர்ந்திருக்க, இடையில் உள்ள தரைப்பகுதியில் மாடு பிடித்தல் நடக்கும். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சில காலங்கள் முன்பு வரை ஏறுதழுவுதல் போன்ற நிகழ்வு நடந்துள்ளது.

**ஏறுதழுவுதலும் காவல் துறையும்**

ஒவ்வொரு ஏறு தழுவுதல் நிகழ்விலும் பங்கேற்கும் காளைகளின் எண்ணிக்கை மற்றும் வீரர்களின் எண்ணிக்கை, பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை போன்றவை கணக்கிடப்படும் , ஒவ்வொரு நிகழ்வின் கால அளவும், ஏறுதழுவுதல் நடைபெறும் இடங்களுக்குள் வரையறுக்கப்பட்ட பகுதிகளில் தேவையான வசதிகள், இரட்டை தடுப்புகள் அமைத்தல், ஏறுதழுவுதல் களத்தில் காளை ஓடும் பகுதிக்குள், கூட்ட நெரிசலைத் தவிர்த்தல், காளை மிருகவதைக்கு ஆளாக்காமல் இருத்தல், பார்வையாளர்கள் காயமடையும் அபாயம் ஏற்படாமல் இருத்தல் மற்றும் பிற நடவடிக்கைகள், ஆகியவை குறித்து இந்திய விலங்குகள் நல வாரியத்தின் குழுத்தலைவர் மூலம் ஆலோசிக்கப்பட்ட பிறகுதான் செயல்படுவர், காவலில் ஈடுபடும்போது காளை தாக்கி தப்பிய காவலர்களையும், களத்தில் விளையாடும் காளையின் உரிமையாளர் களையும் ஏறுதழுவுதல் நிகழ்வுகளில் காண முடிகிறது, மேலும் ஏறு தழுவுதல் தடைக்கான போராட்டத்தில் பாதுகாப்பில் ஈடுபட்ட காவலர் போராட்டத்திற்கு ஆதரவாக பேசி தனது வேலையை இழக்கும் சூழலும் உருவாகியும் உள்ளது என்பது குறிப்பிடதக்கது.

**விவசாயமும், கால்நடையும்**

இன்று நாம் விவசாயத்திற்கு பெருவாரியாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கும், இயந்திரக்கலப்பை மற்றும் சிறிய அளவிலான இயந்திரக்கலப்பைகள் நாட்டு இன மாடுகளின் அழிவிற்கு மிக முக்கிய பங்கு வகிக்கின்றன. பல்லாயிரம் ஆண்டுகளாக விவசாயம் சார்ந்த வேலைகளுக்கு மனிதர்களின் உற்ற தோழனாக இம்மாடுகளே பயன்பட்டது குறிப்பிடத்தக்கது. காளைகள் உழவு நேரங்களில் நிலத்தை உழுவதற்கும், ஏற்றம் இறைப்பதற்கும், வண்டி பூட்டி பாரம் இழுப்பதற்கும்,

எண்ணைக்கு வேண்டி செக்கு இழுக்கவும் பயன்பட்டு வந்தன. மேலும் மண்ணிற்கு தேவையான இயற்கை உரமும் இம்மாடுகளில் இருந்து பெறப்பட்டது, மண்ணானது காளைகளின் கால்கள் பட்டுதான் விளைநிலம் எனும் பொன்னாக மாறியது என்று கூறினால் அது மிகை இல்லை.

நவீன மாற்றம் என்பது நிகழ்ந்து கொண்டுதான் இருக்கும் இதனால் மனித இனத்தின் வேலைப் பழு குறைவு என்றாலும் பாரம்பரியமாக கிடைத்த ஆரோக்கியத்தை நாம் ஒரு புறம் இழக்கிறோம் என்பதே உண்மை. காளை வண்டிகளின் எண்ணிக்கை குறைந்து, மோட்டார் வாகனங்களை பயன்படுத்துவதால் சாலை விபத்துக்களும், நெரிசல்களும், மட்டுமின்றி நாம் சுவாசிக்கும் காற்று மாசு உருவாகவும் காரணமாகின்றது, இவ்வாறு காளைகள் மிக முக்கிய பயன்பாடுகளின் பட்டியலில் விடுபடுதல் ஒரு புறமிருக்க, நம்பிக்கை, வீரம், பொழுதுபோக்கு, பரிசு, மரியாதை போன்ற காரணங்களை மையமாகக் கொண்டு நடைபெற்ற காளை சார்ந்த விளையாட்டுக்களான ஜல்லிக்கட்டு, ரேக்களா பந்தையம், மஞ்சு விரட்டு, வடம் ஜல்லி, எருது கட்டும் திருவிழா போன்றவற்றிலும் மிருகவதை போன்ற வழக்குகளால் பல மாற்றங்கள் ஏற்பட்டதால் நாட்டு இன மாடுகளின் எண்ணக்கை குறையத்தொடங்கியது.

**நாட்டு மாடுகளும், சீமை மாடுகளும்**

பண்டைய தமிழகத்தில் தற்போது உள்ளது போல இல்லாமல் இயற்கையை ஒன்றிய நிலப்பரப்பு தேசங்களாக நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது, தேசங்களின் உட்பிரிவுகள் நாடுகள் ஒவ்வொரு நாட்டுக்கும் ஒவ்வொரு மாடுகளின் வகைகள் இருந்தது அவை பெருமளவில் குறைந்து இருந்தாலும் தற்போதும் சில வகை மாட்டு இனங்கள் எஞ்சி உள்ளன. இந்த நாட்டு மாடுகளை அடையாளம் கண்டு

இனப்பெருக்கம் செய்வதன் மூலம் மிக அரிய மரபுச் செல்வத்தை தக்க வைத்துக் கொள்ள வாய்ப்பு உள்ளது.

நாட்டு மாடுகளும் சீமை மாடுகளும் இரண்டும் ஒரே உயிரினத்தின் வெவ்வேறு வகை என்று பலர் நினைப்பது முற்றிலும் தவறாகும், நாட்டு மாடு, சீமை மாடு இரண்டும்வெவ்வேறு ஆகும், அவை தற்கால அறிவியல் உலகம் ஒவ்வொரு இனத்திற்கும் கொடுக்கும் உயிரியல் பெயரைக் கொண்டு அறியலாம், நாட்டு மாடுகள் - (பாஸ்இண்டிகஸ்) திமிலுள்ளவை, சீமை மாடுகள்- (பாஸ் டாரஸ்) திமிலற்றவை இவ்விரு மாட்டு இனங்களின் வேறுபாடுகள் பின் வருமாறு காண்போம்.

| **நாட்டு மாடுகள்** | **சீமை மாடுகள்** |
|---|---|
| நமது நாட்டின் சூழலுக்கு ஏற்ற மாட்டு இனம். | வெளிநாட்டு மண்ணின் சூழலுக்கான ரகம். |
| வியர்வை சுரப்பி உண்டு. | வியர்வை சுரப்பி கிடையாது. |
| நீர் மற்றும் தீவன எடுப்பு ஒரு பங்கு. | நீர் மற்றும் தீவன எடுப்பு மூன்று பங்கு. |
| மிக அதிகமான நோய் எதிர்ப்பு ஆற்றல் கொண்டவை. | விரைவில் நோய் தாக்கும் தன்மை கொண்டவை. |
| காளை கன்று 20,000 வரை விலை போகும் 4 டன் பாரம் இழுக்கும் தன்மை கொண்டவை. | 4 ஆயிரத்திற்கு கூட விலைக்கு போகாது 100 கிலோ கூட பாரம் இழுக்காது. |
| வறட்சி காலகட்டங்களில் இளைத்தாலும் தேறிவிடும். | ஒருமுறை இளைத்தால் மீண்டும் தேறாது. |

| நாட்டு மாடுகள் | சீமை மாடுகள் |
|---|---|
| A2 வகை எனப்படும் பால் கொடுக்கும். | A1 பால் எனும் நோய் மூலக்கூறுகளை கொண்ட பாலைத் தருபவை. |
| திமில் உண்டு (முதுகின் மேடு) | திமில் இருக்காது. |
| நமது மண்ணுக்கு ஏற்ற அரிதான 33 கோடி நுண்ணுயிர்களை சாணத்தின் வழியாக வெளியேற்றுவதை அவை மண்ணையும் உயிர் சூழலையும் காக்கும் | நுண்ணுயிர்கள் அதிகம் கிடையாது அதுவும் வெளிநாட்டு மண்ணுக்கான நுண்ணுயிர்கள் நம் மண்ணில் விழுந்தவுடன் இறந்துவிடும் |
| திமில் காணப்படும் | திமில் இருக்காது |
| குறைந்த பராமரிப்பு போதுமானது | அதிக பராமரிப்பு தேவைப்படும் |

தமிழகத்தில் மிக முக்கிய நாட்டு மாடுகளாக கருதப்படுபவை ஆலம்பாடி, காங்கேயம், பர்கூர், தேனி மலைமாடு, உம்பலச்சேரி போன்றவையாகும். இதில் தமிழகத்தில் கொங்குமண்டலத்தை பிறப்பிடமாகவும், உலக அளவில் பெயர் பெற்றுத் திகழும் காங்கேயம் இன காளைகளைப் பற்றியும், கங்கேய மாட்டின் வரலாறு மற்றும் வளர்ப்பு முறை பயன்பாடுகள் போன்றவற்றையும் அறிய வேண்டியது அவசிமாகின்றது.

**காங்கேயம் காளையின் தோற்றம்**

காங்கேயம் காளைகள் திருப்பூர், ஈரோடு, கரூர் நாமக்கல் போன்ற பகுதிகளில் மிகுதியாக காணப்படுகிறது. தென்னிந்தியாவின் மிகமுக்கியச் சின்னமாக காங்கேயம் காளை விளங்குகிறது. தமிழில் கொங்கர் மாடு அல்லது கொங்கமாடு எனவும் தெழுங்கில் கங்க மாடு எனவும் அறியப்படுகிறது.

பொதுவாக காங்கேயம் காளையின் கண்கள் பளிச்சென்று காணப்படும், மூக்கின் துவாரங்கள் பெரிதாக காட்சி அளிக்கக் கூடியவை, வளைந்து நிமிர்ந்த கூறான கொம்புகள், அடங்காமல் ததும்பும் திமில்கள், இதன் அமைப்பு நீளமாக இருக்கும், இதன் கால்களின் குளம்புகள் விரிந்த நிலையில் அல்லாமல் வட்டகுளம்பாகக் காட்சி தரும், விளா எழும்புகள் விரிவுகளுடன் காணப்படும், மிகுந்த அன்பு கொண்ட இவை சினமிக்கனவாக காணப்படுகின்றன, வறட்சி காலங்களில் பணை ஓலைகளை மட்டும் உட்கொண்டு உயிர் வாழும் திறன் கொண்டவை நான்கு முதல் ஐந்து டன்கள் வரை எடையை கழுத்தளவு நீரிலும் இழுத்துச் செல்லும் ஆற்றல் பெற்றது, விவசாயம் மற்றும் பொலிக்காளைகளாகவும், ஜல்லிகட்டுகளுக்காகவும், ரேக்ளா பந்தையத்திற்காகவும் பயன்படுத்தி வருகின்றனர், காங்கேயம் இனங்களில் மயிலை, செவளை, காரி போன்றவை முதன்மை வாய்ந்தவையாகும். குரா, செவள, காரி, புலிச்சார போன்றவை அருகி வருகின்றன. பண்டுதொட்டு மயிலைக் காளை தரமான காங்கேயம் காளையாக கூறப்பட்டு வருகின்றது, காங்கேயம் காளைகள் 2000ம் ஆண்டில் 12 லட்சத்திற்கும் அதிகமாக இருந்த காங்கேயம் காளைகள் தற்போது 2 லட்சத்திற்கும் குறைவாக காணப்படுகின்றன.

**காங்கேயம் காளை இனத்தின் வரலாற்றுச் சான்றுகள்**

1909 ம் ஆண்டு (Cattle Of Southern India) கர்னல் கன் என்பவர் எழுதிய நூலில் காங்கேயம் பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளது. மேலும் இதன் விரிவாக லிட்டில்வுட் என்பவர் (Livestock Of Southern India) எனும் நூலில் காங்கேயம் இன மாடுகளை பற்றி கீழ்க்காணுமாறு குறிப்பிட்டிருந்தார், இவ்வின

மாட்டின் பெயர் காங்கேயம் என்றாலும் உடுமலை, பொள்ளாச்சி, பல்லடம், தாராபுரம், மற்றும் ஈரோடு போன்ற பகுதிகளில் காணப்படுகிறது, மேலும் காங்கேயம் வகையரா உருவத்தில் பெரியதான மாடுகள் கரூர், அரவக்குறிச்சி, திண்டுக்கல் போன்ற வட்டாரங்களில் காணப்படுகிறது, பழைய கோட்டை மன்றாடியார், காடியார் முன்சீப் மானியக்காரர், போன்றோர் 500 முதல் 1000 மாடுகளை நன்கு பராமரித்து வளர்த்ததாகவும் அவற்றை இனவிருத்திக்கு பயன்படுத்தினர், இவ்வின மாடுகள் தமிழகத்தின் தென்மாவட்டங்களில் நெல்லை, மதுரைக்கு வாங்கிச் செல்லப்பட்ட காளைகள் நன்றாக இருந்ததாக குறிப்பிடுகிறார். மேலும் சந்தைகளில் காங்கேயத்திற்கு நல்ல விலை கிடைத்ததால் காளைக் கன்றுகள் பிறப்பதற்காக பசுக்கன்றுகளையும் நன்கு பராமரித்து வளர்த்தனர். காங்கேயம் காளைக்கு மக்களிடையே நல்ல வரவேற்பு காணப்பட்டது.

நரசிபுரம் பெருங்கற் சின்னத்தில் கிடைத்த காளைகளின் உருவ பொம்மையும், போளுவாம்பட்டியில் மாட்டின் செப்பும் கோவை மாவட்டம் அவினாசியில் உள்ள காமநாயக்கன் பாளையத்தில் கால்நடைகளின் கல்மாறி (Fossil) புதைந்து கிடப்பதன் மூலம் கால்நடை வளர்ப்பின் தொன்மை அறிய முடிகிறது. மேலும் பத்திற்றுபத்துபாடல்வாயிலாக,

*பொன்செய் கணிச்சித்தின் பிணியுடைத்துச் ஆகெழு கொங்கர் நாடு' (பத்திற்றுப்-22)*

கொங்கு நாட்டு மக்கள் கால்நடைகளுக்கு வேண்டி கிணறு வெட்டியது தெரிகிறது, கொங்கு மண்டலத்தின் பல பகுதிகளில் கால்நடைகளுக்கு ஏற்ற புற்கள் வளர்ந்து காணப்பட்டது, இவ்வாறான புற்கள் செழித்து வளர அந்நிலப்பரப்பில் சிறு சிறு ஓடைக்கல் பரவி கிடந்தது அவை புவியின்

ஈரத்தன்மையை காத்தது எனவே கால்நடைகளுக்கு தேவையான புற்கள் மிகுதியாக அங்கு வளர்ந்தன.

**தபால்தலையில் காங்கேயம் காளை**

நமது நாட்டின் தபால் துறையானது நாட்டின் மிக முக்கிய தலைவர்கள், பறவைகள், விலங்குகள், சின்னங்கள் போன்றவற்றை தபால் தலைகளாக தயாரித்து வெளியிடுகிறது. இதில் விலங்குகளில் இந்தியாவின் மிக முக்கிய மாட்டினங்களின் உருவங்கள் நான்கினை வெளியிட்டுள்ளது, அதில் சிறப்பு மிக்க காங்கேயம் காளையும் அடங்கும். இத்தபால் தலையானது 20-04-2000 ஆண்டு வெளியிடப்பட்டது. இதில் காளையின் கம்பீரமான காட்சி இடம், தபால் தலைகளில் காங்ரேஜ், ஹலிக்கர், கிர் போன்றவை மாட்டு இனங்களும் இடம்பெற்றுள்ளன.

**பெத்த நாச்சியார்**

சிவன் எருதுடன் நிற்பது போன்றோ அல்லது காளையின் மீது அமர்ந்தது போன்றோ நாம் பெரும்பாலும் காண்டுள்ளோம், பெத்த நாச்சியார் அதாவது பொள்ளாச்சி அருகில் உள்ள பெரிய களந்தை என்ற ஊரில் கோயில் கருவறையில் காளையின் மீது அமர்ந்த தேவியை வழிபட்டு வருகின்றனர். காளையின் மீது அமர்ந்து காட்சி அளிக்கும் பெண் தெய்வம் இதுவே ஆகும்.

**பள்ளி**

முற்காலங்களில் கால்நடை வளர்ப்போரின் இருப்பிடத்தை பள்ளி என்றனர், “புதுப்பள்ளிகளோடு சென்று எறிந்துபட்டான்” எனும் வாக்கியம் வட தமிழ்நாட்டில் கிடைத்த ஒரு நடுகல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த நடுகற்களானது

மாடுபிடி சண்டையில் இறந்த வீரர்களுக்கு எடுக்கப்பட்டவையாகும். காவும், பள்ளியும் என பத்துப்பாட்டில் ஒன்றான மலைபடுகடாமில் 451 குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தகுகால்நடை மேய்போர் குடியிருப்பு என நச்சினார்க்கினியர் கூறுகின்றார். அன்னூர் கல்வெட்டில் ஆன்பாதி என்னும் சொல் ஆன்பசுவைக் குறிக்கின்றது, தொடக்ககாலத்தில் கால்நடை மேய்ப்பவர்கள் தங்கி இருந்த ஊராக பாடி எனும் ஊர்கள் இருந்திருக்க வேண்டும்,

**மன்றம்**

மன்றம் மன்று போன்ற சொற்கள் ஊர் போதுவிடத்தைக் குறிக்கும், ஊரின் அனைத்து பொதுக் காரியங்கள் நடக்குமிடமாகும்.

"கன்றும், நிரையும் மன்று என்கோ"

என்கிறது புறநானூற்று பாடல் கவர்ந்து வந்த நிரைகளை மன்றில் கொண்டு வந்து நிறுத்துவர் என்பதை இப்பாடலடிகளால் நாம் உணர முடிகிறது மன்றம், மன்று ஆகிய சொற்கள் ஊர் பொதுவிடத்தை குறிக்கிறது,

கோயில் காளைகளை தன் பொறுப்பிலே வைத்துக்கொண்டு கோயிலுக்கு நெய்யளப்பவன் மன்றாட்டினை ஆள்பவனாகக் கொள்ளப்பட்டான் என மன்றாடி பற்றிய செய்திகள் கொங்கு நாட்டு கல்வெட்டில் கிடைக்கின்றது,

கோவில் பொருளாதாரமும் வேளாண் வளர்ச்சியும் இணைந்து நின்றதால் மன்றாட்டு என்ற அமைப்பு உருவாகிற்று இவை கால்நடை வளர்ப்பிலிருந்து வேளாண்மைக்கு மாறிய பின்பும் வேளாண்மைக்கு உரிய சொல்லாக மாறிவிட்டது என கல்வெட்டின் வாயிலாக அறியமுடிகிறது.

**படல்**

ஆடுகளுக்கு எவ்வாறு பட்டி அமைத்து பேணி பாதுகாக்கப்பட்டதோ அதுபோல காங்கேயம் இன மாடுகளுக்கு படல் அமைத்து பாதுகாக்கப்பட்டது. இதற்குக் காரணம் பல்லடம், காங்கேயம், தாராபுரம் போன்ற பகுதிகளில் பங்குனி முதல் ஆவணி மாதம் வரை பலத்த காற்று காணப்படும் இக்காற்றிலிருந்து அவற்றை காக்க இரவு நேரங்களில் பட்டிகள் உருவாக்கி காத்து வந்தனர், இப்படல்கள் இடமாற்றம் செய்வதால் வயல் வெளியில் மாடுகளின் சாணம், கோமியம் போன்றவை உரங்களாகக் கிடைக்கிறது, மாடுகளுக்கு ஒட்டுண்ணி தாக்கம் இருப்பதில்லை இவ்வாறு காங்கேய மாடுகள் படல் அமைப்பில் புழங்குவதால் கடுமையான வறட்சியிலும், கோடைகாலங்களிலும் தாங்கி நிற்கிறது. காங்கேயம் காளை வளர்ப்பில் இப்படல் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக குறிப்பிடப்படுகின்றது,

**காங்கேயம் காளையில் முதன்மை வாய்ந்த இனங்கள்**

காங்கேயம் மாடுகளில் முதன்மையானவையாகவும், மிக முக்கியமானவையாகவும் மயிலை, செவளை, காரி போன்ற இனங்களை குறிப்பிட்டுச் சொல்லலாம் .

மயிலையில் வெளிர் மயிலை, வெள்ளூட்டு மயிலை, கருகா மயிலை,கரம்ப மயிலை போன்ற பல வகைகள் காணப்படுகின்றன.

சந்தனப்பிள்ளை, இரத்தவெள்ளை, நாய் செவளை என செவளையில் பலவகை சொல்லப்படுகின்றன.

வெறுப்புக்காரி,வெள்ளூட்டுகாரி, செம்பூட்டுக்காரி போன்ற மாட்டு இனங்களும் காரி இனத்தில் உள்ளன.

**காங்கேயம் மாடுகளின் கிளை இனங்கள்**

காங்கேயம் காளைகளைக் கொண்டு உருவாக்கிய இனங்களே அதன் கிளை இனமாகக் குறிப்பிடப்படுகிறது, இக்கிளை இனங்கள் பல இருப்பினும் அதில் தனித்தன்மையும், சிறப்பும் வாய்ந்தவையாக சில மாட்டினங்களாவன புளிக்குளம் காளை, உம்பளசேரி,மணப்பாறை ஆகிய இனங்களை குறிப்பிடலாம்.

**புளிக்குளம் காளை**

ஒரு காங்கேயம் விவசாயி நூறு மாடுகளையும் ஐம்பதிற்கும் மேற்பட்ட கன்றுகளை தொழுவத்தில் அடைத்து வைத்து விட்டு சென்றுவிட்டார். மறுநாள் தொழுவத்தை வந்து பார்க்கையில் மாடுகள் அனைத்தும் இருக்க அங்கு வந்த புலி இறந்து கிடந்தது, புலிகளிடமிருந்து பசுக்களையும் கன்றுகளையும் காக்கும் திறன் அக்காளைகளுக்கு காணப்பட்டது. அதனால் அவை புலிகுளம் காளை என அழைக்கப்பட்டது. இந்நிகழ்வுக்குப்பின் காங்கேயம் இனங்களில் மிக முக்கிய இனமாகக் புளிக்குளம் காளைகருதப்படுகிறது.

இவ்வகை காளைகளின் கொம்புகள் வட்ட வடிவில் காணப்படும், அதன் நுனிக் கொம்பானது யாரை தாக்குகின்றதோ அவர்களின் இதயத்தை நோக்கி பாயும் தன்மை கொண்டது இவ்வகை காளைகள் மிகவும் ஆபத்தானவை என்பதால் பெரும்பாலும் ஏறுதழுவுதலில் பயன்படுத்தப்படுவதில்லை. என்கிறனர். ஆனால் அண்மைக் காலமாக இவ்வினக் காளைகளும் ஏறுதழுவுதலில் இடம் பெறுகின்றன.

**உம்பளசேரி**

உம்பளசேரி காளைகள் தமிழகத்தில் தஞ்சை, நாகப்பட்டினம், போன்ற மாவட்டங்களில் காணப்படுகின்றன. இவை வேகமாக வண்டி இழுக்கும் திறன் கொண்டவை, உழவுக்கு சிறந்த மாட்டினம் ஆகும், இம் மாடுகள் நிலத்தை உழுது செல்லும்போது தனது கால்களை உயரே தூக்கி அடி எடுத்து வைத்துச் செல்லும் திறன் கொண்டவையாகும். இவை வறட்சியையும் தாங்கி நிற்கும் குணம் கொண்டது, இவை பெரும்பாலும் உணவாக நீரும், புற்களும் மட்டும் விரும்பும் தன்மை கொண்டவை, இதனால் சிறப்பு உணவுகள் இதற்கு கொடுக்கத் தேவையில்லை, இவ்வகை இனங்களின் பசுமாடுகள் ஒன்றிலிருந்து இரண்டு லிட்டர் பால் கொடுக்கும், இவை ஒரு குறிப்பிட்ட வயதில் நிறம் மாறும் தன்மை கொண்டவை, இவ்வின மாடுகளுக்கு நோய் எதிர்ப்பு திறன் மிகவும் அதிகம் ஆகும்,

ஆட்டுக்காரி, வெள்ளையப்பன் என்ற உட்பிரிவு இவ்வினங்கள் காணப்படுகின்றன, வெள்ளையப்பன் எனும் விவசாயி இவற்றை எடுத்து வளர்த்ததால் இவ்வினத்திற்கு அவ்விவசாயின் பெயரே இம்மாட்டு இனத்தின் பெயராக மாறியது,

ஆட்டுக்காரி 100 வருடத்திற்கு முன்பு, இராமநாதபுரம் மாவட்டத்தில் கெடா ஆடுகளை ஓட்டிச் சென்ற போது புளிக்குளம் காளையையும் கொண்டு சென்றாள், அங்குள்ள தஞ்சை பசுவுடன் இணைந்ததால் இவ்வினம் உருவானது இதனால் இவ்வினத்திற்கு ஆட்டுக்காரி என்ற பெயர் உருவானது.

உம்பளசேரி மாடுகள் வீட்டிற்கு நல்லது, இதனை பஞ்ச கல்யாணி என்பர், இவற்றின் கால்கள் அனைத்தும் வெள்ளை, வால் வெள்ளை, தாடைக்கு

அடியிலும் வெள்ளை, வயிறு மற்றும் நெற்றிப் பகுதிகளிலும் வெள்ளை நிறம் அமைந்துள்ளது. இவை பிறந்த ஒரு வருடத்தில் இதன் கொம்புகள் சூடு போட்டு மழுங்கடிக்கப்படுகின்றன, எனவே கொம்பில்லா மேலை மாடு என்று இவற்றைக் குறிப்பிடுகின்றனர், இவை வெயில் காலங்களில் மரநிழல் தேடும் வெயிலில் வேலை செய்யத் தயங்கும், இவ்வின மாடுகள் கூட்டம் கூட்டமாகவே புற்கள் மேயும், இவை வேறு இனமாடுகளுடன் இனக்கலப்பு செய்யாது, இதன் சாணம், கோமியம் போன்றவை நிலங்களுக்கு உரமாகப் பயன்படுகிறது,

உம்பளசேரி மாடுகள் ஏறு தழுவுதலில் மிகுதியாக பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஏறுதழுவுதலில் மாடுபிடி வீரர்கள் எட்டிப் பிடிக்கும் அளவுக்கே இதன் திமில்கள் அமையப்பெற்றதே இதற்குக் காரணம். ஆனால் இயல்பாகவே இவ்வகை காளைகளுக்கு குறும்பு மிக அதிகம் என்பதால் இதன் திமிலை கட்டிபிடிப்பது சிரம மாகவே இருக்கும்.

**மணப்பாறை**

மணப்பாறை என்றவுடன் நம் நினைவுக்கு வரும் முறுக்கு எப்படியோ அதேபோல், மணப்பாறை மாடு காட்டி மாயாபுரம் ஏறு பூட்டி, எனும் திரைப்படப்பாடலும் நம் நினைவில் கொள்ளதக்கது. இவ்வின மாடுகள் மணப்பாறை எனும் இடத்திற்கு இன்றுவரை சிறப்பு சேர்த்து வருகிறன, மணப்பாறை மாடுகள் பார்ப்பதற்கு கடுமையான விழிகளும், சன்னமான கழுத்தும், சிறிய திமிழுடனும் மற்றும் பெரிய காதுகளுடனும் காட்சி தருபவையாகும், 1947 ம் ஆண்டு காங்கேயம் இன மாடுகள் உள்ளூர் மாடுகளுடன் இணைவதால் மணப்பாறை இனம் உருவானதாக திரு. சுப்பிரமணியம் குறிப்பிடுகிறார் கரூர்

மாவட்டம் மணப்பாறை எனும் இடத்தில் நடைபெறும் வாரச்சந்தை மிகவும் பிரபலமானது, இங்கு விற்பனைக்காக காங்கேயம் மாடுகள் கொண்டுவரப்படும் அவற்றை விற்பனை செய்யும் வரை தங்கள் ஊரிலேயே பராமரிக்கபட்டு பின்னர் அதனை விற்பனை செய்கின்றனர். அவ்வாறு விற்பனை செய்யக் கால தாமதம் ஏற்படுகையில் உள்ளூர் மாடுகளுடன் இனக்கலப்பு ஏற்பட்டு இவ்வின மாடுகள் தோன்றுகின்றன, இவ்வின மாடுகள் உழவு வேலைகளுக்கு சிறந்ததாகக் கருதப்படுகின்றது.

**காங்கேயம் மாடுகளைத் தேர்ந்தெடுக்கும் முறை**

பொதுவாக புதிதாக மாடுகளை வாங்க முற்படுபவர்கள் முதலில் கவனம் கொள்வது மாட்டினது சுழிகளைத்தான், இச்சுழிகள் மாடுகளின் நெற்றி ,புடனி, முதுகு, மற்றும் வால் பகுதிகளில் காணப்படும், நெற்றிப் பகுதியில் காணப்படும் சுழியை நெற்றிராசன் என அழைப்பர், மாடுகளின் கொம்புகளின் பின்புறம் காணப்படும் சுழி புடனிராசன் என்பர் கொம்பிற்கு பின்பு கையை வைத்தால் மூன்று விரல்களில் அடங்க வேண்டும்.

முதுகுராசன் என்ற காளையின் திமிலில் இருந்து நான்கு விரல்கள் சுழி நீங்க இருக்க வேண்டும் அவ்வாறு இல்லை என்றால் நீர்ச்சுழி எனவும், முட்டானி சுழி எனவும் அழைக்கப்படுகிறது, இத்தகைய சுழி உள்ள மாட்டை வாங்க மாட்டார்கள், வால் முடக்கு என்பதும் ஒருவகை சுழி ஆகும் வால்புறம் காணப்படும், வால் வெள்ளையாக இருத்தல் கூடாது, கொம்பு கனமாக இருத்தல் கூடாது, காதுகள் சிறிதாக இருத்தல் வேண்டும், அளவான திமில் வேண்டும், ரெட்டை திமில் வேண்டும் கழுத்து அகலமாக இருத்தல் வேண்டும் ,புறம் ஏற்றமாக இருத்தல் வேண்டும், வாலின் கரும்முடியினுள் வெள்ளை நிறமுடி வருவது

பூச்சுக்காளைக்கு பொருத்தமன்று அவற்றை வளர்த்தலும் நன்றன்று, நெஞ்சு அகலமாக இருத்தல் வேண்டும், அவ்வாறு அகலமாக இல்லை என்றால் அந்த மாட்டால் வேகமாக செயல்பட முடியாது வாலானது பயிர் வாலாக இருத்தல் வேண்டும், தொப்புள் அளவான தொப்புளாக இருத்தல் அவசியம். நீண்ட தொப்புள் உள்ள மாடு வளர்ப்பதற்கு உகந்தது அன்று, பின்புறக்கால்கள்வளைவு அல்லாமல் நேராக இருத்தால் அவற்றை வளர்ப்பது நன்றன்று. இவ்வாறு காளையின் சுழியை மையமாகக் கொண்டு காங்கேயம் மாடுகள் தேர்வு செய்யப்படுகின்றது.

**இடம்பெயரும் காங்கேயம் காளை**

சிறப்பும் தனித்தன்மையும் மிக்க எந்த பொருளும் உலகின் பல இடங்களுக்கும் இடம்பெயர்வது இயல்பு, அவை கலை, அறிவு மட்டுமல்லாமல் தானியம், தாவரம் எனும் வரிசையில் விலங்குகளும் வணிக ரீதியாக இடம் பெயர்தல் நடைபெறும். நமது நாட்டிலேயே காங்கேயம் காளைகள் தமிழகத்தைத் தவிர கேரளா, தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகம் போன்ற மாநிலங்களுக்கு வேலை மற்றும் ரேக்ளா போன்ற பந்தையங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. உலக அளவில் தர்பார்க்கர், ஓங்கோல், கிர், காங்கேயம், போன்ற மாட்டினங்கள் கொண்டு செல்லப்பட்டுள்ளன, பிலிப்பைன்ஸ், பிரேசில், மலேயா, போன்ற நாடுகள் காங்கேயம் மாட்டின ஏற்றுமதியில் முதலிடம் வகிக்கின்றன, மலேயாவில் காங்கேயம் காளையானது அந்நாட்டு பசு மாடுகளுடன் கலப்பினம் செய்வதற்காக ஏற்றுமதி செய்கின்றனர், பிரேசில் நாட்டு தேசிய மரபுவளமையம் காங்கேயம் இன மாடுகளை சிறப்பாகப் பேணிப் பாதுகாப்பதில் மிக முக்கிய பங்கு வகிக்கின்றது, மாடுகள் ஆராய்ச்சி மையத்தின் நிறுவனத்தின் தலைவரான

திரு,சேனாபதி அவர்கள், பிரேசிலில் ஒரு பண்ணையில் நூற்றுக்கணக்கான காங்கேயம் மாடுகள் கலப்பு இல்லாமல் பராமரிக்கப்பட்டு வருகின்றன, அங்கிருந்து சில காளைகளை இறக்குமதி செய்யத் திட்டம் இருப்பதாக தனது உரையாடலில் குறிப்பிட்டார், இவ்வாறு காங்கேயம் காளைகள் இடம் பெயர்ந்து நமது பெருமையை உலகிற்கு பறைசாற்றுகின்றன.

**காங்கேயம் மாட்டுச் சந்தை**

தமிழகத்தில் பாரம்பரியமாக நாட்டு மாடுகளை விற்பனை செய்யும் இடங்களில் மிகவும் இன்றியமையாத மாட்டுச்சந்தை திருப்பூரில் இருந்து சுமார் 13 கிலோமீட்டர் தொலைவில் உள்ள பழயகோட்டை என்னும் இடத்தில் நடைபெறும். இங்கு வாரம் தோறும் ஞாயிற்று கிழமைகளில் இச்சந்தை நடைபெறும். காங்கேயம் கன்றுகள் மாதத்தில் இரண்டாம் சனிக்கிழமை அன்று விற்கப்பட்டு வருகின்றன. இச்சந்தையில் மாடுகளை வாங்கிச் செல்வோரின் முகவரியும், விற்றவரின் முகவரியும் பெறப்பட்டு விற்பனைக்கு பின் வரும் பிரச்சனைகளையும் சரி செய்கின்றனர், இங்கு மாடுகள் மட்டுமின்றி மாடுகளுக்கு தேவையான மூக்கணாங்கயிறு முதல் லாடம் வரை விற்கப்பட்டு வருகின்றது.

**ஜல்லிகட்டில் (காங்கேயம் காளை)**

காங்கேயம் இனக் காளைகள் ஜல்லிகட்டிலும் மிகுதியாக பயன்படுத்தப்படுகின்றன. இவ்வின மாடுகள் ஜல்லிகட்டில் தனக்கென ரசிகர்களைக் கொண்டுள்ளது, இவ்வினக் காளைகள் மற்ற காளை இனங்களைப் போலவே கன்றுகளிலேயே இனம் காணுகின்றனர், பொதுவாக இளம் கன்றுகளை மலையோரம் வளர்ந்த கன்றுகளை வாங்க முற்படுவர். காரணம்

மலையோரம் மனிதர்களின் நடமாட்டம் குறைவு என்பதால் அங்கு வளர்ந்த காளைகளுக்கு அதிகமான மக்களை காணும்போது அது சினமும், சீறும் தன்மையும் இயல்பாகக் காணப்படும். ஆனால் காங்கேயம் காளைகள் தன் தோரணையிலேயே மாடுபிடி வீரர்களை கதி கலங்கிடச் செய்யும் தன்மை கொண்டவை, காங்கேயம் கன்றுகள் பிறக்கும்போது இளம் சிவப்பு நிறத்துடன் காணப்படும், ஆறுமாத வயதை அடையும்போது இவை மயிலை நிறமாக மாற்றம் பெறும், இவை இம்மாட்டினங்களின் சிறப்புப் பண்பாகும். இவை 17 கீட்டோ ஸிடிராயிடு என்கிற செயலினால் கண்டறிப்பட்டது. காங்கேயம் காளை கன்றுகள் பிறக்கும்போது அதன் உடல் எடை சுமார் 21 கிலோ முதல் காணப்படும். சுழி மிக முக்கியமாக பார்க்கப்படும். குளம்புகள் விரியாமல் இணைந்தும், கால்கள் மெலிந்தும் காணப்பட வேண்டும். கண்கள் வெளியில் நன்றாக காணப்படும் காளைக்கன்று முட்டும் தன்மை என்பதால் அவ்வகைக் காளையைத் தேர்வு செய்வர். இரண்டு பற்கள் முளைத்த பிறகே காளையின் உருவத்தில் கம்பீரம் தோன்றும். திமில் தோரணையாகக் காட்சியளிக்கும். எனவே இரண்டு பற்கள் முளைத்த பின்னரே இக்காளைகளை ஏறு தழுவுதலில் பயன்படுத்துவது வழக்கம்.

**காங்கேயம் இன மாட்டின் பாதுகாவலர்கள்**

காங்கேயம் மாட்டினை அன்றாடம் பேணிப்பாதுகாத்து வரும் விவசாயப் பெருங்குடி மக்கள், படித்த இளைஞர்கள், கிராம மற்றும் நகர்புற மக்கள் இம்மாடுகளின் நலன்களில் அக்கறைகொண்டு கவனித்து வருகிறனர். இது போன்று தனிமனிதர்கள் மட்டுமின்றி அரசும் தனியார் நிறுவனங்களும் இம்மாடுகளை பாதுகாக்க முயற்சி எடுத்து வருகின்றன.

1947 ம் ஆண்டு இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் (ICAR) காங்கேயம் இன மாடுகளை இனங்கண்டு கால்நடை பதிவுப் புத்தகத்தில் (Hred Book Registration ) பதிவு செய்யும் முறை தொடங்கியது. இந்த கழகத்தின் ஒரு அங்கமாக விளங்கும் (National Bureau Of Animal Genetic Resources) தேசிய விலங்கின் மரபு வளப்பெட்டகமானது உள் நாட்டு இனங்களை பாதுகாக்க சீரிய பணியை மேற்கொண்டு வருகின்றது.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் கீழ் 1993 முதல் 1997 வரையிலான காலகட்ட காங்கேயம் மாட்டித்தை பற்றிய ஆராய்ச்சி நடைபெற்றது. இவ்வாராய்ச்சியானது நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரியின் ஆராய்ச்சி நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டது. இதில் என். கந்தசாமி மற்றும் எஸ், பன்னீர் செல்வம் அவர்களின் ஆய்வுப்பணி சிறப்பாக போற்றப்பட்டது. சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியும் இதன் மரபணு ஆராய்ச்சிகளைச் செய்தனர்.

தமிழ அரசின் கால்நடை பராமரிப்புத் துறையானது 1924 ம் ஆண்டு முதல் தரமான பொலிக்காளைகளை உற்பத்தி செய்யும் பொருட்டு காங்கேயம் மாடுகளை பேணிப் பாதுகாக்கிறது. 1962- 64 ம் ஆண்டுகளில் 68 மையங்களில் 3,164 காங்கேயம் பொலிக்காளைகள் பராமரிக்கப்பட்டு 1,16,000 மாடுகள் பயன் அடைந்தாகக் கூறப்படுகிறது. காங்கேயம் தழைத்திட ஓசூர் பண்ணை மிக முக்கிய இடம் வகிக்கின்றது. 2003 ம் ஆண்டு தமிழக அரசு தமிழக கால்நடை அபிவிருத்தி முகமை என்ற அமைப்பை உருவாக்கியது. அதிகபடியான பால் தரும் காங்கேயக் கறவை பசுவை கண்டறியும் பணியில் இம் முகமையும், தமிழ் நாடு கூட்டுறவு பால்

உற்பத்தி இணையமும் சேர்ந்து பணியாற்றுகிறது. 2014 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் காங்கேய கால்நடை வளர்ப்பு பற்றிய கருத்தரங்கம் மற்றும் கண்காட்சியும் நடைபெற்றது. இதில் 500 க்கும் மேற்பட்ட காங்கேயம் மாடுகள் கலந்து கொண்ட சிறந்த காளை மற்றும் பசுவிற்கு வயதுவாரியாக பரிசும் கொடுக்கப்பட்டது. இது போன்ற கருத்தரங்கும், கண்காட்சியும் காங்கேயம் மாடு வளர்ப்பில் ஈடுபடுபவர்களை ஊக்குவிக்கும் விதமாக அமைந்திருக்கின்றது.

கொங்கு நாட்டின் காங்கேயம் இன மாடுகளின் செய்திகளையும் அவற்றை பாதுகாக்கும் முறையையும் தமிழகத்தின் பல பகுதிகளுக்கு கருத்தரங்கம் மூலம் கொண்டு சென்றவர் திரு. விவேகானந்தன் இவர் SEVA (Sustainable Agriculture And Environmental Voluntary) என்ற தொண்டு நிறுவனத்தின் தலைவராக செயல்படுகிறார். மேலும் ‘நம் வழி வேளாண்மை’ என்ற இதழை நடத்தி வருகிறார். இவர் கருப்பன் வலசு, திரு, புதூர். நடராஜன், திருமதி சவுந்தரம், திரு கந்தசாமி பாளையம் போன்றோருக்கு “ இன பாதுகாவலர் விருது” வழங்கியுள்ளார்,

திரு, கார்த்திகேய சிவசேனாபதி காங்கேய மாட்டின வளர்ச்சி மேம்பாட்டிற்கு தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர். இவர் சேனாபதி காங்கேயம் மாட்டின ஆராய்ச்சி மையம் (Senapathy kangayam cattle Research foundation)என்ற அமைப்பின் செயலரும், அம்மையத்தின் தலைவராகவும் இருந்து வருகிறார். இம்மையமானது திருப்பூர் மாவட்டம் குட்டபாளையம் எனும் இடத்தில் அமைந்துள்ளது. சுற்று வட்டாரப்பகுதியிலிருந்து கொண்டு வரும் பசுக்கள் இம்மையத்தின் காளை பொலிக்கு விடப்படுகிறது. இம்மையம் காங்கேயம்

காளைகள் பற்றி விழிப்புணர்வு செய்வதோடு வரும் தலைமுறை இவ்வின மாடுகளைப் பற்றிய சிறப்பை அறிந்து கொள்ளும் வகையில் செயல்படுகின்றது.

இம்மையம் உலக மக்கள் காங்கேயம் இன மாடுகளை பற்றி அறிந்து கொள்ளும் வண்ணம் (www,kangayambull.com ) என்ற இணையதளம் ஒன்றை நிறுவி உள்ளது. மகளிர் வாழ்வாதார திட்டத்தின் கீழ் கிடாரிக் கன்று வளர்ப்பிற்காகக் கொடுக்கப்பட்டு அவர்களின் வாழ்வாதாரத்திற்கும் வழி செய்கிறது. கால்நடை வளர்ப்பு மட்டும் அல்லாமல் இயற்கை வேளாண்மையையும் இம்மையம் ஊக்குவித்து வருகின்றது.

மேற்குறிப்பிட்ட அரசு மையங்களும், தனியார் தொண்டு நிறுவனங்களும் தனி மனிதர்களும் காங்கேயம் இன மாடுகளின் சிறப்பை நன்கு உணர்ந்துள்ளதால், அவற்றின் வளர்ச்சியிலும் அவை அழிவை சந்திக்காத வண்ணம் பேணிக்காப்பதிலும் பாதுகாவலர்களாக இன்றுவரை திகழ்ந்து வருகின்றனர்.

**மாட்டு வண்டிப் பந்தயம் அல்லது (ரேக்ளா) பந்தயம்**

மாட்டு வண்டிப் பந்தையத்தில் மிக முக்கிய பங்கு வகிக்கிறது நாட்டு இன மாடுகள். இந்தியாவின் பல பகுதிகளில் இப்பந்தையம் நடைபெற்று வந்தாலும் தமிழகத்தில் மதுரை, திருநெல்வேலி, பொள்ளாச்சியிலும் இப்போட்டிகள் தொன்று தொட்டு நடைபெற்று வருகின்றன. தமிழகத்தில் நடைபெறும் பந்தையங்களில் காங்கேயம் மாடுகளையே பயன்படுத்தி வருகின்றனர். கேரளத்தில் பாலக்காடு மாவட்டம் மற்றும் தொடுபுழா போன்ற மாவட்டங்களில் இந்நிகழ்வானது இன்றளவும் நடைப்பெற்று வருகின்றது.

மகாராஷ்டிரம், பஞ்சாப், ஆந்திரபிரதேசம், சட்டீஸ்கர், குஜராத், உத்திரபிரதேசம், மேற்கு வங்காளம் போன்ற மாநிலங்களில் ஒரு சில இடங்களில் மாட்டு வண்டி பந்தயம் நடை பெறுகின்றது.

மாடுகள் கற்களைத் தூக்கி ஓடும் விளையாட்டு ஆந்திர மாநிலத்தில் கர்நூல் மாவட்டத்தில் சிலகலுரிபேட் எனும் கிராமத்தில் மகாசிவராத்திரியன்று நடைபெறுகிறது.

சிறு விவசாயிகள் முதல் பெரும் பண்ணையார், ஏழை, பணம் படைத்தவர் என்று ஏற்றத்தாழ்வுகள் இல்லா வண்ணம் அனைவரையும் ஒன்று சேர்க்கும் நிகழ்வாக இவ்விளையாட்டு காணப்படுகிறது.

**மாட்டு வண்டிப் பந்தயத்திற்கான காளைகள் தேர்வு மற்றும் பயிற்சி**

இப்போட்டிக்கு இளம் வயதிலேயே காளைக் கன்றுகளை தேர்வு செய்கின்றனர். சுழி சுத்தமாகவும், சுறுசுறுப்புடனும் அவை காணப்பட வேண்டும். அவற்றிற்கு வழக்கமான தீவனத்துடன் ஆரோக்கியம் வாய்ந்த உணவுகளான கோழி முட்டை, பசும்பால், நல்லெண்ணை போன்றவை கொடுக்கப்படும். வாகனங்கள் மற்றும் மக்கள் கூட்டத்தினைக் கண்டு காளை பயம் கொள்ளாமல் இருக்க பழக்குவர். அதற்காக சாலை ஓரங்களில் பெரும்பாலும் கட்டி இட்டு உணவளிப்பர். மாட்டுத்தொழுவத்தின் தரைப் பகுதியில் ஆற்று மணல் நிரப்பப்பட்டு அதன் குளம்புகளுக்கு வலு சேர்ப்பர், தினமும் தேய்த்து குளிக்க வைப்பர், இதனிடையே நீச்சல் பயிற்சியும் அளிப்பர், இந்நீச்சல் பயிற்சியின் காரணமாக அதன் கால்கள் வழுவடைகின்றன. உணவுகள் அளவாகவே வழங்கப்படுகின்றன. உணவு அதிகமானால் அதன் பருமன் அதிகமாகும். எனவே

ஓடுவதற்கு அவை தடையாக அமையும். பந்தையம் முடிந்தால் அக்காளைக்கு வெதுவெதுப்பான நீரில் ஒத்தடம் கொடுக்கப்படும். பந்தையத்தில் காயங்கள் ஏற்படுமாயின் அக்காயங்களுக்கு உப்பு நீரினால் சுத்தம் செய்து மருந்திடுவர். முதலில் சிறிய பழுவை தூக்கச் செய்வர். தாழ்வான, சரிவான இடங்களிலும், தெருக்களின் எல்லை வரை ஓடச்செய்து பழக்குவர்,

மாட்டு வண்டியில் பூட்ட ஒரு வண்டிக்கு இரண்டு காளைகள் தேவைப்படும், இவ்விரு காளைகளும் இணையாக ஓடும் திறனைப் பெற்றிருத்தல் அவசியமானதாகும். இரண்டில் ஒரு காளையின் வேகம் குறைந்தால் அவ்வேகம் குறையும் காளை மாற்றப்பட்டு புதிய காளைக்கு அவற்றோடு ஓடும் பயிற்சியளித்து ஓட விடுவர்,

தமிழகத்தில் பெரும்பாலும் காங்கேயம் காளைகளை பயன்படுத்தினாலும், கர்னாடகா ஆந்திராவின் இனமான லம்பாடி காளைகளையும் பயன்படுத்தி வருகின்றனர். சிலர் லம்பாடி காளையும் காங்கேயக் காளையும் இணையாக ஒரே வண்டியில் பூட்டியும் பயன்படுத்துபவர்களும் உள்ளனர். இவை இரண்டும் வெவ்வேறு இனமாயினும் அவை சிறந்த பயிற்சியின் காரணமாக சீராகவும், அதி வேகத்துடனும் ஓடும் தன்மையைப் பெறுகிறது. ஒரு காளையானது வலதுபுறம் ஓடிப்பழக்கம் கொண்டவை என்றால் அவை வலது புறம் மட்டுமே ஓடும் தன்மையைப் பெறும். வண்டியில் காணப்படும் நுகத்தின் கூச்சத்தைப் போக்க காளைகளின் கழுத்தில் நுகத்தை இணைத்தும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**பந்தையத்தின் விதி முறைகள் உபகரணங்கள்**

மாட்டு வண்டிப் பந்தயம் நடைபெறும் இடம் மேடு என அழைக்கப்படுகிறது. இப்பந்தயத்தில் காளைகள் குறிப்பிட்ட தூரத்தில் மிக வேகமாக ஓடிக்கடக்கும் கால அளவை பொருத்து இதன் வெற்றிகள் தீர்மானிக்கப்படுகிறது. இப்பந்தையம் 200, 300, 400 மீட்டர் , கிலோ மீட்டர் என நடைபெறுகின்றது. இப்பந்தையத்தில் பயன்படும் வண்டியானது தங்களின் வசதிக்கு ஏற்றவாறு மரத்தினால் செய்து பயன்படுத்துகின்றனர். பெரும்பாலும் இவ்வண்டிகள் ஈட்டி, தேக்கு மரத்தினால் ஆனவையாகக் காணப்படுகிறது. காளைகள் வண்டியின் நுகம் எனும் பகுதியுடன் இணைக்கப்பட்டு காளையின் மூக்கிணாங்கயிறானது வண்டியை ஓட்டிச் செல்லும் ஓட்டுனரின் கைகளில் காணப்படும். இவற்றை இழுத்து பிடிப்பதன் மூலம் காளை சரியான திசையில் செல்கிறது.

காளையின் வேகத்தை கூட்ட கையில் கெட்டியான நூல்களால் பின்னப்பட்ட சாட்டை காணப்படுகிறது. இதில் பயன்படுத்தும் வண்டி இரண்டு வகைப்படும் ஒன்று பட்டா வண்டி மற்றொன்று டயர் வண்டி. பட்டா வண்டியானது முழுவதும் மரத்தினால் ஆனது டயர் வண்டியானது மரத்தினால் ஆன சக்கரத்தைச் சுற்றி டயர் சுற்றப்பட்டிருக்கும். இவ்வகையான வண்டி தார்ச்சாலைகள் மற்றும் சிமெண்ட் தரைகளில் தங்குதடையின்றி ஓட பயன்படுகிறது. பந்தையத்தின்போது மூன்று பேர் அல்லது அதற்கு குறைவாகவே வண்டியில் பயணிக்க வேண்டும். இப்பந்தையத்தில் வெற்றிபெறும் காளையின் உடமைக்கு தங்கநாணயம், கோப்பைகள், கேடையங்கள் மற்றும் இதர பொருட்களை பரிசாக கொடுக்கப்படுகிறது.

**மடகாஸ்கர் தீவில் ஏறுதழுவுதல்**

மடகாஸ்கர் தீவில் நடைபெறுகிற “ஜாவிகா” விளையாட்டு தமிழ் நாட்டில் நடைபெறுகிற ஏறுதழுவுதலுக்கு இணையாக இருக்கிறது. ஏறு தழுவுதல் என்பது காளையின் திமிலைப்பிடித்து தழுவுதலேயாகும். இவ்விளையாட்டு முறை தமிழகம் மற்றும் மடகாஸ்கர் தீவுகளில் மட்டுமே புழக்கத்தில் உள்ளது. மடகாஸ்கர் கலாச்சாரத்தில், மாடுகள் முக்கியத்துவமான ஒன்று. அது மற்ற செல்வங்களை விட உயர்வாகக் கருதப்படுகின்றது. மடகாஸ்கர் பகுதியில் சாவிகா (Savika) என்ற பெயரில் காளைகளை அடக்கும் போட்டி உள்ளூர் மக்களால் ஏழை, பணக்காரன், இளையவன், முதியவன் என எந்தபாகுபாடுமின்றி "பெட்சிலியோ" (Betsileo) எனும் பழங்குடி மக்களால் நடத்தப்படுகிறது.

இங்குள்ள காளைகள் திமில்களுடன் நம் ஊர் மாடுகளை ஒத்து உள்ளன. மேலும், காளைகளை அடக்கும் முறையும் ஏறுதழுவுதல் போன்றுள்ளது. ஆனால் இங்கு இவ்விளையாட்டு சிறிய மரத்தால் தடுக்கப்பட்ட வேலிக்குள் நடைபெறுகிறது. இதை இவ்வூர் மக்கள் தங்கள் கலாச்சார நிகழ்வாகப் பார்க்கின்றனர். மேலும் இது பல தலைமுறைகளாக அனைவரும் கூடி நிகழ்த்தும் ஒருங்கிணைப்புச் சடங்காகப் பார்க்கப்படுகின்றது. இங்குள்ள பெண்கள் மாடுகளை அடக்கும் வீரர்களை நேசிக்கின்றனர். தனக்கு வருங்கால கணவனாக வருபவன் வீரமானவனாக இருக்க வேண்டும். அப்படிப்பட்ட ஆண்களை இந்நிகழ்வுகளில் தேர்வு செய்ய முடியும் என நம்புகின்றனர்.

மாடுபிடி வீரர்கள் தங்கள் வீரத்தையும், பலத்தையும் தனக்கு பிடித்த பெண்ணுக்கும் மற்றவர்களுக்கும் வெளிப்படுத்தும் வாய்ப்பாகவே

இவ்விளையாட்டைக் கருதுகின்றனர். கோபமான காளைகளின் முன்னே நின்று நடனமாடுவது அச்சமூகத்தில் தன்னை கதாநாயகனாகத் தன்னைக் காட்டுவதாகவே அமைகின்றது. இவ்விளையாட்டு மனிதர்களுக்கும் காளைகளுக்கும் இடையேயுள்ள உறவை வெளிப்படுத்துவதாக நம்புகின்றனர். மேலும் இது ஒரு பக்தி சார்ந்த சடங்காகக் கருதப்படுகின்றது.

ஜாவிகா விளையாட்டானது எப்போது தொடங்கியது என்பது வரையறை செய்வது கடினம். ஆனால் பல தலமுறையாக பின்பற்றப்படுகின்றது. இவ்விளையாட்டில் அச்சமூகத்தினர் அனைவரும் சந்தோசமாக கலந்து கொள்கின்றனர். பள்ளத்தில் மைதானம் ஏற்படுத்தி மரக் கம்புகளால் வேலி அமைத்துள்ளனர். வாடிவாசல் வழியே மாடுகள் ஒன்றொன்றாகவோ அல்லது சிறு எண்ணிக்கையிலோ அனுப்பி வைப்பர். இளைஞர்கள் வேலிக்குள் இருந்தவாறு மாட்டின் போக்கை உணர்ந்து அணைக்க முயல்வர். கூட்டத்தில் இருப்பவர்கள் கூச்சல் போட்டுக் கொண்டும் விசிலடித்துக் கொண்டும் வீரர்களையும் காளைகளையும் உற்சாகப்படுத்துவர். அங்கு இவ்விளையாட்டு ஒதுக்குப்புறமாக உள்ள கிராமப்பகுதிகளில் மிகவும் எதார்த்தமாகவும், எளிமையாகவும் நடைபெறுகிறது. அது போல நகரங்களை ஒட்டிய பகுதிகளில் மேற்கு நாடுகளின் இசையுடன் பன்னாட்டு கம்பெனிகளின் பதாகைகளைத் தாங்கி நவீன வடிவத்தில் ஆடம்பரமாக நிகழ்த்தப்படுகின்றது.

**ஏறுதழுவுதல் : தமிழ்நாட்டிலும் இந்தோனேசியாவிலும்**

தமிழ்நாட்டில் பொங்கல் பண்டிகையும், அதன் ஒரு அங்கமான ஏறுதழுவுதல் நிகழ்வும் - வேளாண்மை மற்றும் கால்நடை வளத்தை போற்றும்

வகையில் அமைகின்றது. தமிழ்நாட்டின் ஏறுதழுவுதல் நிகழ்வுக்கு இணையாக இந்தோனேசியாவில் நடைபெறும் 'கரப்பான் சாப்பி' எனும் திருவிழா வையும் குறிப்பிடலாம். (கரப்பான் சாப்பி - Karapan Sapi - எனும் இந்தோனேசிய வார்த்தையின் பொருள் "மாடு விரட்டுதல்" என்பதாகும்).

**இந்தோனேசிய கரப்பான் சாப்பி போட்டி வரலாறு**

இந்தோனேசியாவில் கரப்பான் சாப்பி எனும் ஏறுதழுவுதல் சுமார் 800 ஆண்டுகளாக நடத்தப்படுகிறது. கடந்தூர் இளவரசன் என்பவன் மதுரா தீவில் நெற்பயிர் விவசாயத்தை உருவாக்க முயன்றதாகவும், அதற்காக - காடாக கிடந்த நிலைத்தை உழுது வயலாக்கும் நோக்கில் - கரப்பான் சாப்பி திருவிழாவை உருவாக்கியதாகவும் உள்ளூர் கதையில் கூறுகிறார்கள். இந்தோனேசியாவின் ஜாவா பகுதியில் உள்ள தீவு "மதுரா". நெல் விளைவிப்பது முதன்மை விவசாயமாக உள்ள இத்தீவில் நெற்பயிர் அறுவடை முடியும் போது அதனை கொண்டாடும் வகையில் கரப்பான் சாப்பி போட்டி நடத்தப்படுகிறது.

**கரப்பான் சாப்பி காளைப் போட்டி**

கரப்பான் சாப்பி போட்டியின் போது காளைகள் இரண்டு இரண்டாக - மரக்கம்பினால் ஆன ஒரு இணைப்பில் பிணைக்கப்படுகின்றன. அதனை இயக்கும் போட்டியாளர் ஒருவர் அந்த கம்பின் மீது நின்றுகொண்டு காளைகளை விரட்டுகிறார். சுமார் நூறு மீட்டர் தூரத்தை விரைவாக இந்த காளைகள் ஓடிக் கடக்க வேண்டும் என்பதுதான் போட்டியாகும்.

ஒவ்வொரு பகுதியிலும் நடத்தப்படும் போட்டிகளில் முன்னணியில் வரும் காளைகள், அடுத்தக்கட்ட போட்டிக்கு செல்கின்றன. இறுதிப்போட்டியில் சுமார்

நூறு அணி காளைகள் பங்கேற்கின்றன. இதில் வெற்றி பெரும் காளைக்கு, ஜனாதிபதி கோப்பை எனும் விருதும், பெரும் பணமும் அரசாங்கத்தால் அளிக்கப்படுகிறது. காளைகள் ஓடுவது மட்டுமல்ல திருவிழா. ஆட்டம், பாட்டு, கொண்டாட்டம் என பல நிகழ்ச்சிகள் இதனுடன் இணைந்துள்ளன. ஓட்டப்போட்டிக்கு முன்பாக, பெண்களின் நடனத்துடன் அலங்கரிக்கப்பட்ட மாடுகளின் அணி வகுப்பு நடத்தப்படுகிறது. போட்டியில் வெற்றி பெரும் மாடும் அதனை ஓட்டியவரும் உள்ளூரில் கதாநாயகர்களாக கொண்டாடப்படுகின்றனர்.

**காளைகளுக்கு உணவு வழங்கும் முறை**

"மாடு விரட்டுதல்" விழாவுக்கு என பிரத்தியேகமாக காளைகள் வளர்க்கப்படுகின்றன. அவற்றுக்கு தனி உணவு முறைகளும் பராமரிப்பு முறைகளும் உள்ளன. தினமும் 80 முட்டைகளைக் கொண்டு சத்துணவுகள் தயாரித்து அளிக்கின்றனர். போட்டியில் ஓடும் முன்பு உள்ளூர் மதுபான வகைகளை மாடுகளுக்கு கொடுக்கின்றனர்.

**இந்தோனேசியா - தமிழகத் தொடர்பு**

ஏறுதழுவுதலுக்கும், கரப்பான் சாப்பி போட்டிக்கும் நேரடி தொடர்பு இருக்கிறதா என்பதை உறுதிப்படுத்த இயலாது. ஆனால், தமிழ்நாட்டில் தனித்தனி காளைகள் ஓடுகின்றன. இந்தோனேசியாவில் ஜோடி ஜோடியாக ஓடுகின்றன. தமிழ்நாட்டில் காளையை பிடிப்பது போட்டி. இந்தோனேசியாவில் மாட்டை வேகமாக ஓட்டுவது போட்டி. இதைத்தவிர -ஏறுதழுவுதலுக்கும் , கரப்பான் சாப்பிக்கும் பெரிய வேறுபாடு இல்லை.

சுரபயா விமான நிலையத்தில் உள்ள கரப்பான் சாப்பி விளம்பரத்துடன் அறுவடைத் திருவிழா, மாடுகள் அலங்கரிப்பு, போட்டியின் தொலைவு, மக்களின் மைதான அலங்கரிப்பு, மக்களின் கொண்டாட்டம், வெற்றிபெற்றவர்களின் பெருமிதம் - என அனைத்தும், தமிழ்நாட்டின் ஏறுதழுவுதல் போன்றே, இந்தோனேசியாவின் மதுராவிலும் நடக்கிறது.

இந்தோனேசியாவுடன் மிக நெருங்கிய தொடர்பில் இருந்தவர்கள் தமிழர்கள். ஒரு முஸ்லிம் நாடாக இந்தோனேசியா இருப்பதற்கும் தமிழக முஸ்லிம்களே காரணம். சோழ மண்டல கடற்கரையில் இருந்து சோழ மன்னர்களின் ஆதரவுடன் கிழக்காசியாவில் வர்த்தகம் செய்த மரைக்காயர்களே - இந்தோனேசியாவை முஸ்லிம் நாடாக மாற்றினர் என்பது வரலாறு. ஏராளமான தமிழ் ஊர்ப்பெயர்களும், தமிழ்க் கல்வெட்டுகளும் நிறைந்திருக்கும் இந்தோனேசியாவுக்கு - ஜல்லிக்கட்டும் தமிழ்நாட்டிலிருந்து சென்றிருக்கலாம். இந்தோனேசிய அரசாங்கம் 'கரப்பான் சாப்பி மாடு விரட்டுதல்' திருவிழாவைக் கொண்டாடுகிறது. வெற்றி பெரும் அணிக்கு, அரசின் சார்பில் ஜனாதிபதி கோப்பையை வழங்குகிறார்.

**தமிழகத்தின் ஏறுதழுவதலும் கேரளாவின் மரமடியும் ஒரு ஒப்பீடு**

**மரமடி**

மரமடி எனும் பாரம்பரியமிக்க விளையாட்டுப் போட்டி கேரள மாநிலத்தில் நடைபெறுகிறது. இதனை கண்ணுதெளி, காள வயல், பொத்தோட்டம் எனும் வேறு பெயர்கள் கொண்டும் அழைப்பர். கேரளாவில் அடூர் நகரத்திற்கு அருகில் உள்ள ஆனந்த பள்ளி எனும் இடத்திலும் பத்தனம்திட்டா, கொல்லம், மலபார்,

எர்ணாகுளம், பாலக்காடு போன்ற மாவட்டங்களிலும் வழக்கமாக மரமடி நடைபெறுகிறது. வேளாண் உற்பத்திக்கும், உழவுக்கும் துணைபுரிந்த காளைகளுக்கு, மரியாதை செய்யும் விதமாக இவ்விளையாட்டு அமைகின்றது.

இவ்விளையாட்டானது அறுவடை செய்த நிலத்தில் கணுக்கால் அளவிற்கு தண்ணீரை தேக்கி வைத்து அவை சேறாக மாறிய பின்னர் அதில் இணையான காளைகளை ஒரு குறிப்பிட்ட எல்லைவரை ஓடச்செய்வர்.

மிக விரைவாக ஓடி எல்லையைக் கடக்கும் காளைகளை வெற்றிபெற்றதாக அறிவிப்பர். இம்மரமடி விளையாட்டானது ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்களில் நடைபெறுவது வழக்கம். இக்காளை ஓட்டத்தில் காளைகள் இணையாக ஓடாமல் ஓட்டத்தில் சிக்கல் உண்டாகுமாயின் அவ்வோட்டம் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படமாட்டாது. காளையை ஓட்டுபவர்களுக்கு ஒரு ஓட்டத்திற்கு 100 ரூபாய் காளையின் உரிமையாளர் வழங்குவார். காளையின் வெற்றியைப் பொருத்தே காளை ஓட்டக்காரர்களுக்கு பரிசு வழங்கப்படும். இரண்டு காளைகளை ஓட்டக்களத்தில் தயார் செய்யக் குறைந்தது மூன்று பேர் தேவைப்படும். காளையை சிறப்பாக ஓடச் செய்ய சிறந்த பயிற்சியும் சிறந்த உணவும் வழங்க வேண்டும்.

**மரமடியின் வகைகள்**

மரமடி விளையாட்டானது இரண்டு வகையில் காணப்படும்.

1. நேர்கோட்டுப் பாதை
2. வட்ட வடிவப் பாதை

**நேர்கோட்டுப் பாதை**

பெரும்பான்மையான மரமடி விளையாட்டுக்கள் நேர் கோட்டுப் பாதையில் நடைபெறும். இதன் தூரம் சுமார் 50 மீட்டர் ஆகும். இவ்விளையாட்டு நடைபெறும் இடத்தின் தொடக்கம் மற்றும் முடிவு பெறும் இடத்தில் நடுவர்கள் சிவப்புக் கொடியுடன் நிற்பர். இதில் சவுட்டு மரத்தில் ( வீரர் நின்று பயணிக்கும் மரம்) ஒரு ஜோடி காளையை கட்டி ஓட்டிச் செல்வர்.

**வட்ட வடிவப் பாதை**

ஜோடியாக சவுட்டு மரத்தில் பூட்டப்பட்ட காளைகளின் கயிற்றின் ஒரு முனை கலப்பையிலும், மறு முனை மையத்தில் இருவர் பிடித்துக் கொள்வர். சேற்று நிலத்தில் வட்டமாகவும் மிக விரைவாகவும், இணையாகவும் ஓட்டிச் செல்வதே இவ்வகை.

**ஏறு தழுவுதல் மற்றும் மரமடியின் ஒற்றுமைகள்**

- ஏறுதழுவுதல் மற்றும் மரமடி இவ்விரு விளையாட்டுக்களும் பாரம்பரியம் மிக்க விளையாட்டுக்கள் எனலாம்.
- வேளாண்மையையும் கால்நடை வளர்ப்பையும் பின்புலமாகக் கொண்டு இவ்விரு விளையாட்டுக்களும் நடைபெறுகிறது.
- நெல் அறுவடைக்குப் பின்பு தான் இவ்விளையாட்டுக்கள் நடைபெறுகின்றன.
- இவ்விரு விளையாட்டுக்களில் காளையின் உரிமையாளர்கள் மற்றும் விளையாட்டு வீரர்கள் என தனித்தனியே காணப்படுகின்றனர்.

- காளையைப் பேணிப் பாதுகாப்பதிலும் அவற்றை ஆற்றலுடன் வளர்ப்பதிலும் ஒற்றுமை காணப்படுகிறது.
- இவ்விரு விளையாட்டுக்களும் ஜாதி, மதம், இனம் கடந்து ஒற்றுமை உணர்வை வெளிப்படுத்தும் விழாக்களாக நடை பெறுகின்றன.
- விலங்கின ஆர்வலர்களின் எதிர்ப்பினாலும் விலங்கின தடைச் சட்டம் 1960-ன் கீழும் இவ்விரு விளையாட்டுகளுக்கும் சிறிது காலம் தடை காணப்பட்டது.
- தமிழகத்தின் மெரினாப் புரட்சியின் காரணமாக ஏறு தழுவுதலுக்கு தடை உத்தரவு நீங்கியதை அடுத்து கேரளத்தின் மரமடிக்கும் தடை உத்தரவு நீங்கியது.

**ஏறு தழுவுதல் மற்றும் மரமடியின் வேற்றுமைகள்**

- மரமடியானது அறுவடை செய்த நிலத்தில் சேற்று நீரில் நடைபெறுகிறது. ஏறு தழுவுதல் பரந்த திடலில் நடைபெறுகிறது.
- ஏறுதழுவுதலின் போது காளையின் மூக்கணாங்கயிறு அறுக்கப்பட்டு திறந்துவிடப்படுகிறது. ஆனால் மரமடியில் காளைகளுக்கு மூக்கணாங்கயிறு காணப்படுவதுடன் சவுட்டு மரத்தில் பிணைக்கப்பட்டே ஓட்டிச் செல்கின்றனர்.
- மரமடியில் ஏறுதழுவுதலைப் போல் அல்லாமல் காளைகளுடன் எருமை மாடுகளையும் பயன்படுத்துகின்றனர்.
- ஏறுதழுவுதலின் நோக்கமான பெண்ணை மணக்கும் நிகழ்வுகளோ, காளையை பழக்கம் செய்வதோ மரமடியில் காணப்படுவதில்லை.

மாறாக விவசாய நிலங்களை பண்படுத்துவதற்காக இவ்விளையாட்டு நடைபெறுகிறது.

- மரமடி விளையாட்டின் நிறைவாக அனைவரும் ஒன்றாக உணவு உண்ணும் வழக்கம் காணப்படுகிறது. ஆனால் ஏறுதழுவுதலில் அவ்வாறு காணப்படுவதில்லை.

- ஏறுதழுவுதல் தன்மான உணர்வை பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது.(எ.கா) தமிழின் புதின உலகில் கமலாம்பாள் சரித்திரம், வீரம்மாளின் காளை, வாடிவாசல் போன்றவற்றில் தோற்ற காளைகளுக்கு ஜமின்தார் கொடுக்கும் தண்டனை மிகவும் கொடுமையானதாக சித்தரிக்கப்பட்டுள்ளது. ஆனால் மலையாள புதின உலகில் மரமடி பற்றிய பதிவுகள் மிகவும் குறைவாகவே காணப்படுகிறது. (எ.கா) பொன்குன்னம் வர்கியின் சப்திக்குன்ன கலப்பா, தகழியின் ரண்டிடங்கழி போன்றவை. ஆனால் இவைகளில் இவ்விளையாட்டு பற்றி மட்டுமே காணப்படுகின்றனவே தவிற ஏறுதழுவுதலைப் போன்ற தன்மான உணர்வுகளுக்கான முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை இல்லை என்பதை புரிந்து கொள்ள முடிகிறது.

தமிழகத்திலும் கேரளத்திலும் தொன்று தொட்டு நடைபெறுகின்ற இப்பாரம்பரிய விளையாட்டுக்கள் விலங்குவதை தடைச் சட்டம் 1960-ன் கீழ் தடைபட்டாலும் இவ்விரு விளையாட்டுக்களும் மீண்டும் புத்துயிர் பெறக் காரணமாக அமைந்தது மெரினாப் புரட்சி என்றே சொல்லலாம். தமது பாரம்பரிய

விளையாட்டை தக்க வைத்துக் கொள்ளும் முனைப்பும் முயற்சியும் முதலில் தமிழர்களிடத்தில் தான் காணப்பட்டது என்பது இதன் மூலம் புலனாகின்றது.

மொழி வாரியாக தமிழகம் மற்றும் கேரளா என பிரிந்து காணப்பட்டாலும் இரு மாநிலங்களின் பண்பாடும் பழக்கவழக்கங்களும் ஏறக்குறைய ஒத்து காணப்படுகின்றன எனலாம். இவ்விரு விளையாட்டுக்களில் பல ஒற்றுமையும், வேற்றுமையும் காணப்பட்டாலும் இவ்விரு விளையாட்டுக்களின் மிக முக்கிய நோக்கங்களாக விவசாயத்தையும் கால்நடை இனங்களையும் போற்றி தக்க வைத்துக் கொள்வதேயாகும். இவ்விரு விளையாட்டுக்களானது நோக்கத்தால் ஒன்றுபட்டும், செயல்படுத்தும் முறையால் வேறுபட்டும் திகழ்கின்றன என்ற முடிவுக்கு வரலாம்.

இவ்விளையாட்டுக்கள் ஜாதி, மதம், இனம், மொழி கடந்து ஒற்றுமை உணர்வை உருவாக்குவதாக அமைந்துள்ளது. இவை தொடர்ந்து நடைபெற்றால் தான், பாரம்பரிய மிக்க இவ்வகையான விளையாட்டுகளும் காளை இனங்களும், விவசாயமும் இம்மண்ணில் நிலைபெறும்.

**இந்திய அளவிலான காளைச் சண்டை**

கொம்பு சீவப்பட்ட காளைகளை ஒன்றோடு ஒன்றாக மோதவிடும் வழக்கம் திரியோ என்ற பெயரில் கோவா பகுதிகளில் இருந்து வந்துள்ளது. கொங்கன் மொழியில் திரியோ என்றால் காளைச் சண்டை என்று பொருள். அது 1997 ஆம் ஆண்டிலிருந்து சட்ட விரோதமாக கருதப்பட்டது. இச்சண்டை எந்த வேலி இல்லாத வயல் வெளியில் நடத்தப்படும்.

ஹிமாச்சலப் பிரதேசத்தில் செப்டம்பர் மாதம் நடைபெறும் "சைர்" திருவிழாவின் போது காளையுடன் காளைகளை மோத விடும் வழக்கம் உள்ளது. இன்றளவும் ஒரு சில இடங்களில் மாநில அரசின் ஆதரவோடு நடைபெறுகின்றது.

அஸ்ஸாமில் காம்ரூப் மாவட்டத்தில் அறுவடை நாட்களுக்குப் பின்னே ஒரு வாரகாலம் "மாக பிஹு" என்ற திருவிழா நடக்கும். அச்சமயத்தில் காளைகளுடன் காளைகளை மோத விடும் சண்டை பழக்கத்தில் இருந்தது. இது 2014 ம் ஆண்டு அஸ்ஸாம் அரசால் தடைசெய்யப்பட்டது.

கர்நாடகாவில், ஹொஸ்பேட் பகுதிகளில் காளைகளுடன் காளைகளை மோதவிடும் வழக்கம் உள்ளது.மத்திய பிரதேசத்தில் காண்ட்வா மாவட்டத்தில் சாஹாப்பூர் எனும் கிராமத்தில் காளைச் சண்டை நடத்தும் வழக்கம் உண்டு. காளைச் சண்டை தடைவந்த போது கோவர்த்தன பூசைக்கு மறு நாள் உஜ்ஜனியின் வெளிப்புறத்தில் நடத்தப்பட்டது. மேகாலயாவில் இலையுதிர் காலத்தில் ஒரு நிகழ்வாக அம்மாநிலத்தார் காளைச்சண்டை நடத்துகின்றனர்.

யூனியன் பிரதேசமான டையூவில் காளைச் சண்டை நடப்பதுண்டு, பஞ்சாப் மாகாணத்தில் கிளராய்ப்பூர் பகுதியில் காளையுடன், மனிதன் விளையாடும் நிகழ்வு நடப்பதுண்டு. ராஜஸ்தானில் நாகவூர் மற்றும் புஷ்கர் திருவிழாக்களில் காளைச் சண்டை நடப்பதுண்டு. சிக்கிமில் சில இடங்களில் காளைச்சண்டை நடைபெறுவதுண்டு.

**உலகளாவிய காளை மனித விளையாட்டுக்கள்**

ஸ்பெயினில் திருவிழாக்களின் போது தெருக்களில் தமிழகத்தில் வடமாடு விடுவது போல காளைகளை ஓடவிடுவர். காளையின் கழுத்து அல்லது

பின்னங்காலில் கயிறு கட்டப்பட்டு ஒருவர் அக்கயிற்றைப் பிடித்திருப்பார். சில சமயங்களில் கயிறு கட்டாமலிருக்கும். வீதி ஓரங்களில் மேடான பகுதிகளில் பார்வையாளர்கள் இருப்பர். வீரர்கள் வீதியில் இறங்கி காளையுடன் விளையாட்டு காட்டுவர். காளையை அடக்குவதோ, தழுவுவதோ இவ்விளையாட்டின் நோக்கமல்ல.

ரோடியோ காளையோட்டம் (Rodeo / Bull riding) காளையின் மீது வீரர்கள் அமர்ந்து இருக்கவேண்டும். எட்டு நொடிகள் வரை கீழே விழாமல் தாக்குப்பிடித்தால் வெற்றியாகக் கருதப்படும். அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து போன்ற நாடுகளில் நடைபெற்று வருகின்றது.

சாரியேடா (Charreada) எனும் விளையாட்டு மெக்சிகோவில் பிரபலம். இது ஸ்பெயினிலிருந்து சென்றது. இதில் வீரர்கள் குதிரையின் மீதமர்ந்திருப்பர், வாடிவாசல் போன்ற கதவின் வழியாக திமில் இல்லா இளங்காளைகள் அவிழ்த்து விடப்படும். குதிரையின் மீதுள்ள வீரர்கள் காளையின் வாலைப்பிடித்துக் கொண்டே குதிரையின் மேல் பயணித்துக் கொண்டே காளையை வீழ்த்த வேண்டும்.

தாய்லாந்தில் காளைச் சண்டை நடைபெறுவதுண்டு. அங்குள்ள காளைகள் திமிலுடன் காணப்படுகிறது. மாடுபிடிப்பவன் கையில் உள்ள தடியும் கயிறு கட்டும் முறையும் தமிழ்நாட்டில் உள்ளது போல இருக்கின்றது.

கிரீஸில் பிரபலமான மிலன் ஓவியத்தில் இடம் பெற்றுள்ள (புல் லீப்பிங்) இப்பொழுதும் நடைபெறுகிறதா என்ற ஐயம் உள்ளது. இது கிரேக்கர்களின் தொன்மையான விளையாட்டு. (புல் லீப்பிங்) என்பது காளைகளின் மேல் குதித்து விளையாடுவது. இது நடக்காவிட்டால் மீண்டும் முதலில் இருந்து நான்கு முறை நடக்க வேண்டும். நான்கு முறை குதிப்பதன் முக்கியத்துவம் யாதெனில் அவை மாட்டின் நான்கு காம்புகளை குறிப்பதாகக் கூறுகின்றனர். இவ்விளையாட்டுச் சடங்கு இவ்வினக் குழுவினரின் முழுப்பங்களிப்போடு, ஆரவாரத்துடன் நடை பெற்றுள்ளது.

வங்க தேசத்தில் திறந்த வெளியில் வேலிகளின்றி காளைச் சண்டை நடத்தப்படுகின்றது. ஆப்பிரிக்காவில் கென்யா போன்ற பகுதிகளில் திமிலுடன் உள்ள காளைகள் காலில் வடம் கட்டி திறந்த வெளியில் ஓடவிடப்படும். அதைச் சிலர் வழி மறித்து விளையாட்டுக்காட்டுவர். நம் ஊரைப் போல கிராம மக்கள் கூடி நின்று கரகோசம் எழுப்பி உற்சாகப்படுத்துவர்.

ஐக்கிய அரபு நாடுகளில் காளைச் சண்டை 17ம் - 18ம் நூற்றாண்டின் போது போர்ச்சுகீசியர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது. இக்காளைகளுக்கு திமில் இருக்கும். இவ் விளையாட்டு திறந்த வெளி மைதானத்தில் நடைபெறும்.

மேற்கு ஆப்பிரிக்க கடலோரப் பகுதியான லைபீரிய குடியரசில் மஞ்சு விரட்டுபோன்ற விளையாட்டு பழக்கத்தில் உள்ளது. இங்கு வேலியும், பார்வையாளர் மாடமும் உள்ள வட்ட வடிவ மைதானத்தில் காளைகள் ஒவ்வொன்றாய் அவிழ்த்து விடப்படும். இக்காளைகள் தென்னிந்திய காளைகளைப் போன்ற தோற்றத்தில் சிறிய திமிலுடன் காணப்படும். இங்கு

காளைகளைப் பிடிப்பதில்லை கையால் தொட்டு சீண்டுதல் மூலம் காளைகளைக் கோபப்படுத்தி விளையாடுகின்றனர்.

காடும்,காடு சார்ந்த நிலமும் முல்லைநில திணையாகும். இதில் வசித்தவர்கள் ஆயர்குடிகள் ஆவர். ஆயர், கோவலர், அண்டர், இடையர் எனப்பட்டோர் காளையை அடக்கி உடல் வலிமையயும் வீரத்தையும் காண்பித்தல் முறையிலான மணமுறையும் முல்லைத் திணையில் குறிப்பிடப்படுகிறது.

சங்க காலப் பண்பாட்டிற்குப் பிறகு, நிலப்பிரபுத்துவ அமைப்புத் தோன்றுகிறது. சோழர்களுக்குப் பிறகு களப்பிரர்களின் ஆட்சியும் தமிழக நிலப்பரப்பில் உருவாகிறது. பல மாற்றங்கள் உருவாகிறது. பல்வேறு மரபுகளும், பழக்கங்களும் மாறுகின்றன. எனினும், மரபின் தொடர்ச்சியாக, ஆயர் குடிகளிடம் மத்தியில் பொங்கல் பண்டிகையின் போது மாடுகளை அலங்கரித்து கொம்புகளில் சல்லியை காசு,பணம்,தங்கம், கட்டி அனுப்புவது, இன்றும் பல்வேறு கிராமங்களில் நடைபெறுகிறது. திறமையுள்ளவர்கள் மாட்டை மறித்து எடுத்துக் கொள்ளலாம். ஆயர்குடிகளிடமிருந்து ஆடு மாடுகளை, வேறு சில சமூகங்கள் (கவர்ந்து) திருடிச் சென்றதை பண்டைய தமிழ் இலக்கியங்கள் சுட்டிக் காட்டுகின்றன. பிந்தைய நாட்களின் பிரிட்டிஸ் ஆட்சி கால ஆவணங்களும் குறித்துள்ளன. மாடுகளை கவர்ந்து சென்ற கூட்டங்கள் அவற்றை பராமரிப்பதையும் மேற்கொண்டன. பிறகு மாடு பிடித்தல் தொடர்பான ஏறுதழுவுதல் அவர்களின் வீரத்தை வெளிப்படுத்தும் விளையாட்டு ஆகவும் மாறியது. குறிப்பாக இது வேறு பகுதிகளிலும் ஜல்லிக்கட்டு, மஞ்சு விரட்டு,

ரேக்ளா ரேஸ் என வெவ்வேறு வடிவிலான விளையாட்டுகளில் மாடுகளை பயன்படுத்துகின்றனர்.

இந்த ஜல்லிக்கட்டு, (அதாவது வாடிவாசலில் பறைஒலி எழுப்பி மாடுகளைத் துரத்தி மாடு பிடிக்கும் வீரர்கள் அடக்குவது ஜல்லிக்கட்டும், சங்க கால ஏறுதழுவுதல் வேறு அல்ல. கால மாற்றத்தால் அதன் வடிவம் மாறினாலும், தனது வலிமையையும், வீரத்தையும் உலகறியச் செய்வது அதன் மிக முக்கிய நோக்கமாக உள்ளது.

**தொகுப்புரை**

தமிழர் பண்பாட்டில் ஏறுதழுவுதல் எனும் இவ்வியலில் ஏறுதழுவுதல் என்பதன் பெயர்க்காரணம், ஏறுதழுவலின் வகைகள், நாயக்ககால ஜமீன்தார் ஜல்லிக்கட்டு, ஏறுதழுவும் முறைகள், ஏறுதழுவுதல் நிகழ்வில் ஏற்படும் காயங்களின் தன்மைகளை தொகுக்கப்பட்டுள்ளது. மேலும் ஏறுதழுவுதல் என்பது பல பரிணாமம் கொண்டு வேறு வடிவங்கள் அடைவதை வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

காளை இனங்களில் கொங்கு மாவட்ட நாட்டு மாட்டு இனமான காங்கேயம் காளையின் தோற்றம், அவற்றின் வரலாற்றுச் சான்றுகள், அதன் முதன்மை வாய்ந்த இனங்கள், மாடுகளின் கிளை இனங்கள், மாடுகளை தேர்ந்தெடுக்கும் முறை, இடம்பெயரும் காளைகள், மாட்டுச் சந்தை, போன்ற செய்திகள் தொகுக்கப்பட்டு ஆராயப்படுகின்றது.

மாடுபிடி வீரர்களுக்கு பயிற்சி, ஏறுதழுவும் முறை, காளைக்குப் பயிற்சி மற்றும் போட்டியில் பங்கேற்கும் முறை, ஏறுதழுவல் நிகழ்விடங்கள் , நிகழ்கால ஏறுதழுவல், விளையாட்டு நிபந்தனைகள், போன்றவை கள ஆய்வுச் செய்திகளாக தொகுக்கப்பட்டு ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றது.

தமிழ் இன அடையாளமான ஏறுதழுவலும், கேரளாவில் காளை சார்ந்த பாரம்பரிய விளையாட்டான மரமடியுடன் ஒப்பிட்டும், அதன் ஒற்றுமை வேற்றுமைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் உலகளாவிய காளை விளையாட்டுகளை ஒப்பிட்டும் ஆராயப்பட்டுள்ளது.

# இயல் - நான்கு

## கோட்பாடு நோக்கில் ஏறுதழுவுதல்

### *இயல் - நான்கு*

## கோட்பாடு நோக்கில் ஏறுதழுவுதல்

உறவுமுறையின் அடிப்படையில் கூட்டம் கூட்டமாக வாழும் மாந்தர்கள், தாவர வகைகள், விலங்கினங்கள், இயற்கை பொருட்கள் போன்றவற்றிற்கும் இடையில் ஒருவகைப் புதிரான தொடர்பு (Mystical Relationship) நிலவுகிறது, எனும் நம்பிக்கையே குலக்குறியியல்.

**குலக்குறி நோக்கில் ஏறுதழுவுதல் தொன்மம்**

ஏறுதழுவுதல் சார்ந்த குலக்குறி அடையாளங்கள் மற்றும் ஏறுதழுவுதல் தொன்மக் கதையையும் நாட்டார் வழக்காற்றியல் துறையில் குலக்குறியியல் கோட்பாட்டு அடிப்படையில் ஒப்பிட்டும் அதன் சிக்கலையும், சமகால நிலையையும் முன் வைப்பதே இவ்வாய்வு. தொல்காப்பியம் சுட்டும் கருப்பொருள்கள் அந்நிலம் சார்ந்த குலக்குறியாகவே அமைகின்றன எனலாம்.

**குலக்குறி எனும் சொல்**

குலக்குறி சொல் வழக்கு குறித்து ஆ.தனஞ்செயன் கூறுகையில் 'totem' என்னும் இக்கலைச்சொல் முதன்முதலில் 1791-ல் totam எனும் வடிவில் பயன்படுத்தப்பட்டது. இதனைப் பயன்படுத்தியவர் லாங் என்பவர். வடஅமெரிக்காவில் சுப்பீரியர் ஏரியைச் சூழ்ந்து வாழும் செவ்விந்திய வகுப்புகளில் ஒன்று. 'ஆல்கான்கியூன்' (Algonquin) அல்லது ஓஜிப்வர்' (Ojibwa) எனப்படும். இவ்வின மக்களுடைய பேசும்மொழியில் 'ஓடைம்' (Odaim) என்றால் குலதேவதை என்றும் 'டோடைம் (todaim) என்றால் என்குலதேவதை என்றும் பொருள். இச்சொல்லிலிருந்து உருவான கலைச்சொல்லே 'Totem' என்பார் (குலக்குறியியலும்

மீனவ வழக்காறுகளும்- 2012 பக்-1)**குலக்குறி** என்னும் சொல்லுக்கு விளக்கம் தரும் பக்தவச்சலபாரதி "இன்று குலக்குறி என்பதற்கு பொருளில் பேசப்படும் Totem என்னும் ஆங்கிலச்சொல் கிழக்கு வட அமெரிக்காவிலுள்ள அல்கான்கின் (Algonkin) பழங்குடியினர் வழங்கும் 'ஆட்டோ தீமன்' (Oto teman) என்னும் சொல்லோடு தொடர்புடையது. அவர்களின் மொழியில் இச்சொல்லுக்கு 'உடன்பிறந்தான்- உடன்பிறந்தாள் உறவு' என்று பொருள். இச்சொல்லின் வேர்ச்சொல்லான 'ஒத்தி' (Ote) என்பதற்கு இரத்த உறவுடையவர்கள் என்று பொருள். வட அமெரிக்க இந்திய பழங்குடியினர் பகுதியில் வணிகம் செய்யச் சென்ற ஆங்கிலேயர் ஒருவர் மூலம் கி.பி.1792 -ல் இச்சொல் ஆங்கிலேயர்களிடம் அறிமுகப்படுத்தப்பட்டு (totem)டோட்டெம் என திரிபுற்றது" என்கிறார். (குலக்குறியியலும் மீனவ வழக்காறுகளும்- 2012 பக்-1)

**குலக்குறி**

விலங்குகள், பறவைகள், தாவர இனங்கள், சூரியன், நிலவு, விண்மீன் முதலிய பருப்பொருட்கள் ஆகிய பல தொகுதிகளை உள்ளடக்கிய இயற்கைக்கும், மனிதனுக்கும் இடையே காலம் காலமாக நிலவிவரும் ஓர் இனம் புரியாத உறவை, இயற்கையிடம் மனிதன் காட்டும் புதிரான சடங்கியல் அணுகுமுறை பற்றி பல ஐரோப்பிய, அமெரிக்க மானுடவியாளர்கள் தீவிரமாகத்தேடி இனம்காண முற்பட்டனர். இனம் கண்டு அதற்கு குலக்குறியியல் (totemism) என்று பெயரிட்டனர். ஒரு குலம் தனக்கென கொண்டுள்ள குறியீட்டு அடையாளம் என சுருங்கச் சொல்லலாம்.

குலக்குறியியலின் சொர்க்க பூமி என்று வழங்கப்படும் ஆஸ்திரேலியாவில் வாழும் இனக்குழு மக்களிடையே களப்பணியில் ஈடுபட்டு ஹோவித் போன்ற ஆராய்ச்சியாளர்கள் நூற்றுக்கணக்கான குலக்குறிகளைச் சேகரித்தனர். அக்குலக்குறி வகைமை குறித்து எமில்தர்கைம் கூறுகையில் குலக்குறிகளாக விளங்கும் பொருள் வகைமைகளில் விலங்குகளும் தாவரங்களும்தான் அதிகம். இவற்றுள் மிக அதிகமாக காணப்படுவது விலங்குகளே! உயிரற்ற பருப்பொருட்களை குலக்குறியாகக் காண்பது அரிது என்றார். (குலக்குறியியலும் மீனவ வழக்காறுகளும்- 2012 பக்-1)

கொங்கு வேளாளக் கவுண்டர்களிடம் இஃது ஓர் ஒழுங்கமைப்பாக நிலவுகிறது. தாவரங்கள், பறவைகள், விலங்குகள், போன்றவை அவர்களின் குலக்குறிகளாக உள்ளன. குலத்தை கூட்டம் என அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

ஈஞ்சை, எண்ணை, பதறி (இலந்தை) துவரை, வெண்டை ஆகிய தாவர வகைகளும் மீன், மேதி (எருமை), குண்டெலி, பாண்டி (எருதி), யானை முதலிய விலங்குகளும், காடை, ஆந்தை முதலிய பறவைகளும், இம்மக்களின் குலப்பிரிவுகளுக்கு குலக்குறிகளாக விளங்குகின்றன.(சீ.பக்தவச்சல பாரதி 1990)

தாவரம், விலங்கு, பறவை இனங்கள் மட்டுமல்லாமல் தலைவன், மற்றும் குல முதல்வர்களின் பெயர்கள், மக்களின் இயல்புகள் ஆகிவையும் குலப்பெயர்களாக உள்ளன, டி,கே,சக்தி தேவியின் கொங்கு வேளாளர் வரலாறு எனும் நூலில் 65- குலப் பெயர்களின் பட்டியல் இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

இக்குலக்குறி முறையானது தமிழரிடையே தொன்று தொட்டே காணப்படுகிறது. வீரசோழியம் என்ற இலக்கண நூல் பண்டைய போர்

முறையினைஏழு வகையாக குறிப்பிடுகிறது. வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, உழிஞை, தும்பை, வாகை இவை அனைத்தும் பூக்கள் அதோடு குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்து நிலங்களும் (திணை) பூக்களைக் கொண்டே பிரிக்கப்பட்டுள்ளன.

ஞாயிறு போற்றுதும்..., திங்களைப் போற்றுதும்...., மாமழைப் போற்றுதும்....," (சிலப்பதிகாரம் மூலமும் திறனாய்வும் பக்10. கடவுள் வாழ்த்து 1 :1 :7 ) போன்ற எண்ணிலடங்கா குலக்குறி தமிழ்ச் சூழலில் நிறைந்து உள்ளது குறப்பிடத்தக்கதாகும்.

*“கடவுள் ஆலத்துத் தடவுச் சினைப் பல் பழம்*

*நெருநல் உண்டனம்” (புறநா.197:1-2)*

*“துறையும் ஆலமும் தொல்வலி மராஅமும்*

*முறையுளி பரர்அய் பாய்ந்தனர் தொழூஉ” (கலித்.முல்.101:13-14)*

ஆயர்கள் முல்லை நிலத்தை பன்னெடும் காலமாக பூர்வீகமாகக்கொண்டு வாழ்ந்தவர்கள். ஏறுதழுவதற்கு முன்பாகத் தங்களின் குல தெய்வங்களை வணங்கும் மரபு இவ்வின மக்களிடத்தில் தொடர்ந்து நிலைபெற்றுள்ளது. பொதுவர்கள் காயா, செங்காந்தள், முல்லை போன்ற மலர்களை மாலையாகத் தொடுத்து நீர்த்துறையின் ஆலமரத்தின் கீழ் குடிகொண்டிருக்கும் மிகவும் பழைமையான ஊர் தெய்வத்தை, தொடக்க காலம் முதலே காவல் தெய்வமாக வணங்கியுள்ளனர் என இப்பாடல் அடிகள் உணர்த்துகிறது.

**விலங்கின் கொம்பை நட்டு வணங்குதல்**

ஆயர்களின் திருமண வீடுகளில் குலக்குறி மரபாக எருமையின் கொம்புகள் இருந்து வந்துள்ளன. முல்லை நில மக்களின் வழிபாட்டு நம்பிக்கையில் தொடக்கத்தில் நிலம் சார்ந்த தெய்வமே முன்னின்று பேசப்பட்டுள்ளது. அவர்கள் தெய்வத்திற்கு நெல்லும் மலரும் தூவி வழிபட்டு வந்துள்ளனர்.

சகுனம் சார்ந்த நம்பிக்கைகளைக் குடும்பப் பெண்களும் முதுபெண்டிர் வாயிலாக கேட்டறிந்தனர். எருது, எருமை, பசு போன்றவை குலக்குறியாகக் கருதப்பட்டன. அவை இறக்கும் தருணத்தில் அதன் கொம்பினை வீடுகளில் வைத்து வழிபட்டனர். இதில் பெண் எருமைக்கொம்பினைப் பெரும்பாலும் திருமணக் காலத்திலே திருமணம் நிகழும் வீட்டின் முன்பாக புதுமணல் பரப்பி, செம்மண் பூசி அழகுபடுத்தி பின்பு அவற்றின் கொம்பினை வழிபடு பொருளாக வைத்து வழிபட்டு வந்தனர். இதனை,

*"தருமணல் தாழப் பெய்து இல் பூவல் ஊட்டி*

*எருமைப் பெடையோடு எமர் ஈங்கு அயரும்*

*பெரு மணம் எல்லாம் தனித்தே ஒழிய" (கலித்.முல்.114:12-14)*

என்ற பாடலடிகள் வாயிலாக அறியலாம். அதேபோன்று பொதுவர் ஏறுதழுவுதலின்போது காளையால் குத்தப்பட்டு தெறித்த குடல் ஊர் முற்றத்தில் ஆலமரத்தின் அடியிலுள்ள தெய்வத்திற்கு அவை மாலையாகப் படைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் முல்லை மக்கள் தெய்வத்திற்கு பலிகொடுத்து வழிபடும் குலக்குறி மரபைக் கொண்டிருந்தனர். என்பதை உணரலாம்.

குலமரபாகத் தொடங்கப்பட்ட வழிபாடுகளைப் போன்று பொது நிலையில் குரவைக்கூத்து சமூக மரபாக முல்லைப் பண்பாட்டைப் பிரதிபலித்தது.

எமில்தர்கைம் குறிப்பிடும் குலக்குறிகளின் பொருள் வகைமையினை மெய்ப்பிக்கும் வகையில் விலங்கினமான காளை,அதன் கொம்புகள் மற்றும் தாவரங்கள், ஆலமரம் மலர்கள் போன்றவை குலக்குறியாக உணர முடிகிறது.

**ரெயினாக் குலக்குறியியல் இயல்பு**

குலக்குறியியலின் இயல்புகள் இவை இவை என்று தொகுத்து தந்தவர்களுள் குறிப்பிடத்தக்கவர் எஸ் - ரெயினாக் என்பவர். இவர் வழிபாடுகள், புராணங்கள் மற்றும் சமயம் என்ற நூலை எழுதினார். ஃப்ராய்டு குலக்குறியியலின் இயல்புகளை ரெய்னாக் கூறிய 12 இயல்புகளை வரிசைபடுதுகின்றார். அதில் ஒன்று

- குலக்குறியாக விளங்கும் ஒரு விலங்கு எதிர்பாராத வகையில் இறந்துவிடுமேயானால் குலக்குறியாக உடைய குலத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் அனைவரும் ஒன்று கூடி தங்கள் கூட்டத்தில் ஒருவர் இறந்தால் எவ்வாறு கடைபிடிப்பர்களோ, அதேபோல் துக்கமிருந்து இறுதிச் சடங்குகளை செய்து உடலைப் புதைப்பர்.

**முத்தாலம்மன் கோவிலில் காளை**

மதுரை மாவட்டம் பொந்துகம்பட்டி எனும் கிராமத்தில் கடந்த 30 ஆண்டுகளுக்கு முன்னர் முத்தாலம்மன் கோவிலில் காளை ஒன்று வளர்க்கப்பட்டது. அந்தக் காளை அன்றைய காலத்தில் நடந்த பல ஏறுதழுவுதல் போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றிகளைக் குவித்து பரிசுகளைப் பெற்றுள்ளது. வாடிவாசலில் அனைவரையும் அச்சுறுத்தும் அக்காளை கிராம

மக்களிடம் சிறுபிள்ளையைப் போன்று பழகியுள்ளது. அதனால் அக்காளையின் மீது மிகுதியாக அன்பு கொண்டிருந்தனர் அந்த கிராமத்து மக்கள். வயது மூப்பால் இறந்த அக் காளையை ஒரு மனிதன் உயிரிழந்தால் எப்படி அடக்கம் செய்வரோ அவ்வாரே அடக்கம் செய்தனர். காளையின் மீது அதீத அன்பு வைத்திருந்த அந்த மக்கள் காளையை புதைத்த இடத்தில் மணிமண்டபம் கட்டி ஆண்டுதோறும் அதன் நினைவு நாளில் ஆயிரக்கணக்கானோருக்கு அன்னதானம் வழங்கி வழிபட்டு வருகின்றனர்.

குலக்குறியாக விளங்கும் இயற்கைப் பொருட்கள் அனைத்தையும் விலங்கினம், தாவர இனம் என்று மூன்று பெரும் வகைப்பாட்டிற்குள் அடக்கிவிடலாம். இவற்றுள் பல்வேறு இனக்குழுக்களின் பண்பாட்டை எடுத்துக்கொண்டு ஆராயும்போது விலங்குகள்தான் அதிக எண்ணிக்கையில் குலக்குறிகளாக இருந்திருக்கின்றன. மதுரையின் முத்தாலம்மன் கோவிலில் காளை சார்ந்த சடங்கு முறைகள் ரெயினாக் குலக்குறியியல் இயல்பை ஒத்து காணப்படுகின்றது.

**ஃப்ரேசர் கூறும் குலக்குறி**

ஃப்ரேசர் குலக்குறிகள் பற்றி விளக்கம் கூறுகையில் குலம் சார்ந்த குலக்குறி என்பது ஒட்டுமொத்த குலத்திற்கும் பொதுவானதாகும், அக்குலத்தைச் சேர்ந்த ஒவ்வோரு சந்ததியினருக்கும் இந்த குலக்குறியே தொடர்ந்து குலக்குறியாக இருக்கும்.

தமிழகத்தில் பல்வேறு சாதிகளிடத்தும் குறியியலின் எச்சங்கள் பரவலாகக் காணப்படுகிறது. பல்வேறு உயிரினங்கள் பற்றிய நம்பிக்கைகள், சடங்குகள், வழிபாடுகள் போன்றவை தொன்மக்கதைகளாகவும் உள்ளன. ஃப்ரேசர் கூறிய

குலம்சார்ந்த குலக்குறியை ஒத்து காணப்படுகின்ற தொன்மக்கதைதான் அழகாத்தேவன் கதை. அழகாத்தேவனை அவ்வூர் மக்கள் தெய்வமாக வழிபட்டு வருகின்றனர்.

மனிதப் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் வகையில் தெய்வ வழிபாடானது சிறு தெய்வ வழிபாடு, பெருந்தெய்வ வழிபாடு என காணப்படுகிறது. அழகாத்தேவனை சிறு தெய்வ வழிப்பாட்டுக் கடவுளாக வணங்கி வருகின்றனர். சிறு தெய்வங்கள் வேதக் கடவுளோடு தொடர்பு கொள்ளாதவை முழுமுதற் கடவுளாகக் கருதி வணங்கப்படாதவை. பூசை திருவிழா போன்றவற்றில் திட்டவட்டமான வரையறை கிடையாது, உயிர்ப்பலி உண்டு. பிராமணர் அல்லாதோர் பூசாரியாக இருப்பர். வேதமுறையான கோவில் அமைப்பும் பெரும்பாலும் இல்லை. செவிவழிச் செய்திகளும் பரம்பரைக் கதைகளும் உண்டு. அச்சத்தின் காரணமாகவும், வளமைக்காகவும், இயற்கை சீற்றம் தணிக்கவும் அம்மை, காலரா போன்ற நோய்களைத் தடுக்கவும், நாட்டுப்புற தெய்வகளென்று சிறு தெய்வங்கள் வழங்கப்படுகிறன. சிறு தெய்வ வழிபாட்டில் குடும்ப தெய்வ வழிபாடும் , குல தெய்வ வழிபாடும், ஊர்த்தெய்வ வழிபாடும் அடங்கும்.

**அழகாத்தேவனின் தொன்மக்கதை**

ஏறுதழுவுதல் விளையாட்டின்போது முதலாவதாக சாமிமாடு என்ற ஒன்றை அவிழ்த்துவிடுவது வழக்கம். குறிப்பாக மதுரை மாவட்டம் அலங்காநல்லூர், பாலமேடு, அவனியாபுரம் போன்ற பகுதிகளில் ஆண்டாண்டுகால மரபாக நடை பெற்று வருகிறது. அந்த மாடானது மாவீரன் அழகாத்தேவனின் நினைவாகவே

அவிழ்த்துவிடப்படுகிறது. தற்போதய அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டைப் போன்று 400 ஆண்டுகள் முன்பு மிகவும் புகழ்பெற்று விளங்கியது விக்கிரமகுளம்தான்.

மதுரை மாவட்டத்தில் சொரிக்கம்பட்டியை சேர்ந்தவர் கருத்த மாயனின் கடைசி மகன் அழகாத்தேவன் ஆவார். அழகாத்தேவன் வீரமிக்க இளைஞனாகக் காணப்பட்டாலும், நண்பன் தோட்டிமாயாண்டியோடு மாடுபிடித்தல் மற்றும் சேவல் சண்டையில் கலந்து கொண்டு ஊர் சுற்றி வருகிறான். இதனால் அழகாத்தேவனுக்கு திருமணம் செய்து வைக்க தந்தை மாயன் அழகாத்தேவனுக்கு பெண்பார்க்கத் தொடங்குகிறார். நாக மலைக்கு அருகே உள்ள கீழக்குடியில் வாழ்ந்துவரும் கருத்த மலையனின் மகளான ஒய்யாமாள் வீட்டிற்கு பெண் பார்க்கச் செல்கிறார்.

ஒய்யம்மாளுக்கு அழகாத்தேவனை பிடித்து போனாலும் தான் வளர்த்து வரும் ஏழு காளைகளை அழகாத்தேவன் அடக்கினால் திருமணம் என்ற நிபந்தனை விதித்தாள். காளையை அடக்குவதற்கான நாள் குறிக்கப்பட்டது. அழகாத்தேவனோ தன் நண்பன் தோட்டி மாயாண்டியோடு இணைந்து கடும் பயிற்சி மேற்கொள்கிறான். அந்த நாளும் வருகிறது, இரண்டு ஊர்ப்பொதுமக்கள், மத்தியில் அழகாத்தேவன் வாடிவாசல் அருகே ஒய்யாம்மாளின் காளைகளை ஒவ்வொன்றாக எதிர்கொள்கிறான்.

அனைத்துக் காளைகளையும் வீழ்த்திய அழகாத்தேவன் ஏழாவது காளையோடு மல்லுக்கட்டுகிறான். அக்காளையானது அழகாத்தேவனின் வயிற்றை பதம்பார்த்தது. அழகாத்தேவனோ தனது குடற் சரிந்த நிலையிலும் போராடி அந்த காளையை அடக்கி விடுகிறான். வாக்கு கொடுத்த காரணத்திற்காக கருத்த மலையன் பெண் கொடுக்க சம்மதம் தெரிவிக்கிறார்.

இருப்பினும் ஒய்யாம்மாளின் சகோதரர்கள் அழகாத்தேவனைக் கொல்ல சூழ்ச்சி செய்கின்றனர். அழகாத்தேவனுக்கு மருத்துவம் பார்த்த பெண்ணின் மூலம் அவனது உடம்பில் விஷம் ஏற்றி கொலை செய்துவிடுகின்றனர்.

இச்செய்தி ஒய்யம்மாளுக்கு தெரிய வரும்போது மிகுந்த துயரத்தால் அழகாத்தேவனோடு உடன்கட்டை ஏறி தனது உயிரை மாய்த்துக் கொள்கிறாள். அழகாத்தேவனின் நினைவாக அவனது பரம்பரையில் வந்தோர் மதுரை மாவட்டம் செக்கணூரனிக்கு அருகில் உள்ள சொரிக்கம்பட்டியில் அழகாத்தேவனுக்குக் கோவில்கட்டி வணங்கி வருகின்றனர்.

கோயில் கருவறையில் காளையோடு அழகாத்தேவன் நிற்க அக்கோயிலின் வெளியே அமைக்கப்பட்ட நினைவு வளைவில் நண்பன் தோட்டி மாயாண்டிக்கும் சிலை எழுப்பியுள்ளனர். கீழக்குடியில் சொரிக்கம்பட்டிக்காரர்கள் எந்த மண உறவோ கொடுக்கல் வாங்கலோ இப்போதும் வைத்துக் கொண்டது இல்லை. இம்மரபானது காலம் காலமாகத் தொடர்ந்து வருகின்றது. இத்தொன்மக்கதையை அப்பகுதி மக்கள் முழுமையாக நம்புகின்றனர். அழகாத்தேவனைக் கடவுளாகவும் அம்மக்களின் குலக்குறியாகவும் இன்றுவரை வழிபட்டு வருகின்றனர்.

ஏறுதழுவுதல் சார்ந்த குலக்குறியாகக் காளையின் கொம்பு மற்றும் ஏறு தழுவுதலுக்கு முன்பும் மரங்களை வணங்கி வழிபட்ட முறையும் கலித்தொகை, மற்றும் புறநானூற்று பாடல்கள் வாயிலாக அறிகிறோம். சம காலத்தில் மதுரை மாவட்டத்தில் கோயில் காளையை குலக்குறியாகவும், மற்றொரு குலத்தைச் சார்ந்தவர்கள் அழகாத்தேவனை குலக்குறியாகக் கொண்டு வணங்கி வருகின்றனர் இவ்விரு நிகழ்வும் ரெயினாக்கின் இயல்பையும், ஃப்ரேசரின் குலம்சார்ந்த குலக்குறியின் பொருண்மையின் கீழ் அமைந்து வருவதை உணரலாம்.

**உளவியல் நோக்கில் வாடிவாசல் புதினம்**

உளவியல் (Pychology) என்பது ஒரு கிரேக்கச் சொல், இச் சொல்லானது ( logia ) லோகியா என்ற சொல்லிலிருந்து உருவான சொல்லாக்கமாகும். லோகியா என்றால் மனதை படிப்பது என்று பொருள், உளவியல் என்பது முதலில் மனித மனத்தையும் பின்பு ஆன்மாவையும் ஆராய்வது என முதலில் கருதப்பட்டது. பிற்காலங்களில் இக்கருத்து கைவிடப்பட்டு நடத்தையை பற்றி முறையாக ஆராயும் துறை உளவியல் என மாற்றமடைந்தது. மனித மனங்களையும், எண்ணங்களையும் அதன் அடிப்படையில் நடைபெறும் செயல்பாடுகளையும் கொண்டே நமது இலக்கியங்கள் பெரும்பாலும் கட்டமைக்கப்படுகின்றன. அந்த வகையில் நமது மரபு விளையாட்டான ஏறுதழுவுதலை மையமாகக் கொண்ட வாடிவாசல் புதினத்தில் உளவியல் சார்ந்த சிந்தனைகள் வெகுவாக இடம்பெற்றுள்ளது.

"ஒரு தவ்வு, இரண்டு தவ்வு, மூன்றாவது தவ்வுக்கும் அவன் நின்றுவிட்டான், மூன்று தடவையும் காளை அவனை உருட்டி எறிந்து கிழித்திருக்க வேண்டும்." என்று குறுநாவலான வாடிவாசலில் தனது முன்னுரையாக சி. சு. செல்லப்பா எழுதியிருந்தார். இவ்வரிகள் ஏறுதழுவலை காணும் மக்களில் ஒருவர் நினைப்பது போன்று இருந்தாலும் மனித சமூகமானது பக்குவமடைந்து பல வருடங்கள் ஆயினும் சக மனிதன் விலங்கால் துன்புறுவதும், கொல்லப்படுவதையும் கண்டு ஆரவாரத்துடன் ரசிக்கிறான். அதனால் ஏற்படும் விளைவுகளைக் கண்டு மகிழ்ச்சி கொள்கிறான். அவ்வாறு ரசிக்கவும் மகிழ்ச்சி கொள்ளவும் காரணம் என்னவாக இருக்கும்?

ஒத்தக்கு ஒத்தையாகக் கோதாவில் இறங்கும் மிருகத்திற்கும் மனிதனுக்கும் நடக்குற போட்டியில் இரண்டில் ஒரு முடிவு காணும் இடமாக வாடிவாசல் அமைகின்றது. வாடிவாசலில் ஒரு மனிதனும், மிருகமும் மோதிக்கொள்ளுவது விளையாட்டு என்றாலும் மனிதனுக்கு தெரியும் நம்முடன் மோதப்போவது விலங்கு என்று, ஆனால் காளைகளுக்குத் தெரியாது. மனிதன் ஏன் தன்னைவிட பலமான காளையை ஏறுதழுவுதல் மூலமாக வெல்ல நினைக்கிறான். இது போன்ற வினாக்களுக்கு விடை காணும் விதமாக உளவியல் சிந்தனையாளர் சிக்மண்ட் ஃப்ராய்டின் உளவியல் கோட்பாடுகளில் ஒன்றான விலங்குணர்ச்சி கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டும், கள ஆய்வில் கிடைக்கப்பெற்ற தரவுகளின் அடிப்படையிலும் சி.சு செல்லப்பாவின் வாடிவாசல் நாவலை ஆராய்வதே இதன் நோக்கம்.

**ஃப்ராய்டின் விலங்குணர்ச்சி கோட்பாடு**

இயற்கையின் பரிணாமத்தில் மனிதன் விலங்குகளின் வழித்தோன்றலாக வளர்ச்சி அடைந்து வருகிறான், என்பது அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்ட உண்மையாகும். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மனிதன் காட்டு விலங்கோடுதான் வாழ்ந்திருக்க முடியும், மலைக் குகைகளிலும், மரப்பொந்துகளிலும் வாழ்ந்த மனிதன் உடல் ரோமங்களை ஆடையாகவும், பற்கள், நகங்கள் ஆயுதமாகவும் இருந்திருக்கக்கூடும். விலங்கோடு மனிதவிலங்காக வாழ்ந்தது மட்டுமின்றி தன்னை விட பல மடங்கு பலமுள்ள விலங்குகள் மற்றும் மிகவும் ஆபத்தான உயிரினங்களிடமிருந்து தன்னையும், தன் இனத்தையும் தக்கவைத்துக் கொள்ள போராடித்தான் வாழ்ந்திருக்கக்கூடும். ஆரம்ப காலகட்டதில் மனிதனின் மனமானது பசி, தாகம், மோகம் என்ற

உணர்ச்சிகளைத் தவிர வேறு உணர்ச்சிகள் இருந்திருக்க வாய்ப்பே இருந்திருக்காது. தனது உடல் உபாதைகளை எப்படி வேண்டுமானாலும் தீர்த்துக் கொள்ளலாம் என்ற முறையற்ற வெறி உடையவனாக விலங்கு மனிதன் வாழ்ந்திருக்கக்கூடும், இவ்வாறான மனிதனின் காட்டுமிராண்டி உணர்ச்சியை விலங்குணர்ச்சி (இட்) என்கிறார் ஃப்ராய்டு.

ஃப்ராய்டு மனிதனின் தொடக்க காலகட்டத்தில் மனித மூளையை விலங்குணர்ச்சி ஆக்கிரமித்துக் கொண்டது அதில் வேறுவித எண்ணங்களோ! உணர்ச்சிகளோ! தோன்ற வாய்ப்பு இருந்திருக்காது என்கிறார். மேலும் தன்னை தற்காத்துக் கொள்ளும் உணர்ச்சியே பிற்காலத்தில் பண்பாட்டு உணர்ச்சியாக உணரக் காரணமாக அமைந்தது. அதன் விளைவாகத்தான் மற்ற விலங்குகள் அடையாத வளர்ச்சியையும், முன்னேற்றத்தையும் மனித சமூகம் அடைந்தது என்கிறார்.

மனிதன் கூட்டமாக வாழும்போது இவ்விலங்குணர்ச்சியை கட்டுப்படுத்துகிறான். இதனால் மனித மூளையில் பண்பாட்டு உணர்ச்சிக்காக ஒரு சிறிய பாகம் சுத்தப்படுத்தப்படுகிறது. இவ்வாறு சுத்தப்படுத்தப்பட்ட பாகத்தை (ஈகோ) என்கிறார் ஃப்ராய்டு. இப்பண்பாட்டு உணர்ச்சியானது நாகரீக மாற்றத்தால் வளர்ச்சி அடைந்தாலும் மனிதர்களிடம் விலங்குணர்ச்சி முற்றிலும் அழிந்து விடவில்லை. மனித மூளையில் விலங்குணர்ச்சியும், பண்பாட்டு உணர்ச்சியும் தனது இடத்தை விரிவுபடுத்தவும் தக்கவைத்துக் கொள்ளவும், ஓயாமல் போராடிக் கொண்டுதான் இருக்கின்றன என்றார். ஒருவன் மீது கோபம் கொண்டதும் அவனைக் கொல்லத் துடிப்பது விலங்குணர்ச்சி. அவனைப் புரிந்து கொண்டு மன்னித்துவிடும்படியான புதிய வழியை நோக்கித் திருப்பி விடுவது பண்பாட்டு உணர்ச்சி. இதைப் ஃப்ராய்டு உயர்வழிப்படுத்தல் (sublimation) என்கிறார். மனிதனின்

விலங்குணர்ச்சியை உயர்வழிப் படுத்துவதால் உயர்ந்த காவியங்கள், கலைகள், தத்துவங்கள், விமர்சனங்கள் போன்றவை உண்டாகின. மனிதனிடம் இருக்கும் வேகம் நிறைந்த விலங்குணர்ச்சி உயர்வழிப்படுத்தும்போது அவனை அபூர்வமான காரியங்களைச் செய்யத் தூண்டப்படுகிறது.

உதாரணமாக அழகிய பெண்ணை ஒருவன் கண்டால் அவனது விலங்குணர்ச்சி அவளை வசப்படுத்தி அவளை அடைய வேண்டும் என எண்ணுகிறது. அதை உயர்வழிப்படுத்தும்போது அவளை சொற்களால் வருணிக்கிறான். அது கவிதையாகவோ, கதையாகவோ உருவாகின்றது. அவளை வரைகிறான் அது ஓவியமாகின்றது. ”மனித வாழ்கையில் ஏற்படும் வெற்றி தோல்விக்கும், புகழ்ச்சி, இகழ்ச்சிக்கும் அடிப்படைக் காரணம் இவ்வுணர்ச்சியே ஆகும். இவற்றைத்தான் ஃப்ராய்டு வாழ்வுணர்ச்சி (life instincts) சாவுணர்ச்சி (death instincts ) என்கிறார்”.

**வாடிவாசல்**

சி.சு செல்லப்பா 1959 இல் வாடிவாசல் எனும் குறுநாவலை எழுதினார். இக்குறுநாவல் ஏறுதழுவலை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட புனைகதையாகும். மனித மிருகப் போராட்டம் மனித மனிதப் போராட்டமாக மாறிவிட்ட நுட்பங்கள் உடைய படைப்பாக படைத்துள்ளார் ஆசிரியர்.

**கதைச் சுருக்கம்**

பிச்சி என்பவன் தன் தந்தையை கொன்ற ஜமீன்தாரின் காரிக்காளையை அடக்கி தனது பகையை தீர்க்க ஏறுதழுவல் நடைபெறும் இடத்திற்குச் செல்கிறான். அவனுக்கு துணையாக பிச்சியின் தங்கையின் கணவன் மருதன்

செல்கிறான். ஜமீன்தாரின் மிகவும் ஆபத்தான அக்காளையை அடக்கி தனது பகையை தீர்த்துக் கொள்கிறான். தோற்றுப்போன அக்காளை தனது புகழையும் பேரையும் கெடுத்ததாக எண்ணி அக்காளையை தனது துப்பாக்கியால் சுட்டுக் கொன்று தனது கோபத்தை தீர்த்துக் கொள்கிறார் ஜமீன்தார்.

**வாடிவாசலும் ஃப்ராய்டு கோட்பாடும்**

பிச்சியின் தந்தை ஜமீன்தாரின் காளையை வெல்ல முடியாமல் போக அக்காளையால் குத்துப்பட்டு குடல் வெளியில் வந்து ஆறுமாதங்களாக சிகிச்சை பலனின்றி இறந்துவிடுகிறார். இறக்கும் தருவாயில் பிச்சியிடம் அக்காரிகாளையை எப்படியாவது நீ வென்றுவிட வேண்டும் என்கிறார். இந்நிகழ்வு உளவியல் ரீதியாக மனிதன் தனது எண்ணங்களும் முயற்சியும் வெற்றி பெறாத நிலையில் தான் சார்ந்து இருப்பவர்களையோ அல்லது தன்னால் உருவாக்கப்பட்ட மனிதன் மூலம் நிறைவேற்ற நினைக்கிறான். ஃப்ராய்டின் இவ்விலங்குணர்ச்சி கோட்பாடு மிகப்பெரிய வெற்றி அடைந்ததன் காரணம் மனிதனுக்கு விலங்குணர்ச்சி உண்டு என்பதையும் அவ்வுணர்ச்சி பலர்மீது உட்புகுத்தப்பட்டு ஒரு சமூக உணர்ச்சியாக மாற்றப்படுகின்றது என நிரூபித்ததே ஆகும். இக்கோட்பாட்டை பிராய்டு எழுதிய சிறிது காலகட்டத்தில்தான் உலகப்போர் ஏற்படுகிறது. தனிமனித எண்ணம் ஒரு நாட்டின் எண்ணமாக உருமாறி போர் செய்யும் அளவுக்குப் போனது. இக்கோட்பாட்டின் உண்மைத்தன்மையும் ஃபிராய்டு யூதகுலத்தை சார்ந்தவர் என்பதாலும் ஹிட்லரால் எதிர்க்கப்பட்டு தன் சொந்த நாட்டிலிருந்து வெளியேறும் நிலை ஃப்ராய்டுக்கு உருவானது குறிப்பிடத்தக்கது.

வாடிவாசல் நாவலிலும் ஜமீன்தாரின் காரிக் காளையை வெல்ல வேண்டும் என்ற பிச்சியின் தந்தையினது எண்ணம். பிச்சிக்கும், பிச்சியைத் தொடர்ந்து

மருதனுக்கும் பகிரப்படுகிறது. ஏறுதழுவும் களத்தில் பிச்சிக்கும், மருதனுக்கும் உதவிய ஒரு கிழவனுக்கும் அவ்வெண்ணம் பரவுகிறது. அதன்பின் பார்வையாளர்களுக்கும் அவ்வெண்ணமானது விரிவடைவதை நாம் உணரமுடிகிறது.

ஏறுதழுவலில் ஜமீன்தாரின் காரிக்காளையை அறிமுகப்படுத்தும் தமுக்கு அடிக்கின்றவனின் அறிவிப்பானது,

"மாடு அணைகிறவன்னு சொல்லிக்கிட்டு, அப்பன், முப்பாட்டன் பெருமையை பேசிகிட்டு ஆம்புள மீசை முறுக்கிகள், பெண்சாதி பிள்ளைக்குட்டி இல்லாதவுங்க திறமிருந்துச்சினா பெண்சாதியை அணையிராப்பிலே இந்தக் காரியை அனைஞ்சு கொம்புக்கு நடுவே தொங்கும் ரெண்டு பவுன் தங்கத்தை அவுத்துக்கலாம் ஆம்பளயா இருந்தா புடிச்சிக்கோ பொம்பளயா இருந்தா ஓடி போய்க்கோ"

என்ற இந்த அறிவிப்பில் காரிக்காளையை அணையும் வீரர்களுக்கு தங்கம் போன்ற பரிசுப் பொருள் இருப்பினும் மனித உணர்வுகளைத் தூண்டும் வகையில் அவ்வறிவிப்பில் அமைந்துள்ளது.

முதலில் களம் இறங்கிய முருகு என்பவன் ஜமீன்தாரின் பிள்ளைக்காளையை அணையச் சென்று அவனால் இயலாமல் போக பிச்சி அதை அணைகிறான். இருப்பினும் முருகிடம் காளையின் நெற்றியில் இருக்கும் தங்கத்தை எடுத்துக் கொள்ளுமாறு கூறுகிறான். மனிதனுக்கு விலங்குணர்ச்சி மிகுந்து காணப்படும் வேளையிலும் மாட்டை அணைய முயற்சித்த சக மனிதனுக்கு வாய்ப்பாக கொடுக்க வேண்டும் என்ற பண்பாட்டு உணர்ச்சியும் அங்கு ஊடாடப்படுவதை நாம் உணர முடிகிறது.

பொதுவாக ஏறுதழுவதலுக்காக திறந்துவிடும் காளைகள் வீரர்களிடம் பிடிபடாமல் ஓடும் அல்லது தாவிச் செல்லும். சில காளைகள் மட்டும் வீரர்களிடம் நின்று விளையாடும். அவ்வாறான காளைக்கு நின்னுகுத்தி காளை என்று பெயர். இவ்வகை காளைகள் மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்று விளங்குகின்றன. காரணம் இவ்வகைக் காளைகள் வாடிவாசலில் இருந்து வெளிவரும்போதே மாடுபிடி வீரர்கள் தன்னைத் தொட அனுமதிக்காது. கொம்புகளால் குத்தி தாக்கும் அபாயமான குணம் கொண்டவை. இதுபோன்ற காளைகளே எதிரிகளிடமிருந்து தப்பிச் செல்லாமல் தனது முழு மிருக உணர்வுடன் செயல்படக்கூடியவை. காரிக்காளையும் இவ்வகையைச் சார்ந்ததுதான். இவ்வாறான நின்னுகுத்தி காளைகளை மாடுபிடி வீரர்கள் சந்திக்கின்ற காட்சிக்கு மக்களிடையே மிகுந்த ஆர்வமும், ஆரவாரமும் காணப்படுகிறது. அவ்வாறான காளைகளே பரிசையும் பாராட்டையும் பெறுகின்றன. இதுபோன்ற காளையை அணைய முற்படும் வீரர்களுக்கு அதற்கு இணையான மிருகக் குணமும், வலிமையும் தேவைப்படுகிறது.

காளையைத் தழுவிய மாடுபிடி வீரன் தனது வெற்றியை உறுதிபடுத்திய பிறகு அக்காளையை தட்டிக் கொடுப்பர், அக்காளையை துன்புறுத்தாமல் அனுப்பி வைப்பதும் சக விளையாட்டு வீரர்களிடம் விட்டுக்கொடுப்பது மேலும் கீழே விழுந்தாலும் தூக்கி விடுவதுமாகிய பண்பாட்டு உணர்வும் மாடுபிடி வீரர்களிடம் ஊடாடுவதை பார்க்க முடிகிறது.

காளைகள் மனிதர்களோடு ஒன்றிணைந்து வாழ்வதால் தனது மிருக குணம் மாறி பண்பாட்டு சாதுவாக மாறுவதை அவ்வப்போது நாம் பார்க்க முடிகிறது. ஏறுதழுவலின் போது வீரர்களிடம் தனது மிருகப் பண்பைக் காட்டும் காளை அவற்றை வளர்த்தவர் வரும்போது அமைதியாகச் சென்று விடுகிறது. வீட்டில்

குழந்தைகள் அதன் மீது ஏறி விளையாண்டால் கூட அவர்களை ஒன்றும் செய்வதில்லை.

மதுரையில் பாலமேடு, அவனியாபுரம் போன்ற இடங்களில் நடைபெறும் ஏறுதழுவலை விட அலங்காநல்லூரில் நடைபெறும் ஏறுதழுவுவல் மிகவும் பிரபலமானது. காரணம் மற்ற இடங்களில் விளையாட்டு திடல் நேர்க்கோடாக அமைந்துள்ளதால் அதனால் வெளிவரும் காளைகள் மாடுபிடி வீரர்களிடம் சிக்காமல் தப்பி ஓடி விடுகிறது. ஆனால் அலங்காநல்லூரில் ட போன்ற அமைப்பில் விளையாட்டு திடல் அமைந்துள்ளதால் வெளிவரும் காளை தனது பாதையை நிர்ணயிக்க இயலாமல் மாடுபிடி வீரர்களிடம் தனது முழு வலிமையையும் காண்பித்தே வெளியேறுகிறது. இதனால் வீரர்களுக்கு மிகுந்த காயங்களும், சில வேளைகளில் மரணமும் நிகழ்கிறது. அலங்காநல்லூர் வாடிவாசல் அமைப்பு முறையில் காளையின் மிருக குணமும், மனிதனின் மிருக குணமும், போராடி வெல்வதையும், தோற்பதையும் இன்றுவரை நாம் காண முடிகிறது.

நாவலின் இறுதியில் பிச்சி காரிக்காளையை வெல்கிறான், ஜமீந்தார் அவனுக்கு தகுந்த பரிசு வழங்கிய பின்பு தனக்கு பல்லாண்டுகளாகப் பேரும் புகழும் வாங்கித்தந்த தனது காரிக்காளை தோல்வியைத் தழுவியதால் சுட்டுக் கொல்கிறார். மேலும்

> *"காரிக்காளைசெத்துப்போச்சி, ஜமீன்தார் சுட்டுக் கொன்னுட்டாரு,*
>
> *மிருகத்துக்கு ரோஷம் வந்தாலும் போச்சு , மனுஷனுக்கு ரோஷம்*
>
> *வந்தாலும் போச்சு, என்ன இருந்தாலும் அது மிருகம் தானே."*

என ஊர் மக்கள் கூறுவதாக முடிகிறது நாவல். இந்நாவலில் பிச்சி காரிக்காளைக்கு இணையான மிருக பலத்துடன் மோதி வெற்றி பெற்று தனது

பகையை தீர்க்கிறான். இதிலிருந்து அவனது விலங்குணர்வை அறிய முடிகிறது. தனது புகழுக்கு காரணமான காளை பிச்சியிடம் தோற்றதால் அதனை சுட்டுக் கொன்ற ஜமீந்தார் செயலிலும் விலங்குணர்வு வெளிப்படுகிறது. இறுதியாக ஊர்மக்கள் கூறுவதிலிருந்து ஏறுதழுவும் திடலில் மனிதனை மிருகமாகவும், திடலுக்கு வெளியில் மனிதனை பண்பாட்டு உணர்வு மிக்கவனாகவும் எண்ணி மனிதனுக்கு கீழ் மிருகம் என சிறுமைபடுத்துவதும் புலப்படுகின்றது.

ஃப்ராய்டின் விலங்கு உணர்ச்சிக் கோட்பாட்டின்படி மனிதனுக்கு விலங்கு உணர்வு இருப்பதையும், மனித வளர்ச்சியால் பண்பாட்டு உணர்வும், விலங்குணர்வும், தனது எல்லையை விரிவுபடுத்தி கொள்ளப் போராடுவதையும் வாடிவாசல் நாவல் உணர்த்துகின்றது. எந்த விலங்கும் தனது வெற்றியை கொண்டாடுவதில்லை ஆனால் மனிதன் மட்டுமே தான் வெற்றியை கொண்டாடுகிறான். காளையை மட்டுமல்ல மனிதன் எப்போதும் இயற்கையையும் வெல்ல நினைக்கும் உணர்வு கொண்டவனாவான். சி.சு செல்லப்பாவின் வாடிவாசல் ஃப்ராய்டின் விலங்குணர்ச்சிக் கோட்பாட்டுக்கு வலு சேர்ப்பதை இவ்வாய்வின் வாயிலாக அறிய முடிகின்றது.

## தொகுப்புரை

கோட்பாடு நோக்கில் ஏறுதழுவுதல் எனும் இவ்வியலில் குலக்குறி என்றால் என்ன என்பதையும், நம் முன்னோர் எவற்றையெல்லாம் குலக்குறி அடையாளங்களாகக் கொண்டிருந்தனர் என்பது பற்றியும், தெளிவுபடுத்தப்படுகின்றது.

ரெயினாக் குலக்குறியியல் இயல்புடன் முத்தாலம்மன் காளையை தொடர்புபடுத்தியும், ஃப்ரேசர் கூறும் குலக்குறி இயல்புடன் அழகாத்தேவன் பற்றிய செய்திகளுடன் ஒப்பிட்டும், குலக்குறி நோக்கில் ஏறுதழுவுதல் எனும் தலைப்பில் ஆராயப்பட்டுள்ளது.

மனிதன் ஏன் விலங்குடன் மோதி தனது வீரத்தை நிரூபிக்க வேண்டும் என்பதையும், ஃராய்டின் கூறும் விலங்குணர்சி, பண்பாட்டு உணர்ச்சி போன்றவை சி. சு. செல்லப்பாவின் வாடிவாசலில் கதைக்கு எவ்வாறு பொருந்தி வந்துள்ளது என்பதையும் உளவியல் நோக்கில் ஏறுதழுவுதல் போன்ற தலைப்பில் இவ்வியலில் ஆராயப்படுகின்றது.

# இயல் - ஐந்து

## பண்பாட்டு அரசியலும்,
## பண்பாட்டு மீட்டு உருவாக்கமும்

## *இயல்- ஐந்து*

## பண்பாட்டு அரசியலும், பண்பாட்டு மீட்டு உருவாக்கமும்

மனித சமூகத்தின் வளர்ச்சிக்கு ஏற்றவாறு பண்பாடு மற்றும் பழக்கவழக்கங்களில் சிற்சில மாறுதல்கள் ஏற்படுவது ஏற்பதற்குரியதே ஆனால் ஏறுதழுவல் எனும் பண்பாட்டை முழுமையாக அழிக்கும் முயற்சிகள் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும். பன்னெடுங்காலமாக தமிழ்ச் சமூகத்தின் வாழ்வியலோடும், விழாக்களோடும் ஒன்றிக் காணப்பட்ட ஏறுதழுவல், மஞ்சுவிரட்டு, எருதுகட்டு, காளை வண்டி ஓட்டம், போன்றவைகளை விலங்கின ஆர்வலர்களின் தலையீட்டாலும், நீதிமன்ற தீர்ப்புகளாலும், அரசின் உத்தரவுகளாலும் இது போன்ற பாரம்பரிய அடையாளங்கள் அந்நியப்படுத்தபடுகின்றன.

ஏறுதழுவல் எனும் பண்பாட்டு அடையாளம் இன்று மிருகவதை எனும் சொல்லோடு பிணைக்கப்பட்டு சட்ட விரோத செயல் என்று சொல்லும் அளவுக்கு அரசு மற்றும் அரசு சாரா என்.ஜி. ஓ நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. ஏறுதழுவலில் காளைகள் துன்புறும், கொடும் காயங்களை உண்டாக்கும் என நீதிமன்றப் புரிதலின்படி ஏறுதழுவலுக்கு தடை விதிக்கலாயிற்று. ஏறுதழுவலை நம்மிடமிருந்து அகற்ற நீதிமன்றத் தீர்ப்புகளையும், அரசின் உத்தரவுகளையும் அதன் பின்னனிகளையும் நாம் புரிந்து கொள்ளுதல் அவசியமான ஒன்றாகும்.

இயற்கையை வணங்கும் தமிழர்களின் வழிபாட்டின் ஒரு பகுதியாக தாம் வளர்க்கும் கால்நடைகளுக்கு மிகுதியான முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. கால்நடைகளில் குறிப்பாக காளை மற்றும் பசுவை சிறப்பாக வழிபடும் பழக்கம்

நீண்ட நெடிய மரபாக தொடரப்பட்டு வருகிறது. பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளும் நோக்கத்தோடும், ஆநிரை கவர்தல், மீட்டல் பொருட்டும் நடைபெற்றிருந்த ஏறுதழுவலானது ஒரு காலகட்டத்தில் கௌரவம், தன்மானம், தெய்வ நம்பிக்கை, பரிசு பொருள் என்பதற்காக ஏறுதழுவலானது உருமாற்றம் அடைந்தது. தற்காலங்களில் ஏறுதழுவுதல் பண்பாட்டு எச்சமாக தமிழர்களின் திருநாளான பொங்கல் பண்டிகையில் காணப்பட்டு வருகிறது. பொங்கல் திருவிழாவின்போது காளைகளை நன்கு அலங்கரித்தும் வண்டிகளில் பூட்டியும், கொண்டாட்டங்கள் நடைபெறுகின்றன. அதன் தொடர்ச்சியாக, மாட்டுப் பொங்கலுக்கு மறுநாள் காணும் பொங்கலன்று இளைஞர்கள் காளைகளின் மூக்கணாங்கயிறுகளை அவிழ்த்தும் அவற்றை திறந்த வெளியிலோ அல்லது திடலிலோ காளையின் திமிலை தழுவியும் விளையாடி வருகின்றனர். ஏறுதழவுதல் தடையால் மிகுந்த கட்டுப்பாடுகளுடன் நடை பெற்று வருகின்ற ஏறுதழுவுதல் நிகழ்வு தன் தனித் தன்மையை மெல்ல இழந்து வருகிறது.

**ஏறுதழுவழுக்குத் தடை**

இராமநாதபுரம் மாவட்டம் கரிசல்குளம் பஞ்சாயத்து துணைத் தலைவரான முனியசாமி தேவர் ரேக்ளாபந்தயம் நடத்துவதற்கு காவல்துறையிடம் அனுமதி கேட்ட போது மறுக்கப்படுகிறது. இதனால் அவர் உச்சநீதிமன்றத்தை அணுகிய நிகழ்வு ஏறுதழுவுதல் தடைக்கு ஒரு விதையாக அமைந்தது. உச்சநீதிமன்ற வழக்கறிஞரான பானு என்பவர் இந்த வழக்கை தள்ளுபடி செய்யாமல் ஒட்டுமொத்த ரேக்ளாரேஸ் ஏறுதழுவுதல் எருதோட்டம் போன்றவற்றை தடை செய்யுமாறு உத்தரவிட்டார். இந்த உத்தரவானது மிருகங்களை அடிப்பது, உதைப்பது போன்ற செயல்கள் மிருகவதை தடுப்பு சட்டப் பிரிவுக்கும், நலனுக்கும்

எதிரானது, என்று குறிப்பிட்டார். ஆனால் இச்சட்டப் பிரிவு ஏறுதழுவுதலுக்கு முற்றிலும் பொருத்தமன்று இங்கு காளையை அடிப்பது, உதைப்பது, போன்ற வதைக்கு உட்படுத்தப் படுவதில்லை.

அதன் பின்பு ஒட்டுமொத்த ஏறுதழுவுதல் மற்றும் எருது விடும் விழா போன்றவற்றை தடை செய்தது மட்டுமல்லாமல் தற்போதுள்ள அபராதத் தொகையை அதிகப்படுத்த வேண்டும் என்று பரிந்துரை செய்கிறார். இத் தீர்ப்பானது விலங்கு நல ஆர்வலர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றது. அதன் பின்பு மேல்முறையீட்டின் போது இரு நீதிபதிகள் அடங்கிய அமர்வு 2007 நீதிபதி பானுமதியின் தீர்ப்புக்கு தடை விதித்தது. அந்த ஆண்டு ஏறுதழுவுதல் நடைபெறுவதற்கு இவை காரணமாயின. இத்தகைய மேல்முறையீடு காரணமாக வழக்கின் போது (animal welfare board of India ) விலங்கு நல அமைப்பின் தலையீடு காணப்பட்டது. இரண்டாயிரத்து 7 மார்ச் மாதம் உயர்நீதிமன்ற இரு நபர் அமர்வு விசாரணைக்குப் பின் இது போன்ற விளையாட்டுக்களை ஒட்டுமொத்தமாக தடை செய்தது தவறு என்று வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. ஏறுதழுவுதல் நடத்துவதற்கு ஒரு ஒழுங்கு முறை சட்டம் இயற்றி அதன் அடிப்படையில் ஏறுதழுவுதல் தடை நீக்கப்பட்டது.

இரு நபர் அமர்வின் தீர்ப்புக்கு எதிராக விலங்கு நல வாரியம் உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றது. அங்கு உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு தடைவிதிக்கப்பட்டது. மீண்டும் 2008ஆம் ஆண்டு ஜல்லிக்கட்டுக்கு முட்டுக்கட்டையாக இவ்வழக்கு விசாரணை அமைந்தது. அவ்வேளையில் ஏறுதழுவுதலுக்கு முழுவதுமாக தடை விதிக்கப்பட்டு ரேக்ளா ரேஸ் நடத்துவதற்கு மட்டும் அனுமதி வழங்கப்பட்டது. இதை எதிர்த்து தென் மாவட்டங்களில்

போராட்டம் தொடங்கியது. போராட்டத்தின் தீவிரத்தை உணர்ந்த தமிழக அரசான திமுக சீராய்வு மனு மூலம் மீண்டும் ஏறுதழுவுதல் நடத்தப் பட வேண்டும் என்று கூறியதனால் அப்போது நீதிமன்றம் பல்வேறு நிபந்தனைகளுடன் அனுமதி தந்தது. இதையொட்டி உச்ச நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவுகளிலேயே ஏறுதழுவுதல் நடந்தது. பிறகு ஏறுதழுவுதல் ஒழுங்குமுறை சட்டத்தை 2009 திமுக அரசு இயற்றியது. அப்போது இடைக்கால அனுமதியைப் பெற்றபின் இயல்பாக ஏறுதழுவுதல் நடை பெற்றது.

தமிழ்நாடு அரசின் ஏறுதழுவுதல் ஒழுங்குமுறைச் சட்டத்தை எதிர்த்து 2011 ம் ஆண்டு (PETA) பீட்டாஅமைப்பு உச்ச நீதிமன்றத்திற்கு சென்றது. அதே ஆண்டில் ஜூலை மாதம் ஹேமமாலினி, காளைகளை 'காட்சிப்படுத்தக்கூடாத விலங்குகள்' பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று சுற்றுச்சூழல் துறை அமைச்சருக்கு ஒரு கடிதத்தை எழுதியிருந்தார் . அதற்கு விலங்குரிமைப் பிரபலங்கள் பலர் ஆதரவளித்தனர். உச்ச நீதிமன்றம் தமிழ்நாடு அரசின் ஏறுதழுவுதல் ஒழுங்குமுறைச் சட்டத்தை அங்கீகரித்துவிட்டால், இதன் மூலம் ஏறுதழுவுதலுக்கான தடையை நீட்டிக்கச் செய்யலாம் என்பதே அதற்கான நோக்கம்.

அவர்களின் நோக்கம் நிறைவேறும் வகையில் சர்ச்சைக்குரிய அறிவிப்பில் காட்சிப்படுத்தக் கூடாத விலங்குகள் பட்டியலில் காளையைச் சேர்த்து அவ்வாண்டில் அறிக்கை வெளியிடப்பட்டது. இதை எதிர்த்து பல்வேறு நீதிமன்றங்களில் பல வழக்குகள் தொடுக்கப்பட்டன. வழக்குகள் நிலுவையில் இருக்கும்போதே இடைக்கால நிவாரணமாக மீண்டும் ஏறுதழுவுதலுக்கு அனுமதி அளிக்கப்பட்டது. அவை இடைக்கால நிவாரணமாக மட்டுமே, உச்சநீதிமன்றம் 2014 - ம் ஆண்டு மே மாதம் ஏறுதழுவுதல் தொடர்பான பல்வேறு வழக்குகளையும்

இணைத்து விசாரித்து இறுதித் தீர்ப்பு அளித்தது. தமிழ்நாடு அரசின் ஏறுதழுவுதல் ஒழுங்குமுறைச் சட்டம் மிருகவதை தடுப்பு சட்டத்திற்கு எதிரானது என்றும், காளைகளை காட்சிப்படுத்த இயலாத விலங்குகள் பட்டியலில் இணைத்தது சரி என்றும் உத்தரவு பிறப்பித்தது. தமிழர் பண்பாட்டை மாற்றும் வகையில் அமைந்த ஏறுதழுவுதல் தடை உத்தரவு வரலாற்றில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது எனலாம்.

**தடை உத்தரவின் அடிப்படையான சாராம்சங்கள்**

- காளைகள் பண்ணை வேலைக்கும், உழுவதற்கும், பாரம் சுமப்பதற்கும் மட்டுமே உதவக்கூடிய விலங்கு , உடற்கூறியல் அடிப்படையில் ஓட இயலாதவை, ஏறு தழுவுதல் மூலமாக பயம், அழுத்தத்திற்கு ஆட்படுத்தப்படுவதால் அவை ஓடுவதற்கு நிர்பந்திக்கப்படுகின்றன.
- அலங்காநல்லூரில் நடைபெற்ற ஏறு தழுவுதல் குறித்து விலங்கு நல வாரியம் எவ்வாறு உயர், உச்ச நீதிமன்ற உத்தரவுகள் மீறப்பட்டுள்ளன என்றும் காளைகளுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளைப் பற்றியும் விரிவாக தன் அறிக்கையில் பதிவுசெய்திருக்கின்றது.

**தேவை கோட்பாடு (Doctrine of Necessity)**

- மிருகவதைத் தடுப்புச் சட்டம் பிரிவு 11 (3) இன் படியும், இந்த கோட்பாட்டின் படியும் சில செயல்களுக்கு விதிவிலக்குகள் அளித்துள்ளது. மாடுகளுக்கு இதன்படி மூக்கணாங்கயிறு போடுவது, கொம்பை நீக்குவது, காயடிப்பது, போன்றவையும் தெரு நாய்களை மரண அறையில் (lethalchamber) சட்டப்படி கொல்வது, உணவிற்காகக் கொல்வது,

மருத்துவப் பரிசோதனைகளுக்குப் பயன் படுத்துவது மற்றும் மத நம்பிக்கைகளுக்காக பலியிடுவது தேவையின் அடிப்படையிலானது. எனவே, இவை மிருகவதை சட்டத்தின் கீழ் வராது. இதைத் தவிர வேறு எந்த வகையிலும் மிருகங்களை கொடுமைப்படுத்தக் கூடாது.

**தேவையில்லாத வதை மற்றும் வாதைகள் (unnecessary pain and suffering)**

- அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 51(A) - ன் படி ஒவ்வொரு குடிமகனும் விலங்குகளிடம் கரிசனத்துடன் நடந்து கொள்வது அடிப்படைக் கடமையாகும். மிருகவதைத் தடுப்புச் சட்டம் பிரிவு 3 - ன் படி, விலங்குகளின் உரிமையாளர்களும், பராமரிப்பாளர்களும் அவற்றின் நலனுக்குப் பொறுப்பானவர்கள். விலங்குகளுக்குத் தேவையில்லாத வதை மற்றும் வாதைகள் (unnecessary pain and suffering) ஏற்படாதவாறு உறுதிசெய்வதற்குக் கடமைப்பட்டவர்கள்.

- மிருகவதச் சட்டத்தின்படி பொழுதுபோக்கிற்காக வணிகரீதியில் அனுமதிச்சீட்டு வழங்கியபின் போட்டிகளில் ஈடுபடுத்தப்படும் விலங்குகளைத்தான் காட்சிப்படுத்தப்படாத விலங்குகள் பட்டியலில் சேர்க்கமுடியும். எனவே காட்சிப்படுத்தக்கூடாத விலங்குகள் பட்டியலில் காளையை சேர்த்தது சட்டப்படி தவறு என்றும் ஏறுதழுவுதல் ஆர்வலர்கள் வாதிட்டதை ஏற்கவில்லை.

தமிழ்நாடு ஏறுதழுவுதல் ஒழுங்குமுறைச் சட்டம் 2009 - ன் அடிப்படை நோக்கம் 'மரபு மற்றும் கலாச்சாரத்தைக் காப்பாற்றுவதே' என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது. மதரீதியிலான சடங்கு என்ற அடிப்படையில் அல்ல.

திராவிட அரசு இயற்றிய சட்டம் என்பதால் மத நம்பிக்கையை இதில் இணைக்கவில்லை எனவே . இப்படி ஒரு பின்னடைவு வரும் என்று யாரும் அப்போது எதிர்பார்த்திருக்கவில்லை. இந்த சட்டத்தில் அப்போதே மத நம்பிக்கையின் பாற்பட்ட சடங்கு என்பதை குறிப்பிட்டிருந்தால் அரசியலமைப்புச் சட்டத்தால் உறுதிசெய்யப்பட்ட நம்பிக்கைகளின் (Articles 25 and 26) கீழ் வந்துவிடும் என்று அப்போது வாதிட்டிருக்கலாம். ஆனால், இந்தத் தீர்ப்புக்கு எதிராக தமிழ்நாடு அரசு செய்த சீராய்வு மனுவில் தாமதமாக இப்படி ஒரு வாதம் எழுப்பப்பட்டதையும் நீதிபதிகள் வேறு சில காரணங்கள் கூறி நிராகரித்து விட்டது குறிப்பிடத்தக்கது.

- தற்போது வழக்கத்தில் இருக்கும் ஏறுதழுவுதல் எனும் விளையாட்டு முறை என்பது பழைய மரபு மற்றும் கலாச்சாரத்தின் அடிப்படையிலானது என்பதை ஏற்கமுடியாது. மேலும் 'விலங்குகளைப் பாதுகாப்பது தான் தமிழ் மரபு மற்றும் கலாச்சாரம்' என்று சொல்லிவிட்டு, 'தமிழ் கலாச்சாரத்தின்படி காளை சிவனின் வாகனம்' என்று குறிப்பிடுகிறார்கள். இதை தமிழ்ப் பண்பாட்டு ஆய்வாளர்கள் தான் விளக்க வேண்டும்.
- கி.மு 1500- 600 களில் இயற்றப்பட்ட ஈசா - உபநிடதங்களின்படி இந்த உலகத்தில் அனைத்து உயிரினங்களுக்குமான இடமுண்டு. எந்த உயிரும் மற்றவற்றை விட உயர்ந்தது என்பது கிடையாது. எனவே ஒரு உயிரினம் மற்றொன்றின் உரிமைகளையும், சலுகைகளையும் ஆக்கிரமிக்கமுடியாது.
- சர்வதேச மிருகநல அறிக்கைகளின் அம்சங்களையும், வழிகாட்டு நெறிமுறைகளையும், குறிப்பிட்டு விலங்குகளின் உரிமைகளை மதிக்க

வேண்டும் என்றும் அறிவுறுத்துகிறார்கள். மிருகங்களுக்கான உரிமைகள் சட்டப்பிரிவுகள் 11 (3) மற்றும் 28-ஐத் தவிர வேறு எந்த விதத்திலும் பறிக்கப்படக்கூடாது.

- மிருகவதை தடுப்புச்சட்டம் பிரிவு 11- ன்படி தேவையற்ற வலியையும், வதையையும் விலங்குகளுக்கு (காளைகளுக்கு) ஏற்படுத்தக்கூடாது. இயல்பிலேயே வதையை ஏற்படுத்தக்கூடிய ஒரு காட்டுமிராண்டித்தனமான விளையாட்டு, ஏறுதழுவுதல் என்று

2014 - ம் ஆண்டு வெளிவந்த இறுதித் தீர்ப்பு, நாம் ஏறுதழுவுதலை நடத்துவதற்கு சட்ட ரீதியான அனைத்து வழிகளையும் அடைத்துவிட்டது என்றே சொல்லலாம். ஏறுதழுவல் விளையாட்டை அனுமதிக்கும் வகையில் 2016 ல் மத்திய சுற்றுச் சூழல் அமைச்சகமானது காட்சிபடுத்தல் தடை செய்யப்பட்ட விலங்குகள் பட்டியலில் காளையை நீக்கியது. அதனை எதிர்த்து பீட்டா ஃபியடொ அமைப்புகள் எதிர் மனு தாக்கல் செய்தன, தமிழக அரசின் சீராய்வு மனுவையும் தள்ளுபடி செய்தது உச்ச நீதிமன்றம். மேலும் அதற்கு பதில் மனு தாக்கல் செய்தபோது 2017- ம் ஆண்டு விரைவில் தீர்ப்பு வழங்குமாறு தமிழக அரசு கோரிக்கைவிடுத்ததை உச்ச நீதிமன்றம் நிராகரித்தது.

சென்னை உயர்நீதி மன்றத்தில் 2017ம் ஆண்டு ஏறுதழுவலுக்காக இளைஞர்களின் ஒன்றிணைந்த போராட்டத்தை வழக்கறிஞர் பாலு குறிப்பிட்டபோது இவை சார்ந்த மனுக்கள் உச்ச நீதிமன்றதில் உள்ளதால் அதில் தலையிட முடியாது என்றது நீதி மன்றம். இதே போன்று வழக்கறிஞர் கிருஷ்ண மூர்த்தி ராஜா உச்ச நீதி மன்றத்தில் தமிழகத்தில் நடைபெறும் போராட்டங்கள் குறித்து கூறியபோது சென்னை உயர் நீதி மன்றத்தை அணுகுங்கள் என்றது.

அதன் தொடர்ச்சியாக மாணவர்களின் எழுச்சியாலும், உலகமெங்கும் காணப்படும் தமிழர்களின் எழுச்சியாலும் மத்திய அரசானது பணிந்தது. ஆனாலும் மத்தியரசின் பொதுப் பட்டியலில் உள்ள மிருகவதை தடுப்புச் சட்டத்தைத்தான் திருத்தாமல் தமிழ் நாடு அரசை திருத்தி கொள்ளுமாறு கேட்டுக் கொண்டது.

அதன்பொருட்டு தமிழக அரசானது மிருக வதை தடுப்புச் சட்டத்தை திருத்தி ஏறுதழுவல் மிருக வதை இல்லை என்பதிலிருந்து விலக்கி அவசர சட்டம் ஒன்றை நிறைவேற்றியது. மத்திய அரசின் பல்வேறு துறைகளும் ஒரே நாளில் ஒப்புதலும் அளித்தது. இவ்வாறு பல தடைகளை மீறி ஏறுதலுவல் எனும் பாரம்பரிய விளையாட்டு நிலைநிறுத்தபட்டது.

**விலங்குகள் நல அமைப்புகள் மற்றும் செயல்பாடுகள்**

விலங்குநல அமைப்பானது முதன் முதலில் 19 - ம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் தொடங்குகியது . 1824 (Royal Society for the Prevention of Cruelty to Animals) ராயல் சொசைட்டி, விலங்குகளுக்கு எதிரான தடுப்பு நடவடிக்கை (RSPCA) என்ற-அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. இந்த அமைப்பின் பின்னர் அமெரிக்காவில் 1866 - ல் (American Society for the Prevention of Cruelty to Animals)விலங்குகள் மீதான வன்கொடுமை தடுப்புக்கான அமெரிக்க சங்கம் என்ற அமைப்பு(ASPCA) தோற்றுவிக்கப்பட்டது. பிறகு தொடர்ச்சியாக சிறிதும், பெரிதுமாக மிகுதியான அமைப்புகள் தோன்றின. முதலில் விலங்குகளின் 'நலன்' என்று தொடங்கியவர்கள் அடுத்த கட்டத்திற்கு முன்னேறி விலங்குகளின் 'உரிமை' என்றும், விலங்குகளின் உரிமையை நிலைநாட்டிய பிறகு

விலங்குகளுக்கு வாழ்வதற்கான உரிமை உட்பட்ட ‘அடிப்படை உரிமைகளாக’ உயர்த்தவேண்டும் என்றும் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

காளை மற்றும் பசுவை வேளாண் குடிகள் பண்ணை வேலைக்கென வைத்திருப்பார்கள் அல்லது பாலுக்காக வைத்திருப்பார்கள். ஆனால் இவர்களுக்கும், மாடுகளுக்கும் உள்ள உறவு என்பது மாடுகள் தங்களின் ஒரு ‘சொத்து’ என்ற அடிப்படையில்தான். இந்த மாடுகளின் தேவை முடிந்துவிட்டால் பராமரிக்கும் அளவிற்கு இவர்களுக்கு பொருளாதார பலம் இருக்காது. ஆனால் இந்த விலங்கு நலம் பேசும் அமைப்பினர் இதை மறுக்கிறார்கள். மாடுகளுக்கும் அதை வைத்திருப்பவர்களுக்குமான உறவு என்பது “ விலங்குகள் - காப்பாளர்” என்ற உறவுதான் என்றும் விலங்குகளின் நலனுக்கு அவர்கள் பொறுப்பாளர்கள் என்றும் வரையறுக்கிறார்கள்.

மேட்டுக்குடியினரிடமும் தனித்து வாழ்பவரிடமும் விலங்குகளை செல்லப்பிராணிகளாக வளர்க்கும் பழக்கம் இரண்டாம் உலகப்போர் முடிந்தவுடன் அதிகரிக்கரித்தது. இவர்கள்தான் இன்று விலங்குநல அமைப்பில் முக்கியமானவர்களாக காணப்படுகின்றனர். உலகம் முழுவதும் விலங்குநல ஆதரவாளர்கள் வலதுசாரிகளாக இருப்பதுதான் சிக்கல். ஹிட்லரும் ஒரு சைவ உணவுப்பழக்கம் உள்ளவர் அது போன்று இந்தியாவிலும் வலது சாரிகள் தான் இந்த விலங்குநல அமைப்புகளை கட்டுப்படுத்திக்கொண்டிருக்கிறார்கள் என்றால் அவை மிகை இல்லை. விலங்குநல அமைப்பினருக்கு இன்றளவிலும் பைபிளாக இருப்பது 1975 - ல் பீட்டர் சிங்கர் எனும் ஒரு பேராசிரியர் எழுதிய 'விலங்குகள் விடுதலை' (Animal Freedom) எனும் புத்தகம்தான். இந்த புத்தகம் வெளியான பிறகு விலங்குநல அமைப்பினருக்கு ஒரு தத்துவார்த்தபலம் கிடைக்கிறது.

இப்புத்தகம் வெளிவந்த பின்னர் விலங்குகளுக்கும் மனிதனைப் போல வலி மற்றும் வதையை உணரும் தன்மை இருக்கிறது. எனவே நாகரிக சமுதாயம் அவற்றுக்கான உரிமையைத் தரவேண்டும் என்றனர். இந்தக் காலகட்டத்தில்தான் தொடர்ச்சியாக பெண்விடுதலை, மனித உரிமைகள், சூழலியல் உரிமைகள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான உரிமைகளுக்காக முற்போக்கான இயக்கங்கள் தோன்றி அவர்களுக்கான உரிமைகளை வென்றெடுக்கின்றன. இந்நிலையில் விலங்கு நல அமைப்புகளும், விலங்குகளின் உரிமைக்கான பிரச்சாரத்தைத் தீவிரப்படுத்துகிறார்கள். குடிமைச் சமூகத்திலிருந்து நல்ல ஆதரவு கிடைக்கிறது. நன்கொடைகளும் உலக நாடுகளிடமிருந்து கிடைக்கத் தொடங்கியது.

1984 - ஆண்டில் இங்கிரிட் நியுகிர்க் என்னும் பெண்மணியின் சிறுவயதில், அவரின் தந்தை இந்தியாவில் பணிபுரியும் போது அவரின் தாயார் அன்னை தெரசாவின் சமூகசேவை அமைப்பில் பணிபுரிந்தார். அவருக்கு உதவியாக இவரும் பல்வேறு உதவிகளைச் செய்கிறார். பிறகு அவர் அமெரிக்காவுக்குச் சென்றவுடன் காயம்பட்ட பூனைகளை ஒரு தங்குமிடத்திற்கு கொண்டுபோய் விடுகிறார், அப்போதுதான் அவர் வாழ்வில் திருப்புமுனை ஏற்படுகிறது. பிறகு அனிமல்பிரீடம் எனும் நூலைப் படிக்கிறார். இன்னபிற விலங்குகளுக்கு இழைக்கப்படும் கொடுமைகளைப் பார்த்து பீட்டா என்ற ஓர் அமைப்பை தொடங்குகிறார். இவ்வமைப்பானது ஏறுதழுவுதல் எனும் புரட்சிப் போராட்டத்தில் பெருவாரியான மக்களால் வெறுக்கப்பட்ட அமைப்பு என்பது குறிப்பிடத்தக்கது.

பீட்டா என்ற அமைப்பின் நோக்கம் “முழுமையான விலங்குகள் விடுதலை” என்பதாகும். அதாவது மிருகங்களை எந்த விதத்திலும் காயப்படுத்த முடியாத பரிபூரண விடுதலை மற்றும் உலகத்தையே சைவ உணவு பழக்கத்தினராக மாற்றுவது. உணவிற்காக மிருகங்களைப் பயன்படுத்தக்கூடாது, தோல், கம்பளி ஆடை உற்பத்தி செய்யக் கூடாது, மருந்து பரிசோதனையில் விலங்குகளை ஈடுபடுத்தக் கூடாது என பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்து, அதில் குறிப்பிடத்தகுந்த அளவில் வெற்றியும் பெற்றிருக்கிறார்கள்.

பீட்டா அமைப்பை பொறுத்த அளவில் ஏறுதழுவுதலுக்கு தடை என்பது அவர்களின் உலகளாவிய மிருகவதை என்பதன் அடிப்படையிலான விளையாட்டைத் தடைசெய்வது என்பதுதான்! விலங்குநல அமைப்பினரின் மீது உலகம் முழுவதுமே பெருவாரியான மக்கள். மிகப்பெரும் வியாபார நிறுவனங்கள் உட்பட அதிருப்தியில்தான் இன்று வரை காணப்படுகின்றனர். இவர்கள் தொடர்ந்து விலங்குகள் நலன் என்ற பெயரால் சில இடங்களில் வேட்டையாடுவதை இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளில் தடுத்து விட்டார்கள். இதனால் பாரம்பரிய வேட்டைச் சமூகங்கள் இவர்கள் மீது கடும் கொந்தளிப்பில் உள்ளன. இந்த அமைப்பின் வாயிலாக 2004 -ல் இங்கிலாந்தில் நரி வேட்டை முற்றிலும் தடைசெய்யப்பட்டது. விலங்குகளின் ரோமங்களிலிருந்து செய்யப்படும் உடைகளுக்கு தடைகோருகிறார்கள். மிருகங்களை வைத்து சோதனைசெய்யும் மருந்து கம்பெனிகளும் செயல்படா வண்ணம் தடைக்கு விதிக்கப்பட்டுள்ளது நாம் அறிந்த ஒன்றே! கொடுமை இல்லாத அழகு இரக்கம் வரம்பற்ற மற்றும் செயல்.

பீட்டா பற்றி பொதுமக்கள் நமது நாட்டில் அனைவரும் அறிந்திருக்கிறார்கள். ஆனால், விலங்குநல வாரியம் (AWBI) என்ற மத்திய அரசின் கீழ் வரும் அதிகாரப்பூர்வ அமைப்பையோ அல்லது அதன் கீழ் இயங்கும் 3000 - க்கும் அதிகமான பிற அமைப்புகளையோ (Beauty without Cruelty, Compassion Unlimited Plus Action) உட்பட்ட முக்கியமான (NGO) என். ஜி. ஓக்களை மக்களுக்கு அதிகமாகத் தெரியாது. ஆனால் இவர்கள் நமது நாட்டில் தொடர்ச்சியாக இயங்கி முன்னெடுத்துச் செய்த சாதனைப்பட்டியல் மிகப்பெரியது என்றே கூறலாம்.

பீட்டாவிற்கு முன்பாக, விலங்குகள் நல வாரியம் (Animal welfare board of India) எனப்படும் மத்திய அரசின் கீழ் வரும் விலங்கு நலவாரியம் 1962 -ல் உருவாக்கப் பட்டது. ஏறுதழுவுதல் விவகாரத்தில் ஆரம்பகட்டத்திலிருந்து எதிராகப் போராடியதும் இந்த அமைப்பே! இந்த விலங்குநலவாரியம் மக்களின் வரிப்பணத்தில் இயங்கும் சட்டப்பூர்வமான அமைப்பு. இதன் கீழ் அங்கீகரிக்கப்பட்ட 3200 என்.ஜி.ஒ.க்கள் இயங்குகின்றன. இந்த என்.ஜி.ஒ.க்களுக்கு அவற்றின் செயல்பாடுகளுக்கேற்ப விலங்குநல வாரியம் உதவித்தொகைகளை அளிக்கிறது. ஆனால், இந்த பதிவுசெய்யப்பட்ட 3200 என்.ஜி.ஓ.க்களில் பீட்டா கிடையாது என்பது குறிப்பிடத்தக்கது. அப்படிப்பட்ட சில அமைப்புகளின் சாதனைகளில் சில பின்வருமாறு.

- மும்பை ஜூஹூ கடற்கரைப் பகுதிகளில் நடைபெற்றுவந்த ஒட்டக சவாரியையும், ஜெய்ப்பூரில் நடைபெற்ற யானை சவாரியையும் தடை செய்ததும் இது போன்ற அமைப்புகள் தான்.

- பல்லாண்டுகளாக நடைபெற்று வந்த முதுமலை சரணாலயத்தில் யானைகளின் சாகச நிகழ்ச்சி , 1998 - ம் ஆண்டில் மிருகவதை தடுப்பு சட்டத்துக்கு எதிரானது என்று அரசை வலியுறுத்தி நிறுத்தியேவிட்டது.
- கர்நாடகத்தில் உத்பர் எனும் கிராமத்தில் மகரசங்கராந்தியின் போது மொத்தமாக ஆடுகள் பலியிடப்படும் வழக்கம் உண்டு . 11(3) இது சட்டப்படி தவறே இல்லை என்றாலும் இந்த அமைப்பானது 1998 - ல் அந்த கிராமத்து நபர்களிடம் பேசியே தடை செய்தது.
- இந்த அமைப்பின் பரிந்துரையின் பேரிலேயே சர்க்கசில் புலி, கரடி, சிங்கம், சிறுத்தை, குரங்கு போன்ற விலங்குகள் பயன்பாடு தடை செய்யப்பட்டது.
- 2013 - ல் மறைந்த முதல்வர் ஜெயலலிதா அவர்கள் அறிவித்த திட்டமான மகாபலிபுரம் டால்பின் பூங்கா திட்டத்தை தொடக்கத்திலேயே தடை செய்து விட்டது.
- சில உள்ளூர் அமைப்புகளுடன் சேர்ந்துகொண்டு இந்த அமைப்பு போராடி 1996 ல் பாம்பே உயர் நீதி மன்றம் ( DHIRIO ) திரியோ. எனப்படும் காளைகளுக்கிடையிலான சண்டையைத் தடை செய்தது. இந்தத் தீர்ப்பை மேற்கோளாகக் கூறியே நீதிபதி பானுமதி 2006 ஆம் ஆண்டு மிருகவதைத் தடுப்புச் சட்டத்தின்படி ஏறு தழுவுதலை தடைசெய்தார்.

உலக நாடுகளில் ரேபிஸ் எனப்படும் வெறிநாய்க் கடியால் ஏற்படும் உயிரிழப்புகளில் 36 சதவீதம் இந்தியாவில்தான் ஏற்படுகிறது. நாய்க்கடியால் கேரளாவிலும், பெங்களூர்லும், ஏற்பட்ட உயிரிழப்புகள் மிக அதிகம். ஆனால்,

இத்தனைக்கு பிறகும் நாய்களை கண்முடித்தனமாகக் கொல்லக்கூடாது, மிருகவதைத் தடுப்புச் சட்ட விதிகளின்படிதான் கொல்லவேண்டும், என்றது இந்த அமைப்பு. மேலும் வெறிநாய்க்கு குடும்பக்கட்டுப்பாடு (sterilization) செய்ய வேண்டும், என்று உச்ச நீதிமன்றத்தை அணுகியது. அடிப்படை மருத்துவ வசதிகளுக்கே சாமானியர்கள் போராடிக் கொண்டிருக்கையில் உச்ச நீதிமன்றமும் இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு நாய்களுக்கு குடும்பக்கட்டுப்பாடு அறுவைச்சிகிச்சை (sterilization) செய்யவேண்டும் என்று அனைத்து மாநிலங்களுக்கும் உத்தரவிடுகிறது. பாரம்பரியமிக்க ஏறுதழுவுதலை 2016 - ம் ஆண்டு தடைவாங்கியதற்கு இந்த பீட்டா அமைப்பும் ஒரு முக்கியமான காரணம் ஆகும்.

மனித முன்னேற்றம் தற்போது எந்திரமயம் ஆகிவிட்டது என்றே கூறலாம், மனித வாழ்வில் நவீனம் ஒரு புறம் வளர்ச்சியடைய மறுபுறம் சில இழப்புகளை சந்திக்க நேர்கிறது. சரக்கு வாகனங்கள், இயந்திரக்கலப்பை பயன்பாடு வந்த பின்பு காளைகள் மீது இருந்த ஆர்வம் மனிதனுக்கு குறையத் தொடங்கியது, எனினும் மரபார்ந்த ஏறுதழுவுதல் போன்ற நிகழ்வுகளில் காளைகள் கலந்து கொள்வதால், அவற்றை தற்போதும் பேணிப் பாதுகாத்து வளர்த்து வருகின்றனர். ஆனால் சமூக மாற்றத்தால் பெருமையும், பழமையும் வாய்ந்த தமிழர் அடையாளமான ஏறுதழுவுதல் தேவைதானா? தேவையற்றதா? என்ற வினா எழுந்துள்ளது. எனவே ஏறுதழுவுதலை ஆதரிப்போர் மற்றும் எதிர்ப்போர் கருத்துகள் இங்கு சுட்ட வேண்டிய அவசியமாகின்றது.

**ஆதரிப்போர் கருத்து**

ஏறுதழுவுதல் என்பது தமிழர்களின் தொன்மையான மரபு விளையாட்டு ஆகும். அது தமிழர்களின் பண்பாட்டின் அடையாளமாக கருதப்படுவதாகவும். வீரத்தின் குறியீடாகவும், காலம் கடந்து பயணிக்கிறது, அதனை அழியவிடக் கூடாது, என்று ஏறுதழுவுதல் நிகழ்வினை ஆதரிப்போர் தங்களது கருத்தை முன் வைக்கின்றனர். மேலும் அவர்கள் காளைகள் கன்றில் இருந்தே சிறப்பாக வளர்க்கப்பட்டுக் கோவில் காளையாக வழிபட்டு ஏறுதழுவுதலுக்கு மட்டும் பயன்படுத்த வளர்க்கப்படுகிறது. ஏறுதழுவுதல் போட்டிகளில் பயன்படுத்தும் காளையை உழவுக்குப் பயன்படுத்துவது இல்லை என்கின்றனர்.

நாட்டு மாட்டு இனப் பாதுகாப்பு என்பது மிக முக்கியமானது, எனவே ஏறுதழுவுதல் நிகழ்வின் மூலமாக காளையை வளர்த்தல், நாட்டு இனச் சந்ததியை உருவாக்க சாத்தியமாகிறது. அருகி வரும் காளை இனங்களைத் தக்க வைத்துக் கொள்ளவும் ஏறுதழுவல் பயன்படுகின்றது.

மத்திய அரசு விதித்துள்ள கட்டுப்பாடு யானைக்குக் கூட இல்லை. கேரளத்தில் யானைகளை வைத்துப் ஆனையோட்டங்கள் நடத்தப்படுகின்றன. மேலும் அங்கு யானைகள் இல்லா கோவில் திருவிழாக்கள் காண்பதும் அரிது. பல இடங்களில் விலங்குகள், பறவைகளை வைத்து நடத்தப்படும் போட்டிகளுக்குத் தடைகள் பெரிதும் காணப்படாத போது, குடும்ப நபராகக் கருதி போற்றி பேணிக் காக்கும் காளைக்குக் ஏன் இந்த பாகுபாடு என்றும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஸ்பெயின் தேசத்து ('புல் ஃபைட்'டுடன்) காளைச் சண்டையுடன் ஒப்பிட்டால், ஏறுதழுவுதலில் மிருக வதை என்பதே இல்லை. ஏறுதழுவுதல் எனும் பெயரிலேயே காளையை தழுவுதல் எனும் சொல் அடங்கி உள்ளது, குறப்பிடத்தக்கது. ஸ்பெயின் நாட்டில் மிருகத்துடன். மோதும் மனிதன் வேல் கொண்டு அதைக் குத்திக் கொல்வதுதான் ‘விளையாட்டின்’ வடிவமாகும். இங்கு மனிதர்கள் கையில் ஆயுதங்கள் இல்லை. ஒரு சில இடங்களில் நடைபெறும் மிருக வதையை சுட்டிக் காட்டி பண்பாட்டு அடையாளத்தை தடை கூறுவது தவறு. ஏறுதழுவுதல் நிகழ்வில் காளைகளுக்குத்தான் மனிதர்களைக் காயப்படுத்தும் கூரான கொம்புகள் உள்ளன. பெரும்பாலும் முறையானப் பயிற்சி பெற்ற வீரர்களும், உடல் தகுதி பெற்றவர் இதில் கலந்து கொள்கின்றனர்.

**எதிர்ப்போர் கருத்து**

ஏறுதழுவுதல் என்பது ஒட்டு மொத்த தமிழகப் பண்பாடு ஆனால் ஒரு சில மாவட்டங்களிலுள்ள சில மக்கட் குழுவின் அடையாளம் என்ற வாதமும் இவர்களால் முன்வைக்கப்படுகிறது. மேலும் ஒரு மரபு விளையாட்டு நிகழ்ச்சி அடிப்படையிலேயே தவறாக இருப்பதால் அதை விட்டுக்கொடுத்து விலங்குகளின் நலனைப் பாதுகாக்க வேண்டும்.

ஏறுதழுவுதலை எதிர்ப்போர் கூறும் மிக முக்கிய வாதம் விலங்கு வதை. உழவுக்குப் பயன்படுத்தாமல் பாராட்டி சீராட்டி வளர்ப்பது அந்தக் காளையை ஆண்டின் ஒரு நாளில் உடல், மன அழுத்தங்களுக்கு உட்படுத்த முடியும், என்பது ஏறுதழுவுதலை எதிர்ப்பவர்களின் நோக்கமாக உள்ளது.

கேரளாவில் இன்னொரு விலங்கை மனிதனின் களியாட்டங்களுக்கு பாவிப்பதையும் சில ஐரோப்பிய நாடுகளில் நடக்கும் இதைவிட கடுமையான

நிகழ்வுகளையும் தடை செய்தால்தான் இதையும் தடைசெய்ய முடியும், என்ற ஏறுதழுவல் ஆதரவாளர்களின் கருத்தை ஏறுதழுவுதலை எதிர்ப்போர் மறுக்கின்றார்கள்.

மனிதனால் விலங்கு பாதிக்கப்பட்டாலும் தவறுதான். ஸ்பெயினின் தவறு அலங்காநல்லூரை நியாயப் படுத்திவிடாது. அர்த்தமற்ற முரட்டுத்தனம் எங்கே இருந்தாலும் அது விமர்சிக்கப்பட வேண்டியதுதான்.

என்றிவ்வாறு தங்கள் மாறுபட்ட கருத்துக்களை. மக்கள் வெளிப்படுத்துகின்றனர்.

**ஏறுதழுவுதலில் பண்பாட்டு மீட்டுருவாக்கம்**

பண்ணெடும் காலம் பழைமையும், பண்பாடும் உடையவர்கள் தமிழ் இன மக்கள். தமக்கெனத் தனித்தமைந்த நாடு நகர் நிருவாகம் என அனைத்தும் கொண்டிருந்தனர். அவர்களுடைய வாழ்க்கையில் பின்பற்றிய வாழ்க்கை முறைகள், சடங்கு முறைகள், பிறருக்கென அமைத்துக் கொடுத்தத் தத்துவமுறை, உலகமே வியந்து போற்றும் ஆட்சிமுறை எனத் தனித்தன்மையுடன் வாழ்ந்தவர்கள். கால மாற்றத்தாலும், இயற்கைச்சீற்றங்கள், அன்னியர் படையெடுப்புகள் எனப் பல துன்ப நிலைகளை அடைந்து, தமது நாகரிகத்தையும், பண்பாட்டையும் இழக்கும் நிலை ஏற்பட்டது. எனினும் தங்களின் அக்கால பதிவுகளை இலக்கியங்களாகவும், இலக்கணங்களாகவும் அவற்றை இன்றளவும் படைத்தும், காத்தும் வந்துள்ளனர். அதன் தொடர்ச்சியாக பண்பாட்டு அடையாளத்தை மீட்டுருவாக்கம் செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது, நவீன மயமாக்கல், நாகரீகம் எனக் கூறி அந்நிய நாட்டுப் பொருட்களை விற்பனை

செய்வதோடு மட்டுமல்லாமல், அவர்கள் ஓர் இன மக்களின் பண்பாட்டு அடையாளத்தை அழிக்கவும் முனைகின்றனர். இதனை புரிந்து கொண்டதன் விளைவே ஏறுதழுவுதல் தடையை நீக்கக் கோரிய இளைஞர்களின் போராட்டம்.

தமிழகத்தின் சில பகுதிகளில் மட்டுமே ஏறுதழுவுதல் தொடர்ந்து நடைபெற்றுவந்தது. அவற்றையும் தடைசெய்ய விலங்குகள் நல அமைப்புகள் தொடர்ந்து செயல்பட்ட நிலையில் 2017 ம் ஆண்டு எப்படியாவது ஏறுதழுவுதல் நிகழ்வை நடத்திட வேண்டும் என்ற எண்ணம் பரவலாகத் தமிழர்கள் மத்தியில் திடமாக இருந்தது. குறிப்பாக இளைஞர்களும், மாணவர்களும், சமூக வலைததளங்கள் மற்றும் ஊடகங்களில் ஏறுதழுவுதல் தொடர்பான கருத்துக்களை பரப்பி வந்தனர். இளைய சமூகத்தின் எழுச்சி ஏறுதழவுதல் தடையை நீக்கக் கோரி போராட்டமாக பரிணமித்தது. ஏறுதழுவுதல் போராட்டமே மிகப் பெரிய ஏறுதழுவுதல் நிகழ்வாக உருமாறியதை எவரும் எதிர்பார்த்திருக்க வாய்ப்பில்லை.

ஏறுதழுவுதல் தடை நாட்டு மாட்டினங்களை அழிக்கும் முயற்சியாக பார்க்கப்பட்டது. ஏறுதழுவுதலுக்கு தடை விதிக்கக் கோரிய அமைப்பின் நிர்வாகிகள் சிலர் மத்திய அரசின் கொள்கை வகுக்கும் குழுவிலும் இருந்தனர். நவீனமயமாக்கல் விளைவாக டிராக்டர் பெருக்கத்தாலும், செயற்கை கருத்தரிப்பாலும், தமிழக காளை இனங்களின் வளர்ப்பு குறைந்துவிட்டது. ஏறுதழுவுதல் தடையும் நீடித்தால் காங்கேயம் காளைகள் போன்ற தமிழக காளை இனங்கள் அழிந்து போகும் நிலை காணப்பட்டது. ஒரு கட்டத்தில் தமிழக அடையாளமும் காணாமல் போகும் நிலை உருவானது. பால் உற்பத்தி போன்று எல்லாவற்றிலும் வெளிநாட்டு நிறுவனங்களின் ஆதிக்கம் மேலோங்கும் என்பன போன்ற அச்சங்கள் மக்களிடம் பரவின.

பொதுவாக ஏறுதழுவுதல் என்பது பத்திரிகை வாயிலாகப் பிரபலமாகி, வட தமிழ்நாட்டில் பாமர மக்களிடையே அறிமுகமானது. திரைப்படமும் இதற்கு முக்கியப் பங்காற்றியது. வரலாற்று காலப் படங்கள் தொடங்கி நடிகர் கமல் நடித்த விருமாண்டி வரை ஏறுதழுவுதலை பிரதானப்படுத்தும் காட்சிகள் இடம்பெற்றன. இவை தமிழ் மக்கள் மனத்தில் ஆழமாகப் பதிந்து போயின. சங்கத் தமிழ் நூல்களில் ஆர்வம் கொண்டோருக்கு ஏறுதழுவுதல் ஏற்கெனவே அறிமுகமாகியிருக்கும். சிந்து சமவெளி நாகரிக ஆதாரங்களிலேயே ஏறுதழுவுதலுக்கான அடையாளம் இருக்கிறது. பிற்காலங்களில் ஆண்களின் வீரத்தை நிரூபிப்பதற்கான வழியாக கிராமத்து இளைஞர்களிடையே அறிமுக மானது ஏறுதழுவுதல் . தொடர்ந்து ஓர் உற்சாகமான விளையாட்டாக அது உருவெடுத்தது. பொங்கல் திருவிழாவின்போது இயற்கையை வணங்கும் தமிழர் வழிபாட்டின் ஒரு பகுதியாகக் கால்நடைகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. குறிப்பாக, காளைகளையும், பசுவையும் சிறப்பாக வழிபடும் வழக்கம் காலம்காலமாக ஒரு மரபாகத் தொடர்வதை மேலும் ஏறுதழுவுதல் தடை நீக்கக் கோரிய போராட்டம் உறுதிப்படுத்தியது என்றே கூறலாம். தமிழ் இன மக்கள் தங்களது பண்பாட்டு அடையாளத்தை மீட்டெடுக்க ஒவ்வொருவரும் களத்தில் இறங்கினர். தஞ்சை மாவட்ட எல்லை தொடங்கி, தென் மாவட்டம் முழுவதும், ஏறுதழுவுதல் போராட்டம் துவங்கியது.

**ஏறுதழுவுதல் தடை எதிர்ப்பு போராட்டம்**

சென்னை கடற்கரை உள்சாலையில் கலங்கரை விளக்கம் முதல் உழைப்பாளர் சிலை வரை ஆயிரக்கணக்கானவர்கள். 2017 சனவரி 8 ம் நாள் ஏறுதழுவுதலுக்கான தடையை நீக்கக்கோரி நடைப்பயணம் மேற்கொண்டனர்.

கேர் அண்ட் வெல்ஃபர் எனும் டிரஸ்ட் பெயரில் ஏற்பாடு செய்யப் பட்ட இந்தப் பேரணியில், ஏறுதழுவுதல் ஆதரவு அமைப்புகள் தவிர்த்து. கட்சிகள், அமைப்புகளின் நிகழ்ச்சிகளில் காணப்படாத முற்றிலும் புதியமுகங்களான இளைஞர் அதில் இடம் பெற்றிருந்தனர்.

தன்னெழுச்சியாக இளைஞர்கள் சென்னையில் நடந்த பேரணியில் பங்கேற்றதன் தொடர்ச்சியாக, மறுநாள் சனவரி 9 - மதுரையில் பல கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்கள் மற்றும் ஏறுதழுவுதலுக்கு ஆதரவு தெரிவித்து இளைஞர்கள் கோரிப்பாளையம் சந்திப்பிலிருந்து மாவட்ட ஆட்சியரகம் வரை ஊர்வலமாகச் சென்றனர். சனவரி 10 - மதுரையில் கல்லூரி மாணவர்கள் இரண்டாம் நாளாகவும் போராட்டத்தில் ஈடுபட்டனர். மதுரை சட்டக்கல்லூரி மாணவர்கள் உட்பட ஆயிரக்கணக்கான மாணவர்கள் சனவரி 11 நாள் தமுக்கம் மைதானத்தில் கூடி அங்கிருந்து மாவட்ட ஆட்சியரகம் வரை ஊர்வலமாகச் சென்றனர். ஆட்சியரகம் முன்னர் தடுப்புகளை மாணவர்கள் மீறிச் செல்ல முயன்ற போது போலீசார் தடியடி நடத்தினர். மதுரையில் நான்காவது நாளாகத் தொடர்ந்த போராட்டத்தில், (சனவரி 12 ) தமுக்கம் மைதானத்தில் கூடிய மாணவர்கள், காந்தி அருங்காட்சியகம், சட்டக்கல்லூரி வழியாக ரேஸ்கோர்ஸ் மைதானம் வரை பேரணியாகச் சென்றனர்.

உலகம் போற்றும் ஏறுதழுவுதல் ஆண்டு தோறும் சனவரி 14 அவனியாபுரத்தில் ஏறுதழுவுதல் நடக்கவேண்டிய நாள். அன்றைய தினம் அங்கு உள்ளூர், வெளியூர் மக்கள் போராட, இசையமைப்பாளர் யுவன்சங்கர் ராஜா, இயக்குநர் அமீர் ஆகியோரும் பங்கேற்க, மக்கள் கூட்டம் திரண்டது. உடன்வந்த நடிகர் ஆர்யா முன்னர் பீட்டாவுக்கு ஆதரவாகக் குரல்கொடுத்தார் என அவரை

எதிர்த்து, இளைஞர்கள் முழக்க மிட்டனர். கூட்டத்தை ஒழுங்குபடுத்தாத போலீசால் அதைக் கட்டுப் படுத்தவும் முடியவில்லை. எதிர்ப்புக் குரல்கள் எழும்பியதைப் பயன்படுத்தி, தடியடி நடத்தினர். புரட்சிகர இளைஞர் முன்னணி அதில் நாணல் நண்பர்கள் இயக்கம், இளந்தமிழகம் இயக்கம், அமைப்பினரும் இயக்குநர் வ.கவுதமன் ஆகியோர் போலீசால் தாக்கப்பட்டனர். பாலமேட்டில் சனவரி 15 அன்று கருப்புக்கொடி ஏற்றி பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர் . மாட்டு உரிமையாளர்களும் மாடுபிடி வீரர்களும் இணைந்து பேரணி நடத்தினர்.

ஏறு தழுவுதலுக்கு தடைவிதிக்கப்பட்டிருந்த அலங்காநல்லூரில் சனவரி 16 - மூன்றாவது நாளாக உள்ளூர் மக்கள் கருப்புக்கொடி ஏற்றி, அமைதியான போராட்டங்களில் ஈடுபட்டுவந்தனர். தமிழகம் முழுவதுமிருந்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர், இளைஞர்கள் அலங்காநல்லூருக்கு வந்தனர். மந்தையம்மன் கோயில் திடலில் கூடி, ஆர்ப்பாட்டம் செய்தனர். பின்னர் உண்ணாநிலைப் போராட்டமாக மாற்றி, அங்கேயே அமர்ந்தனர். உள்ளூர் மாடு பிடி வீரர்களும், பெண்களும், ஆண்களும், குழந்தைகளும் அவர்களுடன் இணைந்து கொண்டனர். போராட்டக்காரர்களுக்கு ஊர்க்காரர்கள் தரப்பில் உணவு கொண்டுபோனபோது போலீசார் தடுத்ததால், பதற்றம் உண்டானது. முன்னதாக, மே பதினேழு இயக்கம், புரட்சிகர மாணவர் முன்னணி, நாணல் நண்பர்கள் இயக்கம் உட்பட பல அமைப்புகளைச் சேர்ந்தவர்கள், பாத்திமா கல்லூரியிலிருந்து 20 கி.மீ நடந்து சென்று அலங்காநல்லூர் வாடி வாசலை நோக்கிச் செல்ல முற்பட, அவர்கள் கைதுசெய்யப்பட்டு, இரவு விடுவிக்கப்பட்டனர். முன்னதாக தங்கியிருந்து

போராடிய இளைஞர்கள் மீது போலீஸ் தாக்குதல் நடத்தியதாகத் தகவல்கள் வெளியாகின.

அலங்காநல்லூர் சனவரி 17 - மறுநாள் காலையில் போராட்டக்காரர்கள் கைது உறுதியானதும், காலை 8 மணிக்கு சென்னை கடற்கரை விவேகானந்தர் இல்லம் எதிரில் இளைஞர்கள் கூடினர். நூற்றுக் கணக்கானவர்கள் என்பது, ஒரு மணி நேரத்தில் ஆயிரத்துக்கும் மேல் ஆனது. 11.30 மணியளவில் தி.மு.க செயல்தலைவர் மு.க.ஸ்டாலின் வந்து ஆதரவு தெரிவித்தார். பிற்பகல் 2 மணியளவில் சென்னை போலீஸ் கூடுதல் ஆணையர் சங்கர், இணை ஆணையர் மனோகரன் ஆகியோர் பேச்சுவார்த்தை நடத்தினர். ஆனால் அப்போதைய முதலமைச்சர் பன்னீர்செல்வம்தான் பேச்சுக்கு வரவேண்டும் என மாணவர்கள் தெரிவித்தனர். இருப்பினும் மாணவர்களுடன் எழும்பூர் வருவாய் கோட்டாட்சியர் சிவருத்ரய்யா தலைமையில் பேச்சு நடந்து, தோல்வியடைந்தது.

அமைச்சர் ஜெயக்குமார் வீட்டில் அமைச்சர் பாண்டியராஜன் அவர்கள் சனவரி 18 அன்று பேச்சு வார்த்தை நடத்தினர். முதலமைச்சரின் அறிக்கையைப் பொறுத்து முடிவு என மாணவர்கள் அறிவிப்பு விடுத்தனர் . 31 கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவிப்பு வந்தது . டி.ஜி.பி. சென்னை போலீஸ் ஆணையருடன் முதலமைச்சர் பன்னீர் செல்வம் ஆலோசனை செய்தார் . போராடும் மாணவர்களுக்கு இலவச சட்ட உதவி என சென்னை உயர்நீதிமன்ற வழக்குரைஞர் சங்கம் அறிவிப்பு விடுத்தது. திரைப்படத் துறையினர் வடபழனியில் போராட்டம் நடத்தினர். 20 - ம் தேதி நடிகர் சங்கம் உண்ணாநிலை என நிர்வாகி பொன்வண்ணன் தகவல் கூறினார். பேச்சு நடத்துமாறு

முதலமைச்சரிடம் சி.பி.எம் மாநில செயற்குழு உறுப்பினர்கள் பி.செல்வசிங், க.கனகராஜ், மாநிலக்குழு உறுப்பினரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான க.பீமாராவ் நேரில் கோரிக்கை விடுத்தார். முதலமைச்சரின் அறிக்கை வெளியீடு. அதை சென்னை மயிலாப்பூர் போலீஸ் துணை ஆணையர் பாலகிருஷ்ணன் போராட்ட மாணவர்களிடம் வாசித்துக்காட்டி, கலையுமாறு கூற, சல்லிக்கட்டுக்கு அனுமதி என்றால் மட்டுமே போராட்டம் நிறுத்தப்படும் என மாணவர்கள் உறுதி கூறினர். மாணவர்களுடன் பேச்சு நடத்திவிட்டு முடிவு கிட்டாதபோதும் பிரதமரைச் சந்திக்க முதல்வர் டெல்லிக்குப் பயணம் சென்றார். சனவரி 19 - தியதி மூன்றாம் நாளாகப் போராட்டம். பிரதமர் மோடியுடன் முதலமைச்சர் சந்திப்பு நடந்தது. மத்திய அரசின் நிலையில் மாற்றமில்லை. மாணவர்கள் மீது தடியடி நடத்தப்படவில்லை என டெல்லியில் மறுப்பு தெரிவித்தார். சட்டமன்ற சிறப்புக் கூட்டத்தைக் கூட்ட ஸ்டாலின் கோரிக்கை விடுத்தார். 20ம் தேதி முழு அடைப்புக்கு அனைத்து தொழிற்சங்கங்களில் அழைப்பு விடுத்தனர். கண்ணகி சிலை அருகில் அப்துல்ரகுமான் உட்பட்ட கவிஞர்கள் ஆதரவு தெரிவித்தனர் . ரயில் மறியல் என தி.மு.க அறிவிப்பு விடுத்தது . நடிகர் நாசர் நேரில் ஆதரவு தெரிவித்தார். டிஜிட்டல் திரையில் ஆவணப்படங்கள் திரையீடும், உரைவீச்சுகளும் கடற்கரையில் நடந்தது. சனவரி 24 -ம் நாளாகப் போராட்டம் தொடர்ந்தது. மாநிலம் முழுவதும் வேலை நிறுத்தமும், தொழில் நிறுத்தமும் தி.மு.கவினர் ரயில்மறியல் நடத்தினர். சென்னையில் மு.க.ஸ்டாலின் கைதாகி விடுவிப்பு செய்யப்பட்டார்.

போராட்டத்தைத் திசைதிருப்பும் வகையில், கூட்டத்தைக் கலைக்க காவலர்கள் திட்டம் என வதந்திகள் வந்தன. சென்னையில் மின்ரயில் சேவை பாதிப்பு அடைந்தது. தெற்கு மாவட்டங்களுக்கான ரயில் சேவை முழுதாக நிறுத்தம் செய்யப்பட்டது. குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்குப் வனம், சுற்றுச்சூழல் துறைகளின் அனுமதிக்காக சட்டமுன்வரைவுக் பின்னர் சனி அல்லது ஞாயிறு அவசரச் சட்டம் பிறப்பிக்கப்படும் என்றது. வாடிவாசலில் காளைகள் துள்ளும் என்றார் முதலமைச்சர் பன்னீர் செல்வம். அதையடுத்து வெள்ளி இரவில் அவசரச்சட்ட கருத்துருவுக்கு மத்திய உள்துறை அமைச்சகம் அனுமதி தந்தது. வெள்ளி இரவே பொறுப்பு ஆளுநருக்கு அனுப்பப்பட்டது. பொறுப்பு ஆளுநர் வித்யாசாகர் சனவரி 21 - சனிக்கிழமையன்று அவசரச்சட்டம் பிறப்பித்தார். அதையடுத்து ஞாயிறன்று அலங்காநல்லூரில் ஏறுதழுவுதல் நிகழ்வை முதலமைச்சர் பன்னீர்செல்வம் தொடங்கிவைக்க ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. சென்னையில் புறநகர் மின்ரயில் சேவை இரண்டாம் நாளாக நிறுத்தம் செய்யப்பட்டது. தெற்குமாவட்ட ரயில்கள், திண்டுக்கல் வரையில் இயக்கம் செய்யப்பட்டது. நெல்லைக்கான வண்டிகள் திருச்சியிலிருந்து கேரளம் வழியாக இயக்கப்பட்டன.

அவசரச்சட்டம் போதாது என தி.மு.க சார்பில் சென்னை வள்ளுவர் கோட்டத்தில் ஸ்டாலின், கனிமொழி முன்னிலையில் உண்ணாநிலை மேற்கொண்டனர். ஏறுதழுவுதல் நிகழ்வை தொடங்கிவைக்க சனி இரவு மதுரையை அடைந்தார் பன்னீர் செல்வம். பெருங்குடி அருகில் அவருக்கு எதிர்ப்பு தெரிவித்த இளைஞர்களை போலீசு அப்புறப்படுத்தியது. குடியரசுத் தலைவரிடம்

அ.தி.மு.க நாடாளுமன்ற உறுப்பினர்கள் மனு அளித்தனர். பிரதமர் மீது அதிருப்தி தெரிவித்தார் தம்பிதுரை. அலங்காநல்லூரில் இரவு 8 மணியளவில் மதுரை மாவட்ட ஆட்சியர் வீரராகவ ராவ், காவல் கண்காணிப்பாளர் விஜயேந்திரபிதாரி ஆகியோர் போராட்டக்காரர்களுடன் பேச்சு நடத்தினர். நள்ளிரவு மீண்டும் பேச்சு நடத்தியும் தோல்வி அடைந்தது. சனவரி 22 - ஆறாவது நாளாக மெரினாவில் போராட்டம் நடந்தது. மதுரை வாடிப்பட்டியிலிருந்து அலங்காநல்லூருக்குச் செல்லும் வழியெங்கும் மக்கள் மறியல் நடத்தினர். இதனால் திண்டுக்கல் மாவட்டம் நத்தத்தில் ஏறுதழுவுதலை பன்னீர் செல்வம் அவர்கள் தொடங்கிவைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. மக்கள் எதிர்ப்பால் அந்த முடிவும் கைவிடப்பட்டது. இரு இடங்களிலும் ஏறுதழுவுதலை தொடங்கிவைக்க முடியாமல் ஞாயிறு பிற்பகல் சென்னைக்குத் திரும்பினார் முதல்வர் . ஞாயிறு மாலையில் போராட்டத்தை ஆதரித்துவந்த பாடகர் ஆதி திடீரென, போராட்டம் பற்றி எதிர்மறையான கருத்துகளைக்கூறி காணொலி ஒன்றை வெளியிட்டார். இரவு 8 மணியளவில் சென்னை பத்திரிகையாளர் மன்றத்தில் ஏறுதழுவுதல் வழக்கைத் தொடுத்த கார்த்திகேய சேனாதிபதி மற்றும் ராஜேஷ், ராஜசேகர், அம்பலத்தரசு ஆகியோருடன் இணைந்து போராட்டத்தை நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று பேட்டி அளித்தார்.

சென்னை மெரினாவுக்கு அருகிலுள்ள முதன்மைச் சாலைகள் அனைத்திலும் ஆயிரக்கணக்கில் காவலர்கள் காணப்பட்டனர். தலா ஒரு ஐ.பி.எஸ். அதிகாரி தலைமையில் கடற்கரை, மயிலாப்பூர், திருவல்லிக்கேணி, சேப்பாக்கம் மற்றும் அதையொட்டிய பகுதிகள்எனப் பிரித்து கடுமையான காவல் வளையம் உருவாக்கப்பட்டது.

காலையில் சட்டமன்றம் கூடுவதற்கு முன்பே சனவரி 23 - திங்களன்று மெரினா மக்கள்கூட்டத்தைக் கலைக்க காவலர்கள் களத்தில் இறங்கினர். வெள்ளி முதல் விடுமுறை அறிவிக்கப்பட்ட பள்ளிகள் திறக்கப்பட்டன. காலை 6.30 மணியளவில் மயிலாப்பூர் காவல்

துணைக் கண்காணிப்பாளர் பாலகிருஷ்ணன் அரசின் அறிவிப்பைக் காட்டி போராட்டத்தை முடிக்குமாறு கூறினார். போராட்டக்காரர்கள் அதை ஏற்காமல் விவாதம் செய்தனர். இணை ஆணையர் மனோகரன் என்பவரும் போராட்டத்தை முடித்துக்கொள்ளுமாறு ஒலிபெருக்கியில் அறிவித்தார். இன்னொரு பக்கம் கூட்டத்தைக் கலைக்கவும், காவலர் தொடங்கினர். சட்டமன்றம் கூடுவதற்கு முன்னர் அந்த இடத்தைக் கைப்பற்றுவதாகவே இருந்தது அவர்களின் நோக்கம். போராட்டக்காரர்களில் இருந்து காமராசர் சாலை எனப்படும், கடற்கரைச் சாலையை நோக்கி வந்து அங்கிருந்து அகலத் தொடங்கினர். ஆங்காங்கே போராட்டக்காரர்களைத் தாக்கத் தொடங்கினர். பெண்களை ஆண் காவலர்களும் துன்புறுத்தி தாக்கவும் செய்தனர். போராட்டத்தை முடித்துக் கொண்டவர்கள் மேற்குப் பக்கமாகவும் தொடர விரும்பியவர்கள் கிழக்குப் பக்கமாக கடலை நோக்கியும் நகர்ந்தனர். 9 மணி முதல் கடற்கரைக்கு மேற்காகவும் காவல்துறையின் தாக்குதல் தொடங்கியது. நடுக்குப்பம், மாட்டாங்குப்பம், கால்வாய் (கனால்) பகுதி, அம்பேத்கர் பாலம் ரூதர்புரம், மீனாம்பாள் நகர் ஆகிய இடங்களில் வீடுகளுக்குள் நுழைந்து காவல் துறையும், அதிரடிப்படையும் தாக்குதல் நடத்தியது. அம்பேத்கர் பாலம் பகுதியில் வாகனங்களுக்கு காவலரே தீவைத்தனர். முற்பகல் 11 மணியளவில் பலத்த பாதுகாப்பும் கண்காணிப்பும்

உள்ள குறுகிய இடத்திலுள்ள ஐஸ் அவுஸ் காவல் நிலையம் முன்பு இருந்த வாகனங்கள் திடீரென தீக்கிரையாக்கப்பட்டன. அதற்கு முன்பும் பின்னரும் அந்த வட்டாரத்தில் காவல்துறை மற்றும் அதிரடிப் படை காவலரர்கள் போராட்டக்காரர்கள் மீதும் அவர்களுக்கு அடைக்கலம் தந்த நடுக்குப்பம், மாட்டாங்குப்பம், மயிலாப்பூர் அம்பேத்கர் பாலம் பகுதி மக்கள் மீதும் காட்டுமிராண்டித்தனமாகத் தாக்குதல் நடத்தினர். முழுவதும் முற்பகலே பள்ளிகள் மூடப்பட்டன. பிள்ளைகளைக் கூட்டிச்செல்லுமாறு மதியமே தெரிவிக்கப்பட்டது. பேருந்துகள் நிறுத்தப்பட்டன. மின்ரயில் சேவை மீண்டும் முடக்கப்பட்டது. சென்னை முழுக்க அசாதாரண நிலைமை உருவாக்கப்பட்டது.

ஏறுதழுவுதல் போராட்டத்தின் உச்சமாக ஜனவரி மாதம் 20 ஆம் தேதியான வெள்ளிக்கிழமையைச் கூறலாம். அன்று தமிழ்நாடு முழுவதும் முழு அடைப்புப் போராட்டம் நடைபெற்றது. அன்று மட்டும் சுமார் 500 இடங்களில் நடைபெற்ற போராட்டத்தில் சுமார் 25 லட்சம் பேர் பங்கேற்றனர். ஒரு பிரச்சினையை முன்னிறுத்தி நடைபெறும் போராட்டத்தில் இதனை பேர் பங்கேற்பது இதுவே முதல்முறை என்று காவல்துறையினர் தெரிவித்ததாக தினமணி எழுதியது. முழு தமிழ்நாடும் அன்று முடங்கியது மட்டுமல்ல, எழுச்சியுடன் ஆர்ப்பரிக்கவும் செய்தது. ஆண்கள், பெண்கள், அரசு எங்கெங்கும் ஊழியர்கள், மாணவர்கள், குழந்தைகள் என ஆர்ப்பாட்டம் நடந்தவாரே இருந்ததனர்.

**தமிழக போராட்டக் களங்கள்**

தமிழ் இன மக்கள் ஏறுதழுவுதல் தடையை நீக்க கோரி ஒன்றிணைந்த போராட்டத்தில் மாவட்டங்கள் வாரியாக பார்க்கையில் தஞ்சாவூரில் போராட்டத்தின் தொடக்கம் முதலே புகைவண்டி நிலையம் அருகே அமைந்துள்ள

மத்திய அஞ்சல் அலுவலகம் முன்னர் மாணவர்கள் பெருவாரியாகத் திரண்டு போராட்டம் நடத்திவந்தனர். தஞ்சையிலும், சுற்று வட்டாரத்திலும் அதிக எண்ணிக்கையில் கல்லூரிகளும், பல்கலைக் கழகங்களும் இருப்பதால் பெரும் என்ணிக்கையில் மாணவர்கள் திரண்டனர். போராட்டத்தின் நாட்கள் செல்ல செல்ல மாணவிகளின் எண்ணிக்கையும், பொதுமக்களின் எண்ணிக்கையும், அதிகரித்துக் கொண்டே சென்றது. ஜனவரி 20 ஆம் நாள் மட்டும் சுமார் 25ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் போராட்டத்தில் கலந்து கொண்டதாக தினமணி செய்தி கூறியது (தினமணி, 21.01.17). இதில் மாணவ மாணவிகளின் எண்ணிக்கை மட்டும் 12 ஆயிரத்துக்கும் அதிகம்.

தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகம், சாஸ்த்ரா பல்கலைக்கழகம், அரசு மருத்துவக் கல்லூரி உட்பட்ட அனைத்து கல்லூரி மாணவர்களும் அவரவர் கல்லூரி வளாகத்தின் முன்பாக தொடர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். தஞ்சை பழைய பேருந்து நிலையத்தின் முன் அனைத்து தொழிற்சங்கங்களைச் சேர்ந்தோர் சுமார் இரண்டு மணி நேரம் அன்று இயங்கிய ஒரு சில பேருந்துகளையும் மறித்து போராட்டம் நடத்தினர். வணிகர் சங்கங்களின் வேண்டுகோளை அடுத்து நகரில் அனைத்து கடைகளும் அடைக்கப்பட்டிருந்தன. தஞ்சை அருகே உள்ள இராமநாதபுரம் கிராமத்தில் தடையை மீறி ஏறுதழுவுதல் நிகழ்வு நடைபெற்றது. 35 காளைகள் ஒவ்வொன்றாக அவிழ்த்து விடப்பட்டன. ஏராளமான பொதுமக்கள் இந்நிகழ்வைக் கண்டுகளித்தனர். தஞ்சை மாவட்டத்தின் பிற பகுதிகளான பட்டுக்கோட்டை, பேராவூரணி, அதிராம்பட்டினத்திலும் சல்லிக்கட்டுப் போராட்டங்கள் தொடர்ச்சியாக நடைபெற்றன.

கும்பகோணம் - தஞ்சை சாலையில் ஆயிகுளம் கரையில் ஆயிரக் கணக்கான மாணவர்கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டம் நடைபெறும் இடத்திற்கு ஏறுதழுவுதல் காளைகள் அழைத்துவரப்பட்டன. போராட்டக் களத்திற்கு யானை ஒன்றும் அலங்கரித்து அழைத்துவரப்பட்டது. அவை போராடடக்காரர்களை வெகுவாக கவர்ந்தது. ராமேசுவரம் மாவட்டத்தில் மீனவர்கள் விசைப்படகுகளில் கருப்புக்கொடி ஏந்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். 21 ஆம் தேதி சனிக்கிழமை மீனவர்கள் வேலை நிறுத்தம் செய்தனர்.

நாகப்பட்டினத்தில் தலைமை அஞ்சல் நிலையம் முன்பு மாணவர்கள் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டோர் 20 ஆம் தேதியன்று ஆர்ப்பாட்டம் செய்தனர். மயிலாடுதுறையிலும், வேதாரண்யத்திலும் சீர்காழியிலும் மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். மாவட்டம் முழுவதும் கடைகள் அடைக்கப்பட்டிருந்தன. பனங்குடி இந்திய எண்ணெய் நிறுவனத்தின் டேங்கர் லாரி ஓட்டுநர்கள் வேலைநிறுத்தம் மேற்கொண்டனர்.

திருச்சியில் நீதிமன்ற வளாகம் அருகே உள்ள எம்.ஜி.ஆர் சிலை அருகில் மாணவர்கள் மூன்றாவது நாளாக ஜனவரி 20 அன்றும் போராட்டத்தில் ஈடுபட்டனர். 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் திரண்டனர். மாவட்டத்தின் பிற பகுதிகளில் மேலும் 50ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் போராட்டத்தில் ஈடுபட்டனர். நகரில் பெரும்பாலான கடைகள் அடைக்கப்பட்டன. திருச்சி மாவட்டம் புள்ளம்பாடி அருகே கீழரசூர் ஊராட்சியில் 21 ஆம் தேதி தடையை மீறி நடைபெற்ற ஏறுதழுவுதல் நிகழ்வின் போது காவல்துறை தடியடி

நடத்தியதால் ஆத்திரமடைந்த பொதுமக்கள், ஏறுதழுவுதல் வீரர்கள் காவல்துறை வாகனத்தின் கண்ணாடியை அடித்து நொறுக்கினர்.

திருவாரூரில் 2000-க்கும் மேற்பட்ட மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர், தெற்கு வீதியில் நகராட்சி அலுவலகம் முன்னர் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது. மேலும் மன்னார் குடியில் தேரடி வீதியில் மாணவர்களின் போராட்டம் நடைபெற்றது. மன்னார்குடியில் நடைபெற்ற போராட்டத்தில் தமிழ் இன மக்களின் பாரம்பரிய கலையான சிலம்பாட்டம் மற்றும் சேவல் சண்டை ஆகியவற்றையும் நிகழ்த்தி இளைஞர்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தினர். 3000 - க்கும் மேற்பட்ட இளைஞர்கள் இப்போராட்டத்தில் பங்கேற்றனர். முத்துப்பேட்டை, கோட்டூர் உட்பட்ட இடங்களிலும் போராட்டம் நடைபெற்றது.

காரைக்கால் மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் கடைகள் அடைக்கப்பட்டிருந்தன. அங்கு போராடடக்காரர்களுக்கு துணை நிற்கும் வகையில் கடலுக்குச் மீனவர்கள் செல்லவில்லை. மீன்பிடித் துறைமுகம் வெறிச்சோடியது. காரைக்கால் மாவட்ட வழக்கறிஞர்கள் நீதிமன்றத்தின்முன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். காரைக்காலில் சந்தைத்திடலில் வாடிவாசல் அமைக்கப்பட்டது. சில காளைகளைக் கொண்டுவந்து அவிழ்த்துவிட சிலர் தயாராயினர். அதை காவல்துறையினர் தடுத்து நிறுத்தினர். காரைக்கால் மாவட்டம் விழுதியூரில் நண்பர்கள் 4 பேர் அப்பகுதியில் உள்ள தனியார் செல்போன் டவர் அவரின் மீது ஏறி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பிற மாவட்டங்களை விட சேலத்தில் நடைபெறும் போராட்டத்தில் திருநங்கைகள் அதிக எண்ணிக்கையில் கலந்து கொண்டுள்ளனர். சேலத்தில் சிறை பிடிக்கப்பட்ட ரயில் மீது அமர்ந்து 500க்கும் மேற்பட்ட மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். சேலம் நகரில் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகளும் அவர்களுடைய பெற்றோரும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதால் போக்குவரத்தும் முடங்கியது. மாவட்டம் முழுவதும் சுமார் 50000 க்கும் மேற்பட்டோர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

திருப்பூர் மாநகராட்சி காந்தி சிலை அருகே நடைபெற்ற போராட்டத்தில் 90 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள், பின்னலாடை நிறுவனத் தொழிலாளர்கள், பொதுமக்கள் பங்கேற்றனர். மாவட்டம் முழுவதும் நடைபெற்ற போராட்டங்களில் மொத்தம்

ஒன்றரை லட்சம் பேர் பங்கு பெற்றனர். நீலகிரி மாவட்டத்தில் 15 க்கும் மேற்பட்ட இடங்களில் நடைபெற்ற போராட்டத்தில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். ஈரோடு மாவட்டத்தில் 15 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கோவை வ.உ.சி. மைதானத்தில் 2-வது நாளான நேற்று நகரின் அனைத்து கல்லூரிகளில் இருந்தும், சுற்று வட்டார பகுதிகளில் உள்ள கல்லூரிகளை சேர்ந்த மாணவ, மாணவிகளும் பேரணியாக வந்து போராட்டத்தில் பங்கேற்றனர். 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் திரண்டதால் நகரில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. கருப்பு பேட்ஜ் அணிந்து வந்த மாணவர்கள் ஜல்லிக்கட்டுக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்க வேண்டும், பீட்டா அமைப்பை

தடை செய்ய வேண்டும் என முழக்கங்கள் எழுப்பினர். காளைகள், ரேக்ளா வண்டிகளுடன் வந்த மாணவர்கள் சிலர் ஏறுதழுவுதலுக்கு ஆதரவான முழக்கங்கள் எழுப்பினர். இந்த போராட்டத்தில் தமிழ்நாடு வேளாண் பல்கலை கழகம், சட்டக்கல்லூரி, அரசு கலை கல்லூரி உள்பட பல்வேறு கல்லூரிகளை சேர்ந்த மாணவ, மாணவிகளும் கலந்து கொண்டனர். மாணவர்களின் போராட்டத்திற்கு ஆதரவாக நடிகர் ஆர்.ஜே.பாலாஜி மைதானத்திற்கு வந்து பேசினார். வழக்கறிஞர்கள், பல்வேறு அமைப்புகளை சேர்ந்தவர்கள், புதுமண தம்பதியினர், முதியவர்களும் மைதானத்திற்கு வந்து போராட்டத்தில் பங்கேற்றனர். இரவிலும் மாணவர்களின் போராட்டம் நீடித்தது. கடும் குளிரையும் பொருட்படுத்தாமல் விடிய, விடிய மைதானத்திலேயே அமர்ந்து ஏறுதழுவுதல் நிகழ்வுக்கு ஆதரவாக முழக்கமிட்டனர். போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு உணவு, தண்ணீர் வழங்கப்பட்டது. மைதான பகுதிகளில் போடப்பட்ட தங்களால் போடப்பட்ட குப்பைகளை அவர்களாகவே அகற்றினர்.

கோவையில் 3-வது நாளாக மாணவர்கள் போராட்டம் தொடர்ந்த போது . காலையிலேயே மைதானத்தில் திரண்ட ஆயிரக்கணக்கான மாணவர்களும் ஏறுதழுவுதலுக்கு ஆதரவான பாடல்களுக்கு கைதட்டி ஆரவாரம் செய்து உற்சாகமாக போராட்டத்தில் ஈடுபட்டனர். மூன்று நாட்களானபோதும் மாணவர்களிடம் எந்த களைப்பும் தெரியவில்லை. பெரும்பாலானவர்கள் கருப்பு சட்டை அணிந்தும், வாயில் கருப்பு துணி கட்டியும் கலந்து கொண்டனர். ஏறுதழுவுதலுக்கு அவசர சட்டம் இயற்றும் வரை இங்கிருந்து கலைந்து செல்ல மாட்டோம் என போராட்டத்தில் ஈடுபட்ட மாணவ, மாணவிகள் தெரிவித்தனர்.

மாணவர்கள் போராட்டம் காரணமாக வ.உ.சி. மைதானத்தை சுற்றி பலத்த காவல் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. மேலும், போக்குவரத்து மாற்றி விடப்பட்டிருந்தது. மாணவர்களின் போராட்டத்தை தொடர்ந்து வேளாண் பல்கலைகழகத்திற்கு காலவரையற்ற விடுமுறை அறிவிக்கப்பட்டது. பல்கலை கழக வளாகத்தில் உள்ள விடுதியில் தங்கியிருக்கும் மாணவர்கள் அவரவர் சொந்த ஊர்களுக்கு செல்ல அறிவுறுத்தப்பட்டது. கோவை மாவட்டத்தில் மேட்டுப்பாளையம் வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி கல்லூரி மாணவ- மாணவிகள் ஏறுதழுவுதலுக்கு ஆதரவாக போராட்டத்தில் குதித்தனர். ஏறுதழுவுதலை நடத்தக்கோரியும், பீட்டாவை தடை செய்ய கோரியும் கல்லூரி வளாகத்தில் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

நாமக்கல்லில் பூங்கா சாலையில் நடைபெறும் ஏறுதழுவுதல் போராட்டத்தில் மாணவர்களோடு ஆசிரியர்களும், அரசு ஊழியர்களும், பல்வேறு கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்களும் ஐந்தாயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். 21 ஆம் தேதியன்று நடைபெற்ற போராட்டத்தில் நடிகர், மற்றும் இயக்குநரான சமுத்திரக்கனி கலந்துகொண்டார். நாமக்கல் மாவட்டத்தில் முப்பதுக்கும் மேற்பட்ட இடங்களில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் போராட்டத்தில் ஈடுபட்டனர். சேந்தமங்கலம் அருகே பேளுக்குறிச்சியில் காளை வேடம் அணிந்த நபர் வாடிவாசல் வழியாகவெளியே வருவதைப்போல் போராட்டத்தில் ஈடுபட்டது அனைவரது கவனத்தையும் கவர்ந்தது. போராட்டத்தில் வெளிநாட்டு குளிர்பானக்குடுவைகளை வைத்து அவற்றுக்கு மாலை அணிவித்து கும்மியடித்து எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் போராட்டத்தில் ஈடுபட்டனர். கர்நாடகத்தமிழர்களில் 3 ஆயிரத்துக்கும்

மேற்பட்டோர் ஒசூர் வந்து மக்களுடன் போராட்டத்தில் ஈடுபட்டனர். தருமபுரி மாவட்டத்தில் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.வேலூர் பழைய பேருந்துநிலையத்தில் மாணவர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டனர். மாவட்டம் முழுவதும் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் போராட்டம் செய்தனர். வேலூரில் இரவு நேர வெப்பநிலை மிகவும் குறைந்தபோதும் போராடும் மாணவர்களின் உளவுறுதி மட்டும் குறையவே இல்லை. 20 ஆம் தேதி இரவு வெப்பநிலை 18.5 டிகிரி அளவுக்கு குறைந்தபோதும் பொதுமக்கள் வழங்கிய கம்பளிகளை வைத்துக்கொண்டு போராட்டக்காரர்கள் இரவுகளைக் கடந்துவந்தார்கள். போராட்டத்தில் ஈடுபட்டிருந்த இளைஞர்களுக்கு உற்சாகமளிக்கும் விதத்தில் சிலம்பாட்டம், புலியாட்டம் போன்ற தமிழகத்தின் பாரம்பரிய விளையாட்டுகள், பறை இசையுடன் நிகழ்த்தப்பட்டன.

திருவண்ணாமலை மாவட்டத்தில் 30 ஆயிரத்திற்கும் மேற் பட்டோர் போராட்டத்தில் பங்கேற்றனர். விழுப்புரம் மாவட்டத்தில் 73 இடங்களில் நடைபெற்ற போராட்டங்களில் 25 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். திருநெல்வேலி மாவட்டத்தில் பாளையங்கோட்டை வ.உ.சி மைதானத்தில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்களும் இளைஞர்களும் திரண்டனர். மாவட்டத்தில் கூட்டப்புளி, கூடுதாழை, இடிந்தகரை ஆகிய கடலோர கிராமங்களைச் சேர்ந்த மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லவில்லை.

தூத்துக்குடி எஸ்.ஏ.வி. மைதானத்தில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். மாவட்டம் முழுவதும் 36 இடங்களில் போராட்டங்கள் நடைபெற்றன. நாகர்கோவில் அண்ணா விளையாட்டரங்கம் முன்

எட்டாயிரத்திற்கும் மேற்பட்ட இளைஞர்கள், மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். கன்னியாகுமரியில் மீனவர்கள் கடலுக்குச் செல்லவில்லை. பெருமாள்புரம் இலங்கை அகதிகள் முகாமில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்பட்டது. கன்னியாகுமரியை அடுத்த கோவளம் இன்னாசியார் ஆலயம் முன்பு மீனவர்கள் ஏறு தழுவுதல் தடையை நீக்க வேண்டி தங்களின் குழந்தைகள் மற்றும் குடும்பத்தினருடன் கடலுக்குள் இறங்கி போராட்டம் நடத்தினர்.

**பிற மாநில போராட்டக் களங்கள்**

ஏறுதழுவுதல் தடையை எதிர்த்து இளைஞர்கள், மாணவர்கள், பெண்கள் என தமிழகம் முழுவதும் போராடும் வேளையில், தமிழ் இன மக்கள் மீதும், ஏறு தழுவுதல் மீதும் இருந்த அன்பும் அக்கறையின் காரணமாக தமிழகம் மட்டும் அல்லாது பிற மாநிலங்களிலும் ஆதரவு பெருகியது. பிற மாநிலங்களில் தொழில் ரீதியாகவோ அல்லது அங்கு இடம்பெயர்ந்த தமிழ் மக்கள் மனதில் ஏறுதழுவுதல் தடை அவர்களையும் போராடச் செய்தது. பிற மாநலங்களிலும் ஏறுதழுவுதல் போன்ற விலங்கு சார்ந்த பாரம்பரிய செயல்கள் தடைபடுமோ என்ற எண்ணம் அவர்களையும் போராடச் செய்தது.

பிரம்மாண்ட மாட்டின் உருவத்தினுள் மனிதர்கள் இருப்பதுபோல புது வகையான போராட்டம் நடத்தினர் புதுச்சேரி ஏறுதழுவுதல் ஆதரவாளர்கள். புதுச்சேரியில் 15 இடங்களில் நடைபெற்ற போராட்டங்களில் 15 ஆயிரத்திற்கும் அதிகமானோர் கலந்துகொண்டனர். புதுச்சேரி ரயில்நிலையத்தில் மாணவர்கள் மறியல் போராட்டமும் நடத்தினார்கள். தவிர, அங்கு முழு அடைப்பும் நடந்தது. கடலூர் மாவட்டத்தில் 67 இடங்களில் ஏறு தழுவுதல் நிகழ்வுக்கு ஆதரவாகப் போராட்டங்கள் நடைபெற்றன. 35 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

ஏறுதழுவுதல் தடை எதிர்ப்பு போராட்டங்களுக்கு ஆதரவு தெரிவித்து கேரளத்தில் கொழிஞ்சாம்பாறையிலிருந்து பொள்ளாச்சி சாலையில் 4 கி.மீ தூரம் கேரளப் பகுதியில் 200 - க்கும் மேற்பட்ட வண்டிகள் கொண்ட ரேக்ளா ஊர்வலம் 20 ஆம் தேதி நடைபெற்றது. அங்கு காளையின் பயன்பாடு மிக முக்கிய ஒன்றாகப் பார்க்கப்படுகின்றது, ஏறுதழுவுதல் தடை குறித்து கருத்துத் தெரிவித்த கேரள விவசாயிகள் 'தமிழர்களும், கேரள மக்களும் சகோதர உணர்வுடன் வாழ்ந்து வருகிறோம். மாநிலங்களாக வேறுபட்டாலும் நாங்கள் எப்போதும் ஒற்றுமையுடன் இருப்போம். தமிழக மக்களுக்கு ஏற்படும் பிரச்னைகளுக்கு உறுதுணையாக இருப்போம்' என்றனர்.

பாரம்பரிய காளைகளை அடக்கும் திருவிழாவை ஆதரித்து பல கூட்டங்கள் மற்றும் ஊர்வலங்கள் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து பதிவாகியுள்ளன. குறிப்பாக தகவல் தொழில்நுட்பத் துறையில், கணிசமான எண்ணிக்கையிலான ஊழியர்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள். ஏறுதழுவுதல் தடைக்கு எதிராக திருவனந்தபுரத்தில் உள்ள டெக்னோ வளாகத்தில் உள்ள ஊழியர்கள் பலர் வெள்ளிக்கிழமை மாலை பிரதான வாயில் முன்பு மவுன பூங்கா ஊர்வலம் நடத்தினர். சேர்த்தலா இன்போபார்க்கில் உள்ள பல்வேறு தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களில் பணிபுரியும் தமிழகத்தைச் சேர்ந்த தொழில்நுட்ப வல்லுநர்களும் தொழில் நுட்ப பூங்கா முன் கண்டனக் கூட்டம் நடத்தினர். இதனிடையே, தடையை எதிர்த்து போராட்டம் நடத்துபவர்களுக்கு ஒற்றுமையை தெரிவிக்கும் வகையில் திருச்சூரில் விழா ஒருங்கிணைப்பு குழுவினர் பேரணி நடத்தினர். பாரம்பரிய சடங்குகள் மற்றும் திருவிழாக்கள் தொடர வேண்டும் என்ற கோரிக்கையை ஆதரிப்பதாக குழு தலைவர்கள் தெரிவித்தனர்.

தமிழக மக்களின் போராட்டத்துக்கு தெலுங்கு நடிகர்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர். நடிகரும், ஜனசேனா கட்சியின் தலைவருமான பவன் கல்யாண் ''பொங்கல் பண்டிகையின்போது ஆந்திரத்தில் சேவல் சண்டையும், தமிழகத்தில் சல்லிக்கட்டும் நடை பெறுவது வழக்கம். இவையெல்லாம் திராவிடர்களின் பண்டிகைக்கால கலாச்சார அடையாளங்கள். ஆனால் இவைகளை முடக்கும் நோக்கில் மத்திய அரசு செயல்படுகிறது. எனவே சல்லிக்கட்டுக்கு என்னுடைய முழு ஆதரவைத் தெரிவித்துக்கொள்கிறேன்" என்று தன் முகநூல் பக்கத்தில் பதிவிட்டார். மேலும் இப் போராட்டம் மும்பை, டெல்லி, குஜராத் என நாட்டின் பிற மாநிலங்களிலும் விரிவடைந்தது.

**பிற நாடுகளில் ஏறுதழுவுதல் போராட்ட களங்கள்**

ஏறுதழுவுதல் தடைக்கு எதிரான போராட்டம் உலக நாடுகளை திரும்பிப் பார்க்க வைத்தது, சமூக ஊடகங்கள் மற்றும் வலைதளங்களின் மூலம் தமிழக இளைஞர்கள் ஜல்லிக்கட்டு நடத்த ஆதரவு அளிக்கும்படி கேட்டுக் கொண்டதால் இந்த போராட்டம் கடல் கடந்து உலகின் பிற நாடுகளிலும் பரவியது, வெளிநாடுகளில் வசிக்கும் தமிழர்கள் மற்றும் தமிழ் சங்கங்கள் அங்குள்ள மக்களிடம் ஜல்லிக்கட்டு குறித்த விழிப்புணர்வு பிரசாரத்தை தொடங்கி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இலங்கையின் வடக்கு நகரான யாழ்ப்பாணத்தில் ஈழத்தமிழர்கள் தை எழுச்சிக்கு ஆதரவான ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். ஈழத் தமிழர்களும் தமிழகத் தமிழர்களும் செரிந்து வாழும் அமெரிக்கா மற்றும் இங்கிலாந்தின் பல நகரங்களிலும், ஆஸ்திரேலியா, தென்னாப்பிரிக்கா, ரஷியா, பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, சீனா, கனடா, சுவிட்சர்லாந்து, அயர்லாந்து, சிங்கப்பூர், மலேசியா, இலங்கை, ஐக்கிய அரபு

அமீரகம் உள்ளிட்ட பலநாடுகளில் வாழும் தமிழர்கள் தாங்கள் வசிக்கும் பகுதிகளிலும் ஏறுதழுவுதலுக்கு ஆதரவான பதாகைகளை ஏந்தியபடி, பெருந்திரளாக போராட்டங்களில் பங்கேற்றனர். அமெரிக்காவில் தமிழர்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளில் இந்தப் போராட்டம் பேருருவம் எடுத்தது. இந்தப் போராட்டத்தில் பங்கேற்ற திரளான பெண்களில் சிலர் தங்களது கைக்குழந்தைகளுடன் சாலையில் அமர்ந்து ஏறுதழுவுதலுக்கு ஆதரித்து முழக்கங்களை எழுப்பினர்.

ஜப்பான் நாட்டு தலைநகரான டோக்கியோவில் உள்ள பங்குசாய் உள்ளிட்ட முக்கிய பகுதிகளில் வாழும் தமிழர்கள் ஏறுதழுவுதலுக்கு ஆதரவாகவும், பீட்டா அமைப்பை தடைசெய்ய கோரியும் கையெழுத்து போராட்டம் நடத்தினர். தமிழர்களின் பழம்பெருமை மிக்க கலாச்சாரம் சார்ந்த வீர விளையாட்டான ஏறுதழுவுதலுக்கு தடை விதிக்கும் அன்னிய நாட்டு சக்திகளுக்கு இடமளிக்க மாட்டோம், எங்களது பாரம்பரியத்தை பாதுகாக்க இறுதிமூச்சு உள்ளவரை போராடுவோம், என பங்குசாய் நகரில் சுமார் 300 பேர் பங்கேற்ற போராட்டத்துக்கு தலைமை தாங்கிய அமைப்பாளர் தெரிவித்தார். நிஷி கசாய் பகுதியில் பிரமிட் பூங்கா, செய்ஷின்ச்சோவில் உள்ள டொக்காய்ச்சிப, ரியோகுச்சி பூங்கா பகுதியில் உள்ள கயாபா பூங்கா, ட்சுகுபா பகுதியில் உள்ள டோஹோ பூங்கா, கவாசாகி நகரில் உள்ள ஃபியூஜிமி பூங்கா மற்றும் நகோயா பகுதியிலும் தமிழ்நாட்டில் ஏறுதழுவுதலை ஆதரித்தும், பீட்டா அமைப்புக்கு தடை விதிக்க கோரியும் கையெழுத்து இயக்கம் நடைபெற்றது.

தமிழகம் மக்கள் பண்பாட்டு அடையாளத்தை மீட்கும் எழுச்சியை 'அரபு எழுச்சியின் தமிழ் வடிவம்' என பிரபல வட இந்தியப் பத்திரிக்கையான 'டைம்ஸ்

ஆப் இந்தியா' எழுதியது. 'பிபிசி' உள்பட 'த கார்டியன்', 'வாசிங்டன் போஸ்ட்', 'வால் ஸ்ட்ரீட் ஜேர்னல்', 'அல்ஜஜீரா', 'லெமான்டே டிப்ளமேடிக்' என உலகின் புகழ்பெற்ற ஊடங்கங்கள் அனைத்திலும் பண்பாட்டு எழுச்சி குறித்த செய்திகள் வெளியாகின. ஏறுதழுவுதல் தடை நீக்க கோரிய போராட்டம் தமிழகத்தை மட்டுமல்ல, முழு இந்தியாவையும் முழு உலகையும் குலுக்கிய தமிழக வெகுமக்களின் பேரேழுச்சியாக உலக வரலாற்றில் மாறியது.

**ஒளியை ஏற்படுத்திய போராட்டம்!**

தமிழகம் முழுவதும் அமைதியாக ஆரம்பித்த இந்தப் போராட்டத்தில் இனம், மதம் பாராமல் தமிழன் என்ற உணர்வுடனேயே அனைவரும் கலந்திருந்தனர். போராட்டக்காரர்களுக்குத் தன்னார்வலர்கள் பலர் தங்களால் முடிந்த உணவுப் பொட்டலங்களையும், தண்ணீர் பாக்கெட்களையும் வழங்கி மகிழ்வித்தனர். அவர்களுடைய அத்தியாவசியத் தேவைகளான இயற்கை உபாதைகளைக் கழிப்பதற்கு கழிப்பறை வசதிகள் செய்யப்பட்டிருந்தது. ஏதாவது விபத்து ஏற்பட்டால் சிகிச்சை அளிப்பதற்கு ஏதுவாக ஆம்புலன்ஸ் வசதிகளும் செய்யப்பட்டிருந்தன. போராட்டக் களங்களில் அவர்களை ஊக்குவிப்பதற்காக ஏறுதழுவுதல் பற்றிய முழக்கங்கள், பாடல்கள் பாடப்பட்டன.

ஹிப் ஹாப் தமிழா ஆதியின் இசையில் இது மாட்டை பத்தின பிரச்னை இல்ல.., நாட்டை பத்தின பிரச்னை.. ஏ இங்க பாரு, இது தான் என் ஊரு..." என வரிகள் போராட்ட களத்தில் பாடலாகவும், கோஷங்களாகவும் இடம்பெற்றது மேலும் 'ஜி.வி.பிரகாஷும், அருண் ராஜா காமராஜாவும் இணைந்து உருவாக்கிய பாடலான கொம்பு வெச்ச சிங்கம்டா... இது ஜல்லிக்கட்டு காளைடா...' வைரமுத்து

பாடல் வரிகளில் ஜல்லிக்கட்டு ஜல்லிக்கட்டு முரட்டு காளை, துள்ளி துள்ளிகிட்டு விரட்டும் ஆளை..., அது காளை இல்லை, அது இன்னொரு புள்ளை..." என குத்தும் என்ற பாடலும், எடு எடு வாளை, நீ எழுதிடு புதுவித ஓலை..என நா.முத்துக்குமாரின் பாடல் வரிகளும், யாருடா இந்த பீட்டா, இனி உடைப்போம் தடைகளை கேட்டா..." என்ற சிநேகன் வரிகளும் இடம்பெற்றிருந்தன.

- இது ஒரு நாள் போராட்டம் அல்ல.. ஓயாத போராட்டம் '
- 'ஜல்லிக்கட்டை காப்போம்.. தமிழர்

இறையாண்மையை மீட்போம்'

- ஏறு தழுவுதல் எங்கள் உரிமை

வீறு கொண்டது மதுர மண்ணு'

- 'இது விளையாட்டுத்தனம் அல்ல

வீர விளையாட்டுக்கு எங்களின் பங்கு'

ஏறுதழுவுதல் தடையை நீக்க கோரி கருத்துகள் பதாகைகளாகவும், போராட்ட முழக்கங்களாகவும் காணப்பட்டன, அவைகள் ஏறுதழுவுதல் நிகழ்வின் இன்றியமையாமை, வீரம், உரிமை, மொழி பற்று, அமைப்புகள் மீது இருந்த எதிர்ப்பு என அனைத்தும் வெளிப்பட்டது.

தன் ஓவியங்கள் மூலம் போராட்டத்துக்கு துணை நின்றார் நடிகரும் ஓவியருமான ஏ.பி. ஸ்ரீதர். மனித வரலாற்றில் ஓவியங்களுக்கு முக்கிய இடமுண்டு. வார்த்தைகளிலும் இசையிலும் வெளிப்படுத்த முடியாத ரகசியங்களை, உள்மனத் தேடலை குறியீடுகள் மூலம் சொல்லும் ஓவியங்கள் ஏராளம். இந்த வகையில் ஸ்ரீதர் வரைந்த 18 வகையான ஓவியங்கள் போரட்டக் குழுவினருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

இயக்குநரான சிம்புதேவன் அடிப்படையில் கேலிச்சித்திர வரைஞர். இவர் தன் பங்கிற்கு கேலிச்சித்திரம் வரைந்து ஆதரவை வெளியிட்டார். போராட்டக் குழுவினரைப் பார்த்து "சபாஷ் இளைய தலைமுறையே! என் கொள்கைகள் செத்துருச்சோன்னு நினைச்சேன்... நீங்க அதை முழுசா காப்பாத்திட்டீங்க!" என காந்தி சொல்வது போல் அந்த கார்ட்டூனை வரைந்திருந்தார். போராட்ட நேரத்தில் வெளிவந்த இந்த கார்ட்டூனுக்கு சமூக வலை தளங்களில் நல்ல வரவேற்பை பெற்றது.

இடையிடையே இளைஞர்களின் நடனங்கள் நடைபெற்றன. சென்னை மெரினாவில் இரவு நேரத்தில் தெருவிளக்குகளைத் தமிழக அரசு அணைத்துவைத்திருந்தாலும் அங்கு கூடியிருந்த பொதுமக்கள் தங்கள் கைப்பேசிகள் மூலம் ஒளியை ஏற்படுத்தி அனைவரையும் வியப்பில் ஆழ்த்தினர். இதோடு போராட்டக் களத்தில் அந்த ஆர்வலர்கள் செய்த மகத்தான காரியம் கடற்கரையில் குப்பைகளை அள்ளினார்கள். சாலைப் போக்குவரத்தைச் சரிசெய்தார்கள். பெண்களிடம் கண்ணியமாய் நடந்துகொண்டார்கள்.

வாடிவாசல் திறக்கும்வரை... வீடு வாசல் போகமாட்டோம்' என்று அலங்காநல்லூரில் கடந்த 16-ம் தேதி ஆரம்பித்த ஏறுதழுவுதலுக்கு ஆதரவான அறப்போராட்டம், தமிழகம் முழுவதும் இளைஞர்களாலும், மாணவர்களாலும், பொதுமக்களாலும், கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியது. சென்னை மெரினாவில் மட்டும் லட்சக்கணக்கான மக்கள் கூடியது பலரையும் வியப்பில் ஆழ்த்தியது. இதன் தொடர்ச்சியாக வெளிமாநிலங்களிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் ஆதரவு பெருகியது. இதைக் கண்டு உலக நாடுகளே! தமிழகத்தைத் திரும்பிப் பார்த்ததுடன், இந்தப் போராட்டம் வரலாற்றிலும் இடம்பிடித்துக்கொள்ளத் தூண்டுகோலாக இருந்தது.

வரலாற்றையே தடம்புரட்டிய எழுச்சிமிக்க இளைஞர், மாணவர்களின் ஒருவாரப் போராட்டத்தின் இறுதியில் கிடைத்த வெற்றிக்கனியை உற்றுப் பார்த்து உறுதி செய்து கொள்ளும் அவகாசம் பறிக்கப்பட்ட நிலையில், மெரினா கடற்கரை பரப்பில் போராட்டக்காரர்களுக்கும், காவல் துறைக்கும் இடையே கலவரம் மூண்டுவிட்டது. காவல்துறையின் கை ஓங்கிவிட்டது. சமூக விரோதிகளின் ஊடுருவலும், ஊடுருவியவர்களை இனம் பிரித்து தாக்குதல் நடத்தாமல் ஒட்டுமொத்த கண்மூடித் தாக்குதலும், இருதரப்பு சேதங்களும் உலகு மெச்சிய எழுச்சி மிக்க போராட்டத்தின் இறுதி அத்தியாயத்தில் அர்த்தம் உணர முடியாத எழுத்துப் பிழைகளை ஏராளம் உருவாக்கிவிட்டது.

போராடிய இளைய தலைமுறையும், சட்டம் இயற்றிபெற்றுத் தந்தவர்களும், துரதிர்ஷ்டவசமாக தோற்றுப் போனது போல ஒரு மாயத் தோற்றம் இருப்பினும், சிறைப்படுத்தப்பட்ட தொன்மையான தமிழ் பண்பாட்டு அடையாளத்தை மீட்டெடுத்த பெருமைக்குரியவர்கள் அவர்கள் என்பதில் எவ்வித சந்தேகம் இல்லை! தமிழக சட்டசபையில் ஏகமனதாக ஒப்புதலளிக்கப்பட்டு, நிறைவேற்றப்பட்ட சட்டமசோதா, ஆளுநர் வழியாக அனுப்பப்பட்டு இந்திய குடியரசுத் தலைவரால் ஜனவரி 30-ம் தேதி கையொப்பமிடப்பட்டு அரசிதழில் வெளியாகியுள்ள ஏறுதழுவுதல் தடை நீக்கச் சட்டம், ஒட்டுமொத்த தமிழக இளைய தலைமுறையினரின் ஒருவார கால அறவழி போராட்டத்தின் வாயிலாக தங்களின் பண்பாட்டு அடையாளத்தை மீட்டதை என்றென்றும் வரலாறு கூறும்.

**தொகுப்புரை**

ஏறுதழுவுதலில் பண்பாட்டு மீட்டுருவாக்கம் எனும் இவ்வியலில், தொன்று தொட்டு நடைபெற்ற ஏறுதழுவல் விளையாட்டில் ஏற்படும் தடைகளும் , சட்டங்களும், வரலாற்றையும் தொகுக்கப்பட்டுள்ளது. புதிய சட்டங்களையும், தடைகளையும் சமகால மக்கள் கையாளும் விதங்களை ஆராயப்பட்டுள்ளது.

என் ஜி ஒ நிறுவனங்களின் அரசியல் அதன் பின்னணியும், அதன் வரலாறும் விளக்கப்படுகிறது. இந்த அமைப்பின் வாயிலாக கால்நடை சாந்த சட்ட திருத்தங்கள், பிரிவினை, பண்பாட்டு அழிவு போன்ற அனைத்து கூறுகளும் விளக்கப்பட்டுள்ளன.

பண்பாட்டை காக்க இளைஞர்கள் எழுச்சி, அவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட்ட மெரினா புரட்சியும், போராட்ட களம் போன்றவையும், ஏறுதழுவல் பண்பாட்டு பாரம்பரிய விளையாட்டில் தடைக்கு பின் ஏற்பட்டுள்ள மாற்றங்களும் தொகுக்கப்பட்டு ஆராயப்பட்டுள்ளது.

ஏறுதழுவுதல் நிகழ்வை எதிர்ப்போர், ஆதரிப்போரின் கருத்துக்களும், மக்களிடையே காணப்படும் பாரம்பரிய விளையாட்டு பற்றிய புரிதல் மற்றும் அதன் தேவை, பண்பாட்டு மீட்டுருவாக்கம் பற்றியும், இவ்வியல் ஆராயப்பட்டுள்ளது.

# முடிவுரை

## முடிவுரை

தமிழர் பண்பாடு மரபில் ஏறுதழுவுதல் எனும் பொருண்மையில் அமைந்த இவ்வாய்வில் ஆராய்ந்து கண்டறிந்த முடிவுகள் தொகுத்து அளிக்கப்படுகின்றது.

- மானுட சமூகத்தின் தொடக்க காலத்தில் காட்டு விலங்கை வீட்டு விலங்காக மாற்றினர், காளை போன்ற விலிமையான விலங்குகளை தனது கட்டுப்பாட்டில் கொண்டு வரவும், அவற்றை அடக்கி தன் வசம் படுத்தும் முயற்சியும் ஏறுதழவுதலின் தொடக்கம் எனக் கொள்ளலாம்.

- பண்டைய காலத்தில் மாடுகள் மிக முக்கிய செல்வமாக விளங்கின. தொல்காப்பியம், புறப்பொருள் வெண்பாமாலை, புறத்திரட்டு, ஆகிய இலக்கண நூல்களில் ஆநிரை கவர்தல் மீட்டல் போன்ற ஏறுதழுவுதல் பதிவுகள் இடம் பெற்றுள்ளன. ஆநிரை கவர்தலின் போது காளைகளை அடக்கி தன்வயப்படுத்தும் பொருட்டு ஏறுதழுவுதலின் தேவை காணப்பட்டதை அறியமுடிகின்றது.

- தமிழர் பண்பாட்டில் நிலை பெற்றுள்ள கால்நடை வழக்காறுகள் ஏறுதழுவுதல் சார்ந்த மரபினை குறித்து வெளிப்படுத்துகின்றது. அறிஞர் மிக்கன் மாரட்டின் கூற்றுபடி எழுத்து வடிவிலான ஏறுதழுவுதல் கூறுகள் பெருமரபாக பண்பாட்டு பதிவுகளில் நிலைப் பெற்றுள்ளது.

- புறநானூற்றுப் பதிவுகளை ஆய்வுக்கு உட்படுத்தும்போது தன்னுறு தொழிலாகப் பாலை நிலத்தவர் கவர்ந்து சென்ற ஆநிரைகளை மீட்க மருத நிலத்தவர் முற்பட்ட பதிவுகள் களவுத் தொழிலிலும் ஆநிரைகளைக் கவர ஏறுதழுவுதலின் தேவை இருந்ததை உணர்த்துவதாக அமைகின்றன.

- முல்லை நிலத்தின் மிக முக்கிய நிகழ்வாக ஏறுதழுவுதல் இடம்பெற்றுள்ளது. முல்லை நிலத்தில் நிகழ்ந்த ஏறுதழுவுதலையும் அது சார்ந்த நிகழ்வுகளையும் சங்க இலக்கிய நூலான கலித்தொகை முல்லைக்கலி எடுத்துரைக்கின்றது.

- ஏறுகளின் சிறப்பை எடுத்துரைக்க பல உவமைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

- காளையை வென்றவனுக்கு பெண்ணை மணம் முடித்துக் கொடுத்தல் என்பது முல்லை நில வழக்கமாக இருந்துள்ளது. ஆய மகளிர் வீரமிக்க ஆண்மகனைப் மணப்பதையே விரும்பினர்.

- ஏழு கன்னியர் காளைகளை வளர்த்ததும் அக்காளையை அடக்கும் வீரனையே மணக்க விரும்பிய செய்தியையும் சிலப்பதிகாரம் பதிவு செய்கின்றது.

- கலித்தொகை ஏறுதழுவுதலைத் தொடர்ந்து சிலப்பதிகாரத்தில் ஏறுதலுவுதல் ஒரு முறையான விளையாட்டாக பரிணாமத்தை உணரமுடிகின்றது.

- ஏறுதழுவல் நிகழ்வுடன் குரவை ஆடுதல் நிகழ்த்தப்பட்ட செய்திகள் அறியமுடிகிறது.

- பெண்களுக்கு பொருத்தமான மணமகனைத் தேர்வு செய்யும் ஒரு நிகழ்வாகவும் இது குறிப்பிடத்தக்கது.

- விலங்குகளோடு விலங்குகளைப் பொருதச் செய்யும் விளையாட்டுக்கள் சங்ககாலத்தில் நடைபெற்றதை மலைபடுகடாம் பதிவு செய்கின்றது.

- விலங்குகளோடு மனிதர் பொருதும் விளையாட்டு ஏறுதழுவுதல் ஒன்றேயாகும்.

- சிற்றிலக்கிய வகைகளில் ஒன்றான பள்ளு இலக்கியங்களில் ஏறுதழுவுதல் தொடர்பான செய்திகள் இடம்பெற்றுள்ளன.

- பள்ளு இலக்கியம் குறிப்பிடும் வயல்வெளிகளில் நடந்த காளைகளை அடக்குதையும் ஏறு தழுவுதலாகக் கொள்ளலாம்.

- சிந்து சமவெளி அகழ்வாராய்ச்சியில் கிடைத்த ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட முத்திரைகளில் மாடுகள் தொடர்பான பல காட்சிகள் இடம் பெற்றுள்ளதை தொல்லியல் சான்று வழி அறிய முடிகின்றது.

- கலித்தொகை பதிவு செய்யும் ஏறுதழுவுதல் போன்ற நிகழ்வுகள் சிந்துவெளி கல்முத்திரைகளில் பொறிக்கப்பட்டதை ஐராவதம் மகாதேவன் போன்ற தொல்லியல் அறிஞர்கள் உறுதி செய்கின்றனர்.

- கமலாம்பாள் சரித்திரம், சித்திரப்பாவை, காவல்கோட்டம், மஞ்சுவிரட்டு மட்டும் ராவ்பகதூர் சிங்காரம், எருதுகட்டு, வீரம்மாளின் காளை, வாடிவாசல், மயிலை மாடு போன்ற புதினங்களில் அன்பு, வீரம், துரோகம், சாதீயம் முதலாளித்துவம் பகை போன்றவை ஏறுதழுவலை மையமிட்டு இடம் பெற்றுள்ளதுன என்பதை அறியமுடிகின்றது.

- ஏறுதழுவுதல் மற்றும் காளை சார்ந்த புதுக்கவிதைகள் சமகாலப் பிரச்சனைகள், விருப்பு வெறுப்பு, தேவை போன்றவற்றைப் பதிவு செய்கின்றன. பண்பாட்டு அடையாளத்தை இழக்கும் வாய்ப்புள்ளதை உணர்ந்த மக்கள் பிறநாட்டு பொருட்களையும், பண்பாட்டையும் ஏற்க மறுத்த நிகழ்வுகளையும் தற்கால இலக்கியங்கள் பதிவு செய்கின்றன.

- வழிபாட்டு மரபுகளில் ஆநிரைகளைக் கவர்தல், மீட்டல் பொருட்டு இறந்த வீரர்க்களுக்கு நடுகற்கள் நட்டு வழிபட்டதை இலக்கியங்கள் பதிவு செய்கின்றன. மாட்டின் கொம்பினை வழிபடும் பண்டைத்தமிழர் மரபினை முல்லைக்கலி பாடல்கள் வெளிப்படுத்துகின்றன.

- ஏறுகளுக்கு கோவில்களில் சேத்தாண்டி வேஷம் குழந்தை பேறு போன்ற வழிபாட்டு நிகழ்வுகளில் ஏறுதலுவுதல் நிகழ்த்தப்படுகின்றது இந்நிகழ்வுகள் மக்களின் நம்பிக்கை முறைகளை வெளிப்படுகின்றன.

- சிறு மரபு வழக்காறுகளில் நம் நாட்டிலும், பிற நாடுகளிலும் காளை வழிபாடு வழக்கிலிருந்தன்மையை ஆராய முடிகின்றது.

- காளை தொடர்புடைய கோவில்கள் விழாக்கள், விழாக்கள் சார்ந்த சடங்குமுறைகள், நம்பிக்கைகள் போன்றவை இன்றும் மக்களால் பின்பற்றப்படுகின்றன.

- ஏறுதழுவுதல் தொடர்புடைய நாட்டார் கதைகளில் அழகாத்தேவனின் தொன்மக்கதை, மன்னன் சின்னாண்டி, போன்ற கதைகள். கதை மாந்தர்களாக மட்டும் இல்லாமல் குலக்குறி மரபுகளாக மாற்றப்பட்டதை உணர்த்துகின்றன.

- மாட்டு இனங்களில் பல விதமான சுழிகள் அடையாளப்படுத்துதல் மாடுகளின் சுழிகளும், சுழிகளின் மீது வைக்கும் நம்பிக்கைகளை உணர்த்துகின்றது சுழிகளின் நன்மை பயப்பவையும், தீமை பயப்பவையும் என இருவகையாக நம்பப்படுகின்றது.

- கால்நடை சார்ந்த பழமொழிகளில் சாதீயப் பழமொழிகளின் ஆய்வில், அவை உருவான சூழல் இணங்கானப்பட்டது.
- பெயர்க் காரணம், ஏறுதழுவுதலின் வகைகள், நாயக்கர் கால ஏறுதழுவும் முறைகள், ஏறுதழுவுதல் நிகழ்வில் ஏற்படும் காயங்களின் தன்மை , ஏறுதழுவுதல் விளையாட்டு என ஏறுதழுவுதல் பரிணமிப்பதை கள ஆய்வுத் தரவுகள் உணர்த்துகின்றன.
- மாடுபிடி வீரர்களுக்கு பயிற்சி கொடுத்தல், வீரர்கள் பயிற்சி செய்யும் முறை, காளைக்குப் பயிற்சி அளிக்கும் முறை , ஏறுதழுவும் முறை, போட்டிகளில் பங்கேற்கும் முறை, ஏறுதழுவுதல் நிகழ்விடங்கள், சமகாலச் சிக்கல்கள், நிபந்தனைகள் போன்றவை ஏறுதழுவுதல் சார்ந்த கட்டுபாட்டை உணர்த்துகின்றது.
- சங்ககாலம் , நாயக்கர் காலம் மற்றும் தற்காலம் வரை ஏறுதழுவும் முறைகள் பற்றிய ஆய்வில், ஏறுதழுவுதல் விளையாட்டின் பல பரிணாமங்களை உணர முடிகின்றது.
- ஏறுதழுவுதலில் காளைகளை விட வீரர்களுக்கு பலவிதமான காயங்கள் ஏற்படுகின்றன. சில நேரங்களில் விளையாட்டு வீரருக்கோ அல்லது பார்வையாளருக்கோ மரணம் கூட நிகழும். இதில் மாடுகளின் மரணம் குறைவு.
- காளை இனங்களில் காங்கேயம் காளை சிறந்ததாகக் கருதப்படுகின்றது. இது கொங்கு மாவட்ட நாட்டு மாட்டு வகையைச் சார்ந்ததாகும்.

- மாடுகளின் கிளை இனங்கள், மாடுகளைத் தேர்வு செய்யும் முறை, மாட்டுச் சந்தையில் இடம்பெறும் காளைகள் பற்றிய செய்தியும், ஏறுதழுவுதல் நிகழ்விற்காக தயார் எடுப்பினை வெளிப்படுத்துவதாக உள்ளது. ஏறுதழுவும் வீரர்களுக்கு தனிப்பட்ட பயிற்சி முறைகள் வழங்கப்படுதல், ஏறுதழுவுதல் நிகழ்விடங்கள் அமைப்பு, நிபந்தனைகள் போன்றவை ஏறுதழுவுதலின் கட்டமைப்பை விளக்குகின்றன.

- தமிழரின் அடையாளமான ஏறுதழுவுதல், கேரளாவில் காளை சார்ந்த பாரம்பரிய விளையாட்டான மரமடியாக நிலைப் பெற்றுள்ளது. இது ஏறுதழுவுதலோடு சில ஒற்றுமைகளைக் கொண்டுள்ளது.

- உலக அளவில் காளை சார்ந்த விளையாட்டுகள் நிகழ்த்தப்படுகின்றன. மடகாஸ்கர் தீவில் நிகழ்த்தப்படும் காளை சார்ந்த விளையாட்டு ஏறுதலுவுதலுக்கு இணையாக அமைந்துள்ளது.

- குலக்குறி மரபுகளில் காளைகளின் கொம்புகள் இடம் பெற்றுள்ளதை அறிய முடிகின்றது. ரெனாய்க் குலக்குறியியல் இயல்பு முத்தாலம்மன் கோவில் காளை குலக்குறி இயல்போடு ஒத்துள்ளது.

- பிரேசர் கூறும் குலக்குறி இயல்பு அழகாத்தேவன் குலக்குறி இயல்போடு ஒத்துள்ளது.

- பிராய்டின் விலங்கு உணர்ச்சி பண்பாட்டு உணர்ச்சி போன்றவை சி.சு. செல்லப்பா நாவலான வாடிவாசலில் கதைக்கு ஏற்றவாறு பொருந்தி வந்துள்ளதை ஒப்பிட்டு அறிய முடிகின்றது.

- ஏறுதழுவுதல் பண்பாட்டு மீட்டுருவாக்கம் செய்வதால் தொன்றுதொட்டு நடைபெற்ற ஏறுதலுவுதல் வரலாற்றையும் விளையாட்டில் ஏற்படும் தடைகளையும், சட்டங்களையும் அறிந்து கொள்ளமுடிகின்றது.
- ஏறுதலுவுதலில் என்.ஜி. ஓ போன்ற அமைப்புக்களின் இடையீடுகள் தவிர்க்க முடியாத ஒன்றாக உள்ளது. கால்நடை சார்ந்த சட்ட திருத்தங்கள், இனக்குழுப் பிரிவினை போன்றவை பண்பாட்டு அழிவுக்கு காரணமாகின்றன.
- பண்பாட்டைக் காக்கும் இளைஞர்களின் எழுச்சி தமிழின மக்களின் ஒன்றிணைந்த போராட்டத்தை மெரினா புரட்சி வெளிப்படுத்துகின்றது.
- போராட்டக்களத்தில் ஏறுதழுவுதல் சார்ந்த கருத்துக்களும், நிகழ்த்து கலைகளும் இடம் பெற்றமை ஏறுதழுவல் சார்ந்த மக்களின் ஈடுபாட்டை வெளிப்படுத்தியது.
- மக்களிடையே ஏறுதழுவுதலை விளையாட்டாக ஆதரிப்போர், எதிர்ப்போர் என்ற இரு நிலைத்தன்மை நிலைபெற்றுள்ளது.
- ஏறுதழுவுதல் என்னும் நிகழ்வானது நாட்டு மாடுகளைப் பாதுகாப்பது, உரிமைகளைப் பெறுவது பண்பாட்டைப் பேணுவது தமிழரின் பண்பாட்டுப் புரிதலை உணர்த்துக்கின்றது. பாரம்பரிய மாற்றும் பண்பாட்டு விழுமியங்களை காக்கும் தமிழரின் விழிப்புணர்வு போற்றத்தக்கது.

# துணைநூற்பட்டியல்

## துணை நூற் பட்டியல்

**முதன்மை நூல்கள்:**


அகிலன். - சித்திரப்பாவை
தாகம் பதிப்பகம்
25 வது பதிப்பு
சென்னை - 2015

அருணாச்சலம். மு - முக்கூடற்பள்ளு
இரண்டாம் பதிப்பு
தமிழ் நூலகம், தியாகராய நகர்
சென்னை - 1949

இளம்பூரணர் - தொல்காப்பியம் பொருளதிகாரம்
கழக வெளியீடு தெனனிந்திய சைவ சித்தாந்த
நூற் பதிப்புக் கழகம் லிமிடெட்
முதல் பதிப்பு
திருநெல்வேலி - 1969

இராமன்.கே. வி. - தொல்லியல் ஆய்வு
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்
முதல் பதிப்பு
சென்னை - 2014

கதிர் முருகு. - பத்துப்பாட்டு மலைபடுகடாம்
மூலமும் உரையும், மூன்றாம் பதிப்பு
சாரதா பதிப்பகம்
சென்னை – 2016

குமாரசாமிப் புலவர் - தண்டியலங்காரம்
மூலமும் உரையும்
யாழ்பனத்து சுன்னாகம்
இரண்டாம் பதிப்பு - 1926.

சண்முகசுந்தரம். சு. – நாட்டுப்புற இயல்
மணிவாசகர் பதிப்பகம்
நான்காம் பதிப்பு
சென்னை -1976

சாமிநாத ஐயர் . வே. - பதிற்றுப்பத்து மூலமும் பழைய உரையும்
வைஜயந்தி அச்சிக் கூடம்
இரண்டாம் பதிப்பு
சென்னை -1920

சீனிவாசன். ரா - சிலப்பதிகாரம் மூலமும் திறனாய்வும்
அணியகம் 5 செல்லம்மாள் தெரு செனாய் நகர்.
முதல் பதிப்பு
சென்னை -1997

செல்லப்பா சி.சு. - வாடிவாசல்
காலச்சுவடு பதிப்பகம்
15 வது பதிப்பு - 2014
நாகர்கோவில்

தங்கர்பச்சான். - வெள்ளைமாடு
செம்புலம் பதிப்பகம்
விகடன் பிரசுரம் சிறப்புப் பதிப்பு
சென்னை - 2019

தமிழமுதன் - கலித்தொகை - மூலமும் உரையும்
சாரதாபதிப்பகம்
பதிப்பு - 2012
சென்னை

நடராசன்.மா - மயிலைமாடு
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்
முதல் பதிப்பு
சென்னை - 2016

பவானந்தம் பிள்ளை. - யாப்பருங்கலவிருத்தி

எப் ஆர் எச் எஸ் (லண்டன்) எம் ஆர் எ எஸ்

பதிப்பு -1916

லண்டன்

புலியூர்கேசிகன் - புறநானூறு மூலமும் உரையும்

சாரதா பதிப்பகம்

முதல் பதிப்பு

சென்னை- 2010

மீனாட்சி சுந்தரம் .மா. - நாட்டுப்புற நம்பிக்கைகள்

விஜயா பதிப்பகம்

இரண்டாம் பதிப்பு

கோயமுத்தூர்- 1995

ராமமூர்த்தி. வேல - எருது கட்டு

டிஸ்கவரி புக் பேலஸ்

பதிப்பு -2009

சென்னை

ராஜமய்யர்.பி.ஆர் - கமலாம்பாள் சரித்திரம்

நான்காம் பதிப்பு

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்

சென்னை -2014

வெங்கடேசன். சு - காவல் கோட்டம்.

- மூன்றாம் பதிப்பு

தமிழினி வெளியீடு

சென்னை - 2010

**துணைநின்ற நூல்களும், நூல் அக கட்டுரைகளும்- தமிழ்**


அரசு.வீ - வாய்மொழிவரலாறு காவ்யா வெளியீடு
பதிப்பு - 2001
சென்னை

அரசு. வீ - ரிக் வேதம்
அலைகள் வெளியீட்டகம்
தொகுதி மூன்று
தமிழ் - ஆங்கில மொழிபெயர்ப்பு.
சென்னை - 2004

ஆதி அசுரன். - ஜல்லிகட்டு ஜாதிக்கட்டு,
காட்டாறு வெளியீடு
முதல் பதிப்பு
பொள்ளாச்சி - 2017

இரவிச்சநதிரன் தி.கு. - சிக்மண்ட் ஃப்ராயிட்
உளப்பகுப்பாய்வு அறிவியல் .
அலைகள் வெளியீட்டகம்
இரண்டாம் பதிப்பு
சென்னை - 2007

ஜெகதா. - ஜல்லிக்கட்டு
தமிழுக்காக போராடிய தைப்புரட்சி-
சீதை பதிப்பகம்
முதல் பதிப்பு
சென்னை- 2017

| | |
|---|---|
| கண்ணகி கலைவேந்தன். | - இலக்கணங்களில் தமிழர் பண்பாடு<br>தமிழ் ஐயா வெளியீட்டகம்.<br>பதிப்பு - 2011<br>தஞ்சாவூர் |
| குமாரவேலு. ந | - காங்கேயம் காளைகள்<br>தமிழகத்தின்பெருமை<br>முதல் பதிப்பு<br>நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்<br>சென்னை -2015 |
| குன்றில்குமார். - | ஜல்லிக்கட்டு பால்படும் பாரம்பரியங்கள்<br>குறிஞ்சிவெளியீடு<br>முதல் பதிப்பு<br>சென்னை - 2016 |
| கோவிந்தசாமி.வெ | - பசுவின்புனிதம்<br>வெளியீடு பாரதி புத்தகாலயம்<br>முதல் பதிப்பு<br>சென்னை - 2011 |
| சண்முக சுந்தரம்.செ | - தை எழுட்சி குடிமைச் சமூகம்,<br>அதிகார அரசியலும்<br>நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்<br>முதல் பதிப்பு<br>சென்னை -2017 |
| சண்முகசுந்தரம். சு | - நாட்டுப்புறஇயல்<br>மணிவாசகர் பதிப்பகம்<br>பதிப்பு – 1975<br>சென்னை |

சரவணன்
தியாகராஜன் - ஜல்லிக்கட்டு அறுபடும் மூக்கணாங்கயிறு. ரெட் ஹவாக் பதிப்பகம். சென்னை - 2016

சிவகாமி.ச - பன்முகப்பார்வையில் பழமொழிகள் அமுத நிலையம் மாதவிப் திப்பகம் முதல் பதிப்பு, சென்னை - 1993

சிவசுப்பிரமணியன்.ஆ. - வரலாறும், வழக்காறும் காலச்சுவடு பதிப்பகம் நான்காம் பதிப்பு நாகர்கோவில் 2016

சீனிவாசன்.பா - மஞ்சுவிரட்டு விகடன் பிரசுரம் வெளியீடு முதல் பதிப்பு சென்னை -2007

தமிழரசன். - மாட்டிறைச்சி தடையால் யாருக்கு ஆதாயம் நிமிர்வெளியீடு, முதல் பதிப்பு சென்னை - 2019

தனஞ்செயன்.ஆ - குலக்குறியும் மீனவ வழக்காறும். நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட் முதல் பதிப்பு, சென்னை- 2012

தனஞ்செயன்.ஆ - சங்க இலக்கியமும் பண்பாட்டு சூழலும் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட் முதல் பதிப்பு சென்னை – 2010

| | |
|---|---|
| நக்கீரன். | - பால் அரசியல்<br>எதிர் வெளியீடு<br>முதல் பதிப்பு, பொள்ளாச்சி – 2016 |
| பக்தவச்சல பாரதி | - தமிழர் மானிடவியல்.<br>அடையாளம் பதிப்பகம்<br>இரண்டாம் பதிப்பு<br>திருச்சி - 2008 |
| பாலசுப்ரமணியம். இரா | - தமிழர் நாட்டு விளையாட்டுக்கள்<br>உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்<br>தொகுப்பு இரண்டு<br>சென்னை - 2003 |
| பால தண்டாயுதம்.பா. | - சல்லிக்கட்டு த் தடை தீர்ப்பும் தீர்வும் .<br>கருத்துப் பட்டறை வெளியீடு<br>முதல் பதிப்பு<br>மதுரை - 2016 |
| பாவெல்பாரதி. | - ஏறுதழுவல் ஜல்லிக்கட்டு தொன்மை<br>பண்பாடு அரசியல்<br>கருத்துப் பட்டறை வெளியீடு<br>இரண்டாம் பதிப்பு<br>மதுரை- 2017 |
| மகாராசன் - | ஏறுதழுவுதல் வேளாண் உற்பத்தியின்<br>நிகழ்துப் பண்பாடும் வரலாறும்<br>அடவி பதிப்பகம்<br>முதல் பதிப்பு<br>திருவண்ணாமலை - 2017 |

மாதயன்.பெ. - சங்க இலக்கிய வேளாண் சமுதாயம்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்
முதல் பதிப்பு சென்னை - 2015

முருகன். ப - புதியநோக்கில் பழமொழிகள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்
பதிப்பு – 1992, சென்னை

ராஜ நாராயணன். கி - கிராமிய விளையாட்டு மற்றவை
அன்னம் பதிப்பகம் – பதிப்பு- 2009
சென்னை

ராஜ்கௌதமன் - ஆகோள்பூசலும் பெருங்கற்கால
நாகரீகமும்
தமிழினி வெளியீடு
முதல் பதிப்பு , சென்னை - 2009

லூர்து.தே - நாட்டார் வழகாற்றியல் சில
அடிப்படைகள்
நாட்டார் வழ்காற்றியல் ஆய்வு மையம்.
இரண்டாம் பதிப்பு
பாளையங்கோட்டை- 2000

வீரமணி. கி - மதவெறியும் மாட்டுக்கறியும் தொகுப்பு
(திராவிடர்இயக்க) கழகவெளியீடு
இரண்டாம் பதிப்பு
சென்னை - 2015

ஸ்வாமிநாத
ஆத்ரேயர். - ஸ்ரீமத்பகவத்கீதா.
கோவிந்த பவன் காரியாலயம்
கீதாப்ரஸ், கோரக்புர் (உ.பி)
11 வது தொகுப்பு- 1998

**தமிழ் அகராதிகள்**

- க்ரியா தற்காலத் தமிழ் அகராதி

க்ரியா பதிப்பகம்

முதல் பதிப்பு, சென்னை 1992

- வாழ்வியல் களஞ்சியம்

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தொகுதி ஆறு

தஞ்சாவூர்- 1987

**இணைய இதழ்க் கட்டுரைகள்**

மகேசுவரன். சி - இயல் மரபும் அயல் மரபும் - 2010

கீற்று இணையதளம்

http://keetru.com/index.php/component/content/article?id=4843

ந. கணேசன்- - தமிழக் கொங்கு இணையதளம் - 2008

http://nganesan.blogspot.com/2008/01/eru-tazuval.html

- பாரம்பரிய காங்கேயம் கால்நடை வளர்ப்பு

நிலையம்

https://kangayambull.org/

புனித காளை. - காளை வழிபாடு பிற நாடுகள்

https://en.wikipedia.org/wiki/Sacred_bull

**ஆய்வேடுகள் - தமிழ்**


உமா.ஆ - கலித்தொகையில் பழந்தமிழர் வாழ்வியல்
முனைவர் பட் ட ஆய்வேடு - 2015
உலக தமிழ் ஆராய்ச்சி நிறுவனம். சென்னை

கோமளா இரா. - தமிழ் இலக்கிய கோட்பாடுகள் ஓர் ஆய்வு
முனைவர் பட்ட ஆய்வேடு. 2007
உலக தமிழ் ஆராய்ச்சி நிறுவனம். சென்னை


**ஆய்வேடுகள் - ஆங்கிலம்**


Anuradha P Nair ANIMAL RIGHTS- PROTECTION AGAINST
ANIMAL TESTING AND EXPLOITATION:
A CRITICAL STUDY
HE NATIONAL UNIVERSITY OF ADVANCED
LEGAL STUDIES Kalamassery, Kochi –

Jana DSouza -. JALLIKATTU: WHY TAMILIAN BULLFIGHTING
MATTERS NOW MORE THAN EVER
The University of Texas at Austin 2019

# பின்னிணைப்புகள்

## பின்னிணைப்புகள்

# தகவலாளர் பட்டியல்

| பெயர் | பால் | வயது | சாதி | இடம் | தொழில் | கல்வியறிவு |
|---|---|---|---|---|---|---|
| கார்த்திக் | ஆண் | 25 | பள்ளர் | கருப்பாயூரணி | மாணவர் | தொழில் நுட்பக் கல்வி |
| முனியசாமி | ஆண் | 48 | கொங்கு வேளாளர் | கோவை | பண்ணைத் தொழில் | 8 ஆம் வகுப்பு |
| மலர் | பெண் | 36 | கோனர் | உறுதிக்கோட்டை சிவகங்கை | கால்நடை வளர்ப்பு | 10 ஆம்வகுப்பு |
| அய்யாவு | பெண் | 41 | மறவர் | வடுகபட்டி இராமணாதபுரம் | கூலி | இல்லை |
| நாகம்மா | பெண் | 54 | கள்ளர் | மதுரை, மேலூர் | கடை வியாபாரி | 4 ஆம் வகுப்பு |
| வீராசாமி | ஆண் | 49 | முக்குலத்தோர் | மதுரை, கீழையூர் | விவசாயி | 2 ஆம் வகுப்பு |
| பெரியநாயகி | பெண் | 47 | கவுண்டர் | அம்மன்பட்டி விருதுநகர் | அரசு ஊழியர் | இளங்கலைப்பட்டதாரி |
| நாகமுத்து | ஆண் | 46 | கோனார் | திட்டுக்கோட்டை சிவகங்கை | வியாபாரி | 9 ஆம் வகுப்பு |
| க.மு. முருகேசன் | ஆண் | 61 | ஆதி திராவிடர் | சின்னஊர சேரிமதுரை | கால்நடை வளர்ப்பு | இல்லை |
| ஆராயி | பெண் | 56 | வேட்டுவர் | குமுளூர் திருச்சி | விவசாயம் | 1ஆம் வகுப்பு |
| வினோத் (எ) சிந்தாமணி | திருநங்கை | 43 | கள்ளர் | கல்லணை மதுரை | கூலி /காளை வளர்ப்பு | 3 ஆம் வகுப்பு |
| துரையரசன் | ஆண் | 39 | நாடார் | சுடலைவயல் புதுக்கோட்டை | கால்நடை பன்ணை | இளங்கலைப்பட்டதாரி |
| மணிமுடியான் | ஆண் | 46 | கோனார் | கள்ளிக்குடி சிவகங்கை | புத்தகக் கடை வியாபாரி | 12 ஆம் வகுப்பு |
| மாதராசன் | ஆண் | 40 | கவுண்டர் | பொதும்பு | பண்ணைத் தொழில் | 11ஆம் வகுப்பு |
| மாகாளி | ஆண் | 53 | கோனார் | ஆ.தெக்கூர் | தேங்காய் வியாபாரி | 3 ஆம் வகுப்பு |
| கோவிந்தன் | ஆண் | 49 | பள்ளர் | சிங்கம்புணாரி | சுயத்தொழில் | 9 ஆம் வகுப்பு |
| திருநாவுக்கரசு | ஆண் | 36 | பறையர் | கரடிக்கல் | கொத்தனார் | 6ஆம் வகுப்பு |
| மாரியப்பன் | ஆண் | 49 | சக்ளியன் | சொரிக்கம்பட்டி | கூலி | இல்லை |
| தாஸ் | ஆண் | 43 | பறையர் | மு.கோவில்பட்டி | மரவேலை | 8 ஆம் வகுப்பு |
| கார் வேந்தன் | ஆண் | 39 | உடையார் | முத்தூர் | தனியார் பள்ளி ஆசிரியர் | முதுகலை பட்டதாரி |
| முஸ்தபா | ஆண் | 53 | ராவுத்தர் | பல்லாக்குளம் | வியாபாரி | இளங்கலைப் பட்டதாரி |
| தவசி | ஆண் | 44 | தேவர் | ஊமச்ச குளம் | வாகன ஓட்டுநர் | 9 ஆம் வகுப்பு |
| அப்பு கண்ணன் | ஆண் | 51 | பறையர் | முக்கம்பட்டி | பூசாரி | 4 ஆம் வகுப்பு |

**நேர்காணல்**

**பெயர்;** கார்த்திக்

**ஊர்;** மதுரை மாவட்டம் கருப்பாயூரணி

**கல்வித் தகுதி:** தொழில் நுட்பக் கல்வி

**பெற்றோர்;** (தந்தை), ராஜேந்திரன் (தாய்) பரமேஸ்வரி

**தொழில்;** அய்யம் பாண்டி எருதழுவல் குழுவில் முதன்மை வீரர், ஏறுதழுவுதல் போட்டிகளில் கலந்து கொள்வது மற்றும் கல்லூரி மாணவர்.

**ஏறுதழுவுதல் போட்டிகளில் எத்தனை ஆண்டுகளாக கலந்து கொள்கிறீர்கள் அதற்கான ஆர்வம் எப்படி உருவானது, ஏறுதழுவுதல் போட்டியில் கலந்து கொள்வதற்கான காரணம் என்ன?**

என் தந்தை எனது பள்ளிப் பருவத்திலேயே இறந்துவிட்டார், நான் 11 ம் வகுப்பு விடுமுறையின் போது நண்பர்களுடன் ஊர் சுற்றுகையில் காளைகளை ஏறுதழுவுதலுக்காக பழக்குவதை வேடிக்கை பார்க்கையில் நானும் களையை அனைய வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. அதுவே பின்னாளில் மாடுபிடி வீரனாக மாற்றக் காரணம் ஆயிற்று. ஊரில் ஏறுதழுவுதல் பயிற்சியும் போட்டிகளும் நடக்கும் அதில் மிகச் சிறந்த வீரர்கள் 7 பேர் எப்பொழுதும் காணப்படுவர், புதியதாக பழகியவர்களில் முதன்மையான இரண்டு பேரை அவர்களுடன் சேர்ந்து மாடு பிடிக்கச் சொல்வார்கள், நாங்கள் சிறந்த வீரராக மாறியபின் தற்போது 9 பெயர் உள்ளோம், எங்களிடமிருந்து புதியதாக பழகி வருபவர்கள் 13 பேர் இருக்கிறார்கள், அனைவருமே திறமையானவர்கள் ஒருவருக்கொருவர் விட்டக்கொடுத்து களத்தில் இறங்குவோம், நாங்கள் எங்களது ஊருக்கு பெருமை சேர்க்கும் வகையில் ஏறுதழுவுதல் போட்டியில் கலந்து கொள்கிறோம்.

**ஏறுதழுவுதலில் தங்களின் முன்னோடிகள் யார்?**

எங்கள் ஊரை சேர்ந்த பாண்டி அண்ணன், முனியசாமி அண்ணன், பால முருகன், குண்டாறு, உழுவாடி செந்தில் அண்ணன் போன்றோர், அவர்கள் வழியாகத்தான் இந்த ஏறுதழுவுதல் கற்றுக் கொண்டோம், அவர்களின் வழிகாட்டலில் நிறைய நுணுப்பங்களை கற்றுக் கொண்டோம், ஊரில் பாக்கு வைத்தால் வீரர்கள் ஒன்றிணைந்து கூடி பேசுவோம்.

**ஏறுதழுவுதல் காலங்களில் கடைபிடிக்க வேண்டிய பழக்க வழக்கங்கள் என்னென்ன?**

ஊரில் பாக்கு வைத்தால் அன்று முதல் விரதம் இருக்க தொடங்குவோம், எந்த கெட்ட பழக்கமும் இன்றி கோவிலுக்கு மாலை அணிவது போன்று விரதத்தை மேற்கொள்வோம், பாண்டி சாமியை வணங்கிய பின்னரே ஏறுதழுவுதல் போட்டிக்கு செல்வோம், நான் போட்டிகளுக்குச் செல்லும் முன் குறைந்தது 2 மணி நேரம் பாண்டி சாமிக்கு படையலிட்டு வணங்குவேன் எங்கள் ஊரில் உள்ள 3 கோவிலுக்கு சென்று வழிபட்ட பின்பு விளையாடச் செல்வேன், ஏறுதழுவும் களம், காளை ஆகியவைகளை வணங்குவதும், பரிசு பெற்ற பொருட்களை பாண்டி சாமியின் முன் வைத்து வணங்குவது எனது வழக்கம் ஆகும் என்றார்.

**தங்கள் பங்கெடுத்த போட்டி மற்றும் பெற்ற பரிசு பற்றி கூறுங்கள்;**

எனது முதல் களம் 2018 இல் அலங்காநல்லூர் ஏறுதழுவுதல் போட்டியில் கலந்து கொண்டு மூன்றாம் பரிசு பெற்றேன், அது எனக்கு மிகுந்த உத்வேகத்தை தந்தது திருப்பூர் மாவட்டம் அழகுமலையில் நடை பெற்ற ஏறுதழுவுதலில் 2018, 2019 லும் தொடர்ந்து முதல் பரிசு கிடைத்தது. 2020 இல் இரண்டாவது பரிசு

கிடைத்தது அதே போன்று ஈரோட்டில் தொடர்ந்து முதல் பரிசும் கோயமுத்தூரில் நடந்த போட்டியில் 2019 இல் முதல் பரிசும் 2020 ம் ஆண்டில் மூன்றாம் பரிசும் கிடைத்தது

**பரிசு பொருள் என்னென்ன?**

1 கார், 4 இரு சக்கர வாகனம், மூன்று வீட்டு மனைகள் , சைக்கிள், பீரோ, தங்க நாணயம் உள்ளிட்ட பல பொருட்களை பரிசாகப் பெற்றுள்ளேன். மதுரை அலங்காநல்லூரில் நான் சந்தித்த முதல் காளை தேனி மலைமாடு அதனை தழுவியதால் திரு ஸ்டாலின் அவர்களால் தங்க மோதிரமும், தங்க நாணயமும் கிடைத்தது.

**காளைக்கும் தங்களுக்குமன உணர்வு பற்றி கூறுங்கள்**

நான் ஏறுதழுவுதல் போட்டிக்கு செல்லும் முன்பு இந்த இந்தக் காளைகள் கலந்து கொள்கிறது என்று யாரும் சொல்வது கிடையாது, நாங்கள் அதை தெரிந்து கொள்ள விரும்புவதும் கிடையாது, காளைகளும் காளை வளர்ப்பவர்களும் எங்களுக்கு எதிரி கிடையாது, எந்த காளையாக இருந்தாலும் இறங்கி பிடிப்போம் ஒருவேளை அவற்றை விட்டுவிட்டலும் அடுத்த போட்டியில் பிடிக்க முயற்சி செய்வோம். பெரும்பாலும் காயப்படுத்திய காளையை அடுத்த முறை அடக்க தீவிர முயற்சி செய்வோம். வெற்றி பெற்றாலும் ஆரவாரம் செய்ய மாட்டோம் காளைகளை வென்ற உடன் அவற்றை அப்படியே விட்டு விடுவோம். போட்டி துவங்கும் முன் காளையை தொட்டு வணங்குவது வழக்கம்..

**ஏறு தழுவுதல் போட்டியில் பங்கு கொள்வதில் பெற்றோர், உறவினர்களின் எதிர்ப்பு ஆதரவு ஏதேனும் உண்டா ?**

நாங்கள் ஏறுதழுவுதல் போட்டியில் கலந்து கொள்ள எங்களுக்கு வீடு சார்ந்து எந்த தடையும் இல்லை, போட்டிக்கு போகும் வேளையில் நல்லபடியாக காளைகளை பிடித்து வருமாறு கூறுவர், மேலும் போட்டியின் இடைவேளையில் போட்டியின் நிலை என்ன என்ற செய்திகளை தொலைபேசி வழியாக தெரிந்து கொள்வர், வீடு வந்து சேரும் வரை அவர்களுக்கு பதற்றம் காணப்படும்.

**ஏறு தழுவுதல் களத்தில் சந்தித்த சிக்கல்கள் என்னென்ன?**

நான் உயரம் குறைவு என்பதால் பல போட்டிகளில் நிராகரிக்கப் பட்டேன். பல முறை களத்தில் இறங்க முடியாமல் அழுததும் உண்டு, பார்வையாளர்களில் ஒருவராக இருந்து பிற வீரரின் சீருடையை அணிந்து களத்தில் இறங்கி இருக்கிறேன். திறமையானவர்களுக்கு உயரம் முக்கியமல்ல என்பதை என்வாயிலாக அறிவித்து இனிவரும் மாடு பிடி வீரர்களுக்கு எடுத்துக்காட்டாக இருப்பேன் என நம்புகிறேன், ஏறுதழுவுதலில் வயது வரம்பு முன்பு இல்லை ஆனால் தற்போது 22 வயதானவர்களுக்கு மட்டுமே கலந்து கொள்ள முடியும் என்ற நிபந்தனை புதிய மாடுபிடி இளைஞர்களுக்கு மிகுந்த வருத்தமளிக்கிறது.

போட்டி நடைபெறும்போது பார்வையாளர்கள் கூறுவதை பெரிதும் கவனம் கொள்வதில்லை, போட்டியின் நேரம் அவற்றையும் கணக்கிடுவதும் இல்லை எண்களின் நோக்கம் காளையை அனைவது மட்டுமே. சிறந்த காளையை கடைசி 30 நொடிகளில் அணைந்து வெற்றி பெற்று போட்டி முடிந்த பின்பு தோற்ற காளையின் உரிமையாளர் எங்களை தாக்க முயற்சி செய்தார் இருப்பினும் விழா

ஒருங்கிணைப்பு குழு உறுப்பினர் தலையிட்டு சரி செய்த அனுபவமும் உண்டு. எங்களை பொறுத்தவரையில் கபடி போன்ற விளையாட்டு போன்று ஏறுதழுவுதல் போட்டியை பார்க்கிறோம், பகை வெறுப்புணர்வு போன்றவை காளைககளிடத்தும் வளர்ப்பவர்கடத்தும் இருந்ததில்லை.

**வாடி ஏறுதழுவுதலிலும், வடமட்டு ஏறுதழுவுதலிலும் கலந்து கொள்வதில் என்ன வேறுபாடுகள்,**

வாடிவாசல் ஏறு தழுவுதலில் தனிப் பட்ட வீரன் முயற்சி மற்றும் அவனின் செயல்பாடுகளால் வெற்றி பெறுகிறான், ஆனால் வடம் ஏறுதழுவுதல் அப்படியல்ல சிறந்த காளை பார்த்து களத்தில் இறக்குவர் போட்டியில் பங்கு பெறும் ஒன்பது நபர்களின் நோக்கமும் கவனமும் ஒரே போல் இருந்தால் மட்டுமே வெற்றிபெற முடியும். இது கூட்டு முயற்சியாகும்.

**எதிர்கால நோக்கம் என்ன ?**

ஏறுதழுவுதலில் தொடந்து மாடுபிடி வீரனாக கலந்து கொள்ளவதோடு, மற்றும் மேற்படிப்பை தொடர வேண்டும், மேலும் விளையாட்டு வீரர்களுக்கு இட ஒதுக்கீட்டில் அரசு வேலை தருவதாகக் கூறியுள்ளனர், என்று கூறினார்.

**ஏறு தழுவுதல் தடையை நீக்க கோரிய போராட்ட முழக்கங்கள்**

- வாடி வாசல் திறக்கும் வரை வீடு வாசல் கிடையாது,
- நெருங்கினா பொசுக்குற கூட்டம் நிறுத்துவோம் 'பீட்டா'வின் ஆட்டம்,
- பணிந்து போக தமிழன் என்ன நனைந்த கோழியா?'
- ஜல்லிக்கட்டு தடை அதை உடை'நீ
- காட்டுக்குள் நுழைகின்ற காற்று என்றும் காலணி எதுவும் அணிவதில்லை ஆயிரம், இளைஞர்கள் துணிந்துவிட்டால் ஆயுதம் எதுவும் தேவையில்லை,
- ஜல்லிக்கட்டு எங்க வரலாறு தமிழனை மொறச்சா தகராறு'
- என் தாத்தாவை காங்கிரஸ் ஏமாற்றியது என் தந்தையை திராவிட கட்சிகள் ஏமாற்றியது எங்களை இனி ஏமாற்ற முடியாது'
- 1947க்கு பிறகு தான் இந்தியர் நாம் 2000 வருடங்களுக்கு முன்பே தமிழன்'
- எனக்குப் பால் தருவதால் பசுவும்என் தாய் தான்! என் தாயைக் காப்பாற்ற ஜல்லிக்கட்டு வேண்டும்'
- ஏறு தழுவுதல் எங்கள் உரிமை வீறு கொண்டது மதுர மண்ணு
- தமிழன்டா தொட்டுப் பார்டா'
- அறுபது ஆண்டு இந்தியன்டா ஆயிரம் ஆண்டு தமிழன்டா'
- இது விளையாட்டுத்தனம் அல்ல வீர விளையாட்டுக்கு எங்களின் பங்கு'
- எங்க ஊரு மதுர வந்து பாரு எதிர'
- 'சாமி சாமி சுப்பிரமணிய சாமி காமி காமி உன் வீரத்தை காமி!'
- 'பொன்னாரே பொன்னாரே...பொய் சொல்லி ஆனீரே...!'
- 'சீண்டினா... சீறிடுவோம்'
- 'ஜல்லிக்கட்டு மல்லுக்கட்டு'
- ஜல்லிக்கட்டு எங்கள் சொத்து பீட்டா கொஞ்சம் வாயைப் பொத்து'
- டாஸ்மாக் இனிக்குதா ஜல்லிக்கட்டு கசக்குதா'
- 'மீட்போம் மீட்போம் ஜல்லிக்கட்டை மீட்போம்'

- 'திரும்பி வந்துட்டேன்னு சொல்லு.. தமிழன் திரும்பி வந்துட்டான்னு சொல்லு'
- ‘பச்சமிளகான்னா காரம் தமிழன்னா வீரம்’
- 'தமிழுக்காக தமிழ்க் கருவும் போராடும்'
- ஜல்லிக்கட்டு ஜல்லிக்கட்டு தில்லிருந்தா மல்லுக்கட்டு
- எங்களோட மாடு உங்களுக்கு என்ன கேடு’
- மீசையை முறுக்கு பீட்டாவை நொறுக்கு'
- பீட்டா... பீட்டா! பிஞ்சுருண்டா பேட்டா!’
- எல்.ஐ.சி ஹைட்டு தமிழன்னா வெயிட்டு
- கும்தலக்கடி கும்மாவா தமிழன்னா சும்மாவா’
- 'அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு பீட்டாவுக்கு பாடை கட்டு'
- மண் எங்கள் தாய்; பீட்டா எங்கள் பேய்’
- '50 MBக்கு இருக்கிற பவர்கூட 50MPக்கு இல்லை’
- ‘பீட்டா பீட்டா.. நாங்கள் சீறிப்பாயும் தோட்டா’
- எமக்குத் தேவை ஜல்லிக்கட்டு.. முடிந்தால் எங்களுடன் மல்லுக்கட்டு’
- சேட்டை செய்யும் பீட்டாவே நாட்டை விட்டு ஓடிடு'
- உயிரைக் கொடுத்து ஜல்லிக்கட்டை காப்போம்’
- தானா சேர்ந்த கூட்டமா.. தலைமை இல்லாத கூட்டமடா'
- பீட்சா உடலுக்கு கேடு, பீட்டா நாட்டுக்கு கேடு’
- 'தடை செய்! தடை செய்! பீட்டாவை தடை செய்’
- தமிழ் மண்ணின் உரிமையை மீட்போம்.
- ஜல்லிக்கட்டை நடத்தியே தீருவோம்..'
- மக்களுக்காக மக்களே நடத்தும் போராட்டம்..'

- 'ஜல்லிக்கட்டு எங்கள் கலாச்சாரம். அதை நாங்கள் ஒருபோதும் விட்டுக் கொடுக்க மாட்டோம்'
- 'இது ஒரு நாள் போராட்டம் அல்ல.. ஓயாத போராட்டம் '
- 'ஜல்லிக்கட்டை காப்போம்.. தமிழர் இறையாண்மையை மீட்போம்'
- 'பனைமரத்துல வவ்வாலா.. தமிழனுக்கே சவாலா..'

## ஏறு தழுவுதல் தொடர்பான கவிதைகள்

### ஜல்லிக்கட்டு-மனிதன் மாறவில்லை

அட…மனிதா! மனிதா!
நீ
புண்ணாக்கும்
பருத்திக்கொட்டையும்
போட்டு வளர்த்தது….
ஊட்டி வளர்த்தது
பாசத்தில் என்று
மோசம போய்விட்டேன்

இன்று நீ
என்னை ஓட விட்டு
வாலைப் பிடிப்பது…
உன் வீரத்தை
வெளிச்சம் போடவா..?

என்னோடு நீ
ஜல்லிக்கட்டு என்று
மல்லுக்கட்டுவது
என் வீரத்தை
எடை போடவா?

மனிதா! மனிதா!
உன்னோடு
வயலுக்கு வந்தேன்
பாழ் நிலத்தை

உழுது போட்டேன்

பயிர் வளர்க்க

பாடுபட்டேன்

உன் வயிற்றுக்கு

சோறு போட்டேன்

ஆனால்

நீயோ

வைக்கோலை மட்டும்

எனக்கு போட்டாய்

அப்போதே தெரியும்

அயோக்கியன் நீ என்று...

இப்போது

தெரிந்துவிட்டது

மனிதா! மனிதா!

நீ

எவ்வளவு கொடிய

இரக்கமில்லாதவன்

எழுதியவர் : பரிதி.முத்துராசன் (15- ஜன)

மஞ்சு விரட்டுதல் குற்றம் என்று

மிருக நேசர் எமை மிரட்டியதாலும்

எனை ஊட்டி வளர்த்து ஏர் பூட்டி உழுதவன்

பட்டினியாலே மாயாதிருக்கவும்

கோவை வழி நான் கேரளம் சென்றேன்.

ஜூலை மழையில் லாரியில் பயணம்.

நான்கு தலைகளாய் ஆறு வரிசையில்

நிற்பது மட்டுமே சாத்தியம் எனவே

செத்து விழுவது என்பதே இல்லை.

நின்றே செத்த சகோதரக்காளை

உயிரியல் பூங்கா தீனியானது

தின்றே கொழுத்த என்னைப் பார்த்து

"கிரிஸ்மஸ் வரை இதை கொல்லண்டா"

என மலயாளத்தில் கசாயி சொன்னான்

மற்ற காளையர்க்குச் சாவில் விடுதலை

எனக்கு மட்டும், ஆயுள் தண்டனை.

நடிகர் கமலஹாசன் 2005ம் ஆண்டு ஜூலை 24ம் தேதி

**அலங்கோலம்**

மாவிழைத்துத் தேய்த்த மாக்கோலம்

தீபத்தட்டில் அரைத்தசந்தனத்தோடு குங்குமம்

கீழிருந்து மேலெழும் அகில்புகை

மதிலெங்கும் மாவிலைத் தோரணம்

மங்கையர்கள் ஆரத்தியுடன் வரிசையாக முன்னேசெல்ல

வரிந்துகட்டிய கோவணத்துடன் வாலிபர்கள் பின்னேசெல்ல

மைதானம் முழுவதும் மனிதத்தலைகள்

மரத்தினிலைகளை மறைக்கும் மனிதக்கூட்டம்

மாடவிளக்குகளின் மங்காத ஒளிகளுக்கிடையே

அற்புதமொன்று நிகழுமோ

அனைவரும் எதிர்பார்த்தபடி நிற்க

திருமணமா?.. கோவிலா?...

திருவிழாவா?... தீமிதியா?...

இல்லை! இல்லை!

இல்லையென்றால் பின்னே என்ன?...

இல்லை! இல்லை!

அன்றிருந்த அலங்காநல்லூர்......

இப்போது...ஜல்லிக்கட்டில்லாமல்

அலங்கோலநல்லூராகி போனதோ?...

எழுதியவர் : பெருவை பார்த்தசாரதி (20- ஜன 2017)

**சீறுங்கள் காளைகளே**

சீறுங்கள் காளைகளே,

சீவிய கொம்பன்களே!

தாய்த்தமிழ் நாட்டினிலே,

என் வாழ்வுக்கு பங்கமில்லே,

எல்லை தாண்டி அத்து மீறும், இரட்டைத்தன ஆர்வலரே,

என்னை புசிப்பதை நொடி மறந்து, என் குரல் கேளுங்களேன்,

என்று.. சீறுங்கள் காளைகளே!

யானை, குதிரை, கழுதை மேலில்லை அக்கறை,

என்னினத்திற்கு மட்டும் எதற்கிந்த பரிந்துரை?

என் குடும்பமிது, குத்தினாலும் கிழித்தாலும் காளையரை,

மறத்தமிழன் என்னை மனத்தால் ஆளும் வரை,

அவன் பணி செய்தே கிடப்பேன் என்னினம் வீழும் வரை,

என்று.. சீறுங்கள் காளைகளே!

வாடிவாசல் வழி திறந்து,

விருட்டென சீறிப்பாய்ந்து,

குளம்படிகள் ஆழமாய் பதிந்து,

மச்சக் காளைகளினுள் கலந்து,

திமில் தழுவும் முகங்கள் மறந்து,

கொம்பில் எவனும் சிக்காமல் வளைந்து,

சிமிட்டும் நேரம் முன்னேறிப்பறந்து,

அயர்வற்ற உணர்வுகள் வானுயர்ந்து,

வளர்த்த குடும்பத்தினுள் போய் அணைந்து,

சொந்த பந்தம் அகமகிழ்ந்து,

கண்டிருக்கும் கண் வியந்து,

ஆடிவருமிந்த ஏறை தழுவாமல், எனக்கில்லை பொங்கல் விருந்து,

என்று.. சீறுங்கள் காளைகளே!

கோடி கோடியாய் பணம் இறைந்து,

கொத்தாக எங்களினம் மடிந்து,

அயலினம் என் மரபு நுழைந்து,

என் தமிழுக்கு துரோகம் புரிந்து,

கனவு காணாதே உனக்காவேன் நான் விருந்து,

என்று.. சீறுங்கள் காளைகளே!

வருடந்தோறும் சீராட்டி பாராட்டி,

பசும்புல் பருத்தி துவரை புகட்டி,

அவன் பசித்து, என் பசியாற்றி,

என் உடல் நலம் பேண பதறி பிதற்றி,

காலாண்டில் சத்துருண்டை ஊட்டி,

ஊர் உறவு காணாது, ஊண் உறக்கமின்றி,

என் திமில் அணைத்த அவன் வெற்றி,

அவன் முத்தமிட்ட என் நெற்றி,

சொல்லுமடா என்னை எப்படி வளர்த்தான் போற்றி,

என்று.. சீறுங்கள் காளைகளே!

அம்மா என்ற சொல்லை, அடிமைச்சொல்லாக்கி,

நீ அம்மா என்றழைப்பதையும் அரசியலாக்கி,

கலைஞரும் கடை நிலையை காசாக்கி,

தமிழனின் உரிமைகளை கட்டுமரம் ஏற்றி,

கலகத்தையே கழகங்களின் கொள்கையாக்கி,

தேர்தலில் வன்புணர்ந்து நம்மை விபசாரிகளாக்கி,

பிணம் தின்னும் அவல அரசியலை எறியுங்கள் தூக்கி,

என்று.. சீறுங்கள் காளைகளே!

முந்தா நேற்றைய ஆலம்பாடியனும் காங்கேயனும்,

நேற்றைய புலிகுளத்தானும் உம்பளாச்சேரியனும் ,

இன்றைய பருகூரனும் மலையனும்,

நாளைய அடிமாட்டான் என்ற பெயர் பெற்றொழியாமிலிருக்க,

என் இனமே.. தமிழா..

உணவில்லாமல் இறந்தாலும் இற,

உணர்வில்லாமல் இருப்பதை மற,

பொங்கல் வைத்தது விடு, பொங்கி எழு,

போராட்ட குணம் தவிர, போர்க்குணமும் கொள்,

என்று..

சீறுங்கள் காளைகளே,

துடி சீவிய கொம்பன்களே!

எழுதியவர் : இரஞ்சித் (15- ஜன 2017)

**ஜல்லிக்கட்டு - எம் களம்**

தோல்வியெனில்

ஒரு திமிரலுக்கும்,

எறியப்படுதலுக்கும் அல்லது சொருகப்படுதலுக்கும்

இடைப்பட்ட

நேர அல்லது தூரப் போராட்டம்

எம் களம்!!!

வெற்றியெனில்

திமில் பிடித்தலுக்கும்,

மண்டியிடச்செய்தலுக்கும் அல்லது எல்லைக்கோடு அடைதலுக்கும்

இடைப்பட்ட

நேர அல்லது தூரப் பயணம்

எம் களம்!!!

களமாடிக் களைக்கும்போது

கூட்டத்தின் கூச்சல்கள்

எமக்கு உற்சாகம்...

காளைக்கு மிரட்சி...

காடிவாசல் புறப்படும்

கொம்பு சீவிய

குடிகார காளையை

வால்பிடித்தோ இல்லை திமில்பிடித்தோ

தூக்கியெறியப்படும் வேளைகளில்

பரணிலிருக்கும் காளைக்காரனின்

வெடிச்சிரிப்பிலும் மீசை முறுக்களிலும்

வெளிப்படும் அவன் வெற்றி...

மாறாக

பற்கள் கடித்தலிலும் கொச்சயாய் ஏசுதலிலும்

வெளிப்படும் எம் வெற்றி...

பாவம் காளைகள்

மீசை முறுக்கலில் அதற்கு வெற்றியுமில்லை...

கொச்சை வார்த்தை ஏசலில் தோல்வியுமில்லை..

இக்கதி முடிவில்

யாம் பெற்ற சன்மானம்

இரண்டாயிரம் ரூபாய்...

கோடித்துணி

வாய்க்கரிசி

மேலும் சில சேர்த்து

எம் மாமன்

எமக்கெனச் செய்த செலவு மூவாயிரம் ரூபாய்...!!!

ஜெயசீலன் (11- ஜன 2016)

**அடங்காத காளை**

தலை மேல் தூக்கி பின்னால் வீசிற்று,

முகம் சிவந்த ஆதவன் காத்திருக்கிறான்,

அடுத்த காலை(ளை)க்கு...

எழுதியவர் : பூபாலன் (10- பிப் 2017

**மாண்புமிகு மாணவருக்கு**

ஆழியலை போலெழுந்த மாணவவீரா
ஆதரவு தேடாமல் ஆதவித்தீரா
ஆயுதங்கள் ஏதுமின்றி அறவழிப்போரா
அப்படித்தான் அதிசயித்தோம் நீரறிவீரா

தென்முனையில் ஒளியொன்று தெரிகிறதென்று
திக்கெட்டும் சாளரங்கள் திறந்ததுஇன்று
தன்முனைப்பும் தேவையெனும் தருணமதொன்று
தக்கபடி சொன்னவிதம் மிகமிகநன்று

வெண்திரையில் வெட்டியொட்டும் வெறுங்கதையில்லை
வேண்டுமெனக் குவிந்ததிலே சுயநலமில்லை
விண்ணதிர வைத்ததிலே வியப்புகளில்லை
வில்பிறிந்த அம்புகுறி தோற்கவுமில்லை

தன்மரபு காக்கும்பெருத் தகுதியானது
தனிமையில்லை எவருமென்ற தொகுதியானது
தரணியையே திரும்பவைக்கும் திறமையானது
தமிழரிடம் இருக்குதென்று உறுதியானது

சிறுபிள்ளை வெள்ளாமை வீடுசேர்ந்தது
செல்லரிக்க வில்லைதமிழ் வீரமென்றது
சென்றுபல நாடுவாழும் தமிழினமின்று
சேட்டைசெய்யும் பிள்ளைகளால் பெருமைகொள்ளுது
நன்றி தமிழ்நாட்டு மாணவர்களே
...மீ.மணிகண்டன் : (28- ஜன 2017

**ஜல்லிக்கட்டு வெற்றி**

தூங்கி கிடந்த தமிழன் வீரம்
துள்ளி குதித்த நேரமது..!
தூசி படிந்த தமிழன் மானம்
தூய்மையான காலமது..!

ஓங்கி ஒலித்த தமிழன் சத்தம்
ஓசோன் தாண்டியும் கேட்டது..!
ஒன்று பட்ட தமிழினம் கண்டு
ஒவ்வொரு நாடும் வியந்தது..!

மழலை மொழி மாறாத
மண்ணின் வருங்கால செல்வங்கள்
மழை பனி பாராமல்
மலையாய் நின்று போராடினர்..!

கழனி வயல் கானாத
கணினி உலக தமிழரும்
இமை துளியும் அசராமல்
இரவு பகலாய் போராடினர்..!

அண்ணன் தங்கை உறவாக
அன்பு பொழியும் அன்னையாக
அனைத்து பெண்களுக்கும் மதிப்பளித்து
அறம் சிறக்க போராடினர்..!

கருவே சுமந்த கர்ப்பிணியும்

களத்தில் நின்று போராட

கயவராய் தெரிந்த காவலரும்

கனிவு நிறைந்த உள்ளமாகினர்..!

மதம் சாதி அரசியலால்

மதியிழந்த மக்கள் கூட்டம்

மண் பெருமை காக்க வேண்டி

மடை திறந்த வெள்ளமாகினர்..!

தடுக்க நினைத்த மத்திய அரசே

தண்டவாளத்தில் நிறுத்தி வைத்து

தமிழ் பற்று என்னவென்று

தாறுமாறாய் காட்டினர்..!

அடக்க நினைத்த அன்னிய நாயே

அகிம்சை வழியில் விரட்டி அடித்து

அழிவில் இருந்த விளையாட்டை

அழகு மாறமல் காப்பாற்றினர்..!

அழிவில் இருந்த விளையாட்டை

அழகு மாறமல் காப்பாற்றினர்..!

ந.இராஜ்குமார் (5- ஜன 2018)

**இதற்கு தானே ஆசைப்பட்டாய்**

ஆர்ப்பரிக்கும் கூட்டம்

அடங்காத காளை

அசராத வீரன்

அலறும் ஒலிப்பெருக்கி

அழைப்பில்லாமல் வந்த அரசியல்வாதிகள்

அத்துமீறாத காவல்துறை

அண்டான், அலமாரி, தங்கக்காசு

ஆடம்பரமில்லாமல்

அரங்கேறியது

அறப்போராட்டம் மீட்டெடுத்த

அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு!

ஆசை நிறைவேறியதா தமிழா?

எழுதியவர் : பூம்பாவை (12- பிப் 2017)

**வீரம்**

மரணத்தையும் எதிர்த்து

போராடும் துணிவு

கொண்ட

தமிழனின்

வீரத்தை வெளிக்கொணரும்

விந்தையே ...!

ஜல்லிக்கட்டு .

சு முத்து ராஜ குமார் (17 பிப் 2017

**மதுரை மாவட்டத்தில் ஏறுதழுவுதல் நடைபெற்ற இடங்கள்:**


- அவனியாபுரம்
- அலங்காநல்லூர்
- பாலமேடு
- அச்சம்பட்டி
- அயன்பாப்பாகுடி (அவனியாபுரத்தின் ஒரு பகுதி)
- விக்கிரமங்கலம்
- கீழப்பட்டி
- ஊத்துமேடு (சோளங்குருணிக்கு அருகில்)
- எழுமலை
- எலும்பூர்
- சத்திரப்பட்டி
- சோளங்குருணி
- திருவாதவூர்
- முக்கம்பட்டிதொட்டப்பநாயக்கனூர்
- நடுவக்கோட்டை
- பாப்பிநாயக்கன்பட்டி
- கடச்சனேந்தல்
- கரடிக்கல்
- கல்லனைகாஞ்சரம்பேட்டை
- களிமங்கலம்
- குருவித்துறை
- குலமங்கலம்
- சக்குடி
- பனையூர்
- பாப்பநாயக்கன்பட்டி
- T.பாரைப்பட்டி
- பாரைபத்தி
- அ.புதுப்பட்டி
- கொ.புளியங்குளம்
- போடிநாயக்கன்பட்டி (வாடிப்பட்டியின் ஒரு பகுதி)
- மேலூார்
- சௌ.வலையபட்டி
- நெடுங்குளம்

## தமிழகத்தில் நாட்டு இன மாடுகளின் வகைகள்

- கருமறையான்
- கட்டுக்கொம்பன்
- கருமறைக்காளை
- கத்திக் கொம்பன்
- கள்ளக் காளை
- கருங்கூழை
- கழற்சிக் கண்ணன்
- காரிக்காளை
- காராம் பசு
- குண்டுக் கண்ணன்
- குத்துக் குளம்பன்
- குள்ளச் சிவப்பன்
- கூடு கொம்பன்
- கொட்டைப்பாக்கன்
- ஏரிச் சுழியன்
- நாரைக்கழுத்தன்
- நெட்டைக் காலன்
- படலைக் கொம்பன்
- பனங்காய் மயிலை
- பால் வெள்ளை
- பொங்கு வாயன்
- பட்டிக்காலை
- பசுங்கழுத்தாள்
- பொட்டைக் கண்ணன்
- வெள்ளைக் குடும்பன்
- வெள்ளைப் போரான்
- வெள்ளை
- கருக்கா மயிலை
  அத்தக் கருப்பன்
- அணறிகாலன்
- மட்டைக் கொம்பன்
- ஆனைச் சொறியன்
- கண்ணன்மயிலை
- கள்ளக்காடன்
- மறைச்சிவலை
- மஞ்ச மயிலை
- மேகவண்ணன்
- போருக்காளை
- மஞ்சள் வாலன்
- மஞ்சலி வாலன்
- மயிலை
- செந்தாழை வயிரன்
- முறிகொம்பன்
- முரிகாலை
- செம்மறைக்காளை
- செம்மறையன்
- சொறியன்
- தல்லயன்காளை
- துடைசேர் கூழை
- வட்டப் புல்லை
- சங்குவண்ணன்
- செவலை எருது
- கட்டைக்காளை
- கட்டைக்காரி
- வட்டச் செவியன்
- வள்ளிக் கொம்பன்
- சர்ச்சி
- செம்பூத்துக்காரி
- நாட்டு மாடு
- காரி மாடு
- சந்தனப்பிள்ளை
- கட்டைவால் கூளை
- வெள்ளைக்காளை
- வெள்ளைக் கண்ணன்
- மயிலைக்காளை
- கழுத்திகா பிள்ளை
- கட்டைக் கொம்பன்
- கழற்வாய் வெறியன்
- கருப்பன்
- காற்சிலம்பன்
- குட்டைச் செவியன்
- குட்டை தரம்பன்
- குட்டைச் செவியன்
- கூழைவாலன்
- கூழைசிவலை
- கொண்டைத் தலையன்
- ஏறுவாலன்
- நெட்டைக் கொம்பன்
- படப்பு பிடுங்கி
- சிந்து மாடு
- செவல மாடு
- எருமை மாடு
- வளைக் கொம்பன்
- தளப்பன்
- தறிகொம்பன்
- தூங்கச் செழியன்
- வர்ணக்காலை
- முட்டிக்காலன்
- அழுக்கு மறையன்
- ஆளை வெறிச்சான்
- பணங்காரி

## இந்திய (நாட்டு) இன மாடுகளின் வகைகள்

- கவொலாவோ -மகாராஷ்டிரா
- கீர்- குஜராத்
- ஹல்லிகர்-கர்நாடகா
- ஹரியானா-ஹரியானா
- காங்கேயேம்-தமிழ்நாடு
- காங்ரெஜ்-ராஜஸ்தான்
- கென்கதா-உத்திரப்பிரதேசம்
- ஹெரிகார்க்-உத்திரப்பிரதேசம்
- ஹில்லாரி-மகாரஷ்டிரா
- கிருஷ்ணா வாலி-கர்நாடகா
- மால்வி-ராஜஸ்தான்
- மேவாதி-உத்திரப்பிரதேசம்
- நகோரி-ராஜஸ்தான்
- நிமாரி-மகாராஷ்டிரா
- ஓங்கோல்-ஆந்திரா
- பொன்வார்-உத்திரபிரதேசம்
- சிவப்பு காந்தாரி-மகாராஷ்டிரா, குஜராத்
- ரதி-ராஜஸ்தான்
- அமிர்த மஹால் -கர்நாடகா
- பச்சூர் - பீகார்
- பர்கூர் -தமிழ்நாடு
- டாங்கி-மகாராஷ்டிரா
- தியோனி-மகாராஷ்டிரா
- சிவப்பு சிந்தி-பஞ்சாப்
- சாஹிவால்-பஞ்சாப்
- சிரி-மேற்குவங்கம், சிக்கிம், பூடான்
- தார்பார்க்கர்-ராஜஸ்தான்
- உம்பளச்சேரி-தமிழ்நாடு
- வெச்சூர்-கேரளா
- கங்காத்திரி-உபி, பீகார்
- மல்நாடு கிடா-கர்நாடகா
- தோ தோ-நாகாலாந்து
- நெல்லூர் மாடு-ஆந்திர மாநிலம்
- புலிக்குளம்/ஆலம்பாடி-தமிழ்நாடு, கர்நாடகம்
- புங்கனூர்-ஆந்திரா



பெத்தநாயக்கன்பாளையம், ஆத்தூர் சேலம்.


13 ஆம் நூற்றாண்டு நடுகல்



சிந்துவெளி ஏறுதழுவுதல் படிமம்



சிந்துவெளி குறியீடு.



தொல்பழங்குடிகளின் ஓவியம்


ஏறுதவுதல் வகைகள்







பொங்கல் திருவிழா





காளைக்கு பயிற்சி









காளை வழிபாடு




முதாலம்மன் காளை பொந்துகம்பட்டி - மதுரை



அழகாத்தேவனின் கோவில்

இறப்புச் சடங்கு



மாட்டு வண்டி பந்தயம்



மரமடி – விளையாட்டு



மடகாஸ்கர் தீவின் ஜாவிகா விளையட்டு





## ஏறுதழுவுதல் தடை எதிர்ப்பு போராட்டம்

